


திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமான
மயிலாடுதுறை அருள்மிகு அபயாம்பிகை உடனாகிய மாயூரநாதப் பெருமான் திருக்கோயில்

திருக்குட நன்னீராட்டுப் பெருவிழாச் சிறப்பு மலர்



14-09-2005 புதன் கிழமை
பார்த்திப வருடம் ஆவணி மாதம் 29-ம் தேதி

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

திருக்கயிலாய பரம்பரைத்
திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமான
மயிலாடுதுறை
அருள்தரு அபயாம்பிகை
உடனாகிய
அருள்மிகு மாயூரநாதசுவாமி
திருக்கோயில்

திருக்குட நன்னீராட்டுப் பெருவிழாமலர்

இது
திருவாவடுதுறை ஆதீனம்
23-வது குரு மகாசன்னிதானம்
சீர்-வளர்-சீர் சிவப்பிரகாச தேசிக
பரமாச்சாரிய சுவாமிகள் அவர்கள்
அருளாணையின் வண்ணம் வெளியிடப்பெறுவது.

14.09.2005

வெளியீடு எண்: 536

விலை ரூ. 75/-

தொகுப்பாசிரியர்
புலவர்.சி.மகாலிங்கம்,எம்.ஏ., பி.எட்.,
தலைமைத் தமிழாசிரியர் மற்றும் உதவித்
தலைமையாசிரியர்,
திருவாவடுதுறை ஆதீன மேனிலைப்பள்ளி,
திருவிடைமருதூர்- 612 104.

ஸ்ரீ நமசிவாயமூர்த்தி ஆஃப்செட் அச்சகம்,
திருவாவடுதுறை.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்



திருவாவடுதுறை ஆதீனம் குருமுதல்வர்

அருள்திரு நமசிவாயமூர்த்திகள்


குருமரபு வாழ்த்து

கயிலாய பரம்பரையிற் சிவஞான போதநெறி காட்டும் வெண்ணெய்
பயில்வாய்மை மெய்கண்டான் சந்ததிக்கோர் மெய்ஞ்ஞான பானு வாகிக்
குயிலாரும் பொழிற்றிருவா வடுதுறைவாழ் குரு நமச்சிவாய தேவன்
சயிலாதி மரபுடையோன் திருமரபு நீடூழி தழைக மாதோ.

-அருள்திரு மாதவச் சிவஞான சுவாமிகள்.



62-2



திருவாவடுதுறை ஆதீனம் 23வது குரு மகாசன்னிதானம்

சீர்-வளர்-சீர் சிவப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள்

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்

இருபத்து மூன்றாவது குரு மகாசன்னிதானம்

சீர்-வளர்-சீர் சிவப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள்

திருவாவடுதுறை - 609 803.

நிலைமை சொல்லுநெஞ் சேதவ மென்செய்தாய்
கலைக ளாயவல் லான்கயி லாயநன்
மலையன் மாமயி லாடு துறையன் நம்
தலையின் மேலும் மனத்துளுந் தங்கவே

-திருநாவுக்கரசர்

உலக முதல்வன் சிவபெருமான். சிவபெருமான் உயிர்கள் செய்யும் வழிபாட்டை ஏற்றுக்கொண்டு அருள்புரியும் அருள் நிலைத்தானங்களே திருக்கோயில்கள். அதனால் மக்கள் திருக்கோயிலுக்குச் சென்று வழிபாடாற்ற வேண்டும். ஔவையாரும், "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்றார். திருமூலரும்,

நாடு நகரமும் நற்றிருக் கோயிலும்
தேடித் திரிந்து சிவபெரு மானென்று
பாடுமின் பாடிப் பணிமின் பணிந்தபின்
கூடிய நெஞ்சத்துக் கோயிலாய்க் கொள்வனே

என்று திருக்கோயில் வழிபாட்டையும் திருத்தலயாத்திரையின் சிறப்பையும் உணர்த்துகின்றார்.

மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றானும் சிறப்புடைய தலங்கள் பலவுண்டு. அத்தலங்களை கண்டு வணங்க தலயாத்திரை மேற்கொண்டனர், நம் அருளாளர்கள். திருக்கோயில் தோறும் அருந்தமிழ்ப் பாடல்கள் பாடித்துதித்தனர். மூவரால் பாடல் பெற்ற திருத்தலங்கள் 'பாடல்பெற்ற திருத்தலம்' என்றும், மற்றவை வைப்புத்தலம் என்றும் கூறுவர். இவ்வாறு பாடல் பெற்ற திருத்தலங்களுள் திருமயிலாடுதுறைத் திருத்தலமும் ஒன்றாகும். இத்தலத்தில் உமையன்னை மயிலுருவம் கொண்டு அருள்மிகு மாயூரநாதப் பெருமானைப் பூசித்து அருள் பெற்றார். பெருமான் ஆண்மயிலாக எழுந்தருளி, கௌரித் தாண்டவம் ஆடி அருட்காட்சியருளினார். நாதசன்மா, அனவித்தியாம்பிகை மயிலாடுதுறை ஈசனை வழிபட்டு அருள் பெற்றனர். இத்தலத்தில் துலாஸ்நானம் சிறப்புடையதாகும். காவிரி தீர்த்தம்

இடபதீர்த்தம் என்றழைக்கப் பெறுகிறது. இத்தகு சிறப்புடைய அருள்தரு அபயாம்பிகை உடனாய அருள்மிகு மாயூரநாதர் திருக்கோயில் திருப்பணி செய்து குடமுழுக்கு 1928ஆம் ஆண்டிலும், 1961 ஆம் ஆண்டிலும், பின் 1990 ஆம் ஆண்டிலும் நடைபெற்றது. இத்திருக்கோயில் திருப்பணியில் அன்றும் இன்னும் சிவப்புண்ணியச் சீலர்கள் பலர் ஈடுபட்டுள்ளனர். திருக்கோயில் திருப்பணி சிவபுண்ணியச் செயல்களில் மிக்கச் சிறப்புடையதாகும்.

முரிந்து வீழ்ந்தன வெடித்தன உடைந்தன முதிய
நெரிந்த வாகிய கோபுர நெடுமதில் பிறவுந்
தெரிந்து முன்னையிற் சீர்பெறப் புதுக்குவோர் பண்டு
புரிந்துளோர் பெறும் புண்ணியம் நான்மடங் குறுவார்

என்கிறது காஞ்சிபுராணம்.

திங்களஞ் சடையோன் சினகரம் செய்தோர்
திருவிழா வினிதினி னமைத் தோர்
அங்கவன் தடந்தேர் பண்ணுவித் தோர்கள்
சாறயர் மறுகமைத் திட்டோர்
கொங்கவிழ் தருவி னிழலிற் பன்னாட்
குலிசன் வாழ்த் தெடுப்ப விற்றிருந்து
மங்கையோர் பாகனு லகினி னடைந்து
மலரடி நிழல் விற்றிருப்பார்

என்று கூர்மபுராணம் திருவிழா எடுத்தல், திருத்தேர் செய்தளித்தல் ஆகிய சிவபுண்ணியச் செயல்களை எடுத்துக் கூறி அதன்பயனை எடுத்துரைக்கின்றது.

எனவே ஆன்ம ஈடேற்றம் காண சிவபுண்ணியச் செயல்க்ளில் ஈடுபடவேண்டும் என்பது தெளிவாகிறது.

நமது பாராட்டுதலுக்குரிய ஸ்ரீமாயூரநாத நற்பணி மன்றத்தார் அருள்மிகு மாயூர நாதர் திருக்கோயில் திருப்பணிப் பொறுப்பேற்று செயலாற்றுவது மகிழ்ச்சிக்குரியது. சிவநேயச் செல்வர்கள் பலர் பொருளுதவி செய்துள்ளனர்.

மக்கள் பலரும் தங்களால் இயன்ற பொருளுதவியும் உடலுழைப்பும் தந்துள்ளனர் அனைவரது தொண்டும் பாராட்டிற்குரியது.

மயிலாடுதுறை அருள்தரு அபயாம்பிகை உடனாய அருள்மிகு மாயூரநாதர் திருக்கோயில் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா 14.9.2005 அன்று சீரும் சிறப்புமாக நடைபெறும் நன்னாளில் இவ்விழா நினைவாக மலரும் **குடமுழுக்கு விழாமலர்** திருநெறிய மணம் வீச நமது வழிபடு கடவுளாகிய அருள்மிகு ஞானப் பெருங்கூத்தன் திருவடி மலர்களைச் சிந்தித்து வாழ்த்துகிறோம்.

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம்
இருபத்து ஆறாவது குரு மகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

தருமபுரம், மயிலாடுதுறை - 609 001
01.09.2005

''ஞாலம் நின்புகழே மிகவேண்டும் தென்
ஆலவாயில் உறையும் எம் ஆதியே''

திருச்சிற்றம்பலம்

கரவின் றிநன்மா மலர்கொண்டு
இரவும் பகலும் தொழுவார்கள்
சிரமொன் றியசெஞ் சடையான்வாழ்
வரமா மயிலா டுதுறையே. -திருஞானசம்பந்தர்.

ஆசியுரை

எல்லாம் வல்ல சிவபரம்பொருள் சத்து, சித்து, ஆனந்தம் என்ற மூன்று நிலைகளில் நின்று உயிர்கட்கு அருள்புரிகின்றார். அவற்றுள் சத்து என்பதற்கு நிலையான உண்மை என்பது பொருள். அது தோற்றம், நிலை, இறுதி என்றும் வேறுபாடுகள் இன்றி என்றும் ஒரு தன்மைத்தாய் நிற்றலைக் குறிக்கும். சித்து என்பதற்கு நிலையான அறிவு என்பது பொருள். ஆனந்தம் என்பதற்கு நிலையான பேரின்பம் என்பது பொருள். எனவே இறைவன் உண்மைப் பொருளாகவும், அறிவுப் பொருளாகவும், இன்பப் பொருளாகவும் இருக்கிறான் என்பது தெளிவாகும். இதனை பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணம்

''பூ, வண்ணம், பூவின் மணம், போல மெய் போதம்
இன்பம் ஆம் வண்ணம் மெய்கொண்டவன்'' என்று கூறுகிறது.

பூ ஒன்றே பூ என்ற பொருளையும், வண்ணம் என்ற நிறத்தையும் மணம் என்ற குணத்தையும் கொண்டு நிற்பதைப்போல, இறைவன் ஒருவனே சத்து (மெய்), சித்து (அறிவு) ஆனந்தம் (இன்பம்) என்ற மூன்று நிலைகளிலும் நின்று உயிர்கட்கு அருள்புரிதலை ஆசிரியர் இப்பாடல் தொடர்களால் தெரிவிக்கின்றார்.

இறைவன் சத்து, சித்து, ஆனந்தம் என்ற மூன்று நிலைகளிலும் நின்று அருள் புரிதலை ஆலயங்களில் விளங்கும் சோமாஸ்கந்த வடிவம் அறிவிக்கிறது. இறைவன் சத்தாக, இறைவி சித்தாக, முருகன் ஆனந்தமாக விளங்கும் நிலையை இவ்வடிவம் விளக்குகின்றது.

சோமாஸ்கந்தர் என்ற பெயர் ச+உமா+ஸ்கந்தர் என்ற மூன்று சொற்களின் கூட்டாக உமையம்மையோடும், கந்தரோடும் கூடிய பெருமான் என்ற பொருளைத் தருவதாகும். இதனையே சோமாஸ்கந்தர் வடிவம் என்பர். இவ்வடிவத்தை திருநாவுக்கரசர்.

.2

செல்வியைப் பாகங் கொண்டார் சேந்தனை மகனாக் கொண்டார்
மல்லிகைக் கண்ணியோடு மாமலர்க் கொன்றை சூடி
கல்வியைக் கரையிலாத காஞ்சிமா நகர்தன்னுள்ளால்
எவ்வியை விளங்க நின்றார் இலங்கு மேற்றளியனாரே

எனக் கூறியருள்கின்றார். அனைத்துத் திருக்கோயில்களிலும் இச் சோமாஸ்கந்த மூர்த்தியே திருவிழாக் காலங்களில் வீதியுலா நாயகராக எழுந்தருளி வரக் காண்கிறோம்.

மயிலாடுதுறைத் திருக்கோயிலிலும் மாயூரநாதர் சத்தாகவும், அபயாம்பிகை சித்தாகவும், முருகக் கடவுள் ஆனந்தமாகவும் அருள்புரிகின்றனர். இதனைத்தான் சச்சிதானந்த சொரூபம் என்று குறிப்பிடுகின்றோம்.

தமிழகத்தில் திருவாவடுதுறை, தருமபுரம் என்ற இருபெரும் ஆதீனங்களை ஒருங்கு இணைக்கின்ற நிலையில் இத்திருக்கோயில் விளங்குகிறது. ஸ்ரீ சுவாமி ஸ்ரீ அம்பாள் திருக்கோயில்கள் திருவாவடுதுறை ஆதீனத்தாலும், ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் தருமபுர ஆதீனத்தாலும் பரிபாலிக்கப்படுவது தனிச்சிறப்பாகும்.

மயிலாடுதுறைத் தலம் சிவத்தலங்களில் மிக்க சிறப்புடையது. முத்தி தரும் தலங்களாக பதினைந்து தலங்களைக் குறிப்பிடுவார்கள். அவற்றைத் தருமை ஆதீனம் ஆதிபரமாசாரியராகிய ஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக மூர்த்திகள்

தில்லைவனம் காசி திருவாரூர் மாயூரம்
முல்லைவனம் கூடல் முதுகுன்றம் - நெல்லை களர்
காஞ்சி கழுக் குன்றம் மறைக் காடு, அருணை காளத்தி
வாஞ்சியமென் முத்தி வரும்

என்னும் பாடலால் அருள்கின்றார்கள்.

மயிலாடுதுறை மூர்த்தி தலம் தீர்த்தம் ஆகிய மூன்றாலும் சிறப்புடையது. இங்கு விளங்கும் சிவபெருமானை பிரமன் பூசித்தமையால் பிரமலிங்கம் எனவும், தேவர்கள் முதலியோர் எண்ணியவற்றை வரையாது அளித்தமையால் வரதானேசுவரர் அல்லது வள்ளலார் எனவும் பெயர் பெற்றார். உமையம்மை தக்கன் மகளாகப் பிறந்த குற்றம் நீங்க அம்மை மயிலுருவாகச் சிவபெருமானைப் பூசிக்கப் பெருமான் ஆண் மயிலாகத் தோன்றி மயூர நடனம் ஆடியருளி அவரை மனந்து அருள் புரிந்தமையால் கௌரி மாயூரநாதர் எனவும் பெயர் பெற்றார். வள்ளல் என்பது சிவபெருமான் ஒருவருக்கே உரிய பெயர். என்னே எனில்? முத்திப்பேற்றை வழங்கக்கூடியவர் சிவபெருமான் ஒருவரேயாவார். பிறர் ஒருவரால் கொடுக்க முடியாதது முத்தி ஒன்றே. அதனை வழங்குவதால் வள்ளல் என்பது சிவபெருமானையே குறிக்கும் மற்றவர்கட்கு வழங்குவது உபசாரமாகும்.

இத்தலம் சோழ வளநாட்டில் காவிரித்தென்கரையில் விளங்கும் அழகிய நகரம். ''ஆயிரம் ஆனாலும் மாயூரம் ஆகுமா'' என்ற பழமொழி இத்தலத்தின் பெருமையை விளக்குவதாகும். பறவைகளில் அழகியது மயில் ஒன்றே. அதனால்தான் தேசியப் பறவையாகத் தேர்ந்தெடுத்துள்ளது அரசு. எனவே அம்மை மயில் வடிவில் இறைவனைப் பூசித்ததும் பெருமான் அப்பூசையை ஏற்று மயூர தாண்டவம் ஆடி அருள்புரிந்ததும் இத்தலத்தேயன்றி வேறில்லையாதலின் இப்பழமொழி இப்பகுதியில் நிலை பெறுவதாயிற்று.

தீர்த்தங்களில் மிக்க சிறப்புடையதாகக் காவிரியாறு இங்கு விளங்குகிறது. ஆண்டுதோறும் ஐப்பசி மாதம் முழுமையும் இங்குள்ள காவிரியில் துலாக் கட்டத்தில் நீராடுவது பெரும் புண்ணியத்தைத் தரவல்லது. இந்நீராட்டை துலாஸ்நானம் என மக்கள் வழங்குவர். துலா

மாதம் ஐப்பசி மாதம் ஆகும். துலா மாதத்தில் அமாவாசையன்று தான் குரு மேதா தட்சிணாமூர்த்தி இடப நந்திக்கு ஞானோபதேசம் செய்தருளினார். பல்லாயிரம் மக்கள் இம்மாதத்தில் இங்கு வந்து தங்கி காவிரியில் நீராடி நலம்பெறுவதைக் காணலாம்.

ஐப்பசி அமாவாசையிலும் நிறைவு நாளிலும் காவிரித் துலாக் கட்டத்திற்கு வந்து நீராடி வழிபடுவோர் பல்லாயிரவராவர்.

இத்தலத்தில் விளங்கும் தீர்த்தத்துறை துலாக் கட்டம் என்ற பெயரால் விளங்குகிறது. நந்தி தேவர் காவிரியின் நடுவே கோயில் கொண்டுள்ளதால் இடபதீர்த்தம் என வழங்கப் பெறுகிறது.

கங்கை, யமுனை, சரஸ்வதி, கிருஷ்ணா, கோதாவரி, நர்மதா, சிந்து ஆகிய ஏழு புண்ணிய நதிகளில் தங்கள் பாவங்கள் தீர நீராடியதால் தங்கட்கு ஏற்பட்ட பாவங்கள் நீங்க இங்கு வந்து காவிரியில் நீராடிப் புனிதமடைகின்றன என்பது தலபுராணம். இதற்கேற்பவே கங்கை இங்கு வந்ததால் காசியிலுள்ள விசுவநாதர் விசாலாட்சி அம்மையுடன் இத்தலத்தில் ஏழு இடங்களில் கோயில் கொண்டுள்ளார்.

மாயூரநாதர் வள்ளல் என்ற பெருமையுடன் இங்கு விளங்குவதைத் திருநாவுக்கரசர் தேவாரத்தில் 'வள்ளல் மாமயிலாடுதுறை உறை, வெள்ளம் தாங்கு சடையன் என்று குறிப்பிடுகின்றார். ஞானசம்பந்தர், கரவின்றி நன் மாமலர் கொண்டு இரவும் பகலும் தொழுவார்கட்கு பெருமான் வரமாக (வள்ளலாக) மயிலாடுதுறையில் வாழ்கின்றான் என்று அருள்கின்றார். இத்தலத்தை மையமாகக் கொண்டு நாற்றிசைகளிலும் உள்ள நான்கு தலங்களில் பெருமான் வள்ளல் என்ற பெயரோடு விளங்குவதைக் காணலாம். கிழக்கே விளநகர் துறைகாட்டும் வள்ளல், தெற்கே பெரு ஞ்சேரி (தாருகாவனம்) மொழி காட்டும் வள்ளல், மேற்கே மூவலூர் வழிகாட்டும் வள்ளல், வடக்கே வள்ளலார்கோயில் கைகாட்டும் வள்ளல் எனக் கூறப்படுவர்.

மயிலாடுதுறைப் பெருமானை சப்தமாதர்கள் பூசித்துள்ளனர். சப்த மாதர்கோயில் மாயூரம் வடக்கு வீதியில் நகராட்சி அலுவலகத்தின் எதிரே உள்ளது. மேலும் சப்தமாதர்கள் தனித்தனியே வழிபட்ட தலங்கள் மயிலாடுதுறையைச் சூழ உள்ளன.

பிராமி, திருஇந்தளூர், திருதான்றீசம், மாகேஸ்வரி - கருங்குயில் நாதன்பேட்டை, கௌமாரி - ஆனந்த தாண்டவபுரம், வைஷ்ணவி - பசுபதீச்சரம், வாராகி - கழுக்காணி முட்டம், இந்திராணி - தருமபுரம், சாமுண்டி - வள்ளலார்கோயில்.

மயிலாடுதுறை திருக்கோயில் மிகப் பழங்காலத்தில் சூரியகுலத்தோன்றல் திலீபன் சக்கரவர்த்தியால் திருப்பணி செய்யப் பெற்றுள்ளது. நூறு ஆண்டுகட்கு முன்னர் தேவ கோட்டை அழ.வீர.பெ.வீரப்பச் செட்டியாரால் கருங்கல் திருப்பணியாகச் செய்விக்கப் பெற்றது. **15** ஆண்டுகட்கு முன் திருக்கோயில் புதுப்பிக்கப்பெற்று குடமுழுக்கும் நடந்துள்ளது. இத்தகைய புராண, வரலாற்றுச் சிறப்பு மிக்க அருள்மிகு அபயாம்பிகை உடனாகிய மாயூரநாதர் திருக்கோயிலைப் பெரும் பொருட்செலவில் இராஜகோபுரங்கள், விமானங்கள் ஆகியவற்றுடன் பக்தர்கள் ஒத்துழைப்புடன் திருப்பணிகள் செய்வித்தும், சென்ற ஆண்டில் புதிய தேர் செய்வித்தும் திருவாவடுதுறை ஆதீனம் சீர்-வளர்-சீர் சிவப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் எட்டுக்கால யாகசாலை வேள்விகளுடன் இம்மகா கும்பாபிஷேகத்தைச் சிறப்பாகச் செய்விக்கின்றார்கள்.

திருவாவடுதுறை ஆதீனப் பணிகள் சிறக்கவும் சைவ மெய்யன்பர்கள் நீடிய நலம் பெற்று நல்வாழ்வு வாழவும் ஸ்ரீ செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

உ

சிவமயம்

பொருளடக்கம்

இ) பொதுக் கட்டுரைகள்

உ

சிவமயம்

முன்னுரை

தொண்ட ரிசைபா டியுங் கூடிக்
கண்டு துதிசெய் பவனூராம்
பண்டு பலவே தியரோத
வண்டார் மயிலா டுதுறையே

-திருஞானசம்பந்தர்

தொண்டர் இசை பாடியும் கூடியும் கண்டு துதி செய்யும் அருள்தரு அபயாம்பிகை உடனாய அருள்மிகு மாயூரநாதப் பெருமான் மூவலூர், வழிகாட்டும் வள்ளல், பெருஞ்சேரி வாக்குக் காட்டும் வள்ளல், திருவிளநகர் துறைகாட்டும் வள்ளல், வள்ளலார் கோயிலில் ஞானங்காட்டும் வள்ளல் என நான்கு திசைகளிலும் பெருமான் விளங்க நடுநாயகமாக வள்ளலாக விளங்குகின்றார். அப்பர் பெருமான்

வள்ளல் மா மயிலாடுதுறை உறை
வெள்ளந் தாங்கு சடையன்

என்று குறிப்பிடுகின்றார். ஞானசம்பந்தப் பெருமானும், அப்பர் பெருமானும் அருணகிரி நாதரும், போற்றிப் பரவிய இத்திருக்கோயிலில் விளங்கும் அன்னை அபயாம்பிகையை நல்லத்துக்குடி ஸ்ரீ கிருஷ்ண ஐயர் அபயாம்பிகை சதகம் என்னும் தோத்திர நூல் இயற்றி வழிபட்டார். நாதஜோதி ஸ்ரீ முத்துசுவாமி தீட்சிதர் ஸ்ரீ அபயாம்பிகை நவாவர்ணம் கீர்த்தனைப் பாடிப் பரவினார்.

மயிலாடுதுறையை அருணகிரிநாதர் 'ரத்னச் சிகண்டியூர்' என்று குறிப்பிடு கின்றார். சிகண்டி என்னும் சொல் மயில் என்ற பொருளைத் தரும். புராணச் சிறப்பும், வரலாற்றுச் சிறப்பும் கொண்டு விளங்கும் அருள்மிகு மாயூரநாதர் திருக்கோயில் திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமானது.

இத்திருக்கோயிலில் அமைந்துள்ள முதல் வாயில் கோபுரம் 156 அடி உயரமும் ஒன்பது நிலைகளையும் உடையது. இக்கோபுரம் நாயக்க மன்னரால் கட்டப் பெற்றது. இத்திருக்கோயில் 3,93,024 சதுர அடியில் அமைந்துள்ளது. அதாவது ஒன்பது ஏக்கர் எழுபத்தேழு செண்ட் ஆகும். கிழக்கு மேற்கு (242 + 470) = 712 அடி மேற்கு திசை தென்வடல் (296 + 246) = 552 அடி என்று அளவிடப்பட்டுள்ளது. இத் திருக்கோயிலில் நடைபெறும் துலாஸ்நான விழா, வசந்தப் பெருவிழா, மற்றும் கந்தஷஷ்டி விழா முதலியன சிறப்புடையனவாகும்.

அருட்சிறப்பு

அன்னை அபாயம்பிகை மயிலுருவங் கொண்டு பெருமானை பூசித்து அருள் பெற்றார். பெருமான் ஆண் மயிலாக எழுந்தருளி அருள்புரிந்தார். அதுபோழ்து பெருமான் ஆடிய தாண்டவம் கௌரீத் தாண்டவம் எனப்படும். நாதசன்மா, அனவித்தியாம்பிகை இருவரும் அன்னை அபயாம்பிகை உடனாய அருள்மிகு மாயூரநாதரை வழிபட்டு பேறு பெற்றனர். இவ்விருவரும் திருக்கோயிலில் இலிங்க

வடிவமாகக் காட்சியருளுகின்றனர். சித்தர்களில் ஒருவரான குதம்பைச் சித்தரும் மாயூரநாதப் பெருமானை வழிபட்டு அருள்பெற்றார். இவ்வாறு அம்பிகை, திருமால், தேவர், சித்தர் அருளாளர் எனப் பலர் வழிபட்டு அருள் பெற்றுள்ளனர். இத்தலத்திற்கு வந்து அம்மையையும் அப்பனையும் வழிபட பிணிகள் யாவும் தீரும்.

பிணியா யினதீர்த் தருள் செய்யும்
மணியான் மயிலாடுதுறையே

என்று ஞானசம்பந்தப் பெருமான் அருளுகின்றார்.

திருப்பணி

இத்திருக்கோயிலில் கலியுகாதி 5011, சாதரண ஆண்டு சித்திரைத் திங்கள் 27-ந் தேதி நாட்டுக்கோட்டை நகரத்தார் வமிசத்தில் தேவகோட்டை பெத்தபெருமாள் செட்டியாராவர்கள் குமாரரும், ரெட்டியார்பாடி ஜமீன்தாரருமாகிய ய.அள.வீர.பெ.வீரப்ப செட்டியாரால் ஸ்ரீ அபயாம்பிகை திருக்கோயில் திருப்பணி முடிக்கப்பெற்று குடமுழுக்கு நடத்தப்பெற்றது. அதன்பின் கலியுகாதி 5029 விபவ ஆண்டு ஆவணி மாதம் 18-ந் தேதி (சுவாமி கோயில்) அருள்மிகு மாயூரநாதர் கோயில் திருப்பணி செய்யப்பெற்று குடமுழுக்கு நடத்தப்பெற்றது.

அருள்தரு அபயாம்பிகை சன்னிதியில் திருவாவடுதுறை ஆதீன 15-ஆவது குரு மகா சன்னிதானம் அருள்திரு அம்பலவாண தேசிக மூர்த்திகள் திருவுருவமும் அருள்மிகு மாயூரநாதர் திருச்சன்னதியில் 16-ஆவது குரு மகா சன்னிதானம் மேலகரம் சுப்பிரமணிய தேசிக மூர்த்திகள் திருவுருவமும் குமரக்கட்டளை குமரப் பெருமான் திருச்சன்னதியில் தருமையாதீன குரு மகாசன்னிதானம் அவர்கள் திருவுருவமும் அமைந்துள்ளன. திருப்பணி செய்தவர்கள் திருவுருவங்களும் உள்ளன.

திருவாவடுதுறை ஆதீனம் 19-ஆவது குரு மகா சன்னிதானம் அருள்திரு வைத்திலிங்க தேசிக மூர்த்திகள் அருளாட்சியில் இத்திருக்கோயில் திருப்பணி செய்யப் பெற்று விபவ ஆண்டு ஆவணி மாதம் 18-ந் தேதி ஞாயிற்றுக் கிழமை உத்திரட்டாதி நட்சத்திரம் கூடிய சுபயோக சுபதினத்தில் (3.9.1928) குடமுழுக்கு நடைபெற்றது. அருள்தரு வைத்திலிங்க தேசிகமூர்த்திகள் மயிலாடுதுறையில் முகாமிட்டிருந்த காலத்தில் சிவபரிபூரணம் எய்தினார்கள். அவர்களுடைய சமாதித் திருக்கோயில் தெற்குவீதியில் உள்ள ஆதீனக் கிளைமடத்தில் உள்ளது.

21-வது குரு மகாசன்னிதானம் அருள்திரு சுப்பிரமணிய தேசிக மூர்த்திகள் அருளாட்சியில் இத்திருக்கோயில் திருப்பணி நிறைவேற்றப்பட்டு, பிலவ ஆண்டு சித்திரை மாதம் 16-ந் தேதி (28.4.1961) குடமுழுக்கு நடைபெற்றது.

23-வது குரு மகா சன்னிதானம் சீர்-வளர்-சீர் சிவப்பிரகாச தேசிக பரமாச்சார்ய சுவாமிகள் அவர்கள் திருவுளப்பாங்கின் வண்ணம் ஸ்ரீ மாயூரநாதர் நற்பணி மன்றம் பொறுப்பேற்று நன்மக்கள் உதவியுடன் திருப்பணி நிறைவேற்றப்பட்டு பிரமோதூத ஆண்டு ஆவணி மாதம் 17ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை உத்திராட நட்சத்திரமும் சித்த யோகமும் கூடிய (2.9.1990) சுபயோக சுபதினத்தில் குடமுழுக்கு நடைபெற்றது.

இத்திருக்கோயில் குடமுழுக்கு நடந்தேறிய பதினான்கு ஆண்டுகள் ஆனதால்

திருக்கோயில் திருப்பணி செய்து குடமுழுக்கு நடத்தப்பெறவேண்டும் என்று சீர்-வளர்-சீர் குரு மகாசன்னிதானம் அவர்கள் திருவுளம்பற்றினார்கள். குரு மகாசன்னிதானம் அவர்களின் திருவுளப்பாங்கின் வண்ணம் ஸ்ரீமாயூரநாதர் நற்பணி மன்றம் பொறுப்பேற்று பக்தகோடிகள் உதவியுடன் நிகழும் பார்த்திப ஆண்டு ஆவணித்திங்கள் 29-ஆம் நாள் (14.09.2005) புதன்கிழமை உத்திராட நட்சத்திரமும் அமிர்தயோகமும் கூடிய சுபயோக சுபதினத்தில் காலை 9.15 மணிக்கு மேல் 10.15 மணிக்குள் குடமுழுக்கு நடைபெற்றது.

இக்குட முழுக்கு விழாவிற்கு கீழ்மேல் அகலம் 35 அடியிலும் தென்வடல் 112 அடியிலும் உள்ள நிலப்பரப்பில் யாகசாலை அமைக்கப்பட்டுள்ளது. இவ்யாகசாலை விநாயகர், முருகன், மாயூரநாதர், அவயாம்பிகை ஆகிய தெய்வங்களுக்கு மட்டுமே இவ்யாகசாலையில் நவகுண்டாக்கினி குண்டங்கள் அமைக்கப்பெற்றுள்ளது. அவயாம்பிகை சன்னதிக்கு நேரேயுள்ள வளாகத்தில் அமைந்துள்ள பரிவார யாகசாலை வடக்கு வெளிப் பிரகாரத்தில் அமைந்துள்ளது. இங்கு கீழ்மேல் 150 அடி தென்வடல் 50 அடி ஆகிய நிலப்பரப்பில் யாகசாலை அமைந்துள்ளது. யாகசாலை யாவும் தகரக் கொட்டையால் அமைக்கப்பெற்றுள்ளது.

மயிலாடுதுறையில் ஆதீனப்பணிகள்

திருவாவடுதுறை ஆதீனம் 20-வது குரு மகாசன்னிதானம் அருள்திரு அம்பலவாண தேசிகமூர்த்திகள் மயிலாடுதுறையில் பொது நூலகக் கட்டடம் கட்டித் தந்தருளியுள்ளார்கள்.

21-வது குரு மகாசன்னிதானம் அருள்திரு சுப்பிரமணிய தேசிக மூர்த்திகள் அருள்மிகு மாயூரநாதர் திருக்கோயிலுக்குச் சொந்தமான புஞ்சை நிலத்தை மன்னம்பந்தல் ஏ.வி.சி.கல்லூரி நிறுவிட நிலம் வழங்கியுள்ளார்கள்.

23-வது குரு மகாசன்னிதானம் சீர்-வளர்-சீர் சிவப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் அவர்கள் அருளாட்சியில் மயிலாடுதுறையில் நடைபெறும் சிவபுரம் வேத சிவாகம பாடசாலைக்கு திங்கள்தோறும் 2 மூட்டை அரிசி வழங்க அருளாணை வழங்கியுள்ளார்கள். இப்பாடசாலையில் 65 மாணவர்கள் தற்பொழுது பயின்று வருகின்றார்கள். இம்மாணவர்கள் காலையில் 8.30 மணிக்கும் மாலையில் 6.30 மணிக்கும் திருக்கோயிலுக்கு வரிசையாக வந்து வேதபாராயணம் செய்து வழிபாடாற்றுகின்றார்கள்.

இத்திருக்கோயிலைச் சார்ந்த உப கோயிலுக்கு நிதி வழங்கப்பெறுகிறது. திருக்கோயில் வளாகத்தில் குரு மகாசன்னிதானம் அவர்கள் அருளாணையின் வண்ணம் சிவா மெட்ரிக்குலேஷன் பள்ளி இயங்கி வருகிறது. மயிலாடுதுறை தெற்குவீதியில் உள்ள ஆதீனக் கிளைமடம் திருப்பணியாக புதிய கட்டடம் கட்டப் பெற்றுள்ளது. மயிலாடுதுறை அரசு மகளிர் மேனிலைப்பள்ளியில் தமிழில் முதல் மதிப்பெண் பெறும் மாணவர்க்குத் தங்கமோதிரம் பரிசு வழங்கப்படுகிறது. திருக்கோயில் தேர் பழுதுற்று எழுபத்தைந்து ஆண்டுகளாக ஓடாது நின்றது. குரு மகாசன்னிதானம் அவர்கள் புதிய தேர் செய்து தேரோட்டம் நடத்த வேண்டும் என்று திருவுளங் கொண்டார்கள். அன்பர்கள் பொருளுதவியுடன் புதிய திருத்தேர் செய்து தேரோட்டம் ஆண்டுதோறும் நடத்தப் பெறுகிறது.

நூல்வெளியீடு

இத்திருக்கோயில் வெளியீடாக அபயாம்பிகை சதகம், கும்பாபிஷேக தத்துவம், காட்சியும் கருத்தும், தலவரலாறு, 1990-ல் நடைபெற்ற கும்பாபிஷேக மலர் முதலிய நூல்கள் வெளி வந்துள்ளன. மயிலாடுதுறை ஏ.ஆர்.சி விசுவநாதன் அவர்கள் மாயூரப் புராணம் அச்சிட்டு இலவசமாக வழங்கியுள்ளார். மாயூரப்புராணம் வெளியீட்டு விழாவில் சீர்-வளர்-சீர் குரு மகாசன்னிதானம் அவர்கள் கலந்துகொண்டு, நூலை வெளியிட்டு ஆசியருளினார்கள். இந்நூல் வெளியீட்டு விழாவில் தருமபுரம், சூரியனார்கோயில் ஆதீன குரு மகாசன்னிதானங்கள் எழுந்தருளி அருள் ஆசி வழங்கினார்கள்.

14.9.2005 அன்று நடைபெறும் குடமுழுக்கு விழாவை முன்னிட்டு **குடமுழுக்கு விழாமலரும், மகா தெட்சிணாமூர்த்தி** என்ற நுண்கலை நூலும் ***சீர்-வளர்-சீர் குரு மகாசன்னிதானம்*** அவர்கள் வெளியிட்டருளுகின்றார்கள்.

தாயினும் மேலான தயாளர்

பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்பரிவுகாட்டி, கடையவனேனைக் கருணையினால் ஆண்டு இக்குடமுழுக்கு விழா மலர்க்குப் பொறுப்பாசிரியராகப் பணியாற்ற அருளிய அருட்சிறப்பை எண்ணி, வணங்கிப் போற்றித் துதிக்கின்றேன். மலர் உருவாக்கம் செய்கின்றபோது அடியேனுக்குப் பல்வேறு கருத்துக்களை உணர்த்திய பாங்கினை நினைந்து நினைந்து நெகிழ்வதன்றி வேறொன்றறியேன்.

உறுதுணை

சீர்-வளர்-சீர் குரு மகாசன்னிதானம் அவர்கள் திருவுளப்பாங்கின் வண்ணம் அடியேன் மலரை உருவாக்குகின்ற போது பல்லாற்றானும் அடியேனுக்கு உறுதுணையாக நின்று கருத்துரை வழங்கிய அருமை நண்பர் சிற்ப சாத்திரக் களஞ்சியமணி திரு.சு.நாராயணசாமி, எம்.ஏ. எம்.ஏ , எம்.எட்., டிப்.இன் சம்ஸ்கிருதம் (ஆய்வாளர், ஆதீன சரசுவதி மகால் நூல்நிலையம் - திருவாவடுதுறை) அவர்கள் திருவிடைமருதூர் திருவாவடுதுறை மேனிலைப்பள்ளியில் பணியாற்றும் தமிழாசிரியர் அன்புச்செல்வர் திரு.தி.செநதில்குமார், எம்.ஏ., பி.எட்., அவர்கள் திருவாவடுதுறை ஆதீன முன்னாள் ஷராப் திரு.சுப்பையாபிள்ளை அவர்கள், அருள்மிகு மாயூரநாதர் திருக்கோயில் கண்காணிப்பாளர் திரு.டி.எம்.பாலசுப்பிரமணியம் அவர்கள் மற்றும் மலருக்காக பல செய்திகளைத் தந்துதவிய சான்றோர்கள் யாவர்க்கும் அருள்மிகு மாயூரநாதப் பெருமான், அருள்திரு நமசிவாய மூர்த்திகள், திருவருளும் சீர்-வளர்-சீர் குரு மகாசன்னிதானம் அவர்கள் குருவருளும் என்றும் துணைநிற்க பிரார்த்திக்கிறேன்.

இம்மலரின் உள்ளே

இம்மலரில் தலம் பற்றிய கட்டுரைகள், தோத்திர சாத்திரக் கட்டுரைகள், பொதுக் கட்டுரைகள், ஆங்கிலம், வடமொழிக் கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. மேலும் யாகசாலை விவரங்கள், திருக்கோயிலில் விளங்கும் திருமேனிகள், திருக்கோயில் ஊழியர்கள் பற்றிய விவரக்குறிப்பு முதலியன இடம்பெற்றுள்ளன.

தெவிட்டாத தெள்ளமுது

சுவைக்கத் தெவிட்டாத தெள்ளமுதாய் அருள்மிகு மாயூரநாதர் திருக்கோயில்

திருக்குட நன்னீராட்டு விழாமலர் சிவநேயச் செல்வர்கள் கரங்களில் தவழ சீர்-வளர்-சீர் குரு மகாசன்னிதானம் அவர்கள் அருள்பாலித்துள்ளார்கள்.

விருதும் பாராட்டும்

இத்திருக்கோயில் குடமுழுக்கு விழாவின் நினைவாக சிவாச்சாரியார்கள், தமிழறிஞர்கள், ஓதுவார், கலைஞர்கள், ஆன்மீக அமைப்புகள், சிவநெறி பேணும் தொண்டர்கள் ஆகியோரைப் பாராட்டி விருதுகளும், சிறப்புகளும், அருளும் சீர்-வளர்-சீர் குரு மகாசன்னிதானம் அவர்கள் அருட்திறத்தைப் போற்றித் துதிப்போம்.

திருவடி போற்றி

சமயம், சமுதாயம் இரண்டையும் இருகண்களாகக் கொண்டு சைவமும் தமிழும் பரவ அருள்பாலித்து வரும் சீர்-வளர்-சீர் குரு மகாசன்னிதானம் அவர்கள்

தம்மிற் தம்மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது

என்றவாறு பூர்வ ஆச்சாரியார்களின் காட்டிய அருள்நெறியைத் துணையாக் கொண்டு, மேன்மேலும் சிறக்கச் செய்து, தன்னடைந்தார்க்குக்

காட்சிக் கெளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்
மீக்கூறும் மன்னன் நிலம்

என்னும் வள்ளுவர் வாக்குப்படி யாவர்க்கும் அருளிடும் அருட்சிறப்பை போற்றாதார் எவருமிலர். இவர்கள் அருளாட்சியில் ஆதீனத்திருக்கோயில்களில் சில திருப்பணிகள் தொடங்கி நடைபெற்றும், மற்றைய திருக்கோயில்கள் திருக்குடமுழுக்கு நடைபெற்றும் பொலிவுடன் விளங்குவதைக் காணலாம்.

முலை யிருந்தாரை முற்றத்தே விட்டவர்
சாலப் பெரியர் என்று உந்தீபற
தவத்தின் தலைவர் என்று உந்தீபற

என்று திருவுந்தியார் கூறுவது போன்று உயிர்களின் அறியாமையை நீக்கி சிவாநுபவத்தை நுகரும் நிலைக்கு ஆளாக்கி அருளும் தவத்தின் தலைவராம் **சீர்-வளர்-சீர் குரு மகாசன்னிதானம்** அவர்களின் அருட்பெருங்கருணையை எண்ணி 'என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே' என்று அடியேன் ஒருநெறிய மனத்தோடு உவந்து போற்றித் துதிப்பதன்றி வேறொன்றறியேன்.

குருவருள் திருவருள் அருட்துணையால் மலரும் குடமுழுக்கு விழாமலர் திருநெறிய மணம் பரப்பி நிற்கும் என்பதில் ஐயமில்லை.

இன்னணம்
என்றும் குருவருட்பணியில்
புலவர்.சி.மகாலிங்கம்,எம்.ஏ., பி.எட்.,
தலைமைத் தமிழாசிரியர் மற்றும் உதவித் தலைமையாசிரியர்
திருவாவடுதுறை ஆதீன மேனிலைப்பள்ளி,
திருவிடைமருதூர்.

குறிப்பு: இம்மலரில் வெளியாகும் கட்டுரைகளில் வரும் கருத்துக்களுக்கு அவ்வவ் கட்டுரையாசிரியர்களே முழு பொறுப்பாவார்கள்.

சிவமயம்

திருமயிலாடுதுறைத் திருப்பதிகங்கள்

திருஞானசம்பந்த சுவாமிகள் திருப்பதிகம்

பண் – தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

கரவின் றிநன்மா மலர்கொண்டு
இரவும் பகலுந் தொழுவார்கள்
சிரமொன் றியசெஞ் சடையான்வாழ்
வரமா மயிலா டுதுறையே. 1

உரவெங் கரியின் உரிபோர்த்த
பரமன் உறையும் பதியென்பர்
குரவஞ் சுரபுன் னையும்வன்னி
மருவும் மயிலா டுதுறையே. 2

ஊனத் திருள்நீங் கிடவேண்டில்
ஞானப் பொருள்கொண் டடிபேணும்
தேனொத் தினியா னமருஞ்சேர்
வானம் மயிலா டுதுறையே. 3

அஞ்சொண் புலனும் மவைசெற்ற
மஞ்சன் மயிலா டுதுறையை
நெஞ்சொன் றிநினைந் தெழுவார்மேல்
துஞ்சும் பிணியா யினதானே. 4

தணியார் மதிசெஞ் சடையான்றன்
அணியார்ந் தவருக் கருளென்றும்
பிணியா யினதீர்த் தருள்செய்யும்
மணியான் மயிலா டுதுறையே. 5

தொண்ட ரிசைபா டியுங்கூடிக்
கண்டு துதிசெய் பவனூராம்
பண்டும் பலவே தியரோத
வண்டார் மயிலா டுதுறையே. 6

அணங்கோ டொருபா கமமர்ந்து
இணங்கி யருள்செய் தவனூராம்
நுணங்கும் புரிநூ லர்கள்கூடி
வணங்கும் மயிலாடு துறையே. 7

சிரங்கை யினிலேந் தியிரந்த
பரங்கொள் ப்ரமேட் டிவரையால்

அரங்கவ் வரக்கன் வலிசெற்ற
வரங்கொள் மயிலா டுதுறையே. 8

ஞாலத் தைநுகர்ந் தவன்றானும்
கோலத் தயனும் அறியாத
சீலத் தவனூர் சிலர்கூடி
மாலைத் தீர்மயிலா டுதுறையே. 9

நின்றுண் சமணும் நெடுந்தேரர்
ஒன்றும் அறியா மையுயர்ந்த
வென்றி யருளா னவனூராம்
மன்றன் மயிலா டுதுறையே. 10

நயர்கா ழியுள்ஞா னசம்பந்தன்
மயல்தீர் மயிலா டுதுறைமேல்
செயலா லுரைசெய் தனபத்தும்
உயர்வா மிவையுற் றுணர்வார்க்கே. 11

திருச்சிற்றம்பலம்.

திருவிராகம் – பண் – சாதாரி

திருச்சிற்றம்பலம்

ஏனவெயி றாடரவொ டென்புவரி யாமையிவை பூண்டிளைஞராய்க்
கானவரி நீடுழுவை அதளுடைய படர்சடையர் காணியெனலாம்
ஆனபுகழ் வேதியர்க ளாகுதியின் மீதுபுகை போகியழகார்
வானமுறு சோலைமிசை மாசுபட மூசுமயி லாடுதுறையே. 1

அந்தண்மதி செஞ்சடையர் அங்கணெழில் கொன்றையொ டணிந்தழகராம்
எந்தமடி கட்கினிய தானமது வேண்டிலெழி லார்பதியதாம்
கந்தமலி சந்தினொடு காரகிலும் வாரிவரு காவிரியுளால்
வந்ததிரை யுந்தியெதிர் மந்திமலர் சிந்துமயி லாடுதுறையே. 2

தோளின்மிசை வரியரவ நஞ்சழல வீக்கிமிகு நோக்கரியராய்
மூளைபடு வெண்டலையில் உண்டுமுது காடுறைய முதல்வரிடமாம்
பாளைபடு பைங்கமுகு செங்கனி உதிர்த்திட நிரந்துகமழ்பூ
வாளைகுதி கொள்ளமடல் விரியமணம் நாறுமயி லாடுதுறையே. 3

ஏதமிலர் அரியமறை மலையர்மக ளாகியஇ லங்கு நுதலோன்
பேதைதட மார்பதிட மாகவுறை கின்றபெரு மானதிடமாம்
காதல்மிகு கவ்வையொடு மவ்வலவை கூடிவரு காவிரியுளால்
மாதர்மறி திரைகள்புக வெறியவெறி கமழுமயி லாடுதுறையே. 4

பூவிரி கதுப்பின்மட மங்கையர கந்தொறு நடந்து பலிதேர்
பாவிரி யிசைக்குரிய பாடல்பயிலும்பரமர் பழமையெனலாம்
காவிரி நுரைத்திரு கரைக்குமணி சிந்தவரி வண்டுகவர
மாவிரி மதுக்கிழிய மந்திகுதி கொள்ளுமயி லாடுதுறையே. 5

கடந்திகழ் கருகளி றுரித்துமையும் அஞ்சமிக நோக்கரியராய்
விடந்திகழு மூவிலைநல் வேலுடைய வேதியர் விரும்புமிடமாம்

தொடர்ந்தொளிர் கிடந்ததொரு சோதிமிகுதொண்டையெழில்
கொண்டதுவர்வாய்
மடந்தையர் குடந்தைபுனல் வாசமிக நாறுமயி லாடுதுறையே. 6

அவ்வதிசை யாருமடி யாருமுள ராகவருள் செய்தவர்கள்மேல்
எவ்வமற வைகலும் இரங்கியெரி யாடுமெம தீசனிடமாம்
கவ்வவயொடு காவிரிக லந்துவரு தென்கரை நிரந்துகமழ்பூ
மவ்வலொடு மாதவிம யங்கிமணம் நாறுமயி லாடுதுறையே. 7

இலங்கைநகர் மன்னன்முடி யொருபதினொ டிருபதுதோள் நெரியவிரலால்
விலங்கலி லடர்த்தருள் புரிந்தவ ரிருந்தவிடம் வினவுதிர்களேல்
கலங்கல் நுரை யுந்தியெதிர் வந்தகயம் மூழ்கிமலர் கொண்டுமகிழா
மலங்கிவரு காவிரிநி ரந்துபொழி கின்றமயி லாடுதுறையே. 8

ஒண்திறலின் நான்மகனும் மாலுமிக நேடியுண ராதவகையால்
அண்டமுற அங்கியுரு வாகிமிக நீண்டஅர னாரதிடமாம்
கெண்டையிரை கொண்டுகெளி றாருடனி ருந்துகிளர் வாயறுதல்சேர்
வண்டல்மணல் கொண்டிமட நாரைவிளை யாடுமயி லாடுதுறையே.9

மிண்டுதிறல் அமணரொடு சாக்கியரும் அலர்தூற்ற மிக்கதிறலோன்
இண்டைகுடி கொண்டசடை எங்கள்பெரு மானதிட மென்பரெழிலார்
தெண்டிரைப ரந்தொழுகு காவிரிய தென்கரை நிரந்துகமழ்பூ
வண்டவை திளைக்கமது வந்தொழுகு சோலைமயி லாடுதுறையே.10

நிணந்தரும யானநில வானமதி யதாதொரு சூலமொடுபேய்க்
கணந்தொழுக பாலிகழ லேத்திமிக வாய்த்ததொரு காதன்மையினால்
மணந்தண்மலி காழிமறை ஞானசம் பந்தனமயி லாடுதுறையை
புணர்ந்ததமிழ் பத்துமிசை யாலுரைசெய் வார்பெறுவர் பொன்னுலகமே.

திருச்சிற்றம்பலம்

திருநாவுக்கரசு சுவாமிகள் திருப்பதிகம்

திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

கொள்ளுங் காதன்மை பெய்துறுங் கோல்வளை
உள்ளம் உள்கி யுரைக்குந் திருப்பெயர்
வள்ளல் மாமயி லாடு துறையுறை
வெள்ளந் தாங்கு சடையனை வேண்டியே. 1

சித்தந் தேறுஞ் செறிவளை சிக்கெனும்
பச்சை தீருமென் பைங்கொடி பால்மதி
வைத்த மாமயி லாடு துறையரன்
கெத்தி னிற்பொலி கொன்றை கொடுக்கிலே. 2

அண்டர் வாழ்வும் அமரர் இருக்கையும்
கண்டு வீற்றிருக் குங்கருத் தோன்றிலோம்
வண்டு சேர்மயி லாடு துறையரன்
தொண்டர் பாதங்கள் சூடித் துதையிலே. 3

வெஞ்சி னக்கடுங் காலன் விரைகிலான்
அஞ்சி றப்பும் பிறப்பும் அறுக்கலாம்
மஞ்சன் மாமயி லாடு துறையுறை
அஞ்சொ லாளுமை பங்கன் அருளிலே. 4

குறைவி லோங்கொடு மானுட வாழ்க்கையால்
கறைநி லாவிய கண்டனெண் டோளினன்
மறைவ லான்மயி லாடு துறையுறை
இறைவன் நீள்கழல் ஏத்தி யிருக்கிலே. 5

நிலைமை சொல்லுநெஞ் சேதவ மென்செய்தாய்
கலைக ளாயவல் லான்கயி லாயநன்
மலையன் மாமயி லாடு துறையன்நம்
தலையின் மேலும் மனத்துளுந் தங்கவே. 6

நீற்றி னான்நிமிர் புன்சடை யான்விடை
ஏற்றி னான்நமை யாளுடை யான்புலன்
மாற்றி னான்மயி லாடு துறையென்று
போற்று வார்க்கு முண்டோ புவிவாழ்க்கையே. 7

கோலும் புல்லும் ஒருகையிற் கூர்ச்சமும்
தோலும் பூண்டு துயரமுற் றென்பயன்
நீல மாமயி லாடு துறையனே
நூலும் வேண்டுமோ நுண்ணுணர்ந் தோர்கட்கே. 8

பணங்கொ ளடர வல்குற் பகீரதி
மணங்கொ ளச்சடை வைத்த மறையவன்
வணங்கு மாமயி லாடு துறையரன்
அணங்கொர் பால்கொண்டகோலம் அழகிதே. 9

நீணி லாவர வச்சடை நேசனைப்
பேணி லாதவர் பேதுற ஓட்டினோம்
வாணி லாமயி லாடு துறைதனைக்
காணில் யார்க்குங் கடுந்துயர் இல்லையே. 10

பருத்த தோளும் முடியும் பொடிபட
இருத்தி னானவன் இன்னிசை கேட்டலும்
வரத்தி னான்மயி லாடு துறைதொழும்
கரத்தி னார்வினை கட்டறுங் காண்மினே. 11

திருச்சிற்றம்பலம்

திருப்புகழ்

அமுதினை மெத்தச் சொரிந்து மாவின
திரியப ழத்தைப் பிழிந்து பானற
வதனொடு தித்தித் தகண்ட ளாவிய - விதழாராய்
அழகிய பொற்றட் டினொண்டு வேடையின்
வருபசி யரிக்குற் றவன்பி னாலுண
வருள்பவ ரொத்துத் தளர்ந்த காமுகர் - மயல்தீரக்
குமுதம் விளர்க்கத் தடங்கு லாவிய
நிலவெழு முத்தைப் புனைந்த பாரிய
குலவிய சித்ரப் பிரசண்ட பூரண - தனபாரக்
குவடிள கக்கட் டியுந்தி மேல்விழு
மவர்மய லிற்புக் கழிந்த பாவியை
குரைகழல் பற்றிப் புகழ்ந்து வாழ்வுற - அருள்வாயே
வமிசமி குத்துப் ப்ரபஞ்சம் யாவையும்
மறுகிட வுக்ரக் கொடும்பை யானபுன்
மதிகொ டழித்திட் டிடும்பை ராவணன் - மதியாமே
மறுவறு கற்பிற் சிறந்த சீதையை
விதனம் விளைக்கக் குரங்கி னாலவன்
வமிச மறுத்திட் டிலங்கு மாயவன் - மருகோனே
எமது மலத்தைக் களைந்து பாடென
அருள அதற்குப் புகழ்ந்து பாடிய
இயல்கவி மெச்சிட் டுயர்ந்த பேறருள் - முருகோனே
எழில்வளை மிக்கத் தவழ்ந்து லாவிய
பொனிநதி தெற்கிற் றிகழ்ந்து மேவிய
இணையிலி ரத்னச் சிகண்டி யூருறை பெருமாளே.

அருணகிரிநாதர்





ஸ்ரீசுப்பிரமணியக்கடவுள் க்ஷேத்திரக்கோவைப் பிள்ளைத்தமிழ்

மாயூரம்

ஐந்தரு வெனுங்கற்ப கச்சோலை வருக அறி
வானந்த வெள்ளம் வருக
அனந்தகல் யாணமே ருகிரி வருகவே
அங்கையா மலகம் வருக
சிந்தையில் மகோதயஞ் செய்திருளை நீக்கிடும்
சிவஞான பானுவருக
செனனவெப் பந்தணிக் குங்கோடி மதிவருக
தித்திக்கு மமுதம் வருக
எந்தையே வருகஎனை ஈன்றதா யேவருக
என்கண்மணி வருக வருக
எண்ணனந் தங்கோடி மன்மதா காரமாம்
என்றுமிளை யோன் வருகவே
மைந்தனே வருகமணி யேவருக வள்ளலே
வருகவைப் பேவருகவே
மாயூர நகர்மேவு கேயூர மணிபுய
மயூரவா கனன் வருகவே.


-காஞ்சிபுரம் ஸ்ரீ சிதம்பரமுனிவர்.





திருத்தலம் பற்றிய கட்டுரைகள்

त ण ढ ड ठ ट ञ झ ज छ च ङ घ



त थ द ध न प फ ब भ म य र ल व श

घ ग ख क अः अं औ ओ ऐ ए ॡ ऌ ॠ ऋ ऊ उ

ष स ह ळ क्ष अ आ इ ई



மயிலாடுதுறைப் புராணம்

திருவாவடுதுறை ஆதீனப் புலவர்
தா.ம.வெள்ளைவாரணம்

(இக்கட்டுரையாசிரியர் நூல் எழுந்தவரலாறு, தலத்தில் வந்து வழிபட்டு பேறு பெற்றவர்கள், இலக்கிய நயம், சாத்திர நுட்பம், சைவசமய நெறி ஆகியவற்றை ஆய்ந்து விளக்கியுள்ளார். மேலும் இந் நூலாசிரியராகிய திரு வாவடுதுறை ஆதீன மகா வித்துவான் திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களின் நன்றி மறவாப் பண்பையும் எடுத்துக் காட்டியுள்ளார்.)

முன்னுரை

திருவாவடுதுறை ஆதீன மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை இயற்றிய தலபுராணங்களுள் மயிலாடு துறைப் புராணம் என்ற மாயூரப் புராணமும் ஒன்று. இந்நூல் வடமொழி மாயூர மான்மியத்தைத் தமிழில் மொழி பெயர்த்து ஆக்கப் பட்டது. இது கடவுள் வாழ்த்து முதலாக நைமிசமுனிவர் பூசித்த படலம் ஈறாக கூச படலங்களை உடையது. 1895 செய்யுட்களால் ஆனது. அகத்தியப்படலம் 10ஆம் பாடல் மட்டும் மிகநீண்ட மயங்கிசைக் கொச்சகக் கலிப்பாவாக அமைந்துள்ளது. இப் புதுமை இத்தல புராணத்தில் காணப் படுகிற தனிச் சிறப்பாகும்.

நூல் எழுந்த வரலாறு

''திருவாவடுதுறை நமச்சிவாய குருசாமி பொற்றாள் அண்ணிய சிந்தையரும், மாயூர நாதர் ஆலய கட்டளை விசாரணையுமான ஸ்ரீமத் முத்துக்குமார முனிவர் பணித்தமையால் இந்நூல் செய்யப்பட்டது'' என்று அவை யடக்கம் 1,2 ஆம் செய்யுட்களில் கூறப்பட்டுள்ளது.

தலத்தில் வழிபட்டவர்கள்

பராசத்தி மயில் உருவில் பூசித்துத் தவம் இருந்தாள். நான்முகன் திருமால் பார்க்கவி என்ற திருமகள், கலைமகள், எமதருமன், மன்மதன் என்னும் தேவர்களும், அகத்தியர், கண்ணுவர் ஆகிய முனிவர்களும், திலீபன், விசாலன், சயதுங்கன் முதலிய மன்னர் களும், யானை, குதிரை, நரி, குரங்கு, பூனை முதலிய விலங்குகளும், கிளி, காகம், கழுகு முதலிய பறவைகளும் வழிபட்டுப் பேறுபெற்ற வரலாறுகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. காசியி லிருந்து விசுவநாதரும், திருவை யாற்றிலிருந்து ஐயாற்றப்பரும் இத் தலத்துக்கு வந்து கோயில் கொண்ட வரலாறுகளும், இடபதேவர் உத்தர மாயூரத்தில் உபதேசம் பெற்றுத் துலாக் கட்டத்தில் தவம் செய்யும் வரலாறும் இடம் பெற்றுள்ளன.

நூலில் காணும் நயங்களில் சில

1) மயில் செய்த பூசையை ஏற்ற மாயூரநாதர் காகம் செய்த பூசையை

யும் ஏற்றார். ஆகவே சான்றோரின் பாடல்களை ஏற்கும் அவர் ஞானமிலாத அடியேன்து பாடலையும் ஏற்பார் என்று ஆசிரியர் அவை யடக்கம் கூறும் போது தாம் பாடும் தலபுராணத்திலிருந்து இரண்டு வரலாறுகளை உவமையாய்க் காட்டிய நயம் மகிழ்வளிக்கிறது.

உ) நாடுகளில் சோழநாடே சிறந்தது என்பதற்கு ஆசிரியர், பூக்களிலே தாமரையும், புருடர்களிலே திருமாலும், சோலைகளிலே கற்பகக் காவும், கலைகளிலே ஞானநூல்களும், அறங்களிலே இல்லறமும் போல என உவமை காட்டுகிறார். அறங்களில் சிறந்தது இல்லறமா துறவறமா என்று ஆராய்பவர்களில் இல்லறமே சிறந்த அறம் என்பவர்களின் வரிசையில் தானும் ஒருவன் என்று சாதுர்யமாக அறிவித்திருப்பது ஒரு நயம்.

ஆசிரியரின் நன்றி உணர்வு

இந்நூலாசிரியர் தன்னை ஆதரித்த திருவாவடுதுறை ஆதீனத்தை இந்நூலில் நினைவு கூர்ந்திருக்கிறார்.

திருவாவடுதுறை ஆதீனத்தை நிறுவிய ஆதீன குருமுதல்வரான அருள்திரு ஸ்ரீநமச்சிவாயமூர்த்திகளின் பேரில் ஒருபாடலியற்றிக் கடவுள் வாழ்த்துப் பகுதியில் இணைத் துள்ளார். அப்பாடல் வருமாறு:

வினையொடும் இருள் அநாதி
மேவிய செயலை நீக்கி
அனையினும் உயிர்க்குநல்கி
ஆவடு துறைக்கண்மேய
தனைநிகர் நமச்சிவாய
குருபரன் சரணம்சார்ந்தார்
புனைமலர் அடிஎன் சென்னிக்கு
அணிஎனப் பொலியுமன்றே.

இப்பாடலில் அருள்திரு நமச்சிவாய மூர்த்திகளுக்கு வணக்கம் கூறும்போது, அருள்திரு நமச்சிவாய மூர்த்திகளின் சரணம் சார்ந்த அனைத்துக் குருமகாசன்னிதானங்களின் திருவடிகளும் தனது முடிமேல் திகழும் என்று கூறி, அனைத்துக் குரு மகாசன்னிதானங்களுக்கும் வணக்கம் கூறிய நயம் சிறப்பாக உள்ளது.

மற்றும் தன்னை ஆதரித்துக் கல்வியும் கற்பித்த குருநாதரான கடுஆம் பட்டம் ஸ்ரீ அம்பலவாண தேசிகர்க்கும் இளையபட்டம் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர்க்கும் ஆக ஒரு செய்யுள் கடவுள் வாழ்த்துப் பகுதியில் இணைத்துள்ளார்.

சைவசித்தாந்தக் கருத்துக்களில் சில

க) சத்தன் எவ்வுருவம் கொள்வானோ அவ்வுருவத்தைச் சத்தியும் கொள்வாள் என்று சைவ சித்தாந்த நூல்கள் கூறும். ஆனால் பராசத்தி பெண் மயிலாக உருக் கொண்டு பூசித்த போது மாயூரநாதன் ஆண் மயிலாக உருக் கொண்டதால், "சத்தி எவ்வுருவம் கொள்வாளோ அவ்வுருவைச் சத்தன் கொள்வான்". என்ற உலக வழக்கு ஏற்பட்டது. இவ்வாறு மாயூரப் படலம் உகூம் செய்யுளில் கூறப்படுகிறது.

உ) உபதேசப்படலத்தில் 6 முதல் 15ஆம் பாடல்கள் வரை சைவ சித்தாந்தக் கருத்துக்கள் சுருக்கமாகவும் தெளிவாக வும் கூறப்பட்டுள்ளன.

சைவ சமயாசாரங்கள்

சவுச விதிப் படலம், பற்கொம்பு விதிப் படலம், ஸ்நான விதிப்படலம், அனுட்டான விதிப் படலம், சூரிய பூசா விதிப்படலம், சிவபூசா விதிப் படலம், போசன விதிப்படலம், சிவாலய தரிசன

விதிப்படலம், செப விதிப்படலம், ச்மாதி (நிட்டை கூடல்) விதிப்படலம் என்னும் பத்து படலங்களிலும் சைவ சமயாசாரங்கள் விளக்கமாகக் கூறப் பட்டுள்ளன.

முடிவுரை

மயிலாடுதுறைப் புராணம் என்ற மாயூரப் புராணத்தை எழுதுவோரும் எழுதுவிப்போரும், படிப்போரும், கேட்போரும், கற்பவற்கு உதவு வோரும், இப்புராணத்தை மலரால் அருச்சிப்போரும், பொருளை ஆராய் வோரும், பொருளைக் கூறுவோரும், ஆகிய அனைவரும் இம்மையில் குடும்பத் தோடு பெரும் செல்வம் பெற்று வாழ்ந்து பிறகு தேவராகித் தேவலோக போகம் துய்த்து இறுதியில் அஞ்சல் நாயகி உடனாகிய மாயூரநாதரின் அருளில் கலப்பார்கள்.

இப்புராணத்தை எழுதிப் பீடத்தில் வைத்துப் பூசிக்கும் வீட்டில் மாயூர வள்ளலாரின் அருள் நீடித் திருக்கும். மற்றும் அவ்வீட்டில் பூத பிரேத பைசாசங்களும் கொடிய நோய்களும் புகுவதற்கு அஞ்சும். மேலும் கற்பகதரு சிந்தாமணி ஆகிய இரு நிதிகள், காமதேனு என்பன ஒருங்கே கூடினாற்போலச் சம்பத்து உண்டாகும். இவ்வாறு பலன் கூறப் பட்டுள்ளது.



அழகு நடம் புரியும் ஆண்மயிலென அரன்
மாயூரநாதர் நின்றாடும் கோலக் காட்சி



அபயாம்பிகை சதகம்

தருமையாதீனப்புலவர்
வி.சா.குருசாமி தேசிகர், எம்.ஏ.,

(இக்கட்டுரையாசிரியர் திருமுறைகள் அம்பிகையைப் போற்றும் முறை - சதகம் பற்றிய விளக்கம் - நூலாசிரியர் பற்றிய குறிப்பு - பாடல்களில் காணப்படும் அம்பிகை யின் அருள்நலம் - யாவும் விளக்கமுறத் தெரிவிக்கின்றார்.)

மலரில் மணம்போல சிவ பிரானோடு இணைந்து நின்று அருள் புரிபவள் அம்பிகை. அவ்வன்னையின் அருளைப் பெற்ற பின்னரே சிவனின் அருளைப் பெறமுடியும் என்பதை நம் சமயநூல்கள் பலவும் எடுத்துரைக் கின்றன.


சீகாழியில் பிரமதீர்த்தக் கரையில், சின்னஞ்சிறு குழந்தை யாயிருந்த போது திருஞானசம்பந்தர் திருத்தோணிமலைச் சிகரத்தைப் பார்த்து ''அம்மையே அப்பா'' என அழுது அழைக்கப் பெருமான் உமையம்மை யாருடன் வந்து, உமை யம்மையாரை நோக்கி 'அழுகின்ற குழந்தைக்குப் பால் அளித்து வருக' எனக் கட்டளையிட, அம்பிகை பொற் கிண்ணத்தில் தன் திருமுலைப் பாலைக் கறந்து அதில் எண்ணரிய சிவஞானத்து இன்னமுதத் தைக் கலந்து ஊட்டிய பின்னரே திருஞானசம்பந்தர் தேவாரம் அருளினார் என அவர் வரலாறு கூறுகிறது.

ஞானசம்பந்தர் இறைவனைக் குறித்துப் பாடிய பாடல்கள் பல வற்றிலும் அம்மையை முன்வைத்து 'உண்ணாமுலை உமையாளொடும் உடனாகிய ஒருவன் வண்டார்குழல் அரிவையொடு, பிரியாவகை பாகம் பெண் தான் மிக ஆனான்' பிறைச் சென்னிப் பெருமான்' என்பன போலத் தேவாரம் அருளியிருப்பது, சத்திநிபாதம் பெற்ற பின்னரே சிவப்பேறு வாய்க்கும் என்ற தத்துவத்தை உணர்த்துவதாக உள்ளது.

அன்னை பராசக்தி, தலங்கள் தோறும் எண்ணிலா நாம ரூபங் களோடு எழுந்தருளியிருந்து அருள் வழங்கி வருகின்றாள்.

மயிலாடுதுறையில் அவ் வன்னை அபயாம்பிகை என்ற திருப் பெயரோடு விளங்கி தன்னை வழி படும் அன்பர் கட்கு இன்னருள் புரிந்து வருகின்றாள். அபயாம்பிகை யிடம் பக்தி செய்து அருள் பெற்ற அன்பர் நல்லத்துக்குடி கிருஷ்ணையர் என்பவர் பாடிப் போற்றிய பாமாலையே அபயாம்பிகை சதகம் ஆகும்.

சதகம் - தமிழ் இலக்கியங்களில் பிரபந்தங்கள் எனப்படும் சிற்றிலக்கிய வகையைச் சார்ந்தது. இந்நூல் சதகம் என்பதற்கேற்ப நூறு பாடல்களைக்



சர்வ அலங்கார சங்கரி, சங்கடம் நீக்கும் அஞ்சொல் நாயகி

கொண்டுள்ளது. பாடல் தோறும் ஈற்றடி ஒரே மகுடமாய் அமைதல் வேண்டும் என்ற சதக மரபிற்கேற்ப இந்நூலும், 'மயிலா புரியில் வளர் ஈசன் வாழ்வே அபயாம் பிகைத் தாயே' என்ற மகுடத்துடன் விளங்குகிறது.

நூலாசிரியர் கிருஷ்ணசாமி ஐயர் எனப்படுவார். இவர் மயிலாடு துறையின் கீழ்பால் விளங்கும் நல்லத்துக்குடியில் தோன்றியவர். இளமையில் தாய் தந்தையர்களை இழந்து வருந்திய போது அபயாம் பிகை அந்தண மாதாக அவர் முன் தோன்றி ஆறுதல் கூறி சிற்றுண்டி அளித்து தனது திருச்சந்நிதிக்கு அழைத்து வந்து மறைய கிருஷ் ணையர், வந்தவர் அபயாம் பிகைத் தாயே என அறிந்து அவர் மீது பக்தி செய்து பாமாலை பாடித் தோத்திரம் செய்யத் தொடங்கினார் எனக் கூறுவர். அவர் சூட்டிய பாமாலை அபயாம்பிகை சதகம் என்ற பெயரோடு பக்திமணத்தைப் பரவச் செய்யும் இனிய நூலாக விளங்கிவருகிறது.

அபயாம்பிகை சதகம் அபயாம் பிகையின் அருள் நலத்தை வியந்து போற்றும் சிறந்த தோத்திர நூல் அபயாம்பிகையின் பெருமைகள் பல வற்றையும் கூறி நம் நெஞ்சை நெகிழ் விக்கும் ஒரு பக்திப் பனுவல்.

தெய்வங்களைத் தரிசிக்கும் போது திருவடி தொடங்கிப் பின்னரே திருமுடிவரை தரிசிக்கவேண்டும். இதனைப் பாதாதிகேசம் எனக் கூறுவர். ஆசிரியர் இம்மரபில் அபயாம்பிகையின் திருவடிகளையும் அத்திருவடிகளில் அணிவித்துள்ள சதங்கை, சிலம்பு, கிண்கிணி, பாடகம், தண்டை, கொலுசு முதலிய அணிகலன்களையும் குறிப் பிட்டுப் பின் இடையில் அணிந்துள்ள பீதாம்பரம் அரைஞாண் மாலை களையும் கூறி குயம், புயம், திருவாய், விழி, நுதல், சடை, மதி முகம் ஆகியவற்றை வருணித்து உன்னைச் சரணடைந்தேன் என முதற்பாடலில் கூறுகின்றார்.

இறைவன் கொண்டருளும் பல்வேறு வடிவங்களுக்கு ஏற்ப இறைவியும் நவந்தருபேதம் கொண்ட ருளுவாள். என இரண்டாம் பாடலில் குறிப்பிடு கின்றார்.

அம்மையைக் கிளியாகவும் (௩) பழமாகவும்(௪) மணியாகவும் (௭) கூறும் பாடல்கள் மிக்க வியப் புடையன. மயிலாடுதுறைத் தல மான்மியம் பதினெட்டாம் பாடலில் கூறப் பட்டுள்ளது.

யோக நெறிகளில் திருமூலர் கூறும் ஆறாதார யோக நெறிகளை ஆசிரியர் எட்டாம் பாடலில் விவரிக் கின்றார்.

செய்யக் கூடாத பாவப் பட்டியலை விவரித்து அப்பாவங் களிலிருந்து விடுபட ஆசிரியர் அம்மையிடம் வேண்டுகிறார். (பா.௩௧) உடலின் இழிவை விளக்கி பிறவா நிலை பெற அருள்புரியுமாறு (பா.58) வேண்டுகிறார்.


உம்பர் முனிவர் முதலோர்க்கும்
உணர்தற் கரிதா யிருப்பவளே
ஒதாவேதம் உணர்பவனே
உயிருக்குயிரே ஒளிக்கொளியே
அம்பு படர்ந்த விழிப் பொருளே
அரவ முடியில் இருப்பவளே
அரனார் தினமும் நினைத்தருளும்
அடியார்உளத்துள் மணிவிளக்கே
கும்ப முனிக்கும் வியாசருக்கும்
குலவு நவசித் தாதிகட்கும்
குறித்த சனகா தியர்கட்கும்

குறிப்பை அருளும் நிலையாளே
வம்பில் பழுத்த ரசக் கனியே
மதமோ கினியே யோகினியே
மயிலாபுரியுள் வளரீசன்
வாழ்வே அபயாம்பிகைத்தாயே -அகூ


இறைவி மூன்றெழுத்து வடிவாக விளங்குபவள் என்பதை கூடுஆம் பாடலில் தெரிவிக்கின்றார். அம்மைக்குரிய பீஜ மந்திரம் ஸ்ரீம் என்பதாகும். இதில் சகார, ரகார, இகாரங்களாகிய மூன்றெழுத்துக்கள் உள்ளன. திருமூலர் இதனை ரீங்காரத் துள்ளே நிறைந்து நின்றாளே எனக் கூறுவார்.

அம்பிகை இறைவனுக்கு மனைவியாகவும் தாயாகவும் தங்கை யாகவும் மகளாகவும் விளங்கும் இயல்பு கூஎஆம் பாடலில் உணர்த்தப்படுகிறது.

இவ்வாறு பொதுவாக அம்பிகை யின் பெருமைகளை விளக்கும் அபயாம்பிகை சதகம் சிறந்த தேவி தோத் திரங்களில் ஒன்றாக விளங்குதலை இந் நூலை ஓதி உணர்வோர் அறிந்து மகிழலாம்.




செல்வியை பாகம் கொண்டு, சேந்தனை மகனாகக் கொண்டு சேவை சாத்தியருளும் செம்மை நலத்திருக்காட்சி.



புன்னகையுடன் பொன்னகை அணி செய்ய
பொலிவுடன் விளங்கும் அன்னை
அபயாம்பிகை.



திருக்கோலம் கண்ட கண்களுக்குப் பின்
திருக்கோலம் காண பெருமாட்டி நின்றிடும்
பேரருட்காட்சி



திருமுறைகளில் மயிலாடுதுறை

மா.பட்டமுத்து M.Sc., B.T.,
சங்கரன்கோவில்

(இக்கட்டுரையில் ஞானசம்பந்தப் பெருமான், அப்பரடிகள், சேக்கிழார், இம்மூவரும் அருளிய அருட்பாடல் களிலிருந்து மயிலாடுதுறைப் பெரு மானின் சிறப்பும், தலச்சிறப்பும், இத்தலப் பதிகத்தை ஓதுவதால் ஏற்படும் பயனும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. மேலும் மாயூரப் புராணத்தில் மயிலாடுதுறையின் சிறப்பைக் காட்டும் ஒரு பாடலின் விளக்கமும் தரப் பெற்றுள்ளது.)

சோழநாட்டுக் காவிரியின் தென் கரையில் மயிலாடுதுறை 39ஆவது தலமாகும். இது மாயூரம் எனவும் வழங்கப்படுகிறது. அன்னை மயில் உருக் கொண்டு அப்பனை வழிபட்ட தலம். கௌரி தாண்டவம் எனப் புகழ்பெறும். மயில் உருவுடன் இறைவன் ஆடியருளிய தாண்டவம் நிகழ்ந்த பதி இது. காவிரியில் இடபத்தீர்த்தத்தில் துலா மாதம் முழுவதும் நீராட்டுவிழா நிகழும். ஆளுடையபிள்ளையும், ஆளுடைய அரசும் மாயூரநாதரையும் அபயாம்பிகை யையும் புகழ்ந்து சொன்மாலை பாடி யுள்ளனர். அத்திருமுறைப் பதிகங்களின் அருள் நலப் பெருக்கினை ஈண்டு சிந்திப்பாம்.

முதல் திருமுறையில் மாயூரம்

திருஞானசம்பந்த சுவாமிகள் ''எல்லையில்லதோர் இன்பம் முன் பெருகிட'' மயிலாடுதுறைக்கு வந்தருளினார். செல்வ வேதியர் தொண்ட ரோடு'' எதிர்கொண்டனர். அத் தொண்டர்கள் வஞ்சனையின்றி இரவும் பகலும் நன்மாமலர் கொண்டு மயிலாடுதுறை மன்னரை வழிபடும் நியமம் பூண்டவர்கள். ஊனத்திருளாம் ஆணவமலம் அகலவேண்டின் ஞானப் பொருளைத் துணைக் கொண்டு எம்பிரானை வழிபட வேண்டும். மயிலாடுதுறையை மனமொன்றித் தியானிப்பவர்களின் பிணிகள் அழியும். மயிலாடுதுறை மணியர்ன் தம்மை யணுகியவர்தம் துயர் தீர்ப்பான். தொண்டர்கள் இசை பாடித் துதி செய்வர். வேதியர் மறைபாடுவர். மயிலம்மையை இடப்பாகம் கொண்டு மகிழும் ஐயனை அந்தணர் பாடிப் பரவி நிற்பர். சிரம் கையில் ஏந்தி இரந்து நிற்கும் மாயூர நாதனைப் பிரம விஷ்ணுக்கள் அறியார். சமணரும் புத்தரும் உணரார். மயக்கம் தீர்க்கும் மயிலாடுதுறை புகழ் பாடும் திருஞானசம்பந்தரின் இப்பதிகம் உணர் வோர் உயர்வினைப் பெறுவர்.

*நயர்காழியுண்ஞா னசம்பந்தன்
மயல்தீர் மயிலா டுதுறைமேல்
செயலா லுரைசெய் தனபத்தும்
உயர்வா மிவையுற் றுணர்வார்க்கே*

உயர்வினைத் தரும் உத்தம திருப்பதிகம் இது.

மூன்றாம் திருமுறையில் மயிலாடுதுறை

திருவிராகம் என்ற அமைப்பில் சாதாரிப் பண்ணில் மயிலாடுதுறையின் பெருமையைப் பாலறாவாயர் பாடி அருள்கிறார். மிக வாய்த்ததொரு காதன் மையால் இத்திருப்பதிகத்தினை இசை யால் உரை செய்வார் பொன்னுலகம் பெறுவர். ஈசன் விரும்புமிடம் மயிலாடு துறையே என்ற கருப்பொருள் உடையது இத்திருப்பதிகம். முன் இரண்டு அடிகள் முதல்வன் பெருமை பகர்வன; பின்னிரண்டு அடிகள் இயற்கை எழில்வளம் மிக்க மயிலாடுதுறையின் மகிமையினை எடுத்தியம்புவன.

ஏன எயிறு, அரவம், என்பு ஆமை பூண்டுள்ள இளைஞராம் ஈசன் விரும்பும் இடம் மயிலாடுதுறை என்க. வேதியர்களின் வேள்விப்புகை விண் ணுலகினைச் சென்று கற்பகச் சோலையின் மீது மாசு படச் செய்கிறது. காவிரிக்கரையோர மரங்களில் விளையாடும் குரங்குகள் தம் மேல் நீர்த் திவலை வீசுவதால் சினம் கொண்டு, காவிரி மீது மலர்களை வீசுகின்றன. வாளை மீன்கள் தாவ, கமுகு செங்கனி உதிர்க்க, பூக்கள் மலர மணம் நாறும் துறை மயிலாடுதுறையாம். காவிரியில் வரும் மல்லிகை முதலிய நறுமண மலர்களால் மணமற்ற மற்றைப் பொருள் களும் மணம் பெறுகின்றன. மலைமகள் மணாளன் விரும்பி வீற்றிருக்கும் இத் தலம் அருள் மணம் நிரம்பி இருப்பதால் அருளற்ற ஆன்மாக்களும் அருள் விரவப் பெறுவன. காவிரி இரத்தினங்களைச் சிதறுகிறது. அஞ்சிய மந்தி குதி கொள் கிறது. மரக்கிளைகள் மோதுகின்றன. தேன் கூடுகள் கிழிய, மதுவினை வண்டு கள் உண்டு மகிழ்கின்றன. வேதியர் பிரான் வீற்றிருந்து அருள்பாலிக்கும் இத்தலத்து தேவ மடந்தையர் நீராடி நிமலனைப் பூசிக்கின்றனர். அந்தந்தத் திக்குகளில் உள்ள அனைத்து அடியார் களும் நன்றாக வாழும் பொருட்டு அவர்களின் வினைகள் நீங்க அருள் பாலிக்கும் அண்ணல் மயிலாடுதுறை நாயகன். இலங்கை மன்னனின் பத்து முடிகளும், இருபது தோள்களும் அரையுமாறு நெருக்கி அருள்பாலித்த பிரபு வீற்றிருப்பது இத்தலமாகும். மட நாரைகள் கெண்டைமீனை வயிறார உண்டு வண்டல் மணலைக் கிளறி விளையாடும் மயிலாடுதுறையில் பிரம விஷ்ணுக்கள் அறிய முடியாத பேரொளிப் பிழம்பாம் அரனார் எழுந்தருளி இருக்கிறார். மிண்டு திறல் அமணரும், சாக்கியரும் அலர்தூற்ற அவர் அறிவுக்கு அப்பாற்பட்ட வலிமையுடைய, இண்டை மாலை சூடிய எம்பிரான் அருள் பாலிப்பது தேன் ஒழுகும் சோலை சூழ்ந்த மயிலாடுதுறையாம்.

சூலம் ஏந்தி பேய்க்கணத்தொடு ஆடல்புரி கபாலியைத் தொழுதுய்ய அன்பு பெருக்கும் அற்புதத் தமிழ் மாலையைத் திருஞானசம்பந்தர் ஈண்டு அருள்பாலிக்கிறார். இச்சொல் மாலை யினை இசையோடு பாடினால் பொன்னுலகம் பெறுவது உறுதி.

நினந்தரு மயானநில் வானமதி
யாததொரு சூலமொடுபேய்க்
கணந்தொழு கபாலிகழ லேத்திமிக
வாய்த்ததொரு காதன்மையினால்
மணந்தண்மலி காழிமறை ஞானசம்
பந்தன்மயி லாடுதுறையைப்
புணர்ந்ததமிழ் பத்துமிசை யாலுரைசெய்
வார்பெறுவர் பொன்னுலகமே

ஐந்தாம் திருமுறையில் மாமயிலாடுதுறை

மயிலாடுதுறைப் பெருமான் புகழ்பாடும் திருநாவுக்கரசு சுவாமிகளின் திருக்குறுந்தொகை உள்ளத்தை உருக்க வல்லது. முதல் இரு பாடல்கள் மாயூர நாதர்மீது காதல் கொண்ட மகளின் நிலை கண்டு வருந்தும் தாயின் கூற்றாக அமைவன.

கொள்ளும் காதன்மை பெய்துறும் கோல்வளை
உள்ள முள்கி உரைக்கும் திருப்பெயர்
வள்ளல் மாமயி லாடுதுறையுறை
வெள்ளம் தாங்கு சடையன் வேண்டியே

காதன்மை என்ற இச்சொல் ஆளுடையபிள்ளையார் மகுடப் பாசுரத்திலும் இடம் பெறுவது காண்க. மயிலாடுதுறை நாயகன் தமது கொன்றை மலரினைக் கொடுத்தால் தலைவி சித்தம் தெளிந்து தனது பசலை நீங்கிப் பழைய நிறம் பெறுவாள் என்று கூறுகிறது இரண்டாவது திருப்பாடல்.

மூன்றாவது திருப்பாடல் மயிலாடுதுறையரன் தொண்டர் கூட்டத்தின் பெருமையைக் குறிப்பதாகும்.

மயிலாடுதுறைப் பிரானின் அடியார் களின் திருவடிமலர்களைத் தலையிலே சூடி பொருத்திக் கொள்ளும் பேறு பெற்றால் தேவலோக பதவியும், அயன்மால் பதவிகளும் பொருளன்று என்று அப்பர் பெருமான்தமது வாழ்வின் குறிக்கோளை அருமையாக எடுத்துரைக் கிறார். அவர் ''ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்'' ''கூடும் அன்பினில் கும்பிடலே யன்றி வீடும் வேண்டா விறலின் விளங்கினார்'' எனவேதான் மயிலாடுதுறையரனின் தொண்டர்களின் பாத மலர்களைப் பரவினால் பெறும் பரவசம் விண்ணுலக பதவிகள் தர மாட்டா என்று ஆணித் தரமாகக் கூறுகிறார்.

கொள்ளேன் புரந்தரன் மாலயன்
வாழ்வு குடிகெடினும்
நள்ளேன் நினதடி யாரொடல்
லால்நர கம்புகினும்
எள்ளேன் திருவரு ளாலே
இருக்கப் பெறின் இறைவா
உள்ளேன் பிறதெய்வம் உன்னையல்
லாதெங்கள் உத்தமனே

என்ற மணிவாசகப் பிரபுவின் திருவாக்கு ஈண்டு குறிப்பிடத்தக்கது. இவ்வரிய கருத்தினை

சுந்தர மால் அயன் வாழ்வும்
ஐந் தாரின் சுவர்க்க வைப்பும்
இந்திர ஞாலம் கனாஎனக்
கண்டுஉன் இணையடிக்கே
அந்தம்இல் காதலுற்று
ஆராத இன்பத்து அமர்ந்திருக்கத்
தந்தருள் கோமுத்தி முத்தி
பஞ்சாக்கர சற்குருவே

என்ற முத்தி பஞ்சாக்கர மாலையும் வலியுறுத்துவது காண்க.

இனி 4,5,7,10,11 திருப்பாடல் களில் மாயூரநாதரை வழிபடுவோர் அடையும் வளங்களைப் பட்டியல் படுத்துகிறார் பாவேந்தர். சினமிக்க காலன் விரைகிலான். இறப்பும் பிறப்பும் அறுக்கலாம். கொடிய மானிட வாழ் வால் குறைவு சிறிதும் வராது. துயரமிக்க இவ்வுலக வாழ்க்கை உண்டோ மயிலாடுதுறையைத் தரிசித்தால் கடுந்துயர் இல்லை. வினைக்கட்டு விலகும்.

நிலைமை சொல்லுநெஞ்
சேதவ மென்செய்தாய்
கலைகள் ஆயவல்லான்
கயிலாய நன்

மலையன் மாமயிலாடு
துறையன்நம்
தலையின் மேலும்
மனத்துளும் தங்கவே

என வரும் கூஆவது திருப்பாடல் ''மயிலாடுதுறையரன் தலையின் மேலும், உள்ளத்திலும் எழுந்தருளி யிருக்கிறானே அப்பேற்றிற்கு, நெஞ்சே, நீ என்ன தவத்தைச் செய்தாய், சொல்'' என்று அப்பர் பெருமான் வினவும் சொல்லோவியம் ஆகும். கூஆவது திருப் பாடல் எம்பிரான் அருள் அழகினை வியந்து பாராட்டுகிறது. அஆவது திருப் பாடலில் அவனை உணர்ந்தோர்க்குத் தவம் தேவையில்லை என்ற கருத்து காணப்படுகிறது. சிவஞானிகள் சாத்திய மடைந்தவர்கள். எனவே அவர்கட்குச் சாதனங்கள் வேண்டுவதின்று. கோலும், தர்ப்பைப் புல்லும், கூர்ச்சமும், தோலும் பூண்டு தவமியற்றினும் சிவபிரானை உணராதார்க்கு அவற்றால் பயன் இல்லை. நிறைவுப் பாசுரத்தில், மயிலாடுதுறைப் பெருமானைத் தொழும் கரத்தினை உடையவர்கட்கு இருவினைக் கட்டு முழுதும் அகலும் என்று ஆளுடைய அரசு அற்புதமாக அறிவுறுத்துகிறார்.

திருத்தாண்டகத்தில் மயிலாடுதுறை

திருவெண்ணியூர் விகிர்தனார் அமர்ந்துறைகின்ற பல க்ஷேத்ரங்களில் ''மடையேறிக் கயல்பாய வயல்கள் சூழ்ந்த மயிலாடுதுறையும் ஒரு அரிய தலமென்று அப்பர் பெருமான் சுட்டிக் காட்டுகிறார். திருக்கோடிகா அமர்ந்துறை யும் குழகன் ''மயிலாடுதுறை யிடமா மகிழ்ந்தான் கண்டாய்'' என்று தாண்டக வேந்தர் அருளிச் செய்கிறார். திருவீழி மிழலைத் திருத்தாண்டகம் ''ஆனேறேறி வெயிலாய சோதி விளங்கும் நீற்றார் வீழிமிழலையே'' மட்டுமின்றி ''மயிலாடுதுறையுளார்'' என்று எடுத்தியம்புகிறது. இனி ஆளுடைய அரசுகளின் அடைவு திருத்தாண்டகம்.

கயிலாய மலையெடுத்தான் கரங்களோடு
சிரங்களுரம் நெரியக்கால் விரலாற்
செற்றோன்
பயில்வாய பராய்த்துறைதென் பாலைத்துறை
பண்டெழுவர் தவத்துறைவெண் துறை
பைம்பொழில்
குயிலாலந் துறைசோற்றுத் துறைபூந்துறை
பெருந்துறையும் குரங்காடு துறையி
னோடு
மயிலாடுதுறை கடம்பந்துறை ஆவடு
துறை மற்றும் துறையனைத்தும்
வணங்கு வோமே

என்று எம்பிரானை வணங்கவேண்டிய அருள் சூழல் மிக்கது மயிலாடுதுறை என அடையாளம் காட்டுகிறது.

சேக்கிழார் சுவாமிகள் காட்டும் மயிலாடுதுறை

ஆளுடைய அரசு மேற்கொள்ளும் புனிதப் பயனத்தில் பொன்னியின் இரு கரைகளையும் சார்ந்த அரிய தலங்கள் இடம் பெறுகின்றன. ''காவுயரும் மயிலாடுதுறை''யும் அவற்றுள் ஒன்று.

மேவு புனற் பொன்னியிரு கரையும் சார்ந்து
விடையுயர்த்தார் திருச்செம்பொன்
பள்ளி பாடிக்
காவுயரும் மயிலாடு துறைநீள் பொன்னிக்
கரைத் துருத்தி வேள்விகுடி எதிர்
கொள்பாடி
பாவுறு செந் தமிழ்மாலை பாடிப் போற்றிப்
பரமர்திருப் பதிபிறவும் பணிந்து போந்தே
ஆவுறும் அஞ் சாடுவார் கோடிகாவில்
அணைந்து பணிந்தாவடுதண் துறையைச்
சார்ந்தார்.

என்பது பெரிய புராணத் திருப்பாடல்.

இனி பூந்தராய் வேந்தர் தமது அருட்பயணத்தில் மயிலாடுதுறை அருகே சென்றருளிய காலை; அத்தலத்து செல்வ வேதியர் பெருமக்களும், திருத் தொண்டர்களும் அன்புடன் வரவேற் கின்றனர். ''கொல்லை மான் மறிக் கையரை'' ''எல்லையில்லதோர் இன்பம் முன் பெருகிட'' ''இறைஞ்சுகிறார் தமிழாகரர். ''உள்ளம் இன்புற உணர் வுறும் பரிவு'' கொள்கிறார். உருகி நிற்கிறார். ''விளங்கு சொற்பதிகத் தெள்ளும் இன்னிசைத் திளைப்பொடும் புறத்தணைகிறார். இவ்வரிய நிகழ்ச்சி யினை

உள்ளம் இன்புற உணர்வுறும்
பரிவுகொண்டுருகி
வெள்ளம் தாங்கிய சடையரை விளங்கு சொற்
பதிகத்
தெள்ளும் இன்னிசைத் திளைப்பொடும்
புறத்தணைந் தருளி
வள்ளலார் மற்ற வளம்பதி மருவுதல்
மகிழ்ந்தார்.

என்று தெய்வச் சேக்கிழார் பெருமான் சித்தரித்துக் காட்டுகிறார்.

இங்ஙனம் திருமுறைகளில் மயிலாடுதுறை பெருமை பேசப்படு கிறது. துறைசையாதீனம் சைவ உலகிற்கு நல்கிய அருட்கொடைகளில் ஒரு பெருந் தகை மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள். அந்த அருள்வள்ளல் மாயூரப் புராணம் என்ற அற்புதத் தமிழ் இலக்கியம் அருளிச் செய்துள்ளார். மயிலாடுதுறையின் எந்தப் பகுதிக்குச் சென்றாலும் தேவாரத் திருமுறைகளின் அருளோசையும், வேத சிவாகம முழக்கமும், புராணங்களின் நல்லோசை யும், ''அரஹர''. என்னும் புனித ஒலியுமே நிறைந்து நிற்கும் என்று மகா வித்துவான் எடுத்துரைக்கிறார்.

மன்னுதே வாரத் தோதை
வயங்குவா சகத்தி னோதை
பன்னுவன் மறையினோதை
பரவும்ஆ கமத்தி னோதை
துன்னுபல் புராணத் தோதை
அரவெனத் தொகுவா ரோதை
இன்னு மற்றுள்ள வோதை
துயின்றிடா எந்த ஞான்றும்

என்பது மாயூரப் புராணத் திருப் பாடலாகும்.

மயிலாடுதுறையின் மகிமையினைச் சிந்திக்க வைத்த எந்தை பெருமான் துறைசையாதீன் உங்ஆவது குரு மகாசன்னிதானம் அவர்களின் பொன்னார் திருவடி மலர்களை அடியேனது ''உளத்தில் சிரத்தில் ஓதிடு நாவினில் உன்னி வைத்தே உரைப்பாம்.



வள்ளல் மாமயிலாடுதுறை

டாக்டர்.மு.சிவச்சந்திரன், எம்.ஏ., பி.எச்.டி., பி.எட்.,
தமிழ்த்துறைத்தலைவர் - பேருரையாளர்,
தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி,
தருமபுரம், மயிலாடுதுறை -1.

(இக்கட்டுரையாசிரியர் அப்பர் பெருமான் அருளிய மயிலாடுதுறைத் திருப்பதிகத்தில் அமைந்துள்ள பாடல்களில் செவிலி கூற்றாக அமைந்த இரண்டு பாடல்களின் இலக்கியச் சுவையை இனிய கருத்தோவியமாய்த் தீட்டியுள்ளார். சரியை, கிரியை யோகம், ஞானம் ஆகிய நால்வகை நெறி பற்றியும், ஒன்றிய உணர்வு வழிபாட்டுச் சிறப்பு பற்றியும் விளக்குவதோடு 'அருளது சத்தியாகும் அரன் தனக்கு' என்றவாறு திருமுறையில் அம்பிகை நாமம் பேசப் பட்டுள்ளதையும் எடுத்துக்காட்டியுள்ளார்.)

காசிக்குநிகராகப் போற்றப்படும் தலங்களுள் ஒன்றாகச் சிறப்புற்று விளங்கும் தலம் மயிலாடுதுறை. உயிர்களின் தலைவனான இறைவனை உமையவள் மயில் உருக்கொண்டு வழிபட்ட தலம் ஆதலின் இது மயிலாடுதுறை எனப் போற்றப்படுகிறது. வள்ளல் பெருமானாக விளங்குகிற இறைவனின் திருவுரு கண்டு தன்னையும், தன் நாமத்தையும் மறந்த நிலையில் நாயகன் நாயகி பாவத்தில் ஆண்டவனின் பெருமையைப் போற்றுகிறார் அப்பர் சுவாமிகள். ''கொள்ளுங் காதன்மை பெய்துறுங் கோல்வளை'' எனத் தொடங்கும் மயிலாடுதுறைப் பதிகத்தின் முதல் இரண்டு பாடல்கள் செவிலி கூற்றாக அமைந்திருப்பது எண்ணத்தக்கது.

கங்கைநீரைத் தலையில் சுமந்த வண்ணம் மயிலாடுதுறையில் வள்ளல் பெருமானாக இறைவன் வீற்றிருக்க, அப்பெருமான் மீது காதல் கொண்ட தலைவி உள்ளத்தால் உள்கி அப் பெருமானின் திருப்பெயரையே மீண்டும் மீண்டும் உரைக்கும் தன்மையளாகக் காணப்படுகிறாள். அக்காதல் மயக்கத்தின் விளைவால் பசலைப் பூத்து நிற்கும் தலைவி வெண்பிறை அணிந்த இனியவனான இறைவன் தன்னுடைய கொன்றை மலரினைக் கொடுத்தால் சித்தம் தெளிந்து, உடல் பூரித்து வளைகளைச் செறிப்பாள் என்று செவிலி கூற்றாக அப்பர் பெருமான் பாடுகின்றார்.

அடியார்களும் அருளாளர்களும் இறைவனைப் பாடும் பொழுது தன்னை நாயகியாகவும் இறைவனை நாயகனாகவும் எண்ணி வழிபட்டது ஈண்டு சிந்தித்தற்குரியது. சீகாழிப் பதிகத்தில் சம்பந்தப் பெருமான், கிளியை அழைத்து உனக்குப் பாலும் தேனும் உண்ணத் தருகிறேன்; ஒருமுறை என்னுடைய தலைவனாக விளங்குகிற தோணிபுரத்து ஈசன் பெயரைச் சொல்லமாட்டாயா? எனக் கேட்கும் பாங்கு அருமைக்குரியது.

சங்கநிதி பதுமநிதி என்னும்

நிதிகளெல்லாம் தந்து தரணியையும் வானையும் ஆளும் பதவியைத் தந்தாலும் அதை வேண்டேன் என்றருளியவர் அப்பரடிகள். இக்கருத்தை அப்படியே மயிலாடுதுறைப் பதிகத்தில் பதிவு செய்கிறார். வண்டுகள் சேர்ந்த மயிலாடுதுறை தலத்து இறைவனுக்குத் தொண்டு செய்யும் அடியார் திருப்பாதங்களைச் சென்னியில் சூடிக் கொள்கிற வாழ்வே உண்மையான வாழ்வு எனப்போற்றுகிறார் நாவுக்கரசு சுவாமிகள். அதை விடுத்து, அண்டர் வாழ்வும் அமரர் இருக்கையும் தந்தாலும் அதை ஏற்று அதனோடு ஒன்றி இருக்கும் தன்மையினைப் பெற்றிலோம் என்றும், இம்மை வாழ்வில் இறைவன் அருளால் சோறும் கூறையும் பெற்று வாழும் வாழ்வே போதுமானது என்றும் பேசுகிறார் அப்பர் சுவாமிகள். இக்கருத்தை அடியொற்றியே சுந்தரர் ''இம்மையே தரும் சோறும் கூறையும் எந்தைப் புகலூர் பாடுமீன்காள்!'' என்று போற்றுகிறார். ஸ்ரீகாசிமடத்து முதல்வரான ஸ்ரீகுமரகுருபர சுவாமி களும், நாளும் நாளும் தருமையாதீன அடியவர்களை வழிபட்டு, அவர்கள் உண்டு எறிகிற இலையில் கிடக்கும் பருக்கைகளை உண்ண விரும்பும் ஞமலி யான வாழ்வையே விரும்புகிறேன் என்றருளும் பாங்கு சிறப்பிற்குரியது. அடியார்க்கு எளியனாக இறைவன் விளங்குவதும், அவன் பெருமையையும், அதனைக் கூறி வாழ்கிற அடியார்களைப் பணிந்து வாழ எண்ணுகிற அருளாளர்கள் வாக்கும் எண்ணி எண்ணி மகிழத்தக்கன.

இறைவனின் திருவடிகளையே தொழுது வாழ்ந்த மார்க்கண்டேயருக்கு அபயம் அளித்து அவரை வாழ்வித்த வள்ளல் இறைவன். பெருவீரமும் பெருமையும் கொண்டு மயிலாடுதுறையில் விளங்குகிற சிறப்புமிக்க இறைவனை வழிபட்டால் பிறப்பினாலும், அதன் காரணமாக வரும் இறப்பினாலும் ஏற்படும் துன்பங்களை விட்டு விலகலாம். இந்த உடல் மண்ணுக்கு வந்து பிறந்ததற்குக் காரணமே மீண்டும் பிறவாநிலையை அடையவேண்டும் என்பதற்கே! எனவேதான், அப்பர் சுவாமிகள் ''தலையே நீ வணங்காய்'' என்றும், ''கண்காள் காண்மின்களோ'' என்றும், ''செவிகாள் கேண்மின்களோ'' என்றும், ''மூக்கே நீ மூரலாய்'' என்றும் பலவாறாக உடல் உறுப்புக்களை எல்லாம் இறைவனுக்கே அர்ப்பணிக்கும் வண்ணம் திரு அங்கமாலை அருளினார். புலனைந்தும் பொறிகலங்கி நெறி மயங்கி அறிவழிந்து ஐம்புலன்கள் வழி உயிர் சென்று துன்பம் அடையும் காலத்து, ''அஞ்சேல்'' என்று கூறி அருள் செய்பவன் இறைவன் என்கிறார் சம்பந்தர்.

ஆன்மீக வாழ்வு என்பது உடல் சார்ந்த தொண்டு மட்டும் அன்று. உடல் சார்ந்த அடிப்படை வளர்ச்சி மட்டும் அன்று. இவை, இறைவனைப் பற்றிச் சிந்திக்கும் நிலைக்கு நம்மை உயர்த்துமே தவிர இறைவனை அடைவதற்கு வழிவகை செய்யாது. அப்படியானால், இறைவனை அடைய என்ன செய்ய வேண்டும் என்னும் கேள்வி நம் மனதில் எழும். இறைவனை அடைய வேண்டுமானால் உடலால் செய்கின்ற சரியைத் தொண்டோடு உள்ளத்தால் வழிபாடு நிகழ்த்துகிற கிரியைத் தொண்டும் யோகமும் இணைதல் வேண்டும். அங்ஙனம், இணையுமாயின் 'ஞானம்' தானே கை வரும் என்பது


திண்ணம். ஆதலால் தான் அப்பர்சுவாமி கள், ''கோலும் புல்லும் ஒரு கையில் கூர்ச்சமும் தோலும் பூண்டு துயரமுற்று'' பயனில்லை என்கிறார். இவை யெல்லாம் இறைவனைப் பற்றி அறிய வழிவகை செய்யுமே தவிர இறைவனை அடைய வழிவகை செய்யாது. இறைவனை அடைய வேண்டுமானால் உள்ளத்தில் இறைவனை வைத்து ஒன்றிய உணர்வுடன் பூசை செய்யவேண்டியது அவசியம்.

''அருளது சத்தியாகும் அரன் தனக்கு'' என்பது நம் அருளாளர் வாக்கு. அவ்வகையில், வள்ளல் பெருமானாக விளங்குகிற இறைவனின் அருளை மக்களுக்கு வாரி வழங்குபவள் உமையவள். அபயாம்பிகை என்று போற்றப்படும் அம்மையை, மஞ்சன் மாமயிலாடுதுறை ''அஞ்சொலால் உமை'' என்றே போற்றுகிறார் அப்பரடிகள். ''அஞ்சொலால் உமை'' என்னும் திருப்பெயரே பின்னாளில் அஞ்சல் நாயகியாய் மாறி அதற்கேற்ப 'அபயாம்பிகை' என மொழி பெயர்க்கப் பட்டுள்ளது.

மனித வாழ்க்கை எடுத்து வரும் ஒவ்வொரு உயிரும் இனிப் பிறவா நிலையை எய்தவேண்டும். அதற்கு அடிப்படை அடியார்களைப் போற்றலும் ஆண்டவனைப் பணிதலுமேயாம். அவ்வாறு, அடியார்களைப் போற்றியும் ஆண்டவனைப் பணிந்தும் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி நாம் வழிபாடாற்றி நம் கடமையைச் செய்தால், நம்மைத் தாங்கும் பணியை இறைவன் செவ்வனே செய்வான். 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்பது அப்பர் வாக்கு. பணிசெய்து வாழ்வோம்! பரமன் அருள் பெறுவோம்!



வெள்ளிக் கவசத்தில் விளங்கியருளும் அருள்மிகு மாயூரநாதர்
அழகை அள்ளிக் கொள்ள கண்கள் ஆயிரம் வேண்டுமே.



நால்வர்க்கு அறமுரைத்த நல்ல குருநாதர் ஞானமே வடிவாய் விளங்கும் ஆலமர் செல்வர்.



திருப்பறியலூரும் மயிலாடுதுறையும்

முனைவர்.சிவ.திருச்சிற்றம்பலம்
சுந்தரப்பெருமாள் கோயில்.

(இக்கட்டுரை தட்சயக்ஞ வரலாறு - பறியலூர்த் தலபுராணச் சிறப்பு - மயிலாடுதுறைப் புராணச்சிறப்பு - புராண நிகழ்வுகள் - பிரமவனம் கௌரீமாயூரமானமை - நாவரசர் கண்ட சிவன் உமை வடிவங்கள் சிவனை பூசித்த உமை வடிவங்கள் - மயில் வடிவாய்ப் பூசித்த மூன்று தலங்கள் - தாண்டவங்கள் ஆகிய செய்திகளை விளக்குகிறது.)

மயிலாடுதுறையும் வீரட்டங்கள் நான்கும்

"மயிலாடுதுறை இதன் எல்லை ஒரு யோசனை என்றும் எட்டு வீரட்டத்துள் கால சம்ஹார க்ஷேத்திர மாகிய திருக்கடவூரும், தட்சயாக சம்ஹார க்ஷேத்திரமாகிய திருப்பறிய லூரும் கஜசம்ஹார க்ஷேத்திரமாகிய வழுவூரும் காமதகன க்ஷேத்திரமாகிய திருக்குறுக்கையும் இதன் எல்லைக்குள் உள்ளன வென்று தல புராணங்கள் கூறா நிற்கும் என்று உ.வே.சா அவர்கள் தம் 'திருத்தலங்கள் வரலாறு என்னும் நூலின் கண் குறிப்பிட்டுள்ளார்.

முன்னும் பின்னும்

இவ்வாறாக ஐந்து பூங்கொத்தாக அமையப் பெற்றுள்ள தலங்களுள் திருப்பறியலூர்த் தலம் தட்சயக்ஞ வத வரலாற்றின் முற்பகுதி நிகழ்வுற்ற இடமாகவும், மயிலாடுதுறை திருத்தலம் பிற்பகுதி நிகழ்வுற்ற பூமியாகவும் அவ்வத்தல புராணங்களால் சிறப்பாக எடுத்துரைக்கப் பெற்றுள்ளன.

பறியலூர்த் தலபுராணம்

கீழப்பரசலூர் என வழங்கப் பெறும் திருப்பறியலூர் வீரட்டம் தட்சன் யாகம் செய்த காரணத்தால் தட்சபுரம் எனவும் வழங்கப்பெறும். திருஞான சம்பந்தரின் தேவாரப் பதிகத்தினைப் பெற்றுத் திகழும் இத்தல புராணத்தினை, திருக்கயிலாய பரம்பரை திருவாவடு துறை ஆதீனம் பின் வேலப்ப தேசிக சுவாமிகள் அவர்கள் இயற்றி அருளியுள்ளார்கள். அத்தலபுராண நூல் 16 சருக்கங்களையும் 656 பாடல்களை யும் கொண்டு அமையப் பெற்றுள்ளது. அப்புராண நூலின் கண் தட்சன் உமா தேவியைத் தம் மகளாகப் பெற்று அதன் வாயிலாகச் சிவபெருமானை மருமகனாக அடையும் நோக்கில் ஆணவ மலம் மீக்கூற சிவனைத் தவிர்த்து மேற் கொண்ட வேள்வியைப் பற்றியும், அவ்வேள்விக் குத் தாமே எழுந்தருளிய உமையம்மையினை அவமதித்த தட்சன் நிலை பற்றியும், அந்நிலையில் தட்சன் யாகத்தையும், யாகத்தில் பங்கேற்ற தேவர்களையும் சிதைத்தருளிய வீர பத்திரர் நிலை பற்றியும் விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

மயில்வடிவான அன்னை

வீரபத்திர மூர்த்தியால் தட்சன்

யாகம் சிதைக்கப்பெற்று தட்சனும் தண்டிக்கப்பெற்ற நிலையில், உமையம்மை தட்சன் மகளாகித் தாம் பெற்ற தாட்சாயணி என்ற பெயரையும், திருவுடலையும் தாங்க விருப்பமின்றி தவயோகத்தால் தன்னுடலம் நீத்து மயிலுருவம் பெற்ற நிலையினையும் பின் வேலப்ப தேசிக சுவாமிகள் சிறப்பாக எடுத்துக் கூறியுள்ளார்.

மயிலாடுதுறைப் புராணம்

காவிரிக் கரையின் தென்பால் அமைந்துள்ள திருத்தலங்களுள் முப்பத்து ஒன்பதாவதாக அமைந்து சிறந்துள்ள மயிலாடுதுறைத் தலம் திருஞானசம்பந்தராலும் திருநாவுக்கரசராலும் தேவாரப் பதிகங்களைப் பெற்ற மாண்பினையுடையதாகும். தட்சயக்ஞ வதத்தின் வரலாற்றின் பிற்பகுதியை விரிவாக எடுத்துக் கூறுவதான இத்தல புராணத்தினை திரிசிரபுரம் மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் இயற்றி உதவியுள்ளார் கள்.

தலபுராணத்தின் அமைப்பும் சிறப்பும்

மாயூரப் புராணம் கடவுள் வாழ்த்து, அவையடக்கம், சிறப்புப் பாயிரம் ஆகிய முதல் மூன்று பகுதிகளுடன் திருநாட்டுப்படலம் முதலாக நைமிச முனிவர் பூசித்த படலம் ஈறாக 61 படலங்களையும் 1895 பாடல்களையும் உடையதாய் அமைந்து சிறந்துள்ளது. இப்புராணத்துள் ஆறாவது படலமாக அமைந்துள்ள தக்கன் மகம் புரி படலத்தினைத் தொடர்ந்து இடம் பெற்றுள்ள யாகசங்காரப் படலம் மாயூரப் படலம், தேவி வரம்பெறும் படலம், மாயூரநாதர் வள்ளலார் எனும் பெயர் பெற்ற படலம் தேவியாரா தனைப் படலம், திருநடனப் படலம் திருமணப் படலம் எனத் தொடர்ந்து அமைந்துள்ள எட்டு படலங்களிலும் தட்சசம்ஹாரத்தைத் தொடர்ந்து நிகழ்வுற்ற பல்வேறு அருட்செயல்கள் விரிவாக விதந்தோதப் பெற்றுள்ளன.

புராண நிகழ்வுகள்

வீரபத்திரரால் தண்டிக்கப் பெற்ற தட்சன் தான் செய்த தவறுகட்காகப் பெரிதும் வருந்தி, திருப்பறியலூர்த் திருத்தலத்தினின்று நீங்கி, மயிலாடுதுறையினை வந்தடைந்து பிரமதீர்த்தத்தில் நீராடி சிவபூசனை யியற்றி சிவனருள் பெற்றுய்ந்தான். சிவாபராதத்திற்கு உள்ள என தட்சயக்ஞத்துள் தாங்கள் கலந்து கொண்டு பாவ வினைகள் அனைத்தும் நீங்கவேண்டித் தேவர்களும் முனிவர்களும் மயிலாடுதுறையுறை மாயூரநாதனைப் பூசித்துப் பேறு பெற்றுய்ந்தனர் சிவபெருமானால் 'மயிலுருவாய்ப் பிரமவனம் எனப் பெறும் மாயூரத் தலத்தை அடைந்து எம்மை வழிபட்டு நம்மை அடைக என்று படைக்கப் பெற்ற உமையம்மை மயிலுருக் கொண்டு மாயூரத் தலத்தை வந்தடைந்தார்.

பிரமவனம் கௌரி மாயூரமாயினமை

மயிலுருக்கொண்ட அம்பிகை யுடன் திருமகள் கலைமகள் இந்திராணி அனிந்திதை கமலினி முதலான தோழியரும் மயிலுருக் கொண்டு உடன் வந்து ஆகம விதிப்படி சிவனை உமை பூசிக்கத் துணை நின்றனர். சிவனும் ஆண் மயிலாக அச்சிவபூசனையினை ஏற்றருளியமையினால் 'பிரமவனம்' எனும் பெயரில் உள்ள இத்தலம் அன்று முதல் கௌரி மாயூரம் எனப் பெயர் பெறுவதாயிற்று.

நாவரசர் கண்ட சிவன் உமை வடிவங்கள்

குளிச்செழுந்த நாயனாராகித் திருவையாற்றில் திருநாவுக்கரசர் கண்டு மகிழ்ந்த சிவன் உமை வடிவங்களாக

காதன்மடப் பிடியோடும் களிறு -1 ஆண்யானை பெண் யானை

கோழி பெடையொடும் கூடு (2,4) - ஆண் கோழி பெண் கோழி

வரிக்குயில் பேடையோடாடி (3) - ஆண் குயில் பெண் குயில்

வண்ணப் பகன்றிலோ டாடி (6) - அன்றிற் ப்றவைகள்

இடிகுரலன்னதோர் ஏனமிசைந்து (7) - ஆண் பன்றி பெண் பன்றி

கருங்கலை பேடையோடாடி (8) - ஆண் மான் பெண் மான்.

நற்றுணைப் பேடை யோடாடி நாரை(9) - ஆண் நாரை பெண் நாரை

பைங்கிளிப் பேடையோடாடி(10) - ஆண்கிளி, பெண் கிளி இமைண ராகு தழுவி ஏறு (11) - பசுவும் ஏறும்.

என யானை, கோழி, குயில், அன்றில், பன்றி, மான், நாரை, கிளி, பசு என்று குறிப்பிட்யிள்ள உயிரின இணைகளில்

'பேடை மயிலொடும் கூடிப் பிணைந்து வருவன என்று சுட்டியுள்ளமை மயிலாடுதுறையில் நிகழ்வுற்ற ஆண் பெண் மயில்களாகி சிவன் உமை தாண்டவ நிகழ்வைக் குறித்தாகவும் கொள்ளலாம்.

சிவனைப் பூசித்த உமை வடிவங்கள்

எண்ணில் ஆகமமங்கை இயம்பியருளிய ஈசன் விரும்பி சிவபூச்னையை அம்பிகை குயில் வடிவாகக் கடம்பவனத்திலும், சக்கர வாளப் பறவை வடிவாக சக்கராப் பள்ளியிலும் பசு வடிவாக திருக் கோழம்பம், திருவாவடுதுறை முதலான திருத்தலங்களிலும், கிளி வடிவாகச் சுகவனத்திலும் பூசனை செய்த சிறப்புக்களைத் தொடர்புடைய தல புராணங்கள் விரிவாக எடுத்து விளக்கியுள்ளன.

மயில் வடிவாய்ப் பூசித்த மூன்று தலங்கள்

அவ்வகையில் உமையம்மை மயில் வடிவாகி மகேஸ்வரனைப் பூசனை புரிந்த திருத்தலங்களாக, திருக்கேதாரம், திருமயிலை, திருமயிலாடுதுறை ஆகிய முப்பெருந் தலங்களும் புராண நூல்களால் சிறப்பாகச் சுட்டப் பெற்றுள்ளன.

தாண்டவங்கள் இரண்டு


ஈசன் ஆடிய தாண்டவங்கள் பலவற்றுள் உமையம்மையின் பிரார்த்தனைக் கேற்ப இத்தலத்தின்கண் கெளரீ தாண்டவம் எனும் திருத்தாண்டவத்தைச் செய்தருளிய பின்னர் தேவர்கள் முதலான அனைவர்க்கும் ஞானம் மீது, ஆனந்த தாண்டவத்தினையும் ஆடியருளினார்.

கௌரி தாண்டவம்

எழுவகைத் தாண்டவங்களுள் ஒன்றான இத்தாண்டவம் சிவபெருமான் காத்தல் தொழிலைக் குறித்தது எனவும். சப்தஸ்வரங்களுள் 'ரி' கரஸவ்ரத்ததான இத்தாண்டவம் சிற்சபை எனப்பெறும் திருப்புத்தூர்த் திருத்தலத்தில் சிவனால் நிகழ்த்தப் பெற்றதெனவும் கூறப்பெறுகின்றது.

கௌரி தாண்டவ வடிவம்

சிவபெருமான் ஆடிய கௌரி தாண்டவ வடிவத் திருக்கோலத்தினை 'நான்கு கரங்கள் உடையவராய், செம்மை நிறத்தவராய், புன்னகை தவழும் முகத்தினராய், கபாலம் கொக்கிறகு ஊமத்தை மலர் எருக்கு பிறை ஆகியவற்றை அணிந்த ஜடா மகுடத்தராய் பரந்துபட்ட சடைமுடியுடன் பாம்பு வளையல்களையும் புனைந்தவராய் முயலகன் மீது வலக்காலை ஊன்றியவராய் இடக்காலை வளைத்து நின்று வலக்கரங்களில் அபயம் உடுக்கை இடக்கரங்களில் தீயகல் புலி ஆகியவற்றைத் தவித்து, இடது புறம் கௌரியும் வலது புறம் திருநந்திதேவரும் திகழத் திருமுடியை இடது பக்கமாகச் சாய்த்து ஆடும் தோன்றத்தினராய்ச் சிற்ப ஆகம நூல்கள் இத்தலத்துக் காட்டியுள்ளன.



ஞானவேல் தாங்கி ஞானமருளும் மூவிரு முகத்தான் முக நீறணிந்த திருக்கோலம்



துலா ஸ்நானம்

கயிலைமாமணி திருக்கோலக்கா
சிவஸ்ரீ என். இராமநாத சிவாச்சாரியார்
மயிலாடுதுறை - 600 001.

(இக்கட்டுரையாசிரியர் காவிரி தோன்றிய வரலாறு, காவிரியின் சிறப்பு, துலா ஸ்நானத்தால் ஏற்படும் பயனும் அதன் புராணச் சிறப்பும் முதலியவற்றை விளக்குவதோடு, அருள்மிகு மாயூரநாதர் துலாமாதத்தில் காவிரி தீர்த்தத்திற்கு எழுந்தருளித் தீர்த்தம் அருளும் சிறப்பும் பற்றி விளக்குகின்றார்)

கல்யாணம் குருதாம் கச்சிது
கருணா வருணா லய:
மயூர நகராதி சோ
மம நிருத்த விநாயக:
(காரணாகமம்)

வந்தே கௌரி மாயூர நிலயம்
வந்தே ரிஷபாஸநம்
வந்தே, அபய ப்ரதாம்பிகேசம்
வந்தே ஜகத் காரணம்
வந்தே உத்தர காவேரி ஸஹம்
வந்தே ஸுதாம் போநிதிம்
வந்தே அநவத்யா பூஜிதபதம்
வந்த சிவம் சங்கரம்

''பாருக்குள்ளே நல்ல நாடு நம் பாரத நாடு'' என்பார் பாரதியார். நம் பாரத நாடு கல்வி செல்வம் ஆற்றல் என்கிற மூன்றிலும் சிறந்து விளங்கி வருகிறது. பாரத நாட்டின் கிழக்கு பகுதி கல்கத்தா காளி (துர்க்கை) ஆற்றலையும், மேற்கு பகுதி பம்பாய் மஹாலக்ஷ்மி செல்வத்தையும், தென்பகுதி தமிழகம் சரஸ்வதி (கூத்தனூர்) கல்வி அறிவையும் வழங்கி வருகிறது. வேதத்திலும் கானத்திலும் தவ யோகத்திலும் வீரத்திலும் சிறந்து விளங்கி வரும் பாரத நாட்டில், பாரதத் தாயின் முகமண்டலமாக திகழ்ந்து வரும் தமிழகம் நீர்வளம் நிலவளம் நிறைந்து பல ஆன்றோர்களாலும் சான்றோர்களாலும் சிறந்து விளங்கி வருகிறது நம் தெய்வத்தமிழ்நாடு.

காசியில் இறக்க முக்தி என சாத்திரங்கள் கூறுகின்றன ஆனால் தமிழகமோ காசிக்கு சமமான ஆறு தலங்களை தன்னகத்தே கொண்டு சிறப்புடன் திகழ்கின்றது.

சுவேதாரண்யம் சிவ பஞ்சநதம்
கௌரி மாயூர மத்யார்ஜுனம்
சாயாவனஞ்ச ஸ்ரீவாஞ்சியம்
காசி க்ஷேத்ர ஸமான ஷடு

1) சுவேதாரண்யம் (திருவெண்காடு)
2) சிவ பஞ்சநதம் (திருவையாறு)
3) கௌரி மாயூரம் (மயிலாடுதுறை)
4) மத்யார் ஜீனம் (திருவிடைமருதூர்)
5) சாயாவனம் (சாயாவனம்)
6) ஸ்ரீவாஞ்சியம் (ஸ்ரீவாஞ்சியம்) எனும் இந்த ஆறு திருத் தலங்கள் காசிக்குச் சமமான முத்தித் தலங்களாகும்.

ஒரு சமயம் சிவபெருமானைத் தவிர்த்து தக்ஷன் செய்த வேள்வியில் கலந்து கொண்ட தேவர்கள் தலைவன் இந்திரனை, சுவர்க்க போகத்திலிருந்து அனுப்பி ஆட்சியை கைக்கொண்ட

சூரபத்மன் இந்திரனை தாங்கமுடியாத பல கஷ்டங்களை உள்ளாக்கினான். அதன் பொருட்டு விண்ணுலகம் விட்டு மண்ணுலகத்தில் ''அழிந்து புவனம் ஒழிந்திடினும் அழியாத் தோணிபுரம்'' எனும் சீர்காழியில் தன் மனைவி இந்திராணியுடன் வந்து தங்கி நந்தவனம் அமைத்து நறுமலர்களால் குரு லிங்க சங்கம வடிவினராய் எழுந்தருளி யிருக்கும் சிவபெருமானையும் உமாதேவியாரையும் பூஜித்து தவமி யற்றினான். அதுசமயம் கோள்களின் நிலைமாறுபாட்டால் மழை பெய்யாது மக்களும் துன்புற்று நந்தவனம் வாடி மலர்களே கிடைக்காது பூஜை வழிபாடு செய்ய இயலாமல் தவித்தான். அப்போது ஸ்ரீநாரதரை சந்தித்தான். அவரிடம் தனக்கு சூரபத்மனால் ஏற்பட்டுள்ள ஆபத்துக்களையும் மழை பொழியாமையால் ஏற்பட்டுள்ள வழி பாட்டு கஷ்டங்களையும் கூறி இதற்கு ஏதாகிலும் உபாயும் கூறுமாறு கேட்க அதற்கு நாரதர் இந்த இடையூறுகள் தீரவேண்டுமாயின் விநாயகப் பெருமானை மனதில் தியானம் செய்து தவம் செய்து வருவாயாகில் தமிழகமும் இந்திரனும் பயன்பெற காவேரி நதியால் தான் முடியும் என்று கூறியருளினார்.

காவேரி குடகுமலையில் தவம் செய்து வரும் அகத்திய மாமுனிவரின் கமண்டலத்தில் அடைபட்டு இருக் கிறாள். அந்த காவேரி இங்குவர ஸ்ரீ விநாயகப் பெருமான் திருவருளால் தான் முடியும் தாங்கள் விநாயகரை நோக்கி தவம் செய்து தமிழகம் செழிப்புற்று விளங்க முடியும் என்று கூறி மறைந்தார். விநாயகரை நோக்கி பலகாலம் கடுமையாக தவம் செய்திட, ஸ்ரீவிநாயகரும் தோன்றி வேண்டும் வரம் யாது என கேட்கவும், தனக்கு சிவாப சாரத்தினால் சூரபத்மனால் ஏற்பட்ட துன்பங்களையும், விண்ணுலகம் விட்டு மண்ணுலகம் வந்து நந்தவனம் உண்டாக்கி நறுமலர்களால் பூஜை செய்து தவமியற்றி வந்த போது மழையின்மை யால் தமிழகமே வரண்டுவிட்டது. நந்தவனம் காய்ந்து நறுமலர்கள் கிடைக்கவில்லை. என்று கூறிட ஸ்ரீ விநாயகப் பெருமான் இந்திரனுக்கு ஏற்பட்டுள்ள ஆபத்துக்கள் விரைவில் நீங்கவும் காவேரி நதிமூலம் தமிழகம் மீண்டும் செழிக்கவும் அருள்பாலித்தார்.

குடகு மலையில் தவமியற்றி வரும் அகத்தியரின் கமண்டலத்தின் மேல் ஒரு காகம் அமர்ந்து ''கா கா'' என கரைந்திட (கா - காவேரியை கா - காத்திட வந்துள்ளேன்) தவம் கலைந்த அகத்தியர் காகத்தை விரட்டிட, அது கமண்டலத்தை சாய்த்துவிட்டு பறந்து சென்றது. கமண்டலத்தில் அடைபட்டு இருந்த காவேரி நதியாக மிகப்ரவாகமாக தமிழகத்தை நோக்கி வந்தது. குடகு மலையில் (பாலையாக) குழந்தையாக புறப்பட்டு, திருச்சியை அடைந்தபோது (தருணியாக) யுவதியாக துள்ளி குதித்து அகண்ட காவேரியாகி, மயிலாடுதுறை வந்து அடையும்போது தன் கணவனான சமுத்ரராஜன் வீட்டிற்கு (பூம்புகார் - காவிரி பூம்பட்டினம்) செல்லும் மனைவி போல அடக்க ஒடுக்கமாக செல்லும் அழகையும், கடலில் சங்கமிக்கும் போது கணவனான ஸமுத்ரராஜன் அலைகள் வந்து அணைத்து செல்லும் காட்சி காண்பவர் மனதை மகிழ்ச்சியடைய செய்யுமாறு ஸ்ரீவிநாயகப் பெருமான் அருள்பாலித்தார்.

குடகுமலையிலிருந்து புறப் பட்ட காவேரி பூம்புகார் கடலில்

கலக்கும் வரை தான் வரும் வழியில் இரு மருங்கிலும் உள்ள ஊர்களையும் செழுமையாக்கி கொண்டு வந்துள்ளது. காவேரி நதியில் மக்கள் எல்லோரும் மகிழ்ச்சியுடன் நீராடி தன் அழுக்குகளையும் பாவங்களையும் போக்கி வரவே நாளடைவில் அந்த அழுக்கையும் பாபத்தையும் காவேரி சுமக்க வேண்டியதாயிற்று. அவற்றை போக்கிக் கொள்ள காவேரி சிவபெருமானை நோக்கி தவமிருந்தாள். தவத்திற்கு இரங்கிய சிவபெருமான் காவேரியின் பாபங்களை போக்கிடவும் தூய்மை பெற்று மற்றவர்கள் பாபங்களை நீக்கவும் திருவுள்ளங் கொண்டு முக்தி தலமானதும் காசிக்கு ஸமமானதும் ஸ்ரீஉமையம்மை மயிலாக வந்து பூஜித்து பேறு பெற்றதும் மஹா தபஸ்விகளான ஸ்ரீ அனவித்யை, நாதசர்மா வழிபட்டு முக்தி பேறு பெற்றதுமான கௌரி மாயூரம் (மயிலாடுதுறை) தலத்தில் அருள் பாலிப்பதாக கூறி மறைந்தருளினார். காவேரி மயிலாடுதுறையில் தவமியற்றி வந்தாள் அவள் தவத்திற்கு இரங்கி மேதா தக்ஷிணாமூர்த்தியாக காட்சி தந்தார் காவேரி வணங்கி தன்னிடம் சுமந்துள்ள பாபங்களை போக்கி தூய்மையாகி இறைத் தொண்டும் மக்கள் தொண்டும் செய்திட அருள்பாலிக்க வேண்டினாள். இறைவன் காவேரிக்கு ஒரு மந்திர உபதேசம் செய்து இந்த ஜெபத்தின் மூலம் பாபங்களெல்லாம் அவ்வப்போது நீங்கி தூய்மையாக விளங்கி வர அருள்பாலித்தார். காவேரிக்கு இறைவன் உபதேசித்த மந்த்ரம்:

மயூரேசம் வதான் யேசம் பிரும்ம
காந்தார நாயகம்
ஜபேந் நாமத் ரயம் நித்யம்
மஹாபாப விநாசனம்

காவேரி அருள் பெற்ற நாள் சூரியனும் சந்திரனும் சேர்ந்துள்ள துலாமாத அமாவாசை (ஐப்பசி மாதம்) தினமாகும். இன்றும் துலா மாத அமாவாசையன்று ஸ்ரீதக்ஷிணாமூர்த்தி காவேரிக்கு பஞ்ச மூர்த்திகளுடன் எழுந்தருளி அருள் பாலித்து வருகிறார்.

ஒரு காலத்தில் கங்கை முதலான புண்ணிய நதிகளெல்லாம் காசியில் இறைவனாக அருளும் விசுவநாத பெருமானிடம் நாங்களெல்லோரும் மக்களெல்லோரும் செய்யும் ஸ்நானம் மூலம் அவர்கள் செய்துள்ள பாபங்களையும் அழுக்குகளையும் நாங்கள் சுமக்க வேண்டியுள்ளது. அதனை போக்கி தூய்மையானவர்களாக நாங்கள் விளங்க அருள்பாலிக்க வேண்டினார்கள்.

கங்கா கோதாவரி புண்யா புவனத்ரய பாவினி
தாம்ரபர்ணி சுவர்ண முகி குசாவதி சரஸ்வதி
வசிஷ்டா கௌசிகீ கோடி நர்மதா கண்டகி அபா
மணிமுக்தா பிநாகீச சந்திரபாகா ஹிமாலயா
கௌதமி காச்யபீ கம்பா நைமிசீ மல் நாசினி
பாபநாசி புண்யராசி காவேரி ஸாகர காமினி
கிருஷ்ணவேணி மஹாபுண்யா துங்கபத்ராச பல்குனி
லவணாத்யா ஸாகராச்ச புண்யநத் யாநியாநிச
ஜலே ஆகச்ச சுப்ரீதா சுத்தம் குர்வந்து சர்வதா

விஸ்வநாதர் இவர்களை பாரத நாட்டின் தென்பகுதியான தமிழ்நாட்டில் கௌரி மாயூரம் தலம் உமாதேவி மயிலாக வந்து பூஜித்து பேறு பெற்ற மயிலாடுதுறைக்கும் முன்னொரு காலத்தில் காவேரிக்கு மேதா தக்ஷிணாமூர்த்தியாக அருள்பாலித்த வதாரண்ய க்ஷேத்ரமான வள்ளலார் கோயிலுக்கும் இடையில் உள்ள காவேரி நதியில் நீங்கள் தினம் ஒருவராக சென்று நீராட உங்களெல்லோருக்கும் அருள் பாலிப்போம் என்று கூறினார். கங்காதேவி தங்களை பிரிந்து எப்படி



அருள்முகம் கொண்டே அண்டிய அன்பர்களுக்கு பொருளும் குலனும் புகழும் பொற்புடன் தரும் அருள்மிகு மாயூரநாதர்.



வெள்ளி கவசம் பூண்ட வெள்ளி மலைச் செல்வி அள்ளித் தருவாள் அருளார முதத்தை அன்னை அபயாம்பிகை.

செல்வேன் என்று வருந்த கருணை கடலான ஸ்ரீவிச்வநாதர் விசாலாட்சி யோடு காவேரியின் இருமருங்கிலும் காட்சி தருகிறோம் என்று கூறியருளினார். கங்கை முதலான எல்லா நதிகளுக்கும் துலா மாதத்தில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நதிகளுக்கு அருள்பாலித்தார்.

இன்றும் துலாமாத பிறப்பன்று கங்கைக்காக மாயூரநாதர் மற்றும் வதாரண்யேஸ்வரர் பஞ்சமூர்த்தி களுடன் எழுந்தருளி அருள்பாலிக்கிறார். துலா மாத அமாவாசையன்று காவேரிக்காக மாயூரநாதர் பஞ்சமூர்த்திகளுடன் வதாரண்யேஸ்வரர் பஞ்சமூர்த்திகளுடன் ஸ்ரீ மேதா தக்ஷிணாமூர்த்தி அருள் பாலிக்கிறார். துலாமாதத்தின் நிறைவான முப்பதாவது நாளில் ஸ்ரீ மாயூரநாதர் பஞ்ச மூர்த்திகளும் ஐயாறப்பர் பஞ்சமூர்த்தி களும் காசி விஸ்வநாதர் பஞ்சமூர்த்தி களும் காவேரி நதிக்கு வலது புறத்தில் வதாரண்யேஸ்வரர் பஞ்சமூர்த்திகளும் விசுவநாதர் பஞ்சமூர்த்திகளும் ஆக ஐந்து பஞ்சமூர்த்திகளும் தீர்த்தமாடி அருள் பாலித்து வருகிறார். துலா மாதத்தில் தினமும் மாயூரநாதர் வதாரண்யேஸ்வரர் இருவரும் காவேரி முதலான நதிகளுக்கு அருள்பாலிக்க எழுந்தருளுவதால் துலா மாதம் முழுவதும் காவேரியில் ஸ்நானம் செய்தால் மிகுந்த நற்பயன்களும் கிடைக்கும் ஆதலால் துலாஸ்நானம் செய்வது விசேஷம்

காவேரி அஷ்டகம்

மருத் வ்ருதே மாந்ய ஜலப்ரவாஹே
கவேரகன்யே நம தாம் சரண்யே
மாந்யே விதேம நிஸபுத்ரீ ஸௌம்யே
காவேரி காவேரி மம ப்ரஸீத. 1

தேவேசம் ருக்யே விமலே நதீசி
பராத்பரே பாவநி நித்ய பூர்ணே
ஸமஸ்த லோ கோத்தம தீர்த்த பாதே
காவேரி காவேரி மம ப்ரஸித 2

வேதாநு வேத்ய விமல ப்ரவாஹே
விசுத்த யோகீந்திர நிவாஸ யோக்யே
ரங் கேச போ காயத நாத்த பாரே
காவேரி காவேரி மம ப்ரஸித 3

பக்தானுகம் பேஹ்யதி பாக்யலப்தே
நித்யே ஜகன் மங்கள தாந சீலே
நிரஞ்ஜகே தக்ஷிண தேச கங்கே
காவேரி காவேரி மம ப்ரஸித 4

அலிப்ரமா தாகில தோஷ நாசே
காருண்ய பூர்ண கமலாயதாஷே
கதம்ப கல்ஹார ஸுகந்த பூரே
காவேரி காவேரி மம ப்ரஸித 5

அநந்த ஸிக்யாமல மோக்ஷ தாத்ரீ
துரந்த ஸம்ஸார விமோச நாங்கிரி
ஸஹ்யா சலோத்பன்ன விஸ்வரூபே
காவேரி காவேரி மம ப்ரஸித 6

தேவால பூரித த்வயதிரே
ஸமஸ்தலோ கோத்தம தீர்த்த மூர்த்தே
காச்மீரபூ: கல்பித சோழதேசே
காவேரி காவேரி மம ப்ரஸித 7

ப்ரஸித கல்யாண குணா ப்ராமே
ப்ரஸித காவேரி மம ப்ரஸித
ப்ரஸித காமாதி ஹரே பவித்ரே
காவேரி காவேரி மம ப்ரஸித 8

என்ற தோத்திரம் கூறி காவேரி அருளால் நாடு செழிக்கவும் வீடு சிறக்கவும் வேண்டுமாக.



வரமாமயிலாடுதுறை ஸ்ரீ மாயூரநாதர் திருக்கோயில் திருப்பணியும் - திருவிழாவும்

முனைவர். ப.நீலா,
தருமபுரம், மயிலாடுதுறை - 609 001.

(திருவிழா நடத்தப்படுவதின் நோக்கம் - மயிலாடுதுறைத் திருக் கோயிலில் நடைபெறும் விழாச் சிறப்பு - அவ்விழாவின் தத்துவம் - கோயிலமைப்பு - திருப்பணி முதலியன சுவைபட இக்கட்டுரை விளக்குகிறது)

பகலும் இரவும் கரவின்றி மலர் கொண்டு தொழுவார்கள் சிரமொன்றிய செஞ்சடையான் வாழ்வது வரமா மயிலாடுதுறை. சிறப்பான பூசை விழாக் களுடன் நாளும் நடக்கவேண்டிய வழிபாடுகளும் நியமமாக நடந்தால் தான் நாடும் வீடும் நலம் பெறும். மன்னன் கோல்நெறி கோடாமை, மழை வளம் தவறாமை, மக்கள் மனநடை பிறழாமை ஆகிய அனைத்தும் கோயில் சார்ந்தே இருந்தது. முன்னவன் கோயில் பூசை முட்டுப்பட்டால் பூமியில் கன்னம் களவு மிகுத்திடும் என்று திருமூலர் கூறுவது நோக்க அரசர்களுக்கிணையான ஆதீனங்களின் பொறுப்பும் பெருமையும் தானே விளங்கும்.

இறை எளிமையும் இனிமையும்

உற்சவ மூர்த்திகளின் திருவுருவம் தாமிரம் முதலிய உலோகங்களால் ஆனதற்குக் காரணம் உண்டு.

கோயிலுக்கு வரவியலாத மூப்பு பிணி நலிவுடையோர் வாசல் வழிவரும் தெய்வங்களை வணங்கும் போது சூரிய - மின்சக்தியை அத்திருமேனிகள் வாங்கி மக்கள்பால் செலுத்துகின்றன என்பது அறிவியலார் கூற்று. இது அறிந்தே அன்று மாதந்தோறும் விழாக்கள் நடை பெற்றன.

பஞ்சம் பசி போக்க திருக் கோயில்கள் அறக்கட்டளைகள் மூலம் நாள்தோறும் அன்னம்பாலிப்புச் செய்தன. இதற்கான நிவந்தங்கள் பல்வேறு வகைகளில் திரவியங்களாக நிலபுலன்களாக - ஆடுமாடுகளாக - திருப்பணிக் கைங்கர்யங்களாக - நகை அணியணிகளாக அமைந்துள்ள கல் வெட்டுகள் காணக்கூடியனவே. உழைப்பைத் தந்து கோயில் கட்டுமானம் செய்துள்ளோர் அநேகர். பிற்காலத்தே ஆதீனங்களும், நகரத்தார்களும் செய்துள்ள பணிகள் அளவிலடங்கா. அவற்றை விழாக்களும் திருப்பணி களுமாக சுருங்கிய முறையில் இங்கே விரிக்கக் காணலாம்.

கொன்றை யந்தார் வேணியற்குக்
கோயில் பல சமைத்து
பொன்றியவை முற்றும்
புதுக்குவித்து
அவலோகந் தன்னி
அமை
சிவலோக

...வக்
...யையும்
குறிக்கும்.
கேடயபீடம்
குதிரைகள் சூரிய
சாரதி - அக்னி இவை
சக்கரங்கள் தசவாயு.
மனத்தை மேலெழுப்பி

போதவெண்பா.

விழாக்களும் தத்துவங்களும்

ஸ்ரீமாயூரநாதர் திருக்கோயிலில் தமிழர்களின் ஆண்டுத் தொடக்கமாகிய ஆவணியில் விநாயக சதுர்த்தி வரலட்சுமி விரதம் விசேட அலங்காரங் காண முடியும்.. புரட்டாசி - நவராத்திரி மிகச் சிறப்பாக அனுசரிக்கப்படுகிறது. ஐப்பசியின் அன்னாபிஷேகமும் கடைமுக உற்சவமும் நாடு முழுவதுமாக அறியப்பட்டது. கொடியேற்றத்துடன் சுவாமி அம்மன் வீதியுலாக்கள், சப்பரம், தேர் விசேடங்கள் கண் கொள்ளாக்காட்சி. காலையில் காவிரி தீரம் சென்றமரும் இறையவர்கள் இரவு ஒருவரை ஒருவர் பார்த்தவாறே வீதிவலம் வருவது அன்றன்றும் புதுமை தான். குமரனுக்காக தருமையாதீனத்தார் ஆறுநாட்கள் கந்த சஷ்டி நடத்தி சூரசம்ஹாரம் நடத்துகின்றனர். பெரிய கார்த்திகையும் மார்கழியின் ஸ்ரீ நடராஜர் அபிஷேக உலாவும் சிறப்பானவை. தையும் ஆடியும் அம்பிகை தனித்து அழகு அலங்காரம் பெற்றுக் காட்சி தருவாள். வெள்ளிக் கிழமைகளில் தெப்ப உலா சில ஆண்டுகளாகப் பக்தர்களால் சிரத்தையுடன் கொண்டாடப்படுகிறது.

வருடத்திற்கு ஓரிருமுறை கഠ-கஉ கிண்டகளுக்கு ஆலயங்களில் சிறப்பு செய்வதூடு செய்து மூர்த்தங்களை
வுங்களை) பல்வேறு வாகனங்
களைச் செய்து வீதியுலாக்
மருத் வ்ருதே மாந்ய நீராடும் சாந்தியும்
கவேரகன்யே நம தாம் நன்மங்காகவே.
மாந்யே விதேம நிஸபுத்ரீ
வாதுளா
பல்வேறு
மப்பும்

மூர்த்தி தலம் தீர்த்தம் ஏதாவது ஒன்று ஒரு தலத்தில் பெருமை பெற்றிருக்கும். மதுரை, திருவாரூர், திருமயிலாடுதுறை போன்றவைகள் மூன்றாலுமே பாராட்டுப்பெறும். மயிலாடுதுறை - மயிலாக இருந்து தேவி பூசித்த தலப்பெருமையும், கடைமுக முடவன் முழுக்கென்ற தீர்த்த விசேடமும், தீராதவினை தீர்க்கும் மாயூரநாதருடன் அபயந்தரும் அபயாம்பிகையாகிடும் மூர்த்திச் சிறப்புங் கொண்டது. அதனாலேயே ''ஆயிரமானாலும் மாயூரமாகாது'' என்றனர். ஆயிரம் பறவைகளுக்கு முன் மயில் நிற்க - ஆயிரமும் பெருமையழியுமல்லவா! மயில் பூசித்த மாயூரம் காரணத்தினாலும் இப் பெருமைக்கு உரியதாயிற்று.

கொடியேற்றத் தத்துவம்

அறவிடை யென்ற ரிஷபம் சாந்தம் எளிமை மகிழ்வு அடியாரிணக்கமென்ற நான்கு கால்களையும், தூய்மைக்கான வெள்ளை வுண்ணமுங் கொண்டது. அப்படியேயான உயிர்கள் இறைவனை நெருங்கி வந்து உய்திபெறுக என்று கூறுவது போல் ஏற்றுக் கொடியை உயர்த்தி உலகவரைக் கூவியழைக்கிறான் இறைவன்.

நலமிலன் நண்ணார்க்கு நண்ணினர்க்கு
நல்லன்
சலமிலன் பேர் சங்கரன்
(திருவருட் பயன்)

உயர்நிலைக் கோபுரமே ஸ்தூலலிங்கமென்பதால் தொலைவிலிருப்பார் வழிபடவியலும் - கொடியேற்றமும் அப்படியே.

விழாவில் அமைந்த வாகனங்களின் தத்துவம்

மரம் - ஆதியில் மரத்தினடியில் தான் இன்றவழிபாடு நடந்தது. அதனால் மரங்கள் தல விருட்சமென்று பாதுகாக்கப்பட்டு, பூசையும் பெறுகின்றன. வேறெனத்தூங்கி வேறுபாட கற்றும் இறைநிலையடையாளம் விருட்ச வாகனம்.

சூரிய சந்திரர்கள்: ஒளியும் இருளும் உலக உயிர்ப் பெருக்கிற்கும் ஒய்வுக்கும் அவசியம் ஸ்திதி என்ற காத்தலடையாளம் இவை.

நாகம் - விடை - பூதம்: உயிர்களைத் திருவடிகளில் சிலகாலம் இளைப்பாற வைக்கும் திரோபாவ சக்தி மணி படங்களை மறைத்துள்ள நாக தத்துவம். அழிப்பது மீண்டும் ஆக்குதற்கே என்றபடி அறக்கருணைக்கு விடையும் மறக்கருணைக்குப் பூதமும் அமைகிறது.

யானை : லய கிரமம் என்னும் ஒடுங்கும் முறை காட்டுவது. விரிந்த கிளை இலையென மரம் காட்டிய (சிருஷ்டி) படைப்பு ஒரே பிண்டமாய் ஒடுங்கும் என்பது யானையமைப்பு.

கைலாசமலை: இராவணனின் மலை பெயர்ப்பு முனைப்பாகிய ஆணவத்தின் அடையாளம். உலகையே தன்னால் சுமக்க முடியும் என்று எண்ணியதன் முடிவு துன்பமே. அவனருளால் தான் அவனை அடைய இயலும் எனபது உயிருக்குக் கிடைத்த படிப்பினை.

நடராஜர்: ஐந்தொழிலையும் செய்பவர். அவரது புறப்பாடு - சிருஷ்டியை, அபிஷேகம் போன்றவை - ஸ்தியை, அலங்காரதீப ஆராதனை - சம்ஹாரத்தை, வெள்ளை சாத்துபடி - திரோபவத்தை, உலாவும்மட்டையடியும் - அநுக்ரகத்தைக் காட்டுவதென்பர்.

அருளுக நின் ஆதியாம் பாதமலர் போற்றி
அருளுக நின் அந்தமாம் செந்தளிர்கள் போற்றி
எல்லாவுயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம் போற்றி
எல்லாவுயிர்க்கும் போக மாம் பூங்கழல்கள் போற்றி
எல்லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள் போற்றி
மால் நான்முகனும் காணாத புண்டரிகம் போற்றி
யாமுய்ய ஆட்கொண் டருளும் பொன் மலர்கள் போற்றி

மூன்றாம் அடி முதலிய ஐந்தினும் ஐந்தொழிலும் கூறப்பட்டன.

தேரின் தத்துவம் : அண்டத்திலுள்ளது பிண்டத்திலு மடங்கும் என்பதற்குக் காட்டும் எட்டு அடுக்குகளும் விசுவ விராட் சொரூபமே - அகண்டாகார உருவம் என்பதே அது.

உச்சிக்கும்பம் - சோடசாந்தம், அதன்கீழடுக்கு - துவாத சாந்தம், பின்னுள்ள மூன்றடுக்குகள் தலையின் தலை இடை அந்தப் பகுதி, அதன் கீழாக புருவநடு, கண்டம், இருதயம், நாபி, குண்டலி ஸ்தானம் அமைந்துள்ளன. நடுவில் தாங்கும் குத்துக்கால்கள் தத்துவக் கால்கள். மூன்று கண்கள் சிகையையும் வல இடக்கணுகளையும் குறிக்கும். இறை எழுந்தருளும் கேடயபீடம் முப்பாழ் குறிக்கும். குதிரைகள் சூரிய சந்திர கலைகள். சாரதி - அக்னி இவை நாசி. பத்துச் சக்கரங்கள் தசவாயு. அசைவற்ற மனத்தை மேலெழுப்பி

ஒவ்வொரு தானங்களிலுமமைத்து அதற்கான பலன்கள் தந்து - இன்னும் மேலேற்றி சும்மா இருந்தபடி இருக்கும் சுகமறிவிக்கும் லயக்கிரமங் காட்டுவதே தேரின்தத்துவம்.

பிக்ஷாடனர் : ஆணவமல மறைப்பால் சுதந்திரர்களென்று எண்ணிய தாருகாவன முனிவர்கள் - பத்தினியர் மயக்கமகற்றிய திருக்கோலம்.

தீர்த்தவாரி : அருள்பெற்ற உயிர்களை அருள் வெள்ளத்தில் 'அருட்சல முழுக வருக' என ஆழ்த்துவது இதுவாகும்.

கோயிலமைப்பும் - திருப்பணியும்

பெரிய கோவிலென்பது சிவன் கோவிலே - அவனே பிறவாயாக்கைப் பெரியோன் என்று சுட்டப்படுவதால். ௩௮,000 ச.அடி பரப்புக் கொண்ட உண்மையான பெரிய கோவிலுமிதுவே. நான்குபக்க கோபுரம் - சுற்று மதில். கீழ்மேல் ௭௧௯ அடி தென்மேலாக ௫௧௯ அடி தென்வடக்கு ௫௨௭ அடி உயரம் ௧௯௦ அடி.

பல்வேறு காலங்களில் பல்வேறு இனத்தவர்களின் திருப்பணி பெற்றுள்ள இத்திருக்கோயிலாளுகை இன்று திருவாவடுதுறை ஆதீனம் சார்ந்துள்ளது. குமரக் கட்டளை மட்டும் திருத்தருமபுர ஆதீன நிர்வாகத்திலுள்ளது.

கீழ்நிலைக் கோபுரத்தின் வழி நுழைய தென்பகுதியில் மிக அழகிய தெப்பக்குளம் - சமீபமாகத் தெப்பத் திருவிழா மக்களனைவரும் சேர்ந்து உயர்வாக நடத்துகின்றனர்.

பஞ்சபூதங்களில் நீர்வடிவை ''ஏரி நிறைந்தனைய செல்வன்'' - எனத் தேவாரம் காட்டும். உண்ணும் நீரினும் உயிரினும் உயர்ந்தவன் அவன் என்பது மறைபொருள்.

நங்கையினால் நாமனைத்தும் செய்தல் போல் நாயகனும் நங்கையினால் (உமை) அருளாட்சி செய்கிறான். இங்கே அஞ்சொல் நாயகி அஞ்சல் நாயகியாகி அபயாம்பாள் ஆகியுள்ளாள். கண்கண்ட தெய்வம் இத்தெய்வமல்லால் புவியில் வேறில்லை என உணர்த்தும் வகையில் ஆனேறுயர்த்திய ஐயனாலும் அறம் வளர்த்த அம்மையாலும் குமரன் கொண்டாடப் பெற்றுத் தனிக்கோயிலில் உள்ளான்.

அரியலால் தேவியில்லை என்பது காட்ட அம்பிகையின் மேலிரண்டு கரங்களில் சங்கு சக்கர முண்டு. கார்த்திகை மாத முதல் நாள் முடவனுக்காக கங்கை மீண்டும் வந்தாளே - அவர்கள் நாதசன்மாவும் அநவித்தையுமே. சிவலிங்கத் திருமேனி களாகவுள்ளனர். மாமரம் தலமரம்.

செட்டியார் சமூகத்தவர்கள் (நகரத்தார்) தலங்கள் தோறும் திருப்பணி செய்த வகையில் இங்கே வீரப்பச் செட்டியாரின் திருப்பணி போற்றற் குரிய தாயுள்ளது. அவருக்கெனத் தனிக் கோயிலும் பூசை விழாக்களும் அனுசரிக்கப்படுகிறது. பெண்களில் அம்பாபாய் என்பவர் பல பாவை விளக்குகளைத் தந்துள்ளார். தற்போது வாழ்ந்துவரும் சிவத்திரு.எம்.எஸ். நாக லட்சுமி மக்களனைவரும் உவக்கும் வண்ணம் அவர்கள் ஒத்துழைப்புடன் பிரமாதிவருடம் ஆனி ௧௦ (௨௪.௬.௯௯) ௨௩-வது மகா சன்னிதானமவர்கள் (திருவாவடு துறை) ஆசியுடன் 61 பவுனில் 51 அட்சரங்கள் எழுதப்பட்ட ஸ்வர்ண




அகிலத்திற்கு அன்னம்பாலிக்கும் அரனாம்
ஆதி மாயூரநாதரின் அன்னாபிஷேகக் காட்சி

மாலா ஹாரத்தை மூன்றரைலட்ச ரூபாய் மதிப்பில் அம்பிகைக்குச் சமர்ப்பித்துள்ளார். மாயூரநாதருக்கு உருத்திராட்ச கிரீடம் ஹம்ச கைலாச வாகனங்களைப் புதுப்பித்தும் தீக்ஷிதரின் நவாவர்ணக் கீர்த்தனைகளைக் கல்லில் வெட்டிப் பதிப்பித்தும் அதற்குக் கும்பாபிஷேகம் செய்தும் மகிழ்ந்து வருகிறார். மக்கள் தொண்டே மகேசன் தொண்டென மகிழ்வு கொள்வோம்.



அகிலம் காக்கும் அன்னை அபயாம்பிகை முகிலாய்
அருளைப் பொழிந்தருளுவாள்.



மயிலாடுதுறை அருள்மிகு மாயூரநாதர் திருக்கோயில் கல்வெட்டுகள் - திருப்பணிச் செய்திகள்

S.நாராயணசாமி,M.A.,(Phil.),M.A(His),M.Ed., Dip. in Sanskrit.,
(துறைசையாதீன நூலக ஆராய்ச்சியாளர், திருவிடைமருதூர்.)

(மயிலாடுதுறை அருள்மிகு மாயூரநாதர் திருக்கோயிலில் காணப் படும் கல்வெட்டுகளின் தொகுப்பு, நிவந்தச் செய்திகள், திருப்பணிச் செய்திகள் யாவும் ஆய்ந்து இக் கட்டுரையாசிரியர் விளக்கியுள்ளார்)

மூர்த்தி, தலம், தீர்த்தம் எனும் மூன்று வகையாலும் சிறப்புடையது மயிலாடுதுறையாகும். இத்தலத்தில் இறைவி மயில் உருவம் கொண்டு பெருமானைப் பூசித்ததால், ஈசனும் மயில் உருவம் ஏற்று அம்பிகைக்கு அருளினார். இறைவன் மயில் உருவம் கொண்டு கௌரி தாண்டவம் ஆடி அருளினார். இறைவனை மாயூரநாதர் என்றும், அம்பிகையை அஞ்சல்நாயகி, அபயாம்பிகை என்றும் போற்றி மக்கள் வழிபடுகின்றனர். இத்திருக்கோயிலில் நிகழும் மிகச் சிறப்பான விழா துலாமாத விழாவாகும். இடபதீர்த்தம் என்று போற்றப்படும் காவிரியே சிறப்புடைய தீர்த்தமாகும். இடப தீர்த்தத் துறையில் துலாமாதத்தில் நீராடுவது சிறப்புடையதாகும். திருஞானசம்பந்தர் அருளிய பதிகங்கள் இரண்டும், திருநாவுக்கரசர் அருளிய பதிகம் ஒன்றும், அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ்ப் பாடல் ஒன்றும் இத்தலத்திற்கு உள்ளன. மேலும், அபயாம்பிகை சதகம், திருமயிலை வெண்பா, திருமயிலைத் திரிபந்தாதி, ஆதியப்பநாவலர் இயற்றிய மாயூரப் புராணம், ஸ்ரீ மீனாட்சி சுந்தரம்பிள்ளை இயற்றிய மாயூரப்புராணம் ஆகியன இத்தலத்தின் மேன்மையினை உலகிற்கு உணர்த்துவன.

கல்வெட்டுகள்

இத்திருக்கோயிலில் புராதனக் கல்வெட்டுகள் ஐந்து உள்ளன. இக் கல்வெட்டுகளுள் மூன்று மட்டும் South India Inscription - volume xxiii ல் - *371, 372, 373* ல் காணலாம். ஏனைய இரண்டு கல்வெட்டுகள் முற்றிலும் சிதைந்து விட்டமையால் ஷி கல்வெட்டுகளின் விபரங்களை *1911*ல் வெளியிடப் பெற்ற S.I.Annual Report -ல் காணலாம். இக்கட்டுரையினை நான் எழுதுமுறபடும் சமயம் எனது ஐயங்களை நீக்கியும், விளக்கக் குறிப்புகளைத் தந்தும் உதவியவர் கல்வெட்டு ஆராய்ச்சியாளர் - குடந்தை என்.சேதுராமன் அமரர் ஆவார்கள். இவ்வாலய அனைத்து கல்வெட்டுகளின் மூலம் மற்றும் பிற செய்திகளும் இங்கு கொடுக்கப் பட்டுள்ளன. மேலும் இத் திருக்கோயி லினைச் சிறந்த முறையில் அருளாட்சி செய்து வரும் திருவாவடுதுறை ஆதீனம் 23வது குரு மகாசன்னிதானம் சீர்-வளர்-சீர்

சிவப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் அவர்கள் அருளாணையின் வண்ணம் ஷை ஆலய கும்பாபிஷேகமானது உ.கூ.கககூ௦ அன்று நடைபெற்றது. மீண்டும் இந்நாளாகிய கச.கூ.௨௦௦டு அன்று நிகழ்வது திருவருளேயாகும்.

மன்னர்களின் கல்வெட்டுச் செய்திகளின் தொடர்ச்சியாக ஆதீனத்து அருளாளர்களும், மெய்யன்பர்களும் செய்த திருப்பணிகளின் கல்வெட்டுச் செய்திகளையும் தொடர்ந்து காணலாம்.

கல்வெட்டு -1

இடம் - ஸ்ரீ மாயூரநாதர் திருக்கோயிலின் முதல் பிரகாரத்தில் உள்ள தென்பகுதிச்சுவர்

1. ஸ்வஸ்திஸ்ரீ(கக★)திரிபுவனச்சக்கரவர்த்திகள் ஸ்ரீ ராஜராஜதேவர்க்கு
யாண்டு இருப(த்தொன்பதா)வதின் எதிராமாண்
டின் எதிராமாண்டு ....கொண்ட சொழவள
நாட்டுத் திருவெழுந்தூர் நாட்டு உடையார்
திருமயிலாடுதுறை உடையார் கொயில் ....ர்
தெவர்கன்மி ....நாயனார் கொயில் ....

2. த்திருநடைமாளிகையில் சம்பங்குடையான்
அம்பலங்கொயில் கொண்டான் அற்றபொதைக்
குதவி (னான் எழுந்த)ருள விண்ணப்பம் செய்த
புவனாபதி நாச்சியார்க்கு நித்த (ற்படிபூசை)
செல்ல திருமஞ்சனத்திற்கும் ....ம்
திருப்பரிசட்டத் ....திருஅமுது அரிசி
இரு நாழிக்கும் கறி ....

3. துள்ளிட்ட விச்சனங்களுஞ் ஸ்ரீ பண்டாரத்துச்
செல்ல நாங்கள் நிச்சயித்து மிதுன
நாயிற்று முன்றாந்தியதி நாள் ஸ்ரீ பண்டாரத்
துக்கு முதலாக ஒடுக்கிவித்துக் கொண்ட
காசு இரண்டாயிரம் இக்காசு இரண்டாயிர
(இன்னான் முதல் சத்திராதித்தவ(ல்)

4. இப்படி உபையமாக பூசை செல்லகடவதாக
கல்வெட்டிக் குடுத்தொம் இக்கொயில்தானத்
தொம் இது ஸ்ரீமாகேஸ்வர (ர★) ரக்ஷை.

முதல் கல்வெட்டின் விளக்கம்

மூன்றாம் ராஜராஜசோழனுடைய 31-வது ஆட்சிக் கல்வெட்டு. இதன் காலம் கி.பி.1246. ஜெயங்கொண்ட சோழ வளநாட்டு திருவெழுந்தூர் நாட்டு உடையார் கோயிலில் திருநடைமாளிகையில் புவனாபதி நாச்சியாரை எழுந்தருளி வைத்தான். திருமஞ்சனத்திற்காகவும், திருப்பரி வட்டம், திருவமுது இவைகளுக்காக ஸ்ரீ

பண்டாரத்தில் 2000 காசுகள் கொடுத்து இதன் வட்டியிலிருந்து ஷை ஆராதனைகள் செய்யப்பட்டன என்று ஷை கல்வெட்டு கூறுகின்றது.

(A.R. No: 371 of 1907)

கல்வெட்டு -2

இடம் : ஸ்ரீ மாயூரநாதசுவாமி திருக்கோயிலின் வடக்குப் பாகத்தில் உள்ள ஒரு சிலா மூர்த்தியின் கீழே உள்ளது.

1. ஸ்வஸ்தி ஸ்ரீ (கக★) திரிபுவனச்சக்கரவத்திகள் ஸ்ரீ ராஜரா
2. ஜதேவற்கு யாண்டு பதின்நாலாவது துலாநாயற்று
3. (அப) ரபக்ஷத்து திதியையும் நாயற்றுக்கிழமையும் பெற்ற
4. ரொஹணி நாள் உடையார் (தி)ருமயிலாடுதுறை உடை(ட)
5. யார் கொயிலில் உய்யக் கொண்டார் வளநாட்டு பொ
6. ரொசைக்குடையான் அரையான் திருவெகம்பமுடை
7. யான் எழுந்தருளுவித்த திருப்பள்ளி அறை நாச்சியார்
8. க்கு திருப்பள்ளியெழுச்சிக் காலத்து அமுது செ(ய்★)தருளப்ரஹ்ம
9. தெசம் நல்லொர் புதுக்குடியில் பாலா .... தெவ(ர்)தி
10. ருமயிலாடுதுறை உடையாநும் இவன் .... க்கல் விலை -
11. கொண்டு விட்ட சொழகுலசுந்தரிவ (தி)க்கு கிழக்கு ராஜெந்தி
12. ரசொழவா(ய்★) க்காலுக்கு வடக்கு ங (ஆம்) சதிரத்து அஞ்சொலா
13. ன் விளாகம் என்னும் பெரால் நு வனால் குழி ருoo ம் இவ்வூர் அடை
14. ப்பு முதலிகளும் மா சபையும் அந்தராயம் பாட்ட முட்பட இறையி
15. லியாக விட்டமையில் .... உடல் கொண்டு சந்திராதித் தவரை இற்றை(ற)
16. நாள் முதல் நாள் ஒன்றுக்கு நானாழி அரிசி அரிசி அமுது செ(ய்★) தருளவும் இச்
17. சொற்றிலே அஞ்சொலாரை திருப்பரியட்டஞ் சாத்துங் கைவித்தார்
18. ... நாழி அரிசி சொறுபெறவும் இது முப்பது வட்டத்து சிவப்பிரா
19. மணற்கெ க ... யாகவும் திருப்பள்ளி அறைவாசல் காவலாய்
20. நிற்கும் திரு (மெய்க) ாப்பாற்கு நாழி அரிசி சொறு பெறவும் பொரொ
21. சைக்குடையான் தம்பிரான் வந்தான் என்று திருச்சின்னம் ப -
22. ..... இக்கொயில் ..... ணி உடைய சடையனான ஆ -
23. ..... செய்வான் ...... க்கும் ம (யி) லனான சிகரணவாச்
24. .....ணுக்கும் இ ..... ச்சொறு பெறவும் இப்படி இற்

25. (ஞறைநாள்) முதல் சந்திராதித்தவரை செல்வதாக தானத்தான
26. (ரெர்முங்) கூட நிச்சயித்து திருப்பள்ளியறை வாசலில்கல்
27. ..... குடுத்தென் பொரோசைக்குடையான் திரு -
28. வெகம்ப (ம் ★) உடையானென் 11

இரண்டாம் கல்வெட்டின் விளக்கம்

மூன்றாம் ராஜராஜ சோழனின் கச-ஆம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு. இதன் காலம் துலாமாதம் அபரபட்சத்து திருதியையும் ஞாயிற்றுக் கிழமையும் பெற்ற ரோகினி நாளாகும். (கி.பி. 1229 - அக்டோபர் 7) பொரொசைக் குடையான் அரையன் எழுந்தருளிவித்த திருப்பள்ளியறை நாச்சியாருக்கு திருப்பள்ளி எழுச்சிக் காலத்து அமுது செய்தருள பிரம்மதேசம் நல்லோர் புதுக்குடியில் நிலங்கள் அளித்த செய்தி சொல்லப்பட்டுள்ளது. திருப்பரிவட்டம் சாத்துவார்க்கும் முப்பத்து வட்டத்து சிவப்பிராமணருக்கும், திருப்பள்ளியறை வாசற் காவல் நிற்கும் மெய்க்காப் பார்க்கும், அரிசிச் சோறு சம்பளமாகக் கொடுக்கப்பட்டது. பொரோசைக் குடியான் தம்பிரான் வந்தான் என்று திருச்சின்னம் சொல்லப்பட்டது.

(A.R. No: 373 of 1907)

கல்வெட்டு -3

இடம் - ஸ்ரீ மாயூரநாதசுவாமி கோயிலின் மூலஸ்தானத்திற்கு முன்னே தரையில் பதிப்பிக்கப்பட்ட ஒரு கல்லில்

1. --- தம் நெல்லு சப யாக பதி .....
2. ..... இ.உ + உபக்காக ஆண்டுவ --
3. ..... நெல்லு முந்நூ (ற்றுக்க)லத் --
4. ..... நிலமாவது எம்பெருமாந்நு
5. .....துளம் பெருமாந்நிடை கொ --
6. ..... நிலத்துக்கு கிழ்பாற்கெல்--
7. ..... திக்கு மெர்க்கும் தெந்பாற் --
8. ..... கு வடக்கு மெற்பாற் --
9. ..... கும்ாகத் திருநந்தவாந --
10. ..... ல்லைகளுள் ந
11. ..... இவ்விசைத்த பெரு --
12. ..... யுள் அக்ப்பட்ட நிலம்
13. ..... (இறை) யிலியாக செய்து ...
14. ..... காந சந்திராதித்ய .....
15. ..... ன உ இது பந்மா .....
16. ..... ஷிப்பார் ஸ்ரீ பாதம் எ .....

மூன்றாவது கல்வெட்டின் விளக்கம்

இக்கல்வெட்டின் மூலம் மன்னது பெயர் தெரியவில்லை. இது ககஆம் நூற்றாண்டு கல்வெட்டாக தெரியவருகிறது. கோயிலுக்கு கொடுக்கப்பெறும் 300 கலம் நெல்லுக்கு இறையிலியாக (வரிவிலக்கு) அளிக்கப்பட்ட செய்தி காணப்படுகிறது. (A.R. No: 373 of 1907)

கல்வெட்டு -4
(A.R. No: 1911 - 300)

கல்வெட்டின் விளக்கம் மட்டும்

ஷை கல்வெட்டின் எழுத்துக்கள் முற்றிலும் சிதிலமாகி உள்ளன. இது இரண்டாம் ராஜாதி ராஜ சோழனுடைய *14-ம் ஆண்டு ஆட்சிக்கல்வெட்டு. இதன் காலம் கி.பி.1180* மதுரையும் ஈழமும் கொண்டருளிய ராஜாதிராஜ தேவன் என்று அறிமுகப்படுத்து கின்றது. மன்னனின் கடல் சூழ்ந்த பார்மாதரும் என்னும் மெய்க்கீர்த்தியின் சில பகுதிகளே உள்ளன.

கல்வெட்டு -5
(A.R.No 1911 - 301)

கல்வெட்டின் விளக்கம் மட்டும்

இது சடையவர்மன் சுந்தர பாண்டியனுடைய 11-ஆம் ஆண்டு ஆட்சிக் கல்வெட்டு ஆகும். இதன் காலம் கி.பி. கஉகுக ஆகும். ஷை கல்வெட்டு முழுமையாக சிதைந்து உள்ளதால் முழு விபரங்களை அறிந்து கொள்ள முடியவில்லை.

கல்வெட்டு - 6
திருப்பணிச் செய்திகள்
இடம் - கிழக்கில் அமைந்த மூன்றாம் வாயில் கோபுரம்
கல்வெட்டு: நீளம் 3 அடி x 1 1/2 அடி அகலம்

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்
ஸ்ரீசிதம்பர விநாயகர் துணை

கலியுகாதி 5011, சாதாரண ஹு சித்தி
ரை, மீ உயஎஉ கேரள சிங்க வள
நாடாகிய பிரம்பூர் நாட்டில் மாற்று
ரான வீரபாண்டியபுரத்தில் உறையூ
ர் பிரிவில் இரத்தின மகுட வைசிய
நாட்டுக்கோட்டை நகரத்தார் வம்சத்தி
ல் தேவகோட்டை பெத்த பெருமாள் செட்டியாரவ
ர்கள் குமாரரும், ரெட்டியம்பாடி ஜமின் தாருமாகி
ய, அள, வீர. பெ. ஸ்ரீமான் வீரப்பசெட்டியாரவர்

களால் மாயூரம் ஸ்ரீ அபயப்பிரதாம்பிகை கோவில்
திருப்பணி முடித்து கும்பாபிஷேகம் செய்வித்தும்
கலியுகாதி, 5029. விபவ ஶு ஆவணி, மீ யஅ
ஸ்ரீ அபயப்பிரதாம்பிகை சமேத ஸ்ரீ மாயூரநா
த்ஸ்வாமி கோவில் பூச்சக்கரவர்த்தியால்
கட்டப்பட்டு சீர்னமாயிருந்ததை
திருப்பணி முடித்து 2.9.1928
மகா கும்பாபிஷேகம் செய்வித்தார்கள்.

கல்வெட்டு - 7

இடம் - ஸ்ரீ அபயாம்பிகை கோயிலின் 3-வது நுழைவாயிலின் (கோபுரம் உள்ளது) இடப்பக்கச் சுவர், கல்வெட்டு - நீளம் 3 அடி X 1 1 /2 அடி

உ
சிவமயம்

கலியுகாதி ருoகக சாதாரண ஶு சித்திரை மீ 27உ கேரளசிங்
க வளநாடாகிய பிரம்பூர் நாட்டி
ல் மாத்தூரான வீரபாண்டியபுர
த்தில் உறையூருடையான் தேவகோ
ட்டை அ,ள. வீ, ர; பெத்தபெருமாள் செட்டி
யார் ஸ்ரீ அபயாம்பிகை கோவி
ல் திருப்பணி

உபயம்

கல்வெட்டு -8

இடம் (1) ஸ்ரீ அபயாம்பிகை சன்னிதியில் கரத்தினை கூப்பியவாறு உள்ள திருவுருவத்தின் கீழ் உள்ள கல்வெட்டின் வாசகம்

உ
அம்பலவாணசுவாமிகள்

(2) ஷை சன்னிதியில் கரத்தினை கூப்பியவாறு
உள்ள உருவத்தின் கீழ் உள்ள கல்வெட்டின் வாசகம்

அள.வீர.வீரப்பசெட்டி
யார், அவர்கள் குமாரர்
அள.வீர; பெத்த பெருமா
ள் செட்டியார் அவர்கள்

(3) ஷை சன்னிதியில் கூப்பியவாறு தொழுது
வணங்கும் தம்பதிகளின் கீழ் உள்ள கல்வெட்டின் வாசகம்

உ

திருப்பணி கட்டிய வீர;பெ. வீரப்ப செட்டியார் அவர்கள் பாரியாள் உண்ணாமுலை ஆச்சி அவர்கள்	பெண் உருவத்திற்குக் கீழ் உள்ள வரிகள்
பெத்தபெருமாள் செட்டியார் அவர்கள் குமாரர் திருப்பணி கட்டிய றெட்டியம்பாடி ஜெமின்தார் அள, வீர. பெ.வீரப்ப செட்டியார் அவர்கள்.	ஆண் உருவத்திற்குக் கீழ்

கல்வெட்டு -9

இடம் - அம்மன் கோயில் இரண்டாம் நுழைவாயிலின் இடக்கப்பக்கச் சுவர்
கல்வெட்டு - நீளம் 12 அடி, அகலம் 5 அடி

விபரம்: ஷி திருக்கோயிலின் தேவாரப் பதிகங்கள்
திருக்கயிலாயபரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்து
21-வது குரு மகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்
கட்டளையிட்டருளியபடி
விளம்பி ஆண்டு தைத்திங்களில் பொறிக்கப்பெற்றன;

மாயூரம் 1959

ஷி தலத்திருமுறைக் கல்வெட்டினை சென்னை அறநிலையப் பாதுகாப்பு ஆணையர் உயர்திரு. அ.உத்தண்டராம பிள்ளை B.A., B.L., I.A.S அவர்களால் 10.2.1959 அன்று திறந்து வைக்கப்பெற்றது.

கல்வெட்டு - 10

இடம் - திருக்கோயில் அலுவலகம் (சுவாமி கோயிலின் 2ம் பிரகாரம் வடக்கு)
கல்வெட்டு நீளம் 2 அடி, அகலம் 1 1/2 அடி
காலம் - இவ்வாதீனத்தின் 21-வது குரு மகா சன்னிதானம் அவர்கள் அருளாட்சிக் காலத்தில் ஷி அலுவலகம் கட்டப்பெற்றது.

உ
சிவமயம்

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமான
மாயூரம் ஸ்ரீ மாயூரநாதஸ்வாமி தேவஸ்தானம்
அலுவலகம்
சென்னை அறநிலையப் பாதுகாப்பு ஆணையாளர்
உயர்திரு.அ.உத்தண்டராம பிள்ளை, அவர்களால்
திறந்து வைக்கப்பெற்றது.
10.2.1959

கல்வெட்டு -11

இடம் - களஞ்சியம் கட்டிடம் (சுவாமிகோயில் உள்பிரகாரம் வடக்கு)
கல்வெட்டு - நீளம் 2 1/2 அடி, அகலம் 1 1/2 அடி
காலம் - துறைசையாதீனம் 21-வது குரு மகாசன்னிதானம்
அருளாட்சியில் கட்டப்பெற்ற கட்டிடம்

உ
சிவமயம்

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமான
மாயூரம் ஸ்ரீ மாயூரநாதஸ்வாமி தேவஸ்தானம்
களஞ்சியம் - கட்டிடம்
சென்னை அறநிலையப் பாதுகாப்பு ஆணையாளர்
உயர்திரு. அ.உத்தண்டராம பிள்ளை,B.A.,BL., I.A.S., அவர்களால்
திறந்து வைக்கப்பெற்றது.
10.2.1959

ஷை திருக்கோயிலில் ஸ்ரீ சுப்ரமணியசுவாமி திருச்சன்னதியின் இடப்பக்கச் சுவரில் நீளம் 4 அடி, அகலம் 4 அடி கல்வெட்டில் இத்தலத் திருப்புகழ்ப் பாடலும், சிதம்பர முனிவர் அருளிய க்ஷேத்திரகோவை பிள்ளைத்தமிழ்ப் பாடலும் பதிக்கப் பெற்றுள்ளன. இவ்வாதீனத்தின் 21-வது குரு மகாசன்னிதானம் அவர்கள் அருளாட்சியின் (11.2.1961) நிறுவப்பெற்றது ஆகும்.

கல்வெட்டு -12

இடம் - கிழக்கில் உள்ள இரண்டாம் கோபுரம் இடதுபக்கச் சுவர்,
அளவு - நீளம் 2 1/2 அடி. அகலம் 1 1/2 அடி

உ
திருச்சிற்றம்பலம்

திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமான
மாயூரம் ஸ்ரீ மாயூரநாதசுவாமி தேவஸ்தானம்
அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம்
திருவாவடுதுறை ஆதீனத்து 21-வது குருமகாசன்னிதானம்
ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகளால்
செய்விக்கப்பெற்றது.
பிலவ-ஸூ, சித்திரை - மீ 16 -உ
28.4.1961

கல்வெட்டு - 13

இடம் - சுவாமி கோயிலின் உட்பிரகாரம் வடக்குப் பக்கம்
கல்வெட்டு நீளம் 2 1/2 அடி, அகலம் 1 1/2 அடி

உ
திருச்சிற்றம்பலம்

திருவாவ்டுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமான
மாயூரம் ஸ்ரீ மாயூரநாதசுவாமி தேவஸ்தானம்
திருமுறைக் கோயில்
திருவாவடுதுறை ஆதீனத்து 21-ஆவது குரு மகாசன்னிதானம்
ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகளால்
திறந்தருளப்பெற்றது.

மாயூரம் 11.2.1961

ஷை கல்வெட்டின் இடது பக்கம் மேலே காணும் அளவில்

''பூழியர்கோன் வெப்பொழித்த
... ...
... ...
... ...
ஊழிமலி திருவாத
வூரர் திருத்தாள் போற்றி''

எனும் பாடல் தனிக்கல்வெட்டாக அமைந்துள்ளது.

கல்வெட்டு - 14

இடம் - கிழக்கு இராஜகோபுர வாயிலில் உள்ள கல்வெட்டு
(நீளம் 2 அடி, அகலம் 2அடி)

22-வது குரு மகாசன்னிதானம்
ஸ்ரீ அம்பலவாண பண்டாரச்சந்நிதி அவர்கள் முன்னிலையில்
நடைபெற்றது.

உ
சிவமயம்

திருக்கயிலாய பரம்பரைத்
திருவாவடுதுறை ஆதீனம் அருளாட்சிக்குட்பட்ட
அருள்மிகு மாயூரநாத சுவாமி ஆலயம்
ராஜகோபுரம் திருப்பணி

தஞ்சை அறநிலைய ஆட்சித்துறை துணை ஆணையர் உயர்திரு டிஎஸ்.சங்கர நாராயணன், பி.ஏ., அவர்களால் பிரமாதீச ஆண்டு தைத் திங்கள் 29ஆம் நாள் (11.2.1974) துவக்கி வைக்கப்பட்டது.

கல்வெட்டு-15

இடம் - ஸ்ரீ அபயாம்பிகை கோயில் உட்பிரகார மேற்குச்சுவரில்
கல்வெட்டு - ஸ்ரீ முத்துசுவாமி தீட்சிதர் அருளிய ஸ்ரீ அபயாம்பா நவாவரணம்

பாடல்கள் கல்வெட்டாக (நீளம் 12 அடி, அகலம் 10அடி) உள்ளது.
காலம் - ஸ்வஸ்தி ஸ்ரீ ஸித்தார்த்தி ஞு ஆனி மீ 20 உ 4..7.1979
அன்று பதிக்கப்பெற்றது.

கல்வெட்டு - 16

இடம் - அம்மன் கோயில் முன்மண்டப நுழைவாயில் வலப்பக்கம்
கல்வெட்டு: (நீளம் 3 அடி, அகலம் 2 அடி)

உ

சிவமயம்

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்
மயிலாடுதுறை அருள்மிகு மாயூரநாத சுவாமி தேவஸ்தானம்
பரம்பரை அறங்காவலர்

திருவாவடுதுறை ஆதீனம் 23 -வது குரு மகாசன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ சிவப்பிரகாச பண்டாரச்சந்நிதி அவர்கள் அருளாட்சிக் காலத்தில் மயிலாடுதுறை, நல்லத்துக்குடி, பெருநிலக்கிழார் திரு.வி.ஆர்.சதாசிவ படையாச்சி (கேம்ப் சிங்கப்பூர்) அவர்களால் உபயமாக இந்த ஸ்ரீ அபயாம்பிகை சன்னிதி முன்மண்டபம் திருப்பணி ரக்தாக்ஷி ஞு வைகாசி மீ 19 உ (1.6.1984) -ல் செய்விக்கப்பட்டது.

ஆர்.மணிசங்கர்
மேலாளர்

ஸ்ரீமத் சுப்பிரமணியத் தம்பிரான்
கட்டளை விசாரணை

கல்வெட்டு 17& 18

இடம் - கிழக்கில் உள்ள இரண்டாம் கோபுரம் வலதுபக்கச்சுவர்
கல்வெட்டு - நீளம் 4 அடி, அகலம் 2 1/2 அடி

உ

சிவமயம்

திருக்கயிலாய பரம்பரைத்
திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமான
மயிலாடுதுறை
அருள்மிகு அபயப்பிரதாம்பிகை உடனாகிய அருள்மிகு மாயூரநாதசுவாமி
திருக்கோயில் திருக்குட நீராட்டுப் பெருவிழா

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம் இருபத்து மூன்றாவது குரு மகாசன்னிதானம் சீர்-வளர்-சீர் சிவப்பிரகாச பண்டாரச்சந்நிதி அவர்கள் திருவுளப் பாங்கின் வண்ணம் அவர்கள் அருளாசியோடு ஸ்ரீ மாயூரநாதர் நற்பணி மன்றத்தினரால் திருப்பணிகள் செய்விக்கப் பெற்று நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2021 பிரமோதூத ஆண்டு ஆவணித்திங்கள் 17-ஆம் நாள் (2.9.1990) ஞாயிற்றுக் கிழமை காலை 8.15

மணிக்குத் திருக்குட நீராட்டுப் பெருவிழா சிறப்பாக நடைபெற்றது.

காறுபாறு வைத்தியநாதத் தம்பிரான்
திருவாவடுதுறை ஆதீனம்

(டி கல்வெட்டைப் போன்று ஸ்ரீ அபயாம்பிகை திருக்கோயிலின் நுழைவு வாயிலின் வலப்பக்கம் பதிக்கப்பெற்றுள்ளன)

உ
சிவமயம்

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்
மயிலாடுதுறை அருள்மிகு மாயூரநாதசுவாமி திருக்கோயில்
பரம்பரை அறங்காவலர் 23 -ஆவது குரு மகாசன்னிதானம்.
ஸ்ரீ-லஸ்ரீ சிவப்பிரகாச பண்டார சந்நிதி அவர்கள்
அருள் ஆணையின் வண்ணம் மயிலாடுதுறை பட்டமங்கலத்தெரு வி.ஆர்.எஸ் காம்ளக்ஸ் திரு. வி. ஆர். சதாசிவ படையாச்சி அவர்கள் குடும்பத்தினரால் உபயமாக ஸ்ரீமாயூரநாதசுவாமி சந்நிதி முன்மண்டபம் கட்டி முடிக்கப்பட்டு வெகுதான்ய ஆண்டு வைகாசி மாதம் 22ஆம் நாள் (5.6.1998) அன்று சீர்மிகு இளைய குரு மகாசன்னிதானம் அவர்களால் திறந்தருளப்பட்டது.

வ. மணி, பி. எஸ்சி.,
மேலாளர்

ஸ்ரீமத் சித்தம்பர நாதத்தம்பிரான் சுவாமிகள்
கட்டளை விசாரணை

திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா
14.9.2005

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

மன்உயிர் எல்லாம் மகிழ் பூத்தளிக்கும்
பொன்னித் தென்கரைப் பொலிவொடு விளங்கும்
மாயிரும் சோலை மயில் ஆடு துறை ஈண்டு,
வடமலை மாமகள் மகிழ்ந்தொரு மயிலாய்
வந்து மாமகள் மகிழ்ந்தொரு மயிலாய்
வந்து நடம் செய்ய, தன் வாய்மொழி வழாஅது,
முதல்வன் எவ்உரு அவ்உரு முதல்வியும்
என்னும் சித்தாந்தம் இருக்க, வேறுமாய்,
முதல்வி எவ் உரு முதல்வன் அவ் உருக் கொளும்
என்னும் புதியதோர் இன்உரை நிறுத்துவான்,
தானும் ஓர் மயிலாய்த் தக உடன் ஆடிய

மாண்பினும் விளங்கும் இம் மயில் ஆடு துறையே,
துலாமதிக் கடை நாள் துளைந்தாடும் முழுக்கும்,
வானவர் மண்ணவர் மகிழ்ந்து வந்து ஆடி
எண்ணிய பெற்ற இடபத் துறையும்
உலகு புகழ ஓங்கும் இத் தலத்தின்
அஞ்சொலாள் எனத் துதி அரசின் திரு மொழி
அஞ்சலாள் என்னும் அச்சம் தீர்த்தருள்
செஞ்சொல் பெயராய்த் திகழ்வாரும் அன்னை
உடனாய் நின்று அருள் உகக்கும் வள்ளல்
எழுந்தருள் பொழியும், துறைசைத் திருமடத்து
உரிமையின் இலங்கும் உயர் திருக் கோயில்
திருப்பணி பலவும் சிறக்கச் செய்தனன்,
இருபதின் மூன்றாய் எழில் பெறு குரவன்
சிவப்பிரகாசப் பேர்கொடு, நாம் செய்
தவத்தினில் தோன்றிய தகை சால் பெரியோன்,
உயிர் நலம் மிகுக்கும் பணி பல உகப்போன்,
பார் குளிர்விக்கும் இப் பார்த்திப ஆண்டின்
ஆவணித் திங்கள் இருபத்தொன்பதின்
உத்திராடப் புதன் நன்னாளில்
உலகும் உய்யவும் உயர் நலம் செழிக்கவும்
திருக் குட முழுக்கினைச் செய்து
யாவரும் மகிழ இனிது இருந்தனனே.

இங்ஙனம்
கட்டளை வைத்தியநாதத் தம்பிரான்
திருவாவடுதுறை ஆதீனம்.

(செய்யுள் ஆக்கம் - ஆதீனப் புலவர் ஆதி.முருகவேள்)

கும்பாபிஷேகக் கல்வெட்டு - 14.9.2005

शिवमयम्

श्रीकैलाश परंपरा तिरुवावडुतुरै आदीनेन
परिपालितस्य श्री गौरीमायूर क्षेत्रे विराजमानस्य
श्री अभयप्रदांबिका समेत मायूरनाथस्वामि
आलयस्य पुनरावर्तन जीर्णोद्धारण अष्टबन्धन
महाकुंभाभिषेक शिलाशासनम् ॥

*

तिरुज्ञानसंबन्ध तिरुनावुक्करसादि शिव भक्त
वर्यैः "वळ्ळल्" इति [वदान्यः] द्राविडवेदस्तूय
मानं इदं क्षेत्रं तिरुवावडुतुरै आदीनेनपरिपालितं।
शाप विमोचनाय मयूररूपतया ... पार्वत्या
पूज्यमानेन परमेश्वरेण मयूरताण्डवकृते, श्री
गौरी मायूरनाथेश्वरस्य स्थिरवास निवास भूतेच
अस्मिन् आलये सकल विमान राज गोपुर
गर्भगेहेषु जनित जीर्ण वैकल्यादि निवृत्ति
पूर्वक, पंचवर्ण विलेपनं, स्थूपि कलशानां
स्वर्णमय तेजस्कार्यं नूतन ध्वजस्तंभ स्थापनं,
मूलबेराणां अष्टबंधन कर्मन्च अनेकलक्ष
मूल्यकेन ससंभारं परिसमाप्तिं कृत्वा
स्वस्ति श्री- सर्वमंगल प्रदायके पार्थिप नाम
संवत्सरे, दक्षिणायने, वर्ष ऋतौ, सिंहमासे
शुक्लपक्षे २९- दिनांके, [07-09-2005],
बुधवासरे सायं मीन लग्ने श्री-ल-श्री.


गुरुमहा सन्निधानस्य निकटे यजमान अनुज्ञां
प्राप्य २५ दिनांक [10-9-2005] शनिवासर
पर्यन्तं पूर्वांग पूजाणि निवर्त्य तस्मिन्
शनिवासर सायं मनिलग्ने विद्यादेहाकरालं
कृत कुंभे मूलमूर्ति कलाकर्षण जीवन्यासादिकं
कृत्वा यागशाला प्रवेशनं, २९-दिनांक बुध
वासर प्रातःकाल पर्यन्तं अष्टकाल यागशाला
पूजासमापनंच अष्टोत्तरशत शिवाचार्य वर्यैः
कामिकादि शैवागमोक्त मार्गेण लोकक्षेमकरं

निर्वर्तितं ॥ पूर्वोक्त सिंहमासे - शुक्लपक्षे -
२१ दिनांके [14-09-2005] उत्तराषाढा
नक्षत्रयुत एकादश्यां शुभतिथौ, अमृत
योगान्वित बुधवासरे
पूर्णनेत्रजीवान्वित सर्वसंपत्कर तुलालग्नयुत
गुरुहोरायां - [9.15 AM. TO 10.15 AM.]
श्रीकैलास परंपरा तिरुवावडुतुरै यादीनं २३-तम
ज्ञान पीठालंकृतै: गुरुमहासंनिधान वर्यै:
श्री-ल-श्री. शिवप्रकाशदेशिक परमाचार्य शिवयोगीन्द्रै:
सपरिवार - श्री अभयाम्बाम्बिका समेत श्री
गौरी मायूरनाथेश्वरालयस्य - महाकुंभाभिषेकं
महोन्नतं महाशांतिदं - महामंगलकरंच - कृतानुग्रहीतम्

इत्थं

कार्बार - वैद्यनाथन् विरन्
तिरुवावडुतुरैयादीन.

[इदं शिलाशासनं - मयिलाडुतुरै शिवपुरं
वेदशिवागम पाठशाला स्थापकेन - शिव - श्री.
अ. वै. स्वामिनाथ शिवाचार्य वर्येन लेखितं -
शोधितंच ॥]



மயிலாடுதுறையில் ஐயாறப்பர்

புலவர்.சி.மகாலிங்கம், எம்.ஏ., பி.எட்.,
தலைமைத் தமிழாசிரியர் மற்றும்
உதவித் தலைமையாசிரியர்
திருவாவடுதுறை ஆதீன மேனிலைப்பள்ளி,திருவிடைமருதூர்.

(இக்கட்டுரை மயிலாடுதுறை அருள்மிகு ஐயாறப்பர் திருக்கோயில் புராணச்சிறப்பு - கோயில் அமைப்பு - கல்வெட்டுச்செய்தி - திருப்பணி நிருவாகம் - இவற்றை விளக்குகிறது.)

'திருவையாறு அகலாத செம்பொற் சோதீ' என்று அப்பர் பெருமானால் போற்றப் பெற்ற திருவையாறு அருள்மிகு ஐயாறப்பர் 'நாதசன்மா' என்னும் அடியவருக்காக மயிலாடுதுறையில் எழுந்தருளி அருள் பாலித்தார் என்னும் புராண வரலாற்றைக் கொண்டது அருள்மிகு ஐயாறப்பர் திருக்கோயிலாகும்.

திருக்கோயில் அமைப்பு

மயிலாடுதுறை அருள்மிகு மாயூரநாதர் திருக்கோயிலுக்கு மேற்கில் அருள்மிகு ஐயாறப்பர் திருக்கோயில் அமைந்துள்ளது. நான்கு தேரோடும் வீதிகளின் நடுவே மேற்கு நோக்கித் திருக்கோயில் விளங்குகிறது.

முதல் வாயிலைக் கடக்க தென்புறத்தில் தீர்த்தக் குளமும், வடபுறத்தில் அலங்கார மண்டபமும் உள்ளது. இரண்டாவது வாயிலைக் கடக்க முதலில் அப்பரடிகள் பஞ்சாங்க நமஸ்காரம் செய்யும் திருமேனியும், பலி பீடமும் கொடிமரமும் நந்தியும் உள்ளன. இங்கிருந்து நேரே அருள்மிகு ஐயாறப்பர் திருக்காட்சியைக் காணலாம். நேரே வாயிலைக் கடந்து மகாமண்டபத்தில் நின்று பெருமானை வணங்கி, தென்புறத்தில் உள்ள கூத்தப் பிரானைத் தரிசிக்கலாம். அருகில் தென்புற மேடையில் கருங்கல் திருமேனியாக அருள்மிகு நடராசப் பெருமானும் அன்னை சிவகாமியும் விளங்குகின்றனர். அருகில் திருமுறைக் கோயில் உள்ளது. இவர்களை வழிபட்டு வெளியேவர தென்திசை நோக்கியவாறு அருள்தரு அறம் வளர்த்த நாயகி சன்னதி அமைந்துள்ளது.

முதல் திருச்சுற்றில் வலமாக வர சுப்பிரமணியர், மகாவிஷ்ணு, கஜலெட்சுமி இவர்களைத் தரிசிக்கலாம். வடக்குத் திருச்சுற்றுக் கோஷ்டத்தில் துர்க்கை, பிரும்மா உள்ளனர். கிழக்குத் திருமாளிகைப் பத்தியில் பைரவர், சூரியன், சனீஸ்வரர், நவக்கிரகம், பாலமுருகன் உள்ளனர். கிழக்குப் புறக் கோஷ்டத்தில் அர்த்தநாரீஸ்வரர் உள்ளார். இத்திருமேனி மிக்க அழகுடையது. தெற்குக் கோஷ்டத்தில் தெட்சிணாமூர்த்தியும், அடுத்து விநாயகரும் உள்ளனர். தென் திருமாளிகைப் பத்தியில் நால்வர் திருமேனிகளைக் காணலாம். மேற்குத் திருமாளிகைப் பத்தியில் விநாயகர் தென்கயிலைநாதர், வட கயிலை நாதர்

உள்ளனர்.

வெளித் திருச்சுற்றில் வலம் வரும்போது வடகிழக்கு மூலையில் யாகசாலை அமைந்துள்ளது. தென்புறத் தீர்த்தக்கரையில் கிழக்கு நோக்கி விநாயகர் உள்ளார். இவர்களை வணங்கி முதல்வாயில் வழியே வெளியே வர வேண்டும்.

புராணச்சிறப்பு

குந்தி நடந்து குனிந்தொரு
கை கோலூன்றி
நொந்திருமி ஏங்கி
நுரைத்தேறி - வந்துந்தி
ஐயாறு வாயாறு
பாயாமுன் நெஞ்சமே
ஐயாறு வாயால் அழை

என்று க்ஷேத்திரத் திருவெண்பா குறிப்பிடுவது போன்று செல்வாய செல்வம் தரும் ஐயாறப்பர் திருவையாற்றில் அருட்காட்சி தருகிறார். அவரை நாள்தோறும் நாதசன்மாவும் அவரது மனைவி அனவத்தியும் வழிபட்டு வந்தனர். இவ்வாறு வாழும் நாளில் அனவத்தி தன் கணவராகிய நாதசன்மாவிடம் காவிரியின் பெருமையும் துலா மாதத்தின் பெருமையையும் அறிய விரும்பினாள். நாதசன்மாவும் மனைவியின் விருப்பத்திற்கேற்ப காவிரியின் பெருமையை எடுத்துக்கூறி பின் துலா மாதச் சிறப்பை விளக்கினார். அவ்வாறு கூறும்போது ஐப்பசி மாதத்தில் நீராடுவதற்கு முன் மேற்கொள்ள வேண்டிய சில நியதிகளைக் குறிப்பிடுகின்றார். துலாமாத விரதத்தை மேற்கொள்வோர் வைகறைப் போதிலே படுக்கை விட்டு எழவேண்டும். உடன் தமது நித்திய கடன்களை முடித்துக்கொண்டு முறைப்படி காவிரி நதியில் நீராடவேண்டும். உணவு கொள்ளல் கூடாது. இறைவனைக் காலை, பகல், மாலை ஆகிய மூன்று வேளைகளிலும் வழிபட்டு அருச்சனை செய்ய வேண்டும். களபம், கஸ்தூரி, சந்தனம் முதலிய பொருள்கள் பூசிக் கொள்வதை நீக்கி ஐம்புலன்களையும் அடக்கவேண்டும். இவ்வாறு ஐப்பசி மாதத்தில் நியதி வழுவாது காவிரி நதியில் நீராடுவோர் பிரும்மாவர்த்தம், குருட் சேத்திரம், புட்கரம், அவிமுக்தம், பிரயாகை போன்ற சிறந்த புண்ணிய தலங்களை வழிபடுவதால் அடையப் பெறும் புண்ணியங்களைக் காட்டிலும் மிக மேலான புண்ணியங்களை அடைவார்கள். மேலும் ஐப்பசி மாதத்தில் எல்லா நதிகளும் காவிரியை வந்து அடைந்து நீராடுகின்றன. இக்காரணத்தினால் எந்நதிக்கும் இல்லாத ஒரு தனிச்சிறப்பை காவிரி பெற்று விளங்குகிறது என்றார். இதனை,

திருநிகரா கிக் குறுநகை விளைத்துந்
தேசிக மாதுபுட் கரத்திற்
குருநிலம் பிரதா தகமவி முத்தங்
குளிர்பிர யானகசா னவியுங்
கருநிறக் கடலுங் கலந்ததிற் பிரமா
வருத்தத்தில் கருத்திலன் புற்று
மருநின்ற மலர்வா ரிதபுகுந் தாடும்
பலன் துலாக் காவிரி வழங்கும்.

-காவேரிப்புராணம்

இவ்வாறு தன் மனைவியிடம் நாதசன்மா துலா மாதச் சிறப்பை எடுத்துக்கூறி நாதசன்மாவும் அனாவத்தியும் மயிலாடுதுறையில் வந்து தங்கினர். நியமத்துடன் விரதம் அனுட்டித்தார்கள். அடியார்களுக்கு அறுசுவை உணவு முறைப்படி ஊட்டினார்கள். ஆடை அணிகலன்களைத் தானங் கொடுத்தார்கள். இந்நிலையில், இவர்களிருவரும் இறை

வனை நோக்கித் தவஞ் செய்யத் தொடங்கினார்கள் என்கிறது, காவேரிப் புராணம். நாதசன்மா, அனவித்தி இருவரும் அருள்மிகு மாயூரநாதர் திருக்கோயிலில் சிவலிங்க ரூபமாக காட்சியருளுகின்றனர்.

மயிலாடுதுறையில் ஐயாறப்பர்

நாதசன்மா என்னும் அந்தணர் வேள்வி பல செய்து, திருவைந்தெழுத்து ஓதி வந்தார். நாதசன்மா மனைவி அனவித்தை நாதசன்மாவோடு தவ ஒழுக்க நெறி நின்றார் கயிலையில் நாதசன்மா சாலோகபதவி அடைந்தார். மேலும் சாயுச்சிய பதவி அடைய இறைவனிடம் பிரார்த்தித்தார். நாதசன்மா திருக்கயிலை விட்டு நீங்கி மண்ணுலகை அடைந்து பல தலங்களை வழிபட்டு திருவையாறு அடைந்தார்.

மறம்வளர்த்த மலந்துமிந்த
மன்னுயிர்கட் கின்பருளுந்
திறம் வளர்த்த பெருங்கருணைச்
செல்வியைப்பல் லுயிர்வாழ
வளம் வளர்த்த வுமையாளை
யையாறப் பரைப் போற்றி
நிறம் வளர்த்த பேரன்புநிகழ
வழி படன் முயன்றான்

இவ்வாறு ஐயாற்றுப் பெருமானை ஒழியாது வழிபடுங்கால், பெருமான் நாதசன்மா முன் தோன்றி, ''உமக்கு வேண்டுவன யாது? தருகின்றோம்'' என உரைக்க நாதசன்மா, ''கங்கையிலும் மேலான தீர்த்தத்தில் பிதிர் சிரார்த்தம் செய்து நல்ல சிவஞானம் பெற்று சிவலிங்கம் நிறுவி, அன்பினால் ஆராதித்து, உன்னுடைய திருவடியில் கலந்து செல்ல அருள்புரிக'' என்றார். பெருமானும் ,

எண்ணியவை யொருங்கடைதற்
கேற்றதல் மிஃதன்று
தண்ணியமா யூரமொன்றே
சாற்றுமிதற் கையமில்லை
நண்ணியவத் தலவிருப்பா
னாமுமுடன் வருகின்றோம்
பண்ணியமா தவத்தாய்பின்
வருதியெனப் பகர்ந்தனரே

என்றவாறு, ''நாமும் மிக்க விருப்பத்துடன் உம்முடன் எண்ணியதை எண்ணியாங்கு எய்த சிறந்த தலமாகிய மாயூரத்திற்கு வருகின்றோம்'' என்று கூறி நாதசன்மர் அவருடைய மனைவி அனவித்தை ஆகியோரை அழைத்துக் கொண்டு ஐயாறப்பர் மாயூரம் வருகின்றார். அப்போது நாதசன்மா விடம் மாயூரத்தலம் இதுவே என்றுகூறி ''நீ இடபத் தீர்த்தத்தில் மூழ்கி, முறையுறத் தென்பால் அடைந்து, முனிவில் சிரார்த்தம் புரிந்து, கறை அகல எழு தானங்கண்டு ஏத்தி வழிபட்டு உத்தரமாயூரத்தில் உபதேசம் பெற்று, சித்தர் புகழ் தக்கணமா மாயூரத்தில் உறச்சென்று பத்தர் தொழுஞ் சிவலிங்கப் பிரதிட்டை செய்து பூசித்து முத்தனாயடிக் கலப்பின் முயங்குதி'' என்று அருள்புரிந்தார். பணிந்து கேட்ட நாதசன்மர் தாங்கள் ஐயாற்றில் அமர்வது போன்று, இத்தலத்தில் அமர்ந்து அருள் புரிய வேண்டும் என்றார். பெருமானும் இசைந்து இத்தலத்தில் தங்குவதாக அருளினார். மேலும் மாதவர் நாதசன்மர் விருப்பத்திற்காகவும், தங்கி ஐயாறு தலம் திசை நோக்கி அமர்ந்தார். அதனால் மயிலாடுதுறை ஐயாறப்பர் திருக்கோயில் மேற்கு நோக்கி அமைந்துள்ளது. இத்தகு புராணச்சிறப்பைக் கொண்ட ஐயாறப்பர் திருக்கோயிலை வணங்கிட, ''பொருள், புத்திரர்,

சுவர்க்கம், சிவானந்தப் பேறும் யாவும் கிட்டும்'' என்கிறது மாயூரத்தலப் புராணம்.

பொருள்பெற வேண்டினாலும்
புத்திரர் வேண்டினாலும்
கருளறு சுவர்க்கமாதி
கலந்திட வேண்டினாலுந்
தெருள்பெற வேண்டினாலுஞ்
சிவானந்தப் பேறு நல்கும்
மருள்பெற வேண்டினாலும்
ஐயாறப்பரைச் சார்வாரால்

கல்வெட்டுச்சிறப்பு

இத்திருக்கோயிலில் காணப் படும் கல்வெட்டில் ''கோனேரின்மை கொண்டான் ஜெயங்கொண்ட சோழ வளநாட்டு திருவழுந்தூர் நாட்டு குலோத்துங்க சோழன் குற்றாலத்து திருவையாறுடையான் கோயில்'' என்று இக்கோயில் குறிப்பிடப்படுகிறது. இக்கோயிலில் காணப்படும் கல்வெட்டு கள் மூன்றாம் குலோத்துங்க சோழன் காலத்தில் கொடுக்கப் பெற்ற நிவந்தச் செய்திகளைக் குறிக்கின்றது. இக்கல் வெட்டுகள் பெருமானை ''திருவையாறு டையார்'' என்று குறிக்கின்றது. இக் கோயிலுக்குக் கொடுக்கப்பெற்ற நிவந்தங்கள் ஆதிசண்டேசுவரர் பெயரில் தரப்பெற்றுள்ளது. இக்கோயிலுக்குத் தேவதானமாக கொடுக்கப்பெற்ற நிலங் களுக்கு அரசு வரிவிலக்கு அளித்திருக் கிறது என்ற செய்தி குறிப்பிடத்தக்கது. இத்திருக்கோயிலில் பன்னிரு கல்வெட்டுகள் தொல்பொருள் துறை யினரால் ககூ0எ-ன்படி எடுக்கப் பட்டுள்ளது.

திருப்பணியும் நிர்வாகமும்

இத்திருக்கோயில் திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத் திற்குச் சொந்தமானது. இத்திருக் கோயில் திருப்பணி கக.உ.எசல் உஉ-வது குரு மகாசன்னிதானம் ஸ்ரீ அம்பலவாண தேசிக மூர்த்திகள் காலத்தில் தொடங்கி, பிரமதூத வருஷம் சித்திரைமாதம் உரு-ந் தேதி (6.5.90) ஞாயிற்றுக்கிழமை உரு-வது குரு மகாசன்னிதானம் சீர்-வளர்-சீர் சிவப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் அருளாட்சியில் திருப்பணி நிறைவேற்றப்பட்டு குடமுழுக்கு நடந்தேறியது. மீண்டும் 6.6.2004ல் இரண்டாம் முறையாக சீர்-வளர்-சீர் 23-வது குரு மகாசன்னிதானம் அவர்கள் அருளாட்சியில் திருப்பணி நிறை வேற்றப்பட்டு குடமுழுக்கு நடந் தேறியது.

இத்திருக்கோயில் திருப்பணி யிலும், திருவிழாக்களிலும், வழிபாடு களிலும் ஆன்மீக அன்பர்களும், நற்பணி மன்றங்களும் பங்கு கொண்டு சீர்-வளர்-சீர் குரு மகாசன்னிதானம் அவர்கள் அருளாசியுடன் சிறப்பாக செயலாற்று கின்றனர்.

திருவிழா

இத்திருக்கோயில் திருவை யாற்றில் நடைபெறும் சப்தஸ்தான விழாவைப் போல் இத்தலத்திலும் நடைபெற்றது. இத்தலத்துப் பெருமான் கூறைநாடு, மூவலூர், சித்தர்க்காடு, திருவழுந்தூர், சேந்தன்குடி, மாயூரம் மாயூரநாதர் கோயில் ஆகிய இடங் களுக்குச் சப்தஸ்தானம் பல்லக்கில் சென்று வருவார். துலாமாத தீர்த்த வாரியில் இடபதீர்த்தத்திற்கு அருள்மிகு ஐயாறப்பரும், அம்மையும் தீர்த்தம் கொடுத்தருளுவர்.

இவ்வாறு புராணச்சிறப்பும் வரலாற்றுச் சிறப்பும் கொண்டது அருள்மிகு ஐயாறப்பர் திருக்கோ யிலாகும். அருள்மிகு ஐயாறப்பரை வணங்குவோம்! ஆனந்த வாழ்வு பெறுவோம்!



திருமயிலாடுதுறையில் வாழ்ந்த அருளாளர்களும் பேராளர்களும்

சைவசித்தாந்தப் புலவர். கோ.ஆறுமுகம்,
நூலகர்,
அருள்திரு நமசிவாயமூர்த்தி நூலகம்,
மூவலூர்.

(திருமயிலாடுதுறையில் வாழ்ந்த தமிழறிஞர்கள் பற்றி கூறுகின்ற இக்கட்டுரையில் நல்லத்துக்குடி கிருஷ்ண ஐயர்க்கு அம்பிகை அருள் செய்த திறம் எடுத்துக்காட்டப் பட்டுள்ளது).

அருள்மிகு அம்பலவாண விநாயகப் பெருமான் திருவருளும், துறைசை ஆதீனம் சீர்-வளர்-சீர் குரு மகாசன்னிதானம் குருவருளும் துணை நிற்க. இக்கட்டுரை எழுதுகின்றேன்.

மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் மூன்றிலும் கீர்த்தியுடன் விளங்குவது திருமயிலாடுதுறை. சமயம், இலக்கியம், இசை, கலை, வரலாறு ஆகியவற்றின் அடிப்படையில் சாலச் சிறப்புடையது. இங்கு வாழ்ந்த அருளாளர்களையும், பேராளர்களையும் நினைவில் வைத்து, போற்றிப் புகழ்ந்து மெய்யாளர்களாக வாழ்வோமாக.

அருளாளர்கள்

மகாவித்துவான் ஸ்ரீ திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளை

தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று

என்னும் மறைமொழிக்கிணங்கத் தோன்றியவர் திரு. பிள்ளையவர்கள். திருச்சிராப்பள்ளி அதவத்தூரில் சிறந்த தமிழ்ப் புலமை உடைய சிதம்பரம் பிள்ளை - அண்ணத்தாச்சிக்கு 1815-ஏப்ரல் 6-ஆம் நாள் முதல் குழந்தையாகத் தோன்றியவர்.

இளமையில் தந்தையிடம் கல்வி பயின்றார். மற்றும் தமிழ்ப் புலவர்கள் எண்மர்களிடம் பாடம் கேட்டு புலமையை வளர்த்துக் கொண்டார். இவரிடம் பாடம் கேட்டு பலர் பயன் அடைந்தனர்.

துறைசை ஆதீனம் தமிழும், சைவமும் வளர்க்கும் தகைமையை அறிந்தார். தக்கார் துணைக் கொண்டு திருமடத்தினை அடைந்து, அப்பொழுது குரு மகாசன்னிதானமாக விளங்கிய தவத்திரு அம்பலவாண தேசிக பரமாச்சாரியார் அவர்களிடம் மாணவராக இருந்து ஞானம் பெற்றார்.

திரிசிரபுரம் புலவர்களும், சான்றோர்களும் கூடி பிள்ளையவர்களைப் போற்றிப் பாராட்டி "வித்துவான்" பட்டம் அளித்துச் சிறப்பித்தனர்.

திருமயிலாடுதுறையில் 1860 முதல் 1875 வரையில் வாழ்ந்தார். அக்காலை பலர் பாடம் கேட்டு பெரும்புலவர்கள் ஆனார்கள். துறைசை ஆதீனத்திற்குச் சென்று, சீர்மன்னு தம்பிரான் சுவாமிகளுக்கும், மற்றை

யோருக்கும் பாடம் நடத்தி பயனடையச் செய்தார். பிள்ளையவர்களின் ஆழ்ந்த புலமையைப் பாராட்டி ஸ்ரீலஸ்ரீ குரு மகாசன்னிதானம் அவர்கள், "மகா வித்துவான்" என்னும் பட்டம் அளித்து பரிசுகள் வழங்கினார்கள்.

திரு பிள்ளையவர்கள் சிறு முயற்சியுமின்றி நாளொன்றுக்கு முந்நூறுக்கு மேற்பட்ட பாடல்களைச் சொல்லித் தம் மாணவர்களை எழுதச் செய்வார். திருநாகைக் காரோணப் புராணம், திருக்குடந்தைப் புராணம், மாயூரப் புராணம் முதலிய பதினாறு தல புராணங்கள் இயற்றியுள்ளார். பல அந்தாதி நூல்களும், பிள்ளைத்தமிழ் நூல்களும் இயற்றியுள்ளார்.

ஸ்ரீகிருஷ்ணசாமி ஐயர்

திருமயிலாடுதுறை (நல்லக்குடி) நல்லத்துக்குடி கிராமத்தில் அந்தணர் குலத்தில் இருநூறு ஆண்டுகளுக்கு முன் தோன்றியவர். ஐந்தாம் வயதில் அன்னையை இழந்தார். அன்னையை நினைந்து அழுதபொழுது, அபயாம் பிகையே அந்தணமாதாவாகத் தோன்றி இருமுறை உண்டி அளித்து, தனது சந்நிதிக்கு அழைத்து வந்து அங்கே மறைந்தனர். அது முதல் தினந்தோறும் அம்பிகையைத் தரிசித்து வந்தார். ஒருநாள் இரவு தரிசனம் செய்து திரும்பி வரும் போது கோபுர வாயிற்கு வெளியிலே காலில் கல் இடறியது, அன்னே! அன்னே! என்று அலறினார்.

அபயாம்பிகை கை விளக்குடன் வந்து ஒளிகாட்டி ஊறு போக்கி உய்வித்தார். அன்று முதல் தினமும் ஐயர் வீடு திரும்பும் பொழுது கைவிளக்கு மட்டும் இவர் கண்களுக்குத் தோன்றும் படி வழி காட்டியது அன்னையின் அருள். அபயாம்பிகை யின் அசரீரி வாக்கின்படி அம்மை ஐயர் உள்ளத்தில் இருந்து உணர்த்த அபயாம்பிகை சதகம் என்னும் நூலினைப் பாடியுள்ளார்.

திரு.கோபாலகிருஷ்ண பாரதியார்

திருவாரூருக்குப் பக்கத்தில் உள்ள நரிமணம் கிராமத்தில் அந்தணர் குலத்தில் அவதரித்தவர். பதினாறு வயது வரை, பிறந்த ஊரிலேயே கலை பயின்ற வண்ணம் இருந்தார். முப்பதாம் வயதில் (மாயூரம்) மயிலாடுதுறை வந்து தங்கி திரு.கோவிந்தய்யரிடம் ஆத்ம உபதேசம் பெற்றார். குருவினது உபதேசத்தினால் இல்லறத்தை நாடாமல், பிரம்மச்சாரி யாகவே காலங் கழித்தார். பக்திச் சுவையுடன் கூடிய இனிய கீர்த்தனைகளைப் பாடி பரமசிவனைப் போற்றுவார். பல இடங்களுக்கும் சென்று இறைவனது புகழையும், அடியார்களது சரித்திரத்தையும் கீர்த்தனைகளாகப் பாடி உபன்யாசம் செய்து வந்தார்.

நந்தனார் சரித்திர கீர்த்தனை மிக்க சிறப்பு உடையதாக பாடியுள்ளார். இதற்கு மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள், சிறப்புப் பாயிரம் அளித்துள்ளார்கள். இவர் மயிலாடுதுறை யில் ஒரு அன்னதான கட்டளைக்கு ஐயாயிரம் ரூபாய் மூலதனமாக வைத்துள்ளார்.

டாக்டர் திரு.உ.வே.சாமிநாத ஐயர்

வேங்கடசுப்ப ஐயர் அவர் களுக்கு, பாபநாசத்தைச் சார்ந்த உத்தம தானபுரம் கிராமத்தில் திருமகனாராகத் தோன்றியவர். மயிலாடுதுறையில்கஅளடுல் தங்கியிருந்து திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களிடம் தமிழ் பயின்று தேர்ச்சியுற்றார். கும்பகோணத்

திலும், சென்னையிலும் அரசினர் கல்லூரிகளில் தலைமைத் தமிழாசிரியராக விளங்கினார்.

பதிப்பாசிரியர்களுள் தலைமை சான்றவர். சங்ககால நூல்களையெல்லாம், ஏடுகளை ஆராய்ந்து வருந்தி உழைத்து நன்கு பதிப்பித்துள்ளார். இவர் பதிப்பித்துள்ள சிறு நூல்கள் கணக்கில் அடங்கா.

இவர் இயற்றியுள்ள ''சங்கத் தமிழும் பிற்காலத் தமிழும்'' என்னும் நூல் ஒரு சிறந்த ஆராய்ச்சி நூல். தமிழ் உரை நடைக்கு எளிமை வழங்கினவர் இவரே எனலாம்.

மாயூரம் முனிசீப் வேதநாயகம்பிள்ளை

திருச்சிராப்பள்ளியை அடுத்த குளத்தூரில் கத்தோலிக்கத் தமிழராய் பிறந்தவர். சீர்காழி மாயூரம் முதலிய இடங்களில் மாவட்ட நடுவராக பதவியில் அமர்ந்து நீதி வழங்கியவர். யாவரும் போற்றக்கூடிய ''சர்வசமய சமரசக் கீர்த்தனைகள்'' இயற்றி இசையுலகில் நிலையான இடம் பெற்றவர். துறைசை ஆதீன பதினாறாவது பட்டம் ஸ்ரீலஸ்ரீ குரு மகாசன்னிதானம் சுப்பிரமணிய தேசிக பரமாச்சாரிய சுவாமிகளிடம் ஆன்ம ஞான உறவும்; திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம்பிள்ளையிடம் ஆசிரிய உறவும் கொண்டு விளங்கியவர். இத்தகைய உறவுகளினால், இவரது சமயவுணர்வு பற்றி ஐயுற்றார் வாய்மொழியை அடக்கும் வண்ணம் ''சத்திய வேதக்கீர்த்தனைகள்'' என்ற இசை நூல் இவரால் இயற்றப்பட்டது.

ஊனும், மதுவும் உண்ணுதலைக் கடிந்து இவர் இயற்றிய பாடல்கள் பல உள்ளன. ஆங்கில நெறியினைத் தமிழில் முதன்முதல் எழுதினவர் வேதநாயகரேயாவர். இவர் இயற்றிய 'பிரதாப முதலியார் சரித்திரம்' மிகச் சிறப்பாக விளங்கி வருகின்றது.

திருநடராஜக் கவிராயர்

மயிலாடுதுறை சேந்தங்குடியில் சைவ வேளாளர் மரபில் பிறந்து வாழ்ந்தவர் இவர் பாடிய நூல்களுள் ''பைரவ புராணம்'' சிறப்புற விளங்குவது.

பேராளர்கள்

மகாவித்துவான் திரு.ச.தண்டபாணி தேசிகர்

மயிலாடுதுறை லால்பகதூர் நகரில் வாழ்ந்தவர்கள். துறைசை, தருமை ஆதீனங்களின் ஆதீன வித்துவானாக இருந்தவர்கள். சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகவும், ஆராய்ச்சித் துறை ஆசிரியராகவும் திகழ்ந்தவர்கள். திருமூலர் திருமந்திரத்திற்கு பஞ்சாக்ஷர உரை எழுதி கீர்த்தி பெற்றவர்கள். திருவாசக விரிவுரையும், திருக்குறள் உரை வளம் என்னும் ஆராய்ச்சி நூலும், இன்னும் பல நூல்களும் எழுதி தமிழ்த் தொண்டின் மூலம் சைவத்தையும் தமிழையும் தழைக்கச் செய்துள்ளார்கள். திரு.ச.தண்டபாணி தேசிகர் அவர்களுக்கு திருவாவடுதுறை ஆதீனம், உக-வது பட்டம் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக மூர்த்திகள் மகாவித்துவான் என்னும் பட்டம் வழங்கி ஆசியருளியுள்ளார்கள்.

திரு.ஜி.கல்யாணம்பிள்ளை அவர்கள்

மயிலாடுதுறை திரு இந்தளூரில் வாழ்ந்தவர்கள். திருச்சி, மதுரை மாவட்டங்களில் காசில்காராக பணி

புரிந்தவர்கள். தமிழ்ப் புலமையும், ஆங்கிலப் புலமையும் உடையவர்கள். அரசாங்க அலுவல் பார்க்கும் காலத்திலேயே ஓய்வு நேரங்களில் தமிழ்த் தொண்டின் மூலம் சமயத் தொண்டு புரிந்தவர்கள். தமிழ் நாடு தெய்வீகப் பேரவையின் செய்தித் தொடர்பாளராகவும், சென்னை சைவ சித்தாந்தப் பெருமன்றத்தில் (கக௯௯க-௯௩) செயலாளராகவும் பணி புரிந்துள்ளார்கள். திருக்கோயில் மாத இதழ் ஆசிரியராக இருந்து, பல கட்டுரைகள் எழுதியும், சொற்பொழிவுகள் நிகழ்த்தியும் தொண்டாற்றியுள்ளார்கள். மயிலாடுதுறை காவேரி நகரில், குமாரசாமி உடையார் ஆரம்ப பாடசாலையில், தாளாளர் தி.கு.பால கிருஷ்ண உடையார் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க எழுபது வாரங்கள் (வாரத்திற்கு ஒரு ஞாயிறு) பெரிய புராணம் வகுப்பு முதியோர்களுக்கு நடத்தியுள்ளார்கள்.

டாக்டர்.திரு.சொ.சிங்காரவேலனார்

திருமயிலாடுதுறை மாயூரநாதர் சந்நிதித் தெருவில் வாழ்ந்த தமிழ்ப் பெரியார் ஆவார். தருமையாதீனக் கல்லூரியில் கல்வி பயின்றும், பயிற்றுவித்தும் வந்ததோடு, ஆதீனப் புலவராகவும் விளங்கி செம்மை உள்ளத்தோடு தெய்வத்தமிழ்த் தொண்டு செய்துள்ளார்கள். மயிலாடுதுறை ஏ.வி.சி கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக பணிபுரிந்துள்ளார்கள். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் திருமுறை ஆராய்ச்சிக் குழுவினரில் ஒருவராகத் திகழ்ந்து பல நூல்களுக்கு விரிவுரை எழுதியுள்ளார்கள். தருமை யாதீனம் சைவ சித்தாந்த மாலை நேரக் கல்லூரியில் ஆசிரியராக இருந்த காலத்தில் பாடம் கேட்ட மாணவர்களுள் அடியேனும் ஒருவன்.

அருட்பணிச்செல்வர்.உயர்திரு.கு.பால கிருஷ்ண உடையார்

மயிலாடுதுறை காவேரி நகரில் வாழ்ந்த சிவபூசைச் செல்வர். தனது தந்தையார் பெயரில் ஆரம்பபாடசாலை தோற்றுவித்து தாளாளராக இருந்தும், 'ஞானானந்தர் வழிபாட்டுச் சங்கம்' ஏற்படுத்தி அதன்மூலம் மேற்படி பாடசாலையிலேயே பல பேராசிரியர்களைக் கொண்டு நீதி நூல்கள், திருமுறைகள், புராணங்கள், இதிகாசங்கள் ஆகியவைகளின் விரிவுரை நிகழ்த்தி சுமார் அறுபது பெரியவர்கள் - தொடர்ந்து வகுப்பு கேட்கச் செய்த தகைமிகு பெரியாராவார்கள். பாடசாலை மாணவர்களுக்கும் அடியேனைக் கொண்டு நீதிக் கதைகளையும், புராணக் கதைகளையும் போதிக்கும்படி செய்து அடியேனையும் நன்னெறியுடையவனாக்கிய பெருமை அன்னாரையே சாரும்.

இந்நிகழ்ச்சிகளிலே வித்துவான் திரு.வி.சா.குருசாமிதேசிகர் ஐயா நிகழ்த்திய திருவாசக விரிவுரை நிறைவு விழாவினில், தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குரு மகாசன்னிதானம் அருளாசியுரை வழங்கி, திரு உடையார் ஐயா அவர்களுக்கு அருட்பணிச்செல்வர் என்னும் பட்டமும் அளித்தார்கள்.



। ओं नमः शिवाय । सच्चिदानन्दरूपाय ।

श्री कैलासपरम्परागत-तिरुवावडुदुरै-आधीनाधीन-मायूरक्षेत्रे

।।श्रीमायूरनाथस्वामिसन्निधानम्।।

முனைவர். பா.சங்கரேஸ்வரி,M.A., Ph.D.,
விரிவுரையாளர்,
மன்னர் சரபோசி அரசினர்க் கல்லூரி, தஞ்சாவூர் - 613 005.

(மயிலாடுதுறை திருத்தலத்தின் சிறப்பை வடமொழியில் இக்கட்டுரை ஆசிரியர் மிகச் சுருக்கமாகவும் எளிமையாகவும் தந்துள்ளார். இக்கட்டுரையில் மூர்த்தி தலம் தீர்த்தம் பற்றிய குறிப்புகள் அடங்கியுள்ளன.)

संस्थितिः - स्थलस्यास्य "मायूरम्" इति प्राचीनव्यवहारः। तञ्जापुरीमण्डले उपमण्डलत्वेन प्रसिद्धम् । कावेरीनद्याः दक्षिणे तीरे प्रतिष्ठितम् । दक्षिणरेल्वे चेन्नै-रामेश्वर प्रधानमार्गे मुख्यसन्धिभूतम्। तरङ्गंपाटि, कारैक्कुडि उपमार्गौ अत्र प्रभवतः।।

श्रीसन्निधानम् -

बृहदालयः इति अस्य ख्यातिः। सन्निधानमिदम् अतिप्राचीनम्। दिक्षु गोपुरैः चतुर्भिः सुशोभितम्। तत्रापि प्राच्याम् अत्युन्नतगोपुरोपेतम् । रथवीथीसहित पञ्चप्राकारसहितम् । अम्बा-स्वामिनोः पृथगालयविशिष्टम् । शिल्पकलाकौशलं प्रकटयद्भिः नयनानन्दकारकैः शिलास्तम्भैः शोभितम्। बहिःप्राकारविराजमान मायूरनाथस्वामिनः आलयान्वितम् । सेवनीयात्र उमादेव्याः मायूरमूर्तिः।।

मूर्तिः - स्वामी - मायूरनाथः, ब्रह्मलिङ्गम्, वल्ललार् , अम्बा - अञ्चल् नायकी, अभयाम्बिका, अभयप्रदाम्बिका, मायूराम्बा च ।।

तीर्थम् - ऋषभतीर्थम् ।(तुलाधट्टः इति ख्याते कावेरी स्नानधट्टे अस्मिन् मध्येनदि प्रतीचीमुखः नन्दिदेवः विराजते । तुलामासे प्रत्यहं, कार्तिकमासस्यारम्भे दिने च तीर्थावगाहनमत्र शर्मदमिति विश्वासः। आलयाभ्यान्तरे "ब्रह्मतीर्थम्" इति सरः वर्तते । अनविद्यासरः, अगस्त्यसरश्चेति तीर्थान्तरे च भवतः।।

स्थलवृक्षः- आम्रः ।।

उत्सवाः - तुलामासोत्सवः, चैत्रोत्सवः, तुला-अमावास्या, तुलान्त्यदिन स्नानम् (कटैमुलुक्कु), वृच्छिकमासारम्भस्नानम् (मुडवन्मुलुक्कु), तुलोत्सवे विवाहमहोत्सवः च प्रसिद्धाः।।

स्थलमाहात्म्यप्रतिपादकाः ग्रन्थाः -

तिरुज्ञानसम्बन्ध, तिरुनावुक्करसयोः भक्तिपद्यानि, अभयाम्बिकाशतकम्, तिरुमयिलै वेण्पा अन्त्यादि, तिरुमयिलै तिरुप्पण् अन्त्यादि, मायूरपुराणम् (प्राचीनम्), महाविद्वान् श्रीमीनाक्षिसुन्दरं पिल्लै कृतमायूरपुराणम् इत्यादयः।।

श्रीमायूरनाथस्वामिनं संसेव्य जन्मसाफल्यं लभध्वम् ।।



திருத்தேர் திருப்பணி

T.செந்தில்குமார், M.A., B.T.,
தமிழாசிரியர்,
திருவாவடுதுறை ஆதீன மேல்நிலைப்பள்ளி,
திருவிடைமருதூர்.

(இக்கட்டுரை மயிலாடுதுறை அருள்மிகு மாயூரநாதர் திருக் கோயிலில் புதிதாக செய்யப்பெற்ற திருத்தேர் பற்றிய செய்தியினைத் தருகின்றது).

எல்லாம் வல்ல சிவபெருமான் திரிபுர சம்ஹாரத்திற்குச் செல்ல திருத் தேர் ஏறிச்சென்று, தம் புன்னகையால் சம்ஹாரம் செய்தார் என்று புராணங்கள் கூறுகின்றன. இதனை

பொருப்புச்சிலையில் வாசுகிநாண்
பூட்டி யரிகோல் வளியிர்க்கு
நெருப்புக் கூராம் படைதொடுத்து
பிரம வலவ னெடுமறைமா
விருப்பிற் செலுத்து நிலத்தேர் மே
னின்று தெவ்வூர் வெந்தவிய
அருப்புக் குறுவெண் ணகைமுகிழ்த்த
அந்தணாளன் றிருவுருவம்

என்கிறது காஞ்சிப்புராணம்

***தேரின் தத்துவம்**


அண்டத்தில் உள்ளது பிண்டத் திலும் அடங்கும் என்பதற்குக் காட்டும் எட்டு அடுக்குகளும் விசுவ விராட் சொருபமே. அகண்டாகார உருவம் என்பதே அது. உச்சிக்கும்பம் - சோடசாந்தம். அதன் கீழடுக்கு - துவாத சாந்தம். பின்னுள்ள மூன்றடுக்குகள் தலையின் தலை இடை அந்தப் பகுதி, அதன் கீழாக புருவ நடுகண்டம் இருதயம் நாபி குண்டலிஸ்தானம் அமைந்துள்ளன. நடுவில் தாங்கும் குத்துக்கால்கள் தத்துவக்கால்கள் மூன்று கண்கள் சிகையையும் வலது இட காதுகளையும் குறியும். குதிரைகள் சூரிய சந்திர கலைகள் சாரதி - அக்னி இவை நாசி. பத்துச்சக்கரங்கள் தசவாயு அசைவற்ற மனத்தை மேலெழும்பு ஒவ்வொரு தானங்களிலும் அமைத்து அதற்கான பலன்கள் தந்து இன்னும் மேலேற்றி சும்மா இருந்தபடி இருக்கும் சுகமறிவிக்கும் லயக்கிரமங் காட்டுவதே தேரின் தத்துவம்.

புதிய திருத்தேர்

மயிலாடுதுறை அருள்மிகு மாயூரநாதர் திருக்கோயில் திருத்தேர் பழுதுற்றதால் எழுபத்தைந்து ஆண்டு களாக திருத்தோரோட்டம் நடத்த முடியாமல் இருந்தது. இந்நிலையை மாற்றி புதிய திருத்தேர் செய்து திருத் தேரோட்டம் நடத்தவேண்டும் என்று திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடு துறை ஆதீனம் 23-வது குரு மகாசன்னிதானம் சீர்-வளர்-சீர் சிவப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் அவர்கள் திருவுளம் பற்றினார்கள். அவர்களுடைய திருவுளப்பாங்கின் வண்ணம் திருத்தேர் திருப்பணிக்கமிட்டி அமைக்கப்பட்டது.

---

*மயிலாடுதுறைத் திருக்கோயில் திருப்பணிகளும் திருவிழாக்களும் முனைவர் ப.நீலா.



திங்களஞ் சடையோன் திருவிழா இனிதின் அமைத்து அங்கவன் தடந்தேர் அழகுடன் பண்ணுவித்து, அதில் அஞ்சொல்நாயகி உடனமர் மாயூரநாதர் உலாவர நெஞ்சொன்றி நினைந்து மக்கள் கண்டு மகிழும் காட்சி

செங்கமலத்தாயார் அறக்கட்டளை நிறுவனர் திரு. திவாகர் அவர்கள் மேற்பார்வையில் மயிலாடுதுறை மூத்த வழக்கறிஞர் திரு. குஞ்சிதபாதம் அவர்கள் தலைமையில் திருத்தேர் திருப்பணிக்கமிட்டி செயல்படத் தொடங்கியது.

திருத்தேர் அமைப்பு

புதிய திருத்தேரை தஞ்சையைச் சேர்ந்த சிவநேசன் ஸ்தபதி தலைமையில் சரு ஸ்தபதிகள் உருவாக்கினார்கள். இத்தேர் ஐம்பது டன் எடைகொண்டது. அறுபத்து நான்கு அடி உயரமும் பதினேழு அடி அகலமும் கொண்டது. இத்தேரின் சக்கரம் ஒவ்வொன்றும் ஒன்றரை டன் எடை உள்ளது. இத்தேரின் சக்கரமும் அடித்தளமும் இரும்பினால் ஆனது. தேர் செய்வதற்கு சுமார் ரூ.27 இலட்சம் செலவாகி உள்ளது.

இத்திருத்தேர் திருப்பணிக்கு மன்னார்குடி செங்கமல நாச்சியார் அறக் கட்டளை நிறுவனர் திரு. திவாகரன் மற்றும் பிரமுகர்கள் பலரும் நிதியளித்துள்ளனர். இத்திருத்தேர் வெள்ளோட்டம் 12.11.03ல் நடை பெற்றது. திருத்தேர் வெள்ளேட்டம் சீர்-வளர்-சீர் குரு மகாசன்னிதானம் அவர்கள் முன்னிலையில் நடை பெற்றது. இவ்வெள்ளோட்டத்தில் திரு.திவாகரன், மூத்த வழக்கறிஞர் சி.ஆர்.குஞ்சிதபாதம் மற்றும் பிரமுகர் களும் கலந்து கொண்டனர்.

திங்களஞ் சடையோன் சினகரஞ் செய்தோர்
திருவிழா இனிதினி அமைத்தோர்
அங்கவன் தடந்தேர் பண்ணுவித் தோர்கள்
சாறயர் மறுகமைத் திட்டோர்
கொங்கவிழ் தருவி னிழலிற் பன்னாட்
குலிசன்வாழ்த் தெடுப்ப வீற்
றிருந்து
மங்கையோர் பாக னுலகினின் அடைந்து
மலரடி நிழல் வீற் றிருப்பார்

என்று சிவபெருமானின் அருளைப் பெற செய்திடும் சிவபுண்ணியச் செயல்களில் தடந்தேர் செய்விப்பது, விழா நடத்துவது, திருக்கோயில் திருப்பணி செய்வது ஆகியன சிவனருளைப் பெறச் செய்யும் என்கிறது கூர்ம புராணம்.

திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமான திருவிடைமருதூர் அருள்மிகு மகாலிங்கப்பெருமான் திருக்கோயில் திருப்பணியும், திருத்தேர் திருப்பணியும் சீர்-வளர்-சீர் குரு மகாசன்னிதானம் அவர்கள் திருவுளப் பாங்கின் வண்ணம் நடைபெற்று வருகிறது.

THE CITY OF PEACOCK

The ancient city:

Mayuram is the city where Parvathi worships Siva in the form of a Pea-hen. Therefore this is known as the city of the Peacock. Probably this was a part of the old Kaverippoompattinam, the great emporium of the Greek Sailors known to them as Kaberas which was the Sea Port Capital of the Ancient Cholas.

Thula Kaveri:

It is on the Southern Bank of the holy Kaveri, before this river falls into the sea. In that way it is great as a place of pilgrimage and in the Thula month on the last day, pilgrims congregate to take the holy bath.

The Puranas:

IN the Medieval age, Puranas came to be composed showing the glories of the temples and these brought a message of hope to the opressed, and the depressed spiritually and materially. The stories of the Mahapuranas as well as the folk tales were woven together in these Stalapuranas. This great city of the peacock, had also a Purana and there are two Tamil Versions. Great Kings like Dilipa, revered Brahmins like those belonging to the koundinya gotra, powerful Devas like Brahma, Vishnu, Lakshmi, Dharma, Manmata Sabthakanyas and Daksha, glorious rishis like those of Tarukavana, Kakabhusanda, Agastiya and Kannuva were said to have worshipped and attained glory after washing away their sins.

Their Message:

There are stories which explain ;the message of the Lord's concern for the sinners and there are stories which describe how sinners attain salvation after worshipping at this holy place. The holy tradition is not satisfied with the Lord's concern for the fallen men alone. It dreams of the Lord being concerned with the dumb beasts and birds even when they are cruel and in that tradition God's grace is equally interested in these sub-human creations. There are therefore stories which give the message of the God, blessing the elephant and the horse, the parrot and the cat, the monkey and the fox, the ass and the eagle with salvation. This is a message which is of great significance to the modern world. According to the modern theory of evolution all living beings are literally cell brothers.

Saint Sambandar:

This is a place made holy by the Child Saint Thirugnanasambandar and the ripe old Saint Appar of the Seventh century who opened the flood gates of Bhakti. On account of this importance, the present Head of the Thiruvavaduthurai Mutt, has established a temple within this Temple for the twelve Saiva canonical works of which Thevaram verses constitute seven. Sambandar's poems describe the beautiful Kaveri flanked on either banks by plants,

trees and creepers, full of flowers, wherein played Monkeys and humming bees whilst in the water leapt in joy the sword fish perhaps at the beautiful sight of the dance of the peacock and the games of the cranes. The emphasis on the beauties of Nature which is another form of Sakthi or the Grace of the Lord is an implied rejection of the theory that the world is but misery only existing to be renounced. It is because of this beautiful scene characterised by the dance of the peacock, this city came to be known as the city of peacock, though in later ages a mythology talking of Uma worshipping in the form of pea- hen arose on the basis of this name viz. the city of the peacock. That is world of the pure hearted without any deceit whatsoever. They worship the Lord with great concentration free from the great defect of ignorance and attain Gnana, freed from the misereies of this world. Such is the message of Gnanasambandar who refers to the contemporary worshippers who sing and dance along with Brahmins and Devas.

Saint Appar:

Ancholalumai is a phrase which occurs in the Thevaram of Apppar, that is Uma of the beautiful words. Probably there was another reading ancholalumai i.e. Uma the great Lord of Abhaya. It is this which has been translated in the puranas ;as Abhayambika.

In the hymns of Apppar, reference is made to Uma Uttering with Bhakti, the name of siva and to the Lord who concentrates His attention on this Lady Love. This reference is responsible for the puranic story of Parvathi worshipping as a pea-hen in this great temple. The mere sight according to Appar of this temple removes all miseries. God has removed the evils of the sense organs. The Lord of death will never approach anyone there and therefore it is easy to escape from birth and death. Fortunate are we for being born as human being to worship in this temple. This is the message of Appar and he, dancing with joy over- powered by the Grace of the Lord, exclaims to his mind. The Lord resides on our crown and in our mind. What Tapas have we performed to attain this great-ness. We do not think any more of the Heaven of the Devas. No more need one suffers the miseries of tapas in this world. We have removed the foolishness of those who had no love for the Lord. There is a reference to the Ganges which is here called Bhagirati and there is a beautiful sculpture representing the Ganga Visarjana Murthi wherein Ganges is allowed to come down from His matted hair, whilst Parvathi at the sight of this lady of Ganges turns a side in a sulky mood.

Inscriptions:

This temple though not rich in inscriptions has atleast five of them which go to the age of the later cholas. i.e. the age of Rajaraja and Rajadhiraja. There is another which belongs to the age of Jatavarma Sundar Pandiyan. Therefore the cholas and later the Pandiyas had great interest in this temple older than the Thevaram i.e older than the seventh century. These inscriptions were found in

another temple probably taken to that place in later times for building purposes.

A new conception - The munificient Lord:

The city of peacock reminds of the conception of the munificient Lord by and through the various names of the Lord in the temples all around. The Tamil word for the munificient Lord is Vallalar. There are on the four sides of this temple the famous Vallalarkovil, now a temple of Dakshinamoorthy, who shows the great truth, through his Cinmudra of his hand on the eastern side of this temple. In addition to the ordinary Dakshinamoorthi form, there is also a form of Yoga dakshinamoorthi in the Mayauram temple itself. There is on the east the munificient Lord showing the way of right ford. It is said that this Lord showed the right ;ford for Saint Gnanasambandar when he wanted to cross the Kaveri. In the South there is a munificient Lord who shows the right vak.

Destruction to Love:

The Pallava period before the Thevaram writers, came probably under the influence of Kapalika and other sects who emphasised more Siva's actions of heroism and destruction. This gave rise to the conception of the Virasthanas and the Sthalapuranas of this temple connects some of these Virasthanas with this holy place. There are at least four places surrounding this Mayuram Viz. Thirukkurukkai on the North, where Manmata was destroyed, Tiruppariayalur on the South East where Dakshina was destroyed and Tirukkadaiyur still further to the South East, where Lord of death was destroyed and Vazhuvur on the South where the elephant sent by the rishis of Tarukavana was destroyed. These acts of heroism were looked as acts of salvation for others and the conception of Uma's love and the conception of Vallalar give a different message in the age of Bhakthi.

Beauties of sculpture:

There is a separate temple for Balasubramanya on the backside of the garbagraha. There is also the beautiful sculpture in stone of Anandatandava as shown to the Bhrigu. There is also a beautiful sculpture of Ganapathi in the dancing pose. This stalaviruksha is the old Mango tree.


Gauri tandava:

According to the Purana, when Parvathi in the form of a pea-hen, wor shipped, Siva Siva came and danced in the form of a peacock. Parvathi after the marriage with Siva prayed the Lord to perform His dance once again now in accompaniment to music. The famous Gauri-tantava one of the seven great tandavas mentioned in the Agamas was then performed. The sabha where the dance was performed. The sabha where the dance was performed is called Adisabha suggesting thereby ;that the dance was performed here before in any other place.

Thiruvavaduthurai mutt:

This temple is under the management of Thiruvavaduthurai mutt


which probably was established in the Fifteenth century, by a disciple third in order from Umapathi Siva. The present Head of the Mutt His Holiness SEER-VALAR-SEER.SIVAPRAKASA DESIKA PARAMACHARYA SWAMIGAL is the twenty three in the line of Gurus. The gurus of this Mutt were great Saints, and Scholars who were responsible for the growth of Saivism, Tamil and Sanskrit in South India. Because of their greatness, Kings entrusted to them the management of temples and the Chieftains and other people made rich endowments. This is one of the sixteen temples under the management of the Mutt. Recently Maha Kumbabishekam was performed. Dated 14.09.2005.



தோத்திரமும் சாத்திரமும்



ஞானப்போனகம் அருந்தி ஞானத்தமிழ் தந்த ஞானசம்பந்தப் பெருமான்.



உழவாரப் படையாளி உவந்து பாடிய தண்டமிழ்ப் பாட்டால் தலைவனாம் சிவபெருமான் மகிழ்ந்து திருவடி சூட்டப்பெற்ற திருநாவுக்கரசர்.



திருமுறைகளில் பதி இயல்பு

வித்துவான் .க.கதிரேசன், எம்.ஏ., பி.எட்.,
குன்றக்குடி ஆதீனப்புலவர்
பூவாளூர் - 621 712.

(இக்கட்டுரையாசிரியர் சிவ பெருமான் அறக்கருணையாளர் அருள் காரணர், மறக்கருணையாளர், வலிய ஆட்கொள்வார், ஆணவத்திற்கு அகப் படார், வேண்டுவோர் வேண்டுவதே ஈவார் என்றும், சிவபெருமான் சோதியாகத் திகழ்கிறார் என்றும், திருமுறைகள் வழிநின்று விளக்கு வதோடு பதி என்னும் சொல் லின் பொருள் சிறப்பும் எடுத்துக்காட்டி யுள்ளார்.)

முன்னுரை

''ஒண்திறலின் நான்முகனும் மாலும் மிக தேடி உணராதவகை'' மிக நீண்டவன் அரன்'' இவனை மனமாரச் சிந்தித்து வாயாரப் புகழ்ந்து பாடித் தலையாரக் கும்பிட்டு உய்திபெற வாய்த்தது நந்தமக்கு ஈதோர் பிறவி. இச்செயலுக்கு உறுதுணையாவன அரன் புகழே பாடும் திருமுறைகள். அரன்புகழ் நிலத்தினும் பெரிது வானினும் உயர்ந்தன்று நீரினும் ஆரள வில்லதா யினும் ஒல்லும் வகையால் ஒருசில நோக்குவோம்.

பதி என்னும் சொல்; இறை, சிவன் ஒளி, குரு, மூத்தோன் முதலிய பல பொருள்தரும் ஒரு சொல். இவர்கள் நம் உள்ளத்தில் பதிந்திருப்பதாலும், பதித்துக் கொள்ளவேண்டியவர்களாத லாலும் இப்பெயர் பெற்றனர்.

''ஒருவன் எதனைச் சதா சிந்தித்துக் கொண்டிருக்கிறானோ அதுவாகவே அவன் ஆகிறான்'' என்பது உளவியல். பதிப்பொருளை நம் உள்ளத்தால் நாம் தீண்டத் தீண்ட ''காந்தம் கண்ட பசாசம்'' (இரும்பு) போல நம் உயிர் அவன் ஆற்றலைப் பெற்று அவனாகிறது.

பொருளை விட்டு நீங்காதது இயல்பு - குணம். இது செயற்பாட்டின் வழி மிளிர்வது. எனவே பெருமான் செயற்பாடுகள் மூலம் அவன் இயல்புகளை ஒருவாறு அறியலாம்.

அறக்கருணையாளன்

முழங்குதிரைப் பாற்கடலில் மூண்டெழுந்த நஞ்சுண்டவன் அரன். ''ஒருவரும் உண்ணாத நஞ்சு உண்டு இருந்து அருள் செய்குவாய்'' என்று அரனை இளங்கோவடிகள் போற்றுவார்.

கறைமிடறு அணியலும் அணிந்தன்று:
அக்கறை
மறைநவில் அந்தணர் நுவலவும் படுமே
புறம் கடவுள் .. 5, 6

கறை அணி செய்தற்கும், நுவலவும் படுதற்கும் காரணம் அது தியாகத் திருவுருவைச் சார்ந்ததேயாகும்.

பிறர்போல் கறை மிடற்றைத் திரு ஞானசம்பந்தர் எண்ணற்ற இடங்களில்

போற்றுகிறார் அவற்றுள்,

எண்ணரிய வானவர்கள் நின்றுதுதி
செய்யஇறை யே கருணையால்
உண்அரிய நஞ்சதனை உண்டு
உலகம் உய்யஅருள் உத்தமன்
திரு.3. திருமாணிக்குழி 7:1.2

என்பதும் ஒன்று.

'எண்ணரிய' என்பதால் திருமால் உள்ளிட்ட முப்பத்து முக்கோடி தேவர் களையும்; 'நின்று' என்பதால் எங்கோ இருந்தன்று முன் ஓடி வந்ததையும்; ''துதி செய்ய'' என்பதால் தம் குறை கூறி அது நிரப்ப வேண்டியதையும்; ''இறையே'' என்பதால் அரன்தான் ஒருவனாகவே என்பது மட்டுமன்றி நொடிப் பொழுதில் என்பதையும் 'கருணையால்' என்பதால் கைம்மாறு கருதா நிலையையும்; 'உண்ணரிய' என்பதால் பிறர் யாரும் உண்ணற்கரியது என்பதையும், 'உலகம்' என்பதால் அண்டத்து உலகங்கள் அனைத்தையும், 'அருள் உத்தமன்' என்பதால் கைம்மாறு கருதாதவன், பிறர் யாரினும் மேம்பட்டவன் என்பதையும் குறிக்கிறார். எனவே இது அரனின் அறக்கருணையாய் இலங்குகின்றது. கேவலத்தில் கிடந்த உயிர்க்கு உடல், கருவிகள், உலகு, நுகர்பொருள் கூட்டிய தோடன்றி இதுவும் அறக்கருணை இயல்பைப் புலப்படுத்தும்.

அருள் காரணர்

தலைவன், தன் செயல்களுக்கு ஏவுதற்கருத்தாவாய் - காரணனாய் அமைவதன்றித் தானே சென்று செயற்படு வதில்லை. பெருமான் காரணன்; அவன் காரியம் யாவினும் கை கொடுத்துச் செய்து முடிக்கின்றவள் பெருமாட்டியே.

அப்பன் பொருள் - குணி; அம்மை குணம் - ஆற்றல். 'பொருளின்றி ஆற்றலில்லை; ஆற்றலில்லாப் பொருளில்லை' என்பது அறிவியல். செயற்படு நிலையில் அப்பன் கொண்ட முதல் கோலமே அம்மையப்பர் திருக் கோலம். எனவே இதனைத் 'தொன்மைக் கோலம்' என்பார் மாணிக்கவாசகர்'. ஆதலின் அண்டம் அனைத்துக்கும் அம்மையப்பரே அம்மை அப்பர் ஆவார்.

அடியார் அனைவர் உள்ளத்திலும் பதிந்த இத்தொன்மைக்கோலம் அப்பரடி கள் மனத்தில் பதிந்திருந்தததில் வியப்பில்லை.

அரிதரு கண்ணி யாளை ஒருபாகமாக
அருள்கார ணத்தின் வருவார்
திரு. 4. பொது சிவுனெனும் ஓசை 2;3

அரி - அழகு, வெற்றி கண்ணிற்கு அணிகலம் கண்ணோட்டம் ஆகிய அழகு; எடுத்த காரியம் யாவினும் வெற்றி நாட்டியவன் ஆதலின் வெற்றி - என்கிற இருபொருளும் இங்குப் பொருந்தும். ஒருபாகமாக என்பதால் ஆற்றலைப் பிரியா அப்பன் நிலை குறித்தார். அம்மையப்பர் கோலம் உயிர்கட்கு நலம்புரியும் காரியத்தையே அடிப்படையாகக் கொண்டதாதலின் ''அருள்காரணத்தின்'' என்றார்; உரியவர் இருக்கும் இடம் தேடிச் சென்று திருவடி தருகின்றவராதலின் ''வருவார்'' என்றார். இதன்மூலம் தானேவந்து அருள்புரிதலே அவன் இயல்பு என்பது உணர்த்துகிறார்.

மறக்கருணையாளன்

''முப்புரம் என்பது மும்மல காரியம்'' முப்புர அசுரர்களாகிய கமலாட்சன், வித்யுன்மாலி, தாரகாட்சன் ஆகியோர் அண்டத்துக்கிழைத்த கொடுமைகள் அளவிறந்தன. இவர்

களைத் தடிந்து ஆட்கொண்டதே முப்புரம் எரி செய்த செய்தி.

நாண் என்றால் நஞ்சுஇருக்கும்நற்சாபம்
கல்சாபம்
பாணந்தான் மண்தின்றபாணமே - தாணுவே
சீராரூர் மேவும் சிவனேநீ எப்படியோ
நேரார் புரமெரித்த நேர்
-தனிப்பாடல்

என்று நகைச்சுவையுடன் வினவுவார் காளமேகம்.

முப்புரம் வெல்லத் தன்துணை இன்றியமையாதது என்று செருக்குற்ற திருமால் முதலியோரை ஒதுக்கித் தன்புன் சிரிப்பாலேயே முப்புரம் எரி செய்தான் பெருமான்.

''..குழையார் புரமூன்றும் தீவாய்ப் படுத்த சேவகனார்'' திரு.7.திருக்கடவூர் மயானம் 6:3

என்பார்'' சுந்தரர் பெருமான். தீவாய்ப் படுத்த மறம் நிகழ்த்தியவனாதலின் சேவகன் என்று கூறாது, அது செயற்கரிய செயலாதலின் ''சேவகனார்'' என்று உயர்வு கருதிய பன்மையிற் கூறுகிறார்.

சுந்தரர் முப்புரம் எரித்தது மட்டும் கூற, அப்பரடிகள் அவன் கருணைத் திறத்தையும் குறிக்கிறார்.

''திரிபுறத்தோர் மூவர்க்குச் செம்மை செய்த தலையான்'' -திரு.சு.திருக்கற்குடி *9:2:3*

என்பது அவர் தரும் செய்தி.

முப்புரம் எரித்தபின் அசுரர் மூவரையும் தம் பூதகணத்துள் அமைத்துக் கொண்டதே அப்பன் செய்த ''செம்மை'' யாகும். எனவே அவன் தலையான் எனப் பெறுகிறான். தலைவனின் பண்புகளுள் ஒன்று, ''யாரை எப்படிப் பயன்படுத்திக் கொள்வது'' என்பதுமாகும். மூவசுரர் களை உரியவாறு பயன்கொண்ட பெருமானின் மறக்கருணைத் திறத்தை இது உணர்த்துகிறது.

வலிய ஆட்கொள்வான்

பொருள், ஆற்றல் இவற்றின் குறியீடான அப்பனையும் அம்மையை யும், ''எவ்வுருவம் நின் உருவும் அவள் உருவும்'' என்றும், ''நின்னலாது அவளில்லை அவளலாது நீயில்லை'' என்றும் ஸ்ரீ குமரகுருபரடிகள் போற்றுகிறார். *(சிதம்பரச்செய் .. 68 தாழிசை 5:1;6:1.)*

திருவடியாக விளங்கும் அம்மை, ஐந்தொழில் புரியும் அருட்பண்ணை, முத்தித்தானம். எனவே ''நன்னிற் சிறந்த நின் தாளிணையவை'' என்று திருவடியைப் போற்றுகிறது பரிபாடல் ''திருவடியே சிவமும் சிவலோகமும், செல்கதியும், தஞ்சமும்'' என்பார் திருமூலர்(கூ௩அ)

பந்தயத்தில் வென்றவனைப் பரிசு தேடிவந்தடைவது போல வாழ்வில் பரிபக்குவ முற்றவர்களைத் தேடி வந்து திருவடி சூட்டுவது அவன் வழக்கம்

பரிவாங்கிவர வழிக்கொண்ட மாணிக்கவாசகருக்காகத் திருப்பெருந் துறைக்கு வந்தான், குருந்த மரத்தடியில் காத்துக்கிடந்தான் அவர் வருகைக்காக. வந்ததும் ஈர்த்துத் திருவடி சூட்டி மகிழ்ந்தான்.

எத்தன் ஆகிவந்து இல்புகுந்து எமை
ஆளும் கொண்டுஎம் பணி கொள்வான்
வைத்த மாமலர்ச் சேவடிக்கணம்
சென்னி மன்னி மலருமே
8-சென்னிப்பத்து 4:2:4

என்பார் வாதவூரடிகள்.

இதில் எத்தன் ஆதல், வருதல், புகுதல், கொள்ளுதல், வைத்தல் ஆகிய சொல்லாட்சிகள் அவ்வள்ளலின் வலிய வந்து ஆட்கொள்ளும் இயல்பினைப் பறையறைவன.

அகந்தைக்கு அகப்படான்

தீ; தன்னையடுத்தவற்றைத் தனதாக்குவது, பெருமானும் இத்தகைய வனாதலின் அவனைத் ''தீவண்ணன்'' என்பர். தீயின் ஒளிக்கு அடிமுடி ஏது? தீவண்ணனுக்கும் இவை இல்லை. இச்செய்தியில் தீ என்பது பண்பாகு பெயராய் அதன் ஒளி குறிப்பது.

எண்ணில்பல் கோடி சேவடி; முடிகள்
எண்ணில்பல் கோடி; திண்தோள்கள்
எண்ணில்பல்கோடி
திரு.7.வீழிமிழலை 9:1.2

என்பார் சேந்தனார்.

''அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையை'', ''ஐயா என ஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனை'' அகந்தையால் காணமுயன்ற அயனும் மாலும் காண இயலுமா?

வைத்த பாதங்கள் மாலவன் காண்கிலன்
மலரவன் முடிதேடி
எய்த்து வந்து இழிந்து இன்னமும்
துதிக்கின்றார் எழில்மறை அதனாலே
திரு.கூ.பவளமால்வரை 5:1.2

என்பார் திருவாலியமுதனார். இதில் உள்ள தேடி எய்த்தல், வருதல், இழிதல், (காண) இன்னமும் துதித்தல் என்பன ஆழமான சொல்லாட்சிகள். இதனால் அகந்தைக்கு அகப்படாப் பெருமான் இயல்பறியலாம்.

வேறு வேறு இலர்

இயங்கு திணை நிலைத்திணைப் பொருளாக விளங்குகின்றவன் அப்பன். அப்பன் நீ அம்மைநீ ... இம்முத்தும் நீ என்று போற்றுவார் அப்பரடிகள் திருமூலர்

முத்தின் வயிரத்தின் முந்நீர்ப் பவளத்தின்
தொத்தின் பசும்பொன்னின் தூஒளி
மாணிக்கம்
ஒத்து உயர் அண்டத்து உள்அமர் சோதியை
எத்தன்மை வேறுஎன்று கூறுசெய் வீரே
திருமந்திரம் 2819

என்கிறார்.

(தூஒளி என்பதை முத்து முதலிய ஐந்துக்கும் அடையாக்(குக) முத்து முதலியனவும் அவற்றின் தூஒளியும் பிரித்தற்கு இயலாதன. அதுபோல அண்டம் வேறு அதில் அமர்ந்துள்ள சிவசோதி வேறு என்று பிரித்தற்கியலாது என்பதால், எல்லாப் பொருள்களிலும் தங்கியிருக்கும் அவனைப் பிரித்தற்கு இயலாது என்பது புலப்படுத்துகிறார்.

வேண்டுவார் வேண்டுவதே ஈவான்

''உள்ளியது எய்தல் எளிது'' என்ற திருவள்ளுவர் அது உறுதி என்பதை 'மன்' என்பதால் வலியுறுத்துகிறார். உள்ளியதன் பெருமைக் கேற்ப அதில் ஈடு இன்றியமையாதது என்பதை ''உள்ளியது உள்ளல்'' என்றும், இடைவிடாது உள்ளியது உள்ளல் சற்றுக் கடினமானது (மனப் போக்கின் காரணமாக) என்பதைப் 'பெறின்' என்றும் கூறுகிறார்.

உள்ளியது உள்ளும் நிலையில் நம்மனம் தறிகெட்டு ஓடித்தாவித் திரியலாம். அது கூடவே - கூடாது. ''நீ சதா எதை நினைத்துக் கொண்டிருக் கிறாயோ அதுவாகவே ஆகிறாய்; அதனை அடைகிறாய்'' என்பது உளவியலார் முடிபு என்று முன்

கூறினோம். காரியம் கைகூட்டு முறையை - உளவியல் முறையை ஆன்மீக நெறியில் வைத்து அன்றே கூறுகிறார் நக்கீரதேவ நாயனார்.

கள்ளம் கைவிட்டு உள்ளம் உருகிக்
கலந்து கசிந்துதண் கழலிணை அவையே
நினைந்திட ஆங்கே தோன்றும் நிமலனை
-திரு.11.கோபப்பிரசாதம் 62.64

கள்ளமாவது வினைவேறு உளம் வேறு பட்ட நிலை; உருகுதலாவது எண்ணியது அடைய ஏக்கறுதல்; கலத்தலாவது அதனுடன் ஒன்றுதல்; கசிதலாவது உள்ளும் புறமும் ஒன்றாதல். அவையே நினைதலாவது மனம் மொழியால் அதனுடன் ஒன்றுபடுதல். நக்கீரர் கூறும் இந்நிலைகள், உலகியல் வெற்றி கருதும் இன்றைய உளவியலாருக்கும் ஒத்தன.

இங்ஙனம் நிற்கும் ஒருவனுக்கு உலகியற் பொருள்களை மட்டுமின்றி அப்பன் தன்னையும் வேண்டியவாறே ஈவான் என்பது ஆன்மீகத்திற்கும் உளவியலுக்கும் ஒத்ததாகும்.

மிக்குச் சோதியான்

ஒருவருடைய இயல்பை திறனை வளர்க்கவும் வெளிப்படுத்தவும், பிறர் அறியச் செய்யவும் உதவுவது சோதனை. ஆனால் அச்சோதனை. ''நுனிக் கொம்பர் ஏறிய'' அளவுக்கு அமையலாமே தவிர ''அஃது இறந்து ஊக்குவதாதல் கூடாது. ஆகவேதான் திருஞான சம்பந்தரும் ''மிக்குச் சோதிக்க வேண்டா'' என்றார்.

சோதனையில் சுடச்சுடரும் பொன்னாவாரும் உண்டு; கருகி நீறாவாரும் உண்டு நம் அருளாளர்கள் முதல் நிலையினர்.

திண்ணார் - கண்ணப்பர் வரலாறு அனைவரும் அறிந்ததே. மற்றைக்கண் குருதிபாயக் கண்ட திண்ணனார், பெருமானின் திருக்கண்ணில் இடக்கால் ஊன்றி உள நிறைவிருப்பினோடும் ஒரு தனிப் பகழி வாங்கி தன் கண்ணில் ஊன்றினர். பெருமான் நிலை என்ன?

தரித்திலர் தேவதேவர்

திரு.12; கண்ணப்...182:4

என்ன செய்தார்? ''நில்லு கண்ணப்ப நில்லு கண்ணப்ப என் அன்புடைத் தோன்றல் நில்லு கண்ணப்ப'' என்று கூறியதுடன் அமையாது, ''அன்னவன் தன் கை அம்பொடும் அகப்படப் பிடித்து'' நிறுத்தினார். என்ன பரிசு? மாறிலாய் எண் வலத்தில் நிற்க'' என்ற மன்னு பேரருள்.

இங்கு, கண்ணப்பர் மற்றொருக் கண் தோண்ட முற்பட்டது வரை'' நுனிக் கொம்பர் ஏறியநிலை; பெருமான் தடுத்து ஆட்கொண்டது ''மிக்குச் சோதியா நிலை'' என்க.

பெருமானின் அளக்கலாகா இயல்புகளுள் துளியினுள் துளி இவை. எஞ்சிய அமுதத்தேனும் பருகி இன்புறுவோம்.



திருமுறைகளில் பாச இயல்பு

திரு.கு.வைத்தியநாதன்,
இயக்குநர், திருவாவடுதுறை
ஆதீன சைவசித்தாந்த நேர்முகப் பயிற்சி மையம்,
திருவிடைமருதூர் – 612 104.

தோற்றுவாய்

பாசம் என்னும் சொல், பெரும் பாலும் ஆணவ மலத்தைக் குறிக்கும். தொடர்பு பற்றி, ஆணவம், கன்மம், மாயை மூன்றும் பாசம் எனப்படும். பாச இயல்பு பற்றிய செய்திகள், பன்னிரு திருமுறைகளில் ஆயிரக் கணக்கில் உள்ளன. அவற்றுள் ஒரு சிலவற்றை இங்குச் சிந்திக்கலாம்.

பாச இயல்பு

உயிர்க்குத் தன் முனைப்பையும் அறியாமையையும் ஏற்படுத்துவது ஆணவ மலம். உயிர்க்கு இன்பத் துன்ப அனுபவங்களைக் கொடுத்து, பட்டறிவை தருவது கன்மமலம். பிறவி நிலையில் உயிர்க்குள்ள அறியாமையை ஓரளவு போக்குவது மாயாமலம்.

இவ்வாறு மும்மலங்களின் இயல்பைத் திருமுறைகள் பல்வேறு நிலைகளில் வைத்துத் தெளிவுறுத்து கின்றன. சம்பந்தர், அப்பர், சுந்தரர், மணிவாசகர் ஆகிய நால்வர் பெருமக்கள் அருளிச் செய்த திருமுறை களில், இதனை மிகுதியாகக் காணலாம்.

நால்வர் திருமுறைகளில் பாச இயல்பு

சம்பந்தப் பெருமான் பதிகத்தில் உள்ள (8) ஆம் பாட்டு, ஆணவ மல இயல்பைக் காட்டும். (9) ஆம் பாட்டு கன்ம மல இயல்பைக் குறிக்கும். (10)ஆம் பாட்டு மாயா மல இயல்பைக் காட்டும்.

அப்பரடிகள் பதிகத்தின் திருக் கடைக்காப்பு, தன் முனைப்பு உடைய இராவணனைக் கூறுகிறது. இஃது ஆணவ மல இயல்பைக் குறிக்கும்.

சுந்தரர் பெருமான், இறைவன் திருவருளை வேண்டிப் பெற்று, உலக போகங்கள் பலவற்றை வாழ்நாள் முழுவதும் அனுபவித்தார். திருக் கேதாரப் பதிகத்தில், "வாழ்வாவது மாயம் ; இது மண்ணாவது திண்ணம்" (7-78-1) என்றருளிச் செய்துள்ளார். இது மாயாமல இயல்பைக் குறிக்கும்.

மணிவாசகப் பெருந்தகை, "மயக்கம் ஆயதோர் மும்மலப் பழவல் வினைக்குள் அழுந்தவும்" (474) என்று அருளிச் செய்திருப்பது மும்மல வாசனையைக் குறிக்கும். அஞ்செழுத்து ஒன்றே மலவாசனையைப் போக்கும். இதனை, "நானேயோ தவம் செய்தேன், சிவாய நம எனப் பெற்றேன்" - (553) என்றருளிச் செய்தமையால் புலனாகிறது.

சமயகுரவர் நால்வரின் அவதார நோக்கம்

பொதுவாகச் சைவ சமய நெறிகள் ஆகிய சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் வழியில் வாழ்ந்து காட்டவே அப்பர், சம்பந்தர், சுந்தரர், மணிவாசகர் நால்வரும் முறையே அவதரித்தனர் என்று கூறுவர்.

"பாச இயல்பு" அடிப்படையில் வைத்துச் சிந்திக்கும் பொழுது அவர்களது அவ்தார நோக்கம் வருமாறு புலப்படுகிறது.

ஆணவ மலப் பற்றை அறுப்பதற்கு அப்பரடிகள் தேவாரமும், கன்மலப் பற்றை நீக்குதற்குச் சம்பந்தப் பெருமானின் திருக்கடைக்காப்பும், மாயாமலப் பற்றைப் போக்குவதற்குச் சுந்தரர் பெருமான் திருப்பாட்டும் பெரிதும் உதவுகின்றன. திருவாசகப் படனம் மும்மல வாசனையைப் போக்கு கிறது அனுபவ பூர்வமான உண்மை.

ஆகவே, உயிர்க்குள்ள ஆணவம் கன்மம் மாயை என்னும் மும்மலங் களையும் போக்குவதற்கே, அப்பர், சம்பந்தர், சுந்தரர் மூவரும் முறையே அவதரித்தனர் என்பது போதரும். மும்மல வாசனையை ஆன்மாவிட மிருந்து அகற்றவே, மணிவாசகர் அவதரித்தார் என்பது தெளிவாகும்.

பிற திருமுறைகள்

(9) ஆம் திருமுறையில் இடம் பெறும் திருவிசைப்பா, திருப்பல்லாண்டு இரண்டும் இறையருளைப் புகழ்ந்து பேசுகின்றன. சார்ந்ததன் வண்ணமாம் தன்மை பற்றி, இவற்றைப் பயில்வதில், மும்மலப்பற்று நீங்கும்.

10) ஆம் திருமுறை ஆகிய திருமந்திரம், தமிழில் செய்யப்பட்ட சிவாகமமே ஆகும். ஆகவே இந்நூலில் இறை, உயிர் மட்டுமின்றி, ஆணவம், கன்மம், மாயை பற்றிய செய்திகள் பல உள்ளன.

(11) ஆம் திருமுறையை அருளிச் செய்த ஆசிரியன்மார் அனைவரும் இறைவன் பெருமையையே புகழ்ந்து பாடிப் பரவியுள்ளனர். (9)ஆம் திருமுறையில் சொன்ன செய்தி இதற்கும் பொருந்தும்.

(12) ஆம் திருமுறை ஆகிய பெரியபுராணம் முழுவதும் சிவனடியார் களின் வரலாறு பற்றிப் பேசுகிறது. குரு, லிங்க சங்கம வழிபாடு, முறையே ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களைப் போக்கும். பெரிய புராணப் பயிற்சி இப்பேற்றினைச் செய்கிறது.

நிறைவுரை

சீர்-வளர்-சீர் குரு மகா சன்னிதானம் அவர்கள் திருவடி மலர்களை, நன்றியுணர்வுடன் நினைந்து போற்றி, இக்கட்டுரையை நிறைவு செய்கிறேன்.



திருமுறைகளில் திருவிழாக்கள்

முனைவர். வே.சீதாலெட்சுமி,
இணைப்பேராசிரியர் (தமிழ்)
எஸ்.கே.எஸ்.எஸ். கலைக்கல்லூரி, திருப்பனந்தாள்.

(இக்கட்டுரை திருமுறைகளில் குறிப்பிடப்படும் மாத வருட விழாக்கள், விழாக்காலத்து நடைபெறும் விழாச் சிறப்புகள் - மக்கள் பங்களிப்பு - விழாக்களால் மக்கள் அடையும் பயன் யாவும் விரிவாக விளக்கமாக எடுத்துக் காட்டுகிறது.)

மனித வாழ்வை மேம்படுத்தும் அறச்செயல்கள், வழிபாட்டு முறைகள், பழக்கவழக்கங்கள், பண்பாடுகள் ஆகியவற்றை உணர்த்தும் வகையில் உலகெங்கிலும் விழாக்கள் கொண்டாடப்படுகின்றன. தமிழகத்தில் 2000 ஆண்டுகட்கு முன்பிருந்து இன்றுவரை நடைபெறுகின்றன. விழாக்கள் சமயச் சார்புடையவை, தொழிற் சார்புடையவை என்பதாம். கோயில் விழாக்கள் ஆகம, வேத விதிகட்கு உட்பட்டும், விழாவில் கூத்து, நடனம், பண், இசை, பரதம் முதலாய கலைகளும், கலைஞர்களும் போற்றப்பட்டனர். பிறந்தார் உறும் பேரின்பம் வாழ்நாளை பயனுள்ளதாக்கி, அதாவது நாள் மற்றும் சிறப்பு வழிபாடும் செய்தல் வேண்டும். கோயில்களின் சிறப்பு வழிபாட்டை, ''மேவிய சிறப்பின் ஏனோர் பழமைய'' என்றார் தொல்காப்பியர். விழாக்கள், மக்கள் வாழ்வை ஒருமைப்பாடு மிக்கதாகவும், மனம், செயல், தூய்மை, ஈகை, அறம் ஆகியவற்றை மேம்படுத்தவும் செய்தன. ''விழா எனும் திறந்தவாசல் வழியேதான் நம்நாட்டு மக்களை அறிந்து கொள்ள முடியும்'' என்றார் தாகூர்.

திருமுறையாசிரியர்கள் திரு விழாக்களின் மேம்பாட்டையும் குறிப்பிட்டுள்ளனர். பன்னிரு திருமுறை களிலும் மாத, வருட விழாக்களையும் விழாக்காலத்து தேரோடும் வீதிகளும், விழாக்கால கொடிகளும், ஓசைகள், ஒலிகள், இசைக்கருவிகள், தொண்டர், மாதர் பஜனைகள் யாவற்றையும் குறிப்பிட்டுள்ளார்கள்.

கோலவிழா, சீர்விழா, கொடி கொள்விழா, பலிவிழா, கண்ணார்விழா செம்மைவிழா, தேர் கொள்வீதி உலா, நல்விழா, பொற்றாம்புவிழா, முழவார் விழா, எடுக்கும் விழா, கலிவிழா, அங்கணி விழா, அணி விழா எனும் சொற்றொடர்களால் விழா குறிப்பிடப் படுகின்றது.

விழாவும் வீதிகளும்

தேர் ஓடுவதற்கென்றே வீதிகள் பெரியனவாக இருந்தன. 'தேரூரும் நெடு வீதித்திருப்புத்தூர்'', தேரூரும் நெடுவீதி பற்றிநின்று'' திருவாரூர்த் தேர் 'ஆழித்தேர்' எனப்பட்டது. வேதங் களாகிய குதிரைகள் தேரை இழுத்தன. 'ஆழித்தேர் வித்தகனை நான்கண்ட தாரூரே' கைவல்ல தொழிலாளர்கள்,

இறைவன் இடப வாகனத்தில் எழுந்தருளும்பொழுது தெருவில் அலங்கரித்தனர். அவர்தம் கைத்திறனால் தெருவே அழகுபெற்றது. தெருவில் விதானங்கள், தோரணங்கள் முத்துத் தாமங்கள் தொங்கவிடப்பட்டன.

விழாக்களில் கொடிகள்

கோயில்களில் வெண்மையான கொடி ஏற்றப்பட்டு விழா தொடங்கியது. ''கொடியணி விழுவதோவா கோடிகாவுடைய கோவே'' எனவும், தேரில் உலாவரும் கடவுள் முன்பு கொடி ஏந்திச் சென்றனர் 'விழவினில் எடுத்த வெண் கொடி மிடைந்து', ''கொடிகள் ஓங்கிக் குலவும் விழவார் திலதைப்பதி'' எனவும் குறிப்பிட்டனர்.

விழாக்களில் ஓசைகள், ஒலிகள், இசைக்கருவிகள்

விழாக்களின் ஓசை ஒலியறாத் தண்பொழில், ''பறையாரொலி செய் பனையூரே'', ''தேரார்வீதி முழவார் விழாவின் ஒலியும், 'குழலும் மொந்தை விழாவொலி'' இடிகொள் முழவோசை, ' வீளைக்குரலும், விளிச்சங்கொலியும் விழாவின் ஒலியோவா. இவையன்றி கல்லவடம், வேதஒலி, கீதஒலி, பண்ணொலி, முரசொலி ஒலித்தன.

விழாவில் அலங்காரச் சின்னங்கள் எடுத்துவரல்

முத்துவிதானத் தாமரைகள், மணியிலான பொற்கவரி, கொடிகள், சோதி தாமங்கள் முதலானவை ஆகும்.

விழாவில் தொண்டர் பசனை

நான்மறைவல்லார், பதினெண் கணங்கள், அந்தணர்கள், தொண்டர்கள், மாந்தர்கள் பசனை செய்தனர். 'விரவி நாளும் விடைப்பொலி தொண்டர்வந்து வியந்து பண்செயக் குரவமாரும் நீழற்'', ''தொண்டரெலாம் துதிசெய்நின்ற தொழிலனே''.

விழாவில் மாதர் பஜனை, நடனம், கவிபாடி பரிசுபெறல்

மாதர் தெருவில் பஜனையை ''கொந்தளையும் குழலார் விழவிற் கூட்டமிடையே சேரும் வீதி'',

காந்தார இசையமைத்து காரிகையார்
பண்பாடத்
தேந்தோமன்று அரங்கேறிச்சேயிழையார்
நடமாடும் திருவையாறே

மாந்தர்கள் கவிபாடக் கேட்ட செல்வந்தர்கள் பரிசு நல்கினர். இதனை,

மாதர்விழா சொற்கவிபாட நிதானநல்கப் பற்றி
கையினார் வாழுமாவூர்'',

கோலவிழா அரங்கேறிக் கொடியிடை
மாதர்கள்
மைந்தரோடும் பாலெனவே பொழிந்
தேத்தும் ஆவூர் பசுபதியீச்சரமே.

மாதவிழாக்கள்

தமிழ் வருடத்தின் பன்னிரெண்டு மாதங்களிலும் மயிலாப்பூர் தலத்தில் விழாக்கள் கொண்டாடப்பட்டன. சம்பந்தர், எலும்பும் சாம்பலுமாய்க் குடத்துள் இருந்த பூம்பாவையை உயிர்ப்பிக்க, விழாக்களின் சிறப்பைக் கூறி அவற்றைக் காண வருமாறு உளவியல் நோக்கில் உயிரும், உணர்வும் நல்கினார்.

சித்திரை அட்டமிவிழா

சித்திரை மாதம் அட்டமி திதியில் நிகழ்த்தப்பட்டது. இவ்விழாவில் பதினெண்கணத்தாரும் பதிகம்பாடி கபாலீச்சரரை வேண்டினர். கண்பெற்ற

பயன் இவ்விழாக்காணுதலே, 'பண்ணார் பதினெண் கங்கடம் மட்டமிநாள் கண்ணாரக் காணாதே போதியோ பூம்பாவாய்' என்றார் சம்பந்தர். அட்டமி திதிக்குமுன் ஏழுநாளும் சிவபெருமான் வீதியுலா செய்து மக்களை மகிழ்விப்பார். இவ்வேழு நாட்களிலும் குருவிற்கு தொண்டு செய்யும் பிரமனும், திருமாலும் துணை தேவர்களும், வந்து வணங்கினர்.

ஆத்தமாம் அயனும் மாலும்
அன்றி மற்றொழிந்ததேவர்
மூர்த்த மெம்பெருமா னென்று
தொழுது தோத்திரங்கள் சொல்லத்
தீருத்தமா மட்டமீமுன்
சீருடை யேழு நாளும்
கூத்தராய வீடு போந்தான்
குறுக்கை வீரட்டனாரே

ஆக அட்டமி விழா திருமயிலை, குறுக்கை வீரட்டத் தலங்களில் சிறப்பாக நடந்துள்ளன. புகழ்த்துணை நாயனார் நாட்டில், ''பெருமா நவமி முன்னாள்/ மங்கலவிழவுகண்டு'' என அட்டமி விழாவைச் சேக்கிழார் குறிப்பிடுகின்றார்.

வைகாசி பொற்றாப்பு விழா

அடிமுடிகாணாது அழலுருவாய் நின்ற ஈசன் தனது திருவடி காட்டி அம்மையப்பராய் அமர்ந்து பொன்னூசல் ஆடும் காட்சியே திருவிழா ஆகும். வேத ஆகமங்களை கலைகளைக் கற்று வல்லார் கபாலீச்சரம் பணிந்தனர். ''பொற்றாப்பு காணாதே போதியோ பூம்பாவாய்'' என்றார். இன்று இவ்விழா விழாநிகழ்வுகளில் ஒருநாள் விழாவாக கொண்டாடப்படுகிறது.

ஆனி, ஆடி, ஆவணி - பெருஞ்சாந்தி விழா

ஆண்டுதோறும் கும்பாபிடேகம் செய்தல் இயலாது. அதற்கு ஈடாக ஆண்டு தோறும் செய்வது பெருஞ்சாந்தி அல்லது பவித்திரோற்சவம் என்பதாம். இது மூன்று மாதங்களிலும் நடைபெறுவது உண்டு. ஆடி முற்பக்கத்து சதுர்த்தசியிலும், ஆவணி புரட்டாசிகளின் இருபக்கத்திலும் வரும் எட்டு, பன்னிரெண்டு நாட்களிலும் பவித்திரம் சார்தல் வேண்டும் என சோமசம்பு பத்ததி குறிப்பிடுகிறது.

புரட்டாசி - அட்டிடல் விழா

மக்கள் சிவனடியார்களைச் சிவனாகவே கருதி, அவர்க்கு தவசிட்டு பொற்பாதங்கள் விளக்கி, தூபதீபங்கள் காட்டி அறுசுவை அமுதளித்து போற்றித் துதித்தனர். மனிதப்பிறவியின் பேறென்பதே மதிசூடும் அண்ணலடியார் தாம் அமுது செய்வித்தும், கண்ணினால் அவர்தம் நல்விழாப் பொலிவு கண்டார் தலும் ஆகும். மயிலையில், உருத்திர பல்கணத்தார்க்கும் உணவு பரிமாறும் விழா பூரட்டாதி நாளில் புரட்டாசித் திங்களில் நிகழ்ந்தது. ''ஒட்டிட்ட பண்பின் உருத்திர பல்கணத்தார்க் கட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய்'' என்றார் சம்பந்தர்.

ஐப்பசி ஓணவிழா

இவ்விழா ஐப்பசி ஓணநாளில் கொடியேற்றம் செய்யப்பட்டு கார்த்திகையில் தீர்த்தவாரி நிகழ்த்தப் பட்டது. ஓணம் திருமாலுக்குரிய நாள். தனக்குரிய ஓணநாளில் இராமர் இத் தலத்தில் சிவனை பூசித்து அவர்க்கு பிரம்மோற்சவ விழா செய்வித்தது

சிறப்பாகும். ''ஐப்பசி ஓணவிழவு மருந்தவர்கள், திருமால் துய்ப்பனவும் காணாதே போதியோ பூம்பாவாய்'' இது சிவவிஷ்ணு ஒன்றாந்தன்மை.

கார்த்திகை விளக்கீடு விழா

தொல்காப்பியர் காலம் முதல் இன்றுவரை நடைபெறுகிறது. இள் மகளிர் கார்த்திகை மாதம் முழு மதியானது அறுமீனைச் சேரும் நாளின் இராக்காலத்து நடுவிலே ஊரில் தெரு வெங்கும் விளக்குகளைத் தீபமேற்றி வைத்து மலர்மாலைகளைத் தொங்க விட்டுக் கொண்டாடினர். ''மதி நிறைந்து அறுமீன் சேரும் அகலிருள் நடுநாள் மருகு விளக்குறுத்து'' (அகம்) ''தேயமார் ஒளிகாளலாந் சிவனுருத் தேசாதன்னார்'' (இ.சித்தி) துபாய்ஸ் என்பார், ''கார்த்திகைத் தீபத்தைத் தீபஒளி'' (Frest of Lamps) என்றார். ''கார்த்திகை நாள் தளத்தேந்திள முலையார் தையலார் கொண்டாடும் விளக்கீடு காணாதே போதியோ பூம்பாவாய்'' என்றார் சம்பந்தர். இன்று பௌர்ணமியில் திருவண்ணாமலையில் கிரிவலம் வருவதும் கார்த்திகை நாள் சர்வ சிவாலயங்களிலும் விளக்கீடு விழாவாக வும் அண்ணாமலையில் மலைமேல் ஜோதி தரிசனமும் உள்ளன.

மார்கழி திருவாதிரை

ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பு சிவனது விழாவாக திகழ்ந்தது. 'ஆதிரை விரிநூல் அந்தணர் விழா தொடங்க'' (ச.இல.) மார்கழியில் வரும் திருவாதிரையில் கதிரவன் புனர்பூசத்தில் நிற்கும் நாள் இவ்விழா நடைபெற்றது. கி.பி.ஏழாம் நூற்றாண்டில் ஆதிரைவிழா ஆரூரில் சிறப்பாக நடந்ததை அப்பர் 'திருவாதிரைப் பதிகம்' என்றே பாடியுள்ளார். சிவாகம புராணங்களும் இவ்விழாவைச் சிறப்பிக்கின்றன. 'ஆருத்ரா' என்ற வடசொல்லுக்கு செந்நிறம் பொருள் தமிழில் 'செம்மீன்' அதாவது அக்னி சொரூபமாகிய சிவசோதியைக் காட்டுகிறது. 'ஆரூர்ப் பெருமான் இந்நாளில் திருவடிக்காட்சி தருவது வழக்கம். 'பாததரிசனம்' எனப்பெறும். 'ஆதிரைநாள் காணாதே போதியோ பூம்பாவாய்' என்றார் சம்பந்தர். நரசிங்கமுனையரையர் ஆதிரை நாளில் சிறப்பு வழிபாடுகள் செய்த பின்பு அடியார்களை வழிபட்டு, அவர்கட்கு நூறு பொற்காசுகளடங்கிய பொற்கிழியை அளித்தார்.

தைப்பூசம்

தைமாத பௌர்ணமியில் பூச நட்சத்திரத்தில் இவ்விழா நடைபெறு கிறது. இந்நாள் தேவகுரு பிரகஸ்பதியின் நினைவுநாள் இவ்விழாவுக்கு வழங்கிய நிலக்கொடையை திருவிடைமருதூர் கோயில் கல்வெட்டு காட்டுகிறது. இந்நாள் விழாவை ஒள்ளிய அணிகல மணிந்த இளமகளிர் கபாலீச்சரனுக்கு நெய்யொழுகும் சிறந்த பொங்கல் படைத்து வழிபாடு செய்தனர். சிவனடி யார்கட்கும், முதியோர்கட்கும் உண வளித்துப் போற்றினர். 'நெய்ப்பூச மொண்புழுக்க னேரிழையார் கொண்டாடும் தைப்பூசங் காணாதே போதியோ பூம்பாவாய்'' என்றார் சம்பந்தர்.

தைப்பூச நாளில் இடைமருதீசர் காவிரியில் சென்று தீர்த்தங் கொள்வர் அக்காலத்து விரதமிக்க தவத்தவர், வானவர், ஏனோர், மண்ணவருடன் வந்து கூடி காவிரித்துறையாடி மருந்

தீசரை வழிபட்டனர். 'மறைவல்ல அந்தணர் வேதங்கள் பாடித் துதித்தனர். இதனைச் சம்பந்தர்.

பூசம் புகுந்தாடிப் பொலிந் தழகாய
ஈசனுறைகின்ற விடை மருதீதோ

வருந்திய மாதவத் தோர்
வானோரேனோர் வந்தீண்டிப்
பொருந்திய தைப்பூசமாடி
யுலகம் பொலி வெய்த

எனவும்,

தேசம் புகுந்தீண்டி ஓர் செம்மை
உடைத்தாய்ப்
பூசம் நாம் புகுதும் புனலாடவே

என அப்பரடிகளும் பாடியுள்ளமை நோக்கத்தக்கன.

மாசிக் கடலாட்டுவிழா

மாசிமாத மக நட்சத்திரத்தில் கபாலீச்சரரின் கடலாடுவிழா நிகழ்ந்துள்ளது. ''மாசிக் கடலாட்டுக் கண்டார், கபாலீச்சரமமர்ந்தான்' எனவும், பூம்பாவை காணாமல் போகாதே எனவும் சம்பந்தர் பாடுகிறார். அப்பரடிகளும் ''ஓங்கு மாகடல் ஓத நீராடிலென்'' என்றார். குருவானது சிம்மராசியில் வரும் மாசிமாத மக நட்சத்திரத்தன்று கும்பகோணத்தில் ''மகநீராட்டு நிகழ்ந்தது'' இவ்விழா ஆண்டுக் கொரு முறை, பன்னிராண்டுக்கொருமுறை, கசச ஆண்டுக்கொருமுறையென நீராடல் விழா நிகழுகின்றது. இன்னும் ஆடி, தை அமாவாசைகளில் மக்கள் கடலாட்டு செய்கின்றனர்.

பங்குனி உத்திர நாள் விழா

சந்திரன் உத்திர நட்சத்திரத்தில் இருப்பதால் இவ்விழாவிற்கு இப்பெயர் வந்தது. பங்குனியில் முழுநிலா நாளில் கொண்டாடப்பட்டது. இது 'பலிவிழா' எனப்பட்டது. அதாவது எட்டு திசைகளிலும் உருத்திரபலி கொடுக்கப் பட்டது. இசை, வேதம், கீதம் முழக்கப் பட்டன. ஆரூர்ப்பெருமான் திருவாதிரை விழா நாள் போல, இந்நாளிலும் பக்தர்கட்கு பாததரிசனம் தருவார் 'உத்திரபாத தரிசனம்' எனப் பட்டது. ஒற்றியூர் இறைவன் தேரூர்ந்து வந்து தீர்த்தமாடியதை, ''ஒத்தமைந்த யுத்திரநாள் தீர்த்தமாக ஒளிதிகழும் ஒற்றியூரே'' என்பதால் அறியலாம். சேக்கிழார் இந்நாள் விழாவில் ஆரூர்ப் பெருமான் தேரில் மணலி எனும் ஊருக்கு எழுந்தருள, அக்காட்சியை யாவரும் பேதமின்றி உடனின்று வழிபடுவர் என்றார். ''பங்குனியுத்தர மாந்திருநாள்'' ''தேவர் பெருமான் எழுச்சி மணலிக் கொருநாள் எழுந்தருள்'' என்பதாகும்.

வசந்தவிழா

ஆரூரில் வசந்த விழா சிறப்பாக நடைபெற்றது. அவ்விழாவில் பரவை யார் நடனமும், சிவனடியார்கட்கும், பக்தர்கள், ஏனையோர்க்கும் பரவையார் அமுதளித்தமையையும் பெரியபுராணம் சுட்டுகின்றது. இவ்விழாவில் இறைவன் வீதியுலா வருவதுண்டு.

திருவாரூர் அணிவீதி அழகரவர்
மங்கலநாள் வசந்தமெதிர் கொண்டருள

என்றார் சேக்கிழார்,

ஏழாந்திருவிழா

விழாக்கள் யாவும் ஏழு நாட்களிலேயே முடிவுற்றன. இவ் விழாவில் கலந்துகொள்ள வானவர், தானவர், இமையோர் வந்தனர். ஏழாந் திருவிழாவில் இறைவன் தேரில் எழுந் தருளி வீதியுலாப் போந்தனர்.

''இருக்கைய தருக்கன் முதலான விமையோர்குழுமி யேழ் விழா வினிற் றருக்குல நெருக்கு மலி ....''

''கண்ணார் விழவிற் கடிவீதிகள் தோறும்
விண்ணோரும் வந்திறைஞ்சும்
விடைவாயோ''

எனச் சம்பந்தர் குறிப்பிட்டுள்ளார்.

புனித நீராடல் விழா

மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றும் சிறப்பானவை. மாந்தர்க்கு மூச்சுப் போன்றவை. தீர்த்தங்கள் அகப் புறத் தூய்மைகள் செய்வதுடன், வினைகள் சாபங்களை நீக்க வல்லன. முக்கிய ஆறுகள், குளங்கள், கடல்களில் நீராடி மக்கள் புண்ணியப் பேற்றைப் பெற்றுள்ளனர். இதனை அப்பரடிகள் தமது தேவாரத்தில் குறிப்பிடுகிறார்.

கங்கையாடிலென் காவிரியாடிலென்
கொங்குதண்குமரித்துறை யாடிலென்
ஒங்குமாகடல் ஓத நீராடிலென்

என்று குறிப்பிட்டுள்ளார். இன்னும் மயிலாடுதுறையில் காவிரியில் ஐப்பசி மாதம் முழுவதும் அதிகாலை 'துலாஸ் நானம்'' செய்து மக்கள் பயன் பெறுவர். ஐப்பசி மாத கடைசி நாள் முழுக்கிற்கு ''கடைமுழுக்கு''; என்பது பெயர். இந்நாளில் பஞ்சமூர்த்திகள் காவிரித் துறைக்கு எழுந்தருளி தீர்த்தம் தருவர். மக்களும் அப்பொழுது நீராடி பேரின்பம் உறுவர். திருமடத்தைச் சார்ந்த சன்னிதானங்களும், தம்பிரான் சுவாமிகளும் அன்று முழுக்குச் செய்து மக்கட்கு நல்லாசி வழங்குவார்கள். பஞ்சமூர்த்திகள் உலாவர, ''பூவார் குழலார் அகில்கொண்டு புகைப்ப/ஓவாதடியார்கள் அடியுள் குளிர்ந்தேத்துவர்'' என்று வணங்கியதை அறியலாம்.

பூந்தொடை விழா

வில் வீரர்கள் தம் கலைப்பயிற்யைத் தொடங்கும் முதல்நாள் தம் தெய்வத்தை வணங்கி விழா வெடுத்து பயிற்சியை மேற்கொண்டனர். அகநானூறு, ''வார்கழல்பொலிந்த வன்கண் மறவர், பூந்தொடை விழவின்'' என்கிறது. கண்ணப்பர் சிலை பயிலுவதற்காக தந்தை நாகன் பூந்தொடை விழா அல்லது வில்விழா கொண்டாடினான். இதனைச் சேக்கிழார், ''பல்பெருங்கிளைஞர் போற்றப் பராய்க்கடன் பலவும் செய்து வில்விழா எடுக்க என்று'' குறிப்பிடுகின்றார்.

ஆண்டுவிழாக்கள் என்பது பவித்ரோற்சவம் ஆகும். பன்னிரு ஆண்டுகட்கொருமுறை கும்பாபிடேகமும், மாசிமகம் (மகாமகம்) நீராடல் விழாவும் பெரிதாக இன்றும் நிகழ்த்தப் பட்டு வருகின்றன.

அமாவாசை, பௌர்ணமி விழாக்கள்

இவ்விழா பருவநாள் விழா எனக் கொண்டாடப்பட்டது. பருவம் என்பது அமாவாசை, பௌர்ணமியைக் குறித்தன. தென்குடித் திட்டையில் இவ்விழா கொண்டாடப் பட்டது.

பருவநாள் விழவொடும் பாடலோடாடலும்
திருவிளான்மிகு புகழ்த்
தென்குடித்திட்டையே.

பயன்

விழாக்களால் மக்களது மனதில் மகிழ்வும், அறச்செயல்களும் பெருகின. இறைவழிபாடு மாந்தரை உயர்ந்த ஒழுக்க நலமுடையவராக ஆக்கியது. ஒருமைப்பாட்டுணர்வு தோன்றியது. பக்தி என்ற ஒன்றுதான் இவ்வொருமைப்

பாட்டுணர்வை வளர்க்கும் சாதனம் ஆகும். அன்பும், அருள் நெறியும் மக்களிடத்து வளர்ந்தன. பண்பாடும், நாகரிகமும் போற்றப்பட்டன. ஒவ்வொரு திருவிழாவும் ஓர் உயர்ந்த கருத்தை, அறிவியல் மேம்பாட்டைத் தந்தன. திருவிழாக்கள் யாவும் நட்சத்திரங்களின் அடிப்படையில் இறையுணர்வு பெறத் தூண்டின. எல்லோரும் எல்லோருக்கும் உதவும் மனப்பான்மையும், பக்திமையுணர்வும் பெருகின. இறையுணர்வு மேலிடும்பொழுது தீய உணர்வுகள் தாமே விலகுவது உண்மையாகும்.

திருவிழாக்களின் மேம்பாட்டினை சைவத்திருமுறைகள் இறையின் ஞான ஒளியைப் பெறுவதற்குரிய வாயிலாக நின்றமையை உணர்த்தியுள்ளன. அவ்வருளாளர்கள் வழிநின்று நாமும் உய்வோமாக!

வாழ்க! வையகம்!

வாழ்க! சைவநீதி!!



நம்பனின் நல்லதோழர் நம்பியாரூர் வம்பால் தடுத்தாண்டு கொண்ட தகைமையாளர்.



தேனினும் இனிய திருவாசகம் தந்திட்ட வாதவூராளி மணிவாசகப் பெருமான்.



திருமுறைத் தலங்களின் தீர்த்தச் சிறப்பு

புலவர் கோ.சுப்பிரமணியனார்
''ஐயாறப்பர் அருளகம்'' 222 தெற்குவீதி, திருவையாறு.

(இக்கட்டுரை பல்வேறு திருத்தலத்தில் அமைந்துள்ள தீர்த்தச் சிறப்பை எடுத்துக் காட்டுவதோடு ஆறு, குளம், கடல், கிணறு, அருவி இவைகள் தீர்த்தமாக எவ்வெவ் தலங்களில் காணப்படுகிறது என்பதை திருமுறை வழிநின்று விளக்குகிறது.)

உலகெலாம் உணர்ந்து ஓதற்கரிய சிவபரம்பொருளும் செந்தமிழும் ஒன்றே, வேறு வேறல்ல. சிவத்திற்குரிய ஆக்கல், அளித்தல், அழித்தல், அருளல், மறைத்தல் ஆகிய ஐம்பேராற்றலும் அருந்தமிழுக்குமுண்டு. இதனை சைவமும் - தமிழும் காக்கத் தோன்றிய நம் ஆசாரியப் பெருமக்களின் திருமுறை வழிக் கண்டுணரலாம்.

பிறவிப்பயன்

இனித்தமுடைய எடுத்த பொற்
பாதமும் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும்
வேண்டுவதே இந்த மானிலத்தே

என்பார் நாவுக்கரசு பெருமான். கிடைத்தற்கரிய மானிடப் பிறவியின் வழிகாட்டிகளாக திருமுறை தந்த அருளாளப் பெருமக்கள் உள்ளனர்.

தலயாத்திரை

அவர்கள் நடந்து சென்ற திருத்தலங்கள் யாவும் சிறப்பு வாய்ந்தவை இதனை அவரவர் தம் திருமுறைப் பாடல்கள் மூலம் யாம் முறையாக தலங்களை வழிபட வழிகாட்டிச் சென்றுள்ளனர். அவை தாம் மூர்த்தச் சிறப்பு, தலச்சிறப்பு, தீர்த்தச் சிறப்பு ஆகியவை இதனை

''மூர்த்தி, தலம் தீர்த்தமுறையாய்
வணங்கியோர்க்கு
வார்த்தை சொல வாய்க்கும் சற்குருவே''

என தாயுமான அடிகள் அருமையாக எடுத்துக் காட்டியுள்ளார். அம்முறையில் ''தீர்த்தச்சிறப்பு'' தலைமை சான்றது என்பதை அவரவர் தம் திருமுறைப் பாடல்கள் வழிக் காண்போம்.

தீர்த்தம் என்று சொன்னால் அவ்வத்தலங்களுக்கேற்ப கிணறாகவும், திருக்குளமாகவும், ஆறாகவும், ஏன் கடலாகவும், அருவியாகவும் கூட இருக்கும்.

முதலில் ஆற்றைத் தீர்த்தமாகக் கொண்ட தலங்களைக் காண்போம்.

திருவையாறு - தீர்த்தம் - காவிரி ஆறு

ஆற்றினை ஊர்ப் பெயராகக் கொண்ட தலம். திரு - அழகிய, ஐ-தலைமை, அகன்ற , ஆறு - காவிரி ஆறு, ஆறுகட்குத் தலைமையான அகன்ற காவிரியாற்றை உடைய ஊர். திரு+ஐ+ஆறு (திருவையாறு என்பதற்குச் சரியான தெளிபொருள் இஃதே சாரும்)

அதுமட்டுமல்ல; காவிரி வடகரை + தென்கரை தலங்களில் கோயில்கள் பல இருப்பினும், ''காவிரிக்கோட்டம்'' என்ற கோயிற் பெயரையுடைய தலம் இஃது ஒன்றே சிறப்புடன் விளங்குகிறது.

தீர்த்தச் சிறப்பு:

களித்துக் கலந்ததோர் காதற்
கசிவொடு காவிரிவாய்க்
குளித்துத் தொழுதுமுன் னின்ற
இப்பத்தரைக் கோதில் செந்தேன்
தெளித்துச் சுவையமுதூட்டி
அமரர்கள் சூழிருப்ப
அளித்துப் பெருஞ்செல்வ மாக்கும்
ஐயாறன் அடித்தலமே

-திருநாவுக்கரசு

சிவனடி மறவாச் சிந்தனையாளன் எவனொருவன் பக்தியுடன் காவிரியில் குளித்து, ஐயாற்றெம்பெருமானைத் தொழுது நிற்கின்ற பக்தனுக்குத் தம் அருளாகிய செந்தேனைத் தெளித்து, சுவையுடைய தேவாமிர்தத்தை ஊட்டி தேவர்கள் புடைசூழ வரவேற்றுப் புட்பக விமானத்தில் அமர்த்திக் கொண்டு முத்தியுலகாகிய செல்வத்தை அளிக்கும் ஐயாறன் அடித்தலமான அருமையாகப் பாடுவார் நம் நாவுக்கரசுப் பெருமான்.

சுந்தரரோ - ''காவிரிக் கோட்டத்தை ஐயாருடைய அடிகளே'' என கோயிற் பெயரால் ஐயாறனை விளித்துப் பாடுவார்.

திருநாவுக்கரசர் வடக்கே முனிவருருவில் வந்த இறைவன் கொணர்ந்த குளத்தில் மூழ்கி - ஐயாற்றுக் குளத்தேவந்தெழுந்தார் என்பதறிவோம். எனவே, சூரிய தீர்த்தக்குளம் எத்தகைய புனிதம் வாய்ந்தது என்பதறியலாம்.

திருஆனைக்கா - தீர்த்தம் காவிரி

உறையூர்ச் சோழன் காவிரியில் முழுகிய போது அவனது கழுத்திலிருந்த முத்துமாலை நழுவி ஆற்றில் போக, மன்னன் ஆனைக்கா அண்ணலாரை விளித்துப் பெருமானே இம்முத்து மாலையை ஏற்றுக்கொள்'' என, திருமஞ்சனம் எடுக்க வந்த பிராமணன் குடத்தில் நீருடன் மாலை புகச்செய்து, கோயிலில் பெருமானுக்கு அபிடேகம் செய்யும் போது மாலைவிழ ஏற்றுக் கொண்டார் - இதனை ஏழாந்திரு முறையில் சுந்தரர்

தாரமாகிய பொன்னித் தண்துறை
யாடி விழுத்தும்
நீரின் நின்றடி போற்றி நின்மலா
கொள்ளென ஆங்கே
ஆரங் கொண்ட எம் ஆனைக்
காவுடைய ஆதியை நாளும்
ஈரமுள்ளவர் நாளும்
எம்மையு மாளுடையாரே

எனவும் 12ஆம் திருமுறை பெரிய புராணத்தே,

வானவர் பெருமான் மணியாரம் சாத்திக்
கொண்டு வரும் பொன்னிக்
கிளருந் திரைநீர் மூழ்குதலும்
வழுவிப் போகக் கேதமுற
அளவில் திருமஞ்சனக் குடத்துள்
அதுபுக்காட்ட அணிந்தருளித்
தளரும் அவனுக் கருள்புரிந்த
தன்மை சிறக்கச் சாற்றினார்.

-ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம்

குறிப்பிட்டது கொண்டு காவிரி தீர்த்தச் சிறப்பை நன்குணரலாம்.

திருமாந்துறை - தீர்த்தம் காயத்ரிநதி (காவிரி)

அம்பொனேர் வரு காவிரி வடகரை
மாந்துறை உறைகின்ற
எம்பிரானிமையோர் தொழு
பைங்கழலேத்துதல் செய்வோமே

-சம்பந்தர்

கடம்பந்துறை- தீர்த்தம் காவிரி

கழித் திண்டவையா முன்
காவிரியின் தென்பால்
குழித்தடையை யானைக் கூறு

-ஐயடிகள் காடவர்கோன்

திருமழபாடி - தீர்த்தம் கொள்ளிடம்

இத்தலத்தில் கொள்ளிட நதி உத்தரவாகினியாக வடக்கு நோக்கி ஓடுவதால் காசி கங்கைக்கு நிகராகப் போற்றப்படுகிறது. மாசி மகத்தன்று மழபாடி மாணிக்கப் பெருமான் தீர்த்தம் கொடுத்தருளுவார்.

மன்னே மாமணியே
மழபாடியுள் மாணிக்கமே
அன்னே உன்னை யல்லால்
இனியாரை நினைக்கேனே

என்பார் சுந்தரர் (7ஆம் திருமுறை)

திருக்கானூர் - கொள்ளிடம்

1924ல் கொள்ளிட வெள்ளத்தால் கோயில் முழுதும் மணலால் மூடிவிட்டது. பல ஆண்டுகள் கழித்து ஒரு கரும்பு மட்டும் முளைத்திருக்கக் கண்டு தோண்டிப் பார்க்கக் கோயில் கண்டு பிடிக்கப்பட்டது.

தமிழின் நீர்மை பேசித் தாளம்
வீணை பண்ணி
கமழும் சோலைக் கானூர்
மேய பவள வண்ணரே

எனப்பாடுவார் சம்பந்த மூர்த்தி சுவாமிகள்

கானாட்டு முள்ளூர்- கொள்ளிடம்

குருமணிகள் கொழித்திழிந்து
சுழித்திழியுந் திரைவாய்க்
கோல்வளையார் குடைந்தாடுங்
கொள்ளிடத்தின் கரைமேல்
கருமணிகள்போல் நீலம்
மலர்கின்ற கழனிக்
கானாட்டு முள்ளூரிற்
கண்டு தொழுதேனே

என தீர்த்தப் பெயரையே அமைத்து சுந்தர மூர்த்தி சுவாமிகள் பாடியுள்ளார்.

காஞ்சிபுரம் - தீர்த்தம் - சிவகங்கை - கம்பாநதி

தேவி கம்பை நதிக்கரையில் மணலால் இலிங்கம் அமைத்து வழிபட, இறைவன் ஆற்றில் வெள்ளம் வருமாறு செய்ய, உமையம்மை இலிங்கத்தைத் தழுவிக் காத்தாள் - என்பது தலவராறு.

..வெள்ளங் காட்டி வெருட்டிட வஞ்சி
வெருவி ஒடித்தழுவ வெளிப்பட்
கள்ளக் கம்பனை எங்கள் பிரானைக்
காணக் கண்அடியேன் பெற்றவாறே

எனச் சுந்தரர் தம் ஏழாம் திருமுறையில் பாடிக்காட்டுவார்.

கம்பாநதி ஆலயத்துள் ஆயிரக் கால் மண்டபத்திற்கு முன்னால் குளமாகிய நிலையில் உள்ளது. நீராடி நலம் பெறலாம்.

திருநணா - பவானி தீர்த்தம்

பவானி ஆறும் காவிரி ஆறும் சங்கமத் துறையில் ஆடிப் பெருக்கன்று நீராடல் சிறப்பென இலட்சக் கணக்கான மக்கள் புனித நீராடுவர்.

..தேமாங்கனியுதிர்க்குந் திருநணாவே

என்பது சம்பந்தர் வாக்கு.

மதுரை

பொற்றாமரைக்குளம் கோயிலினுள் உள்ளது. இந்திரன் வழிபாட்டிற்காகப் பொன்தாமரை மலர் பறித்த குளம்.

..அலந்தனன் ஆலவாயில்
அப்பனே அருள் செயாயே

என்பது நாவுக்கரசர் வாக்கு

திருநெல்வேலி

பொற்றாமரைக் குளம் - கருமாறி தீர்த்தம் - சிந்துபூந்துறை- மூன்று தெப்பக் குளங்கள் கோயிலினுள் உள்ளன.

..செருந்தி செம்பொன்மலர் திருநெல்
வேலியுறை செல்வர்தாமே

மருந்தவை மந்திரம் மறுமை
நன்னெறியவை
மற்றுமெல்லாம் அருந்துயர் கெடும்

என்பது சம்பந்தர் திருவாக்கு.

திருவதிகை

தீர்த்தம் - கெடில நதி - ச௪ம் திருமுறை திருநாவுக்கரசரின் முதல் பாடல் ''அதிகைக்கெடில வீரட்டானத் துறை யம்மானே'' - நாவுக்கரசர் வாக்கு.

திருமுதுகுன்றம் (விருத்தாசலம்)

மணிமுத்தாறு, அக்னி, குபேர, சக்கர தீர்த்தங்கள், ''..முத்தாறு வந்தடி வீழ்தரு முதுகுன் றடைவோமே'' - சம்பந்தர். சுந்தரர் இறைவன் கொடுத்த பொன்னை இந்த ஆற்றில் போட்டு ஆரூர் குளத்தே எடுத்தார்.

பள்ளிமுக்கூடல்

ஷோடசேது - காசி கங்கையை விட பலமடங்கு புண்ணியம் தருவது. திரிவேணி சங்கமத்தில் மூழ்கிய பலன் தருவது.

இனி, தீர்த்தச் சிறப்புடைய திருக்குளங்களைக் காண்போம்

சீர்காழி

பிரமதீர்த்தம் முதலாக உஉ தீர்த்தங்களுடைய தலம். பிரம தீர்த்தக் குளம் முதன்மை வாய்ந்தது. ஞானசம்பந்தக் குழந்தைக்கு அம்மை ஞானப்பால் கொடுத்த குளக்கரை. தந்தைக்கு தோணியப்பரைச் சுட்டிக் காட்டியதுள்பட வளைவில் சுதை வடிவில் காட்டப்பட்டுள்ளது.

..ஏடுடைய மலரான் முனைநாள்
பணிந்தேத்த அருள்செய்த
பீடுடைய பிரமாபுரமேவிய
பெம்மான் இவனன்றே

முதல்திருமுறை முதல் பாடல் - சம்பந்தர்.

திருக்கோலக்கா

ஆனந்தத்தீர்த்தம் - குளம்.

மடையில் வாளை பாயமாதரார்
குடையும் பொய்கைக் கோலக்காவுளான்

-சம்பந்தர்

புள்ளிருக்கு வேளூர் (வைத்தீஸ்வரன்கோயில்)

சித்தா மிர்தத்தீர்த்தம் சித்தர்கள் இறைவன் திருமுடியில் அமிர்தத்தால் அபிடேகித்த போது அவ்வமிர்தம் வந்து கலந்தமையால் இப்பெயர் பெற்றது. தீராத நோய் தீர்க்கவல்ல தெய்வத் தடாகம் - மீன், தவளையில்லை - தூய்மையாக உள்ளது - இதனைத்தான்

மந்திரமும் தந்திரமும்
மருந்துமாகி - தீராநோய்

நீர்த்தருளவல்லான் தன்னை போற்றாதே
ஆற்றநாள் போக்கினேனே!

என அருமையாக திருநாவுக்கரசுப் பெருமான் பாடுவார்

திருநின்றியூர்

இலக்குமி தீர்த்தம் - இதில் நீராடுவோர் அச்சம் இலர், பாவம் இலர், கேடும் இலர் அடியார் நிச்சமுறு நோயும் இலர் தாமுந் நின்றியூரில் என சம்பந்தர் அனுபவித்துப் பாடியுள்ளார்.

திருப்புன்கூர்

கணபதி தீர்த்தம் (திருநாளைப் போவார்) நந்தனார் வழிபட நந்தி விலகிய தலம் இங்குள்ள இத்தீர்த்தம் விநாயகருடைய துணை கொண்டு நந்தனார் வெட்டியதால் கணபதி தீர்த்தமாயிற்று - குளம் வெட்டிய விநாயகர் என்றே இங்குள்ள விநாயகர் அழைக்கப்படுகிறார்.

முந்தி நின்ற வினைகள் அவை போகச்
சிந்தி நெஞ்சே சிவனார் திருப்புன்கூர்

-சம்பந்தர் வாக்கு

திருமணஞ்சேரி

சப்தசாகர தீர்த்தம் இறைவன் திருமணத்திற்கு மாலைகளாக மாறி வந்த ஏழு கடல்களும் இங்கே தங்கிய தீர்த்தமாக சொல்லப்படுகிறது. கோயில் பக்கம் உள்ளது.

மன்னுவார் மணஞ்சேரி மருந்தினை
உன்னுவார் வினையாயின ஓயுமே

-திருநாவுக்கரசர் வாக்கு

குடமூக்கு

கும்பகோணம் - மகாமகத் தீர்த்தக் குளம் 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை வரும் மாசி மகம் - மகாமகம் எனப் போற்றப்பெறும் - உலக மக்கள் பலரும் வந்து நீராடுவர். காரணம் மகாமகத்து அன்று கங்கை, சரயு, யமுனை, சரஸ்வதி, சிந்து, நர்மதை, கோதாவரி, கிருஷ்ணா, காவிரி ஆகிய ஒன்பது நதி கன்னியர்களும் வந்து நீராடுவதால் புண்ணிய தீர்த்தமாயிற்று.

பூமருவும் கங்கை முதல்
புனிதமாம் பெருந்தீர்த்தம்
மாமகந்தான் ஆடுதற்கு
வந்து வழிபடுங் கோயில்

என பெரியபுராணம் கூறுவதிலிருந்து இதன் சிறப்பை நன்குணரலாம்.

சிதம்பரம்

சிவகங்கைத் தீர்த்தம் (திருக்குளம்) இதுதவிர, பரமானந்த கூபம், வியாக்ரபாத தீர்த்தம், பிரம தீர்த்தம், சிவகங்கையே முதன்மை யானது - பெரிய தடாகம் - நாற்புற மண்டபமுடையது.

ஆர்த்த பிறவித் துயர் கெட நாம் ஆர்த்தாடும்
தீர்த்தன் நற்றில் லைச் சிற்றம்பலத்தே...
ஏத்தி இருஞ்சுனை நீராடேலோரெம்பாவாய்
-மணிவாசகர்

திருவாவடுதுறை

பசுக்கள் நிறைந்த காவிரிக்கரை ஊர் தீர்த்தங்கள் கோமுக்தி தீர்த்தம், பத்ம தீர்த்தம், கைவல்ய தீர்த்தம் திருக்குளத் தவளைகள் ஒலி கேட்டு அவை அர, அர எனச் சொல்வதாக அதற்கு நவரத்தினங் களைப் பரிசாக அளித்தானாம் வரகுண பாண்டியன் - சிறப்பு மிகு தீர்த்தங்கள்

துஞ்சும் போதாக வந்து
துணையெனக்காகி நின்று
அஞ்சல் என்றருள வேண்டும்
ஆவடுதுறை யுளானே

-திருநாவுக்கரசர்

திருவெண்காடு

சூரிய, சந்திர, அக்னி தீர்த்தம் திருக்கோயிலினுள் உள்ள இம்மூன்று குளங்களிலும் நீராடி நன்மக்கட் பேற்றை அடையலாம். 'சிவஞானபோதம்' - தந்த மெய்கண்டார் - இத் தலத் தீர்த்தச் சிறப்பால் அவதாரமானவர்கள்.

ஏதம் தீர இருந்தான் வாழும் ஊர்போலும்
வேதத்தொலியால் கிளிசொற்பயிலும்
வெண்காடே

திருவாலங்காடு

முத்தி தீர்த்தம் - சென்றாடு தீர்த்தம் மிகப்பெரிய திருக்குளம் - காரைக்காலம்மையார் இன்று வாழும் தலம் சென்றாடு தீர்த்தமென்றே பெயர் - இதனையே

சென்றாடு தீர்த்தம் ஆனார்தாமே
திருவாலங்காடுறையும் செல்வர்தாமே

எனப்பாடுவார் அப்பர்.

திருவண்ணாமலை

பிரமதீர்த்தம் - சிவகங்கை தீர்த்தம் மார்கழி மாத்தே கன்னிப் பெண்கள் பாவை நோன்பியற்றி நீராடுவர்.

அண்ணாமலையான் அடிக்கமலம்
சென்று இறைஞ்சும் ....

பெண்ணே இப்பூம்புனல்
பாய்ந்தாடேலோ ரெம்பாவாய்

திருவெம்பாவை - மாணிக்கவாசகர்

திருவாஞ்சியம்

குப்த கங்கை, எமதீர்த்தம் - பெரிய திருக்குளம் ஆவணி ஞாயிறு தோறும் அதிகாலை வாஞ்சிநாதர் தீர்த்த மருளுவார் எமன் வழிபட்ட தலம் - சந்நிதி உள்ளது.

...திருவாஞ்சியத்துறையும்
ஒருவனார் அடியாரை ஊழ்வினை
நலியவொட்டாரே.

-அப்பர்

கிணற்றைத் தீர்த்தமாகக் கொண்ட தலங்கள்

திருக்காளத்தி

சரஸ்வதி கூபம் - தீர்த்தம் இயற்கையில் பேசவராத குழந்தை களுக்கு இத்தீர்த்தத்தைக் கொடுத்தால் நன்கு பேச வருகிறது என்ற நம்பிக்கை - அவ்வாறே எடுத்துத் தருகின்றனர்.

சுவர்ணமுகி எனப்படும் பொன் முகலியாறு ஓடுகிறது. கண்ணப்பர் வாயில் எடுத்துச் சென்று காளத்தியப்ப ருக்கு அபிடேகித்த தீர்த்தம்.

சந்தமா ரகிலொடு சாதி தேக்கம் மரம்
உந்துமா முகலியின் கரையினில்
உமையொடும்...

வடக்குநோக்கி ஓடும் ஆறு உத்தரவாகினி

-சம்பந்தர் தேவாரம்

கொட்டையூர்

அமுதகூபம்; கற்குடி - (உய்யக் கொண்டான்மலை) நாற்கோணக் கிணறு.

திருஇராமேச்சுரம்

கோயிலினுள்ளே ௨௨ தீர்த்தக் கிணறுகள் சொம்பு கயிறுடன் சென்று அனைத்துத் தீர்த்தங்களிலும் நீராடி இறுதியில் கோயிலினுள்ளே உள்ள கிணற்றிலிருந்து ஐயர் எடுத்து ஊற்ற வெளியில் உள்ள கோமுகை வழி நாம் ஏற்றுக் கொள்ளவேண்டும் இதுவே கோடி தீர்த்தமாகும்.

தேடி மால் செய்த கோயில்
திருஇராமேச்சுரத்தை
நாடி வாழ் நெஞ்சமே!
நீ நன்னெறி ஆடும் அன்றே

-அப்பர்

அடுத்து கடல் தீர்த்தங்களைக் காண்போம்

திருஇராமேச்சுரம்

கோயில் எதிரில் உள்ள கடலிலும் நீராட வேண்டும் இது ''அக்னி'' தீர்த்தம் எனப்படும்.

திருப்பாதிரிப்புலியூர்

பிரம கடல் தீர்த்தம் - நாவுக்கரசரைக் கடலில் கல்லுடன் கட்டிப் போட்டதும் கல் தெப்பமாக கரையேறிய கடல் இடம்

கற்றுணைப் பூட்டி ஓர்
கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது
நமச்சிவாயவே

-பாடி வந்தார் அப்பர்.

திருமறைக்காடு

வேத தீர்த்தம் (எதிரில் உள்ள கடல்) தை - அமாவாசை, ஆடி அமாவாசை கடல் நீராட்டல் சிறப்பு - மண்ணினார் வலங்கொண்டேத்தும் மறைக்காடனாரே'' - அப்பர்.

திருக்கழியல்

கௌவைக்கடல் (ஒலிப்புணரி) தனிச்சிறப்பு. சிவபெருமான் மகாப் பிரளயத்தைச் சுழித்து இத்தீர்த்தத்தில் புகச் செய்தார் - என்பது வரலாறு இதனைச் சுந்தரர் தம் தேவாரத்தே

கவ்வைக் கடல் கதறிக் கொணர்
முத்தில் கரைக் கேற்றக்
கொவ்வைத் துவர் வாயார்
குடைந் தாடுந் திருச்சுழியல்

எனப்பாடுதினின்றும் இதன் உண்மையை நன்கறியலாம்.

இனி அருவி - தீர்த்தமாதலைக் காண்போம்

திருக்குற்றாலம்

தீர்த்தம் அருவிகள், தமிழகத்திற்குத் தனிச் சிறப்புத் தருவது. பொதிகை எனும் தமிழ் முனிவர் அகத்தியர் வாழும் தென் பொதிகைத் திருமலை - கோடைக்கால வாசத்தலம் மட்டுமல்ல; பாடல் பெற்ற குற்றாலநாதர் கோயில் கொண்டு - சம்பந்தர் பாடல் பெற்ற பதி - திருக்குற்றால மலை இதில் பேரருவி, ஐந்தருவி, சண்பக அருவி, தேனருவி, ஒலியருவி இவைகளில் நீராடி நலம் பெற ஆயிரக் கணக்கானோர் சூலை, ஆகஸ்டு மாதங்களில் வருவது காணலாம். குற்றால அருவியில் குளித்தால் உடலுக்கு நலம் பயக்கும் - பல மூலிகை கலந்த நீர், சாரல் இனிமை தரும்.

வம்பார் குன்றம் நீடுயர் சாரல்
வளர் வேங்கை
கொம்பார் சோலைக் கோல
வண்டுயாழ் செய் குற்றாலம்

என்பது சம்பந்தர் வாக்கு.

கொடிமாடச் செங்குன்றூர்


திருச்செங்கோடு கஉ00 படிகள் கொண்ட திருச்செங்கோடு மலை - திருமுறைத்தலம் இங்கு அர்த்தநாரீசர் - வெள்ளைப் பாஷாணத்தாலாயது - திருவடியின் கீழ் குளிர்ந்த நீர் சுரக்கின்றது. இது தேவதீர்த்தம் என்பர். இதனை

அன்பர்களுக்குத் தீர்த்தப் பிரசாதமாக வழங்குவர். இது ஒப்பற்ற அருமை

கைவினை செய்து எம்பிரான் கழல் போற்றுதும் - அரிய நீலகண்டப் பதிகம்.

நிறைவுரை

திருமுறைத் தலங்கள் உஎகூ இவற்றில் எத்தலமாயினும் அதில் குளம் கேணி, ஆறு, கடல், அருவி இவற்றில் ஒன்று கட்டாயம் இருக்கும் - இருக்க வேண்டும் அதில் நீராட வேண்டும் என்பது நியதி. ஆலய வழிபாட்டை புனித நீராடி வழிபடலே சாலச் சிறந்தது என்பது நம்முன்னோர் காட்டிய நெறி. அதைப் பின்பற்றல் நம் கடன் என்பதையே இவ்வரிய கட்டுரை உணர்த்தாநின்றது.



வெற்றி தரும் கொற்றவை, மூவிலை சூலம் ஏந்தி பற்றி நிற்கும் தொண்டர் பழவினை பாற்றி சுற்றிவரும் பகையை நீக்கி, சுகமருளும் தாயாவாள்.

திருமுறைகளில் பக்திக் கோட்பாடு

டாக்டர் . இரா.செல்வகணபதி



(வழிபாடு - உயிர் இரக்கம் மனித நேயம் - மனிதப் பண்பாடு என்பவற்றை வற்புறுத்தியே திருமுறைகளில் பக்திக் கோட்பாடு பேசப்படுகிறது என்று விளக்குகிறது இக்கட்டுரை.)

நிலைமை சொல்லுநெஞ்
சேதவ மென்செய்தாய்
கலைகள் ஆயவல்லான்
கயிலாயநன்
மலையன் மாமயி
லாடு துறையன்நம்
தலையின் மேலும்
மனத்துளும் தங்கவே.

-திருநாவுக்கரசு சுவாமிகள்

ஆலய வழிபாடு

சைவத்திரு முறைகள் குறிக்கும் தலையாய பெருந் தெய்வம் சிவனே. அவன் அருவம், உருவம், அருவுருவம் என்ற மூன்று நிலைகளில் நின்று அடியார்களுக்கு அருள் வழங்கு கின்றான். அருவுருவம் கொண்ட நிலையில் பெருமான் சிவலிங்கமாகக் காட்சி தருகிறான். அவனை சிவாலயங் களில் சென்று வழிபட்டு இம்மை மறுமைப் பயன்களை எய்தத் திருமுறைகள் வழிகாட்டுகின்றன.

மானுடப்பிறப்பு

ஆன்மாக்களை அநாதியே பற்றி நிற்கும் மலங்களிலிருந்து அவை விடுபட்டுத் தூய்மை எய்தச் சிவன் உயிர்களுக்குத் தனு கரண புவன போகங்களை வழங்குகின்றான். பல பிறவிகளுக்குப் பிறகு மானிடப் பிறவி வாய்க்கிறது. அதனை மதித்துப் போற்றிக் கொண்டு மலநீக்கம் பெற்று உயிர்கள் திருவடிப்பேறு எய்த வேண்டும் என்பது திருமுறைகள் வகுத்துரைக்கும் முதன்மையான கோட்பாடு.

அகப்புற வழிபாடு

ஆலயம் சென்று வழிபடும் புறவழிபாட்டையும், உள்ளத்திலேயே சிவனை நிறுத்தி வழிபடும் அகவழிபாட்டையும் திருமுறைகள் நெறிப்படுத்தி உரைக்கின்றன. மூவர் முதலிகள் ஆலயவழிபாட்டுக் கோட் பாட்டை முன்னிறுத்தியதோடு தாமும் தலங்கள் தோறும் சென்று வழிபட்டு வழிகாட்டி நின்றனர். அகவழிபாடு திருமந்திரத்தில் உரைக்கப்பட்டுள்ளது. மனவழிபாட்டைச் சேக்கிழார் வாயிலார் நாயனார் வரலாற்றிலும் பிற வரலாறுகளிலும் எடுத்துரைத்துள்ளார்.

புறவழிபாடு

ஆலய வழிபாட்டை இல்லறத் தாரும் துறவறத்தாரும் மேற் கொள்ளலாம். ஆணும் பெண்ணும் இணைந்து சென்று ஆலய வழிபாட்டை

நிகழ்த்தலாம். அந்தியும் - நண்பகலும் மட்டுமின்றி புலர்வதன் முன்னும் சென்று முக்கால வழிபாட்டை மேற்கொள்ளலாம். ஆலயம் செல்வோர் சிவனுக்குத் தம் கைகளில் பூவும் நீரும் எடுத்துச் செல்லலாம். மாலை கட்டி வழங்கும் பணியை மேற்கொள்ளலாம். பச்சிலைகள் கூட இறைவனுக்கு உகப்பானதே என்பதைத் திருமுறைகள் எடுத்துரைக்கின்றன. படையலிட்டு மகிழ்தல் ஏற்கப்பட்டுள்ளது. அரி வாட்டாயர் வரலாற்றிலும் கண்ணப்பர் வரலாற்றிலும் நைவேத்தி யும் ஏற்றுப் போற்றப்பெற்றுள்ளது.

சைவ மங்கையர்

சைவ மங்கையருக்கு ஆலய வழிபாட்டில் முழு உரிமை தரப் பெற்றிருந்தது. திலகவதியார் சரியை நெறி நின்று ஆலயப் பணிகள் செய்தார். காரைக்கால் அம்மையார் தலயாத்திரை மேற்கொண்டார். அன்பு மீதூர்ந்த தாய்மைப் பண்பில் வாய் எச்சிலையும் சிவன் ஏற்றுப் போற்றி நின்ற திறம் திருநீல நக்கர் வரலாற்றில் சுட்டப்பட்டது. யாவற்றிலும் சிறந்த வழிபாடாக அன்பு வழிபாட்டையே திருமுறைகள் முன் வைத்தன. அன்பும் - சிவமும் ஒன்றே என்று திருமூலர் வலியுறுத்திக்கூறிப்போந்தார். சிவனிடம் வைக்கும் அன்பு, பிற மாநுடத்தின் மேலும், சிற்றுயிர்கள் மேலும் படர வேண்டும் என்று திருமுறைகள் வழிகாட்டின. சிவனை நினைந்து உண்ணும்போது சக மனிதன் பசித்திருந் தால் அவனுக்கும் ஒரு பிடி சோறு அளித்து உண் என்கிறது சைவம். யாவர்க்குமாம் பசுவுக்கு ஒரு வாயுறை என்பதன் மூலம் சைவ வழிபாட்டில் உயிர் இரக்கமும் ஏற்றுப் போற்றப் பெற்றது.

உயிர் இரக்கம்

மனுநீதிச் சோழன், சண்டேசுவரர், ஆனாயர் வரலாறுகளில் உயிர் இரக்கம் சிவ வழிபாட்டு நெறியின் ஒரு அங்கமாகச் சுட்டப்பட்டது. இறையவர்களோடு - சிற்றுயிர்களுக்கு இணைப்பை ஏற்படுத்தி அவற்றிற்குத் தெய்வீகமும் காவலும் சைவத்தில் வழங்கப்பட்டன. தல விருட்சங்கள் என்ற கோட்பாடு சுற்றுப்புற சூழல்பேணலின் ஒரு அங்கமாகவே முன் நிறுத்தப்பட்டது.

சைவ ஆசாரியர்

சிவாலயத்தில் பரார்த்த வழிபாட்டை சிவதீட்சை பெற்ற சைவ ஆசாரியர்களே நிகழ்த்தினர். முப் போதும் திருமேனி தீண்டுவார் என்று அன்னோர் போற்றப்பெற்றனர். தில்லையில் அந்தணர்கள் பூசை ஏற்கப்பட்டது. நித்திய நைமித்திக வழிபாடுகள் ஏற்றுப் போற்றப்பெற்றன. முழுநிலா நாள்களில் திங்கள்தோறும் ஆலயங்களில் பெரு விழாக்கள் நிகழ்த்தப்பட்டன என்பதைத் திருமயிலாப்பூர் தேவாரத்துள் திருஞான சம்பந்தர் பதிவு செய்கிறார்.

மூர்த்தி தலம் தீர்த்தம்

பக்திக் கோட்பாட்டில் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்பன வற்புறுத்தப் பெற்றன. அட்ட வீரட்டத்தலங்கள், சப்த விடங்கத் தலங்கள், பஞ்சபூதத் தலங்கள், முத்தித் தலங்கள் என்பன இனங்காட்டப் பட்டன. திருக்குளம், ஆறுகள், கடலாட்டுகள் பக்திக் கோட்பாட்டில் இணைக்கப் பெற்றன. நடராசர், தியாகரசர் என இருபத்தைந்து சிவ மூர்த்தங்கள் வழிபாட்டில் முன்வைக்கப் பெற்றன. ஆணும், பெண்ணும்,

குழந்தைகளும், பிற குடும்ப உறுப்பினர் களும் இணைந்து சிவவழிபாடு நிகழ்த்தித் தொண்டு பூண வேண்டும் என்று பெரியபுராணம் வரலாறுகள் பேசி நின்றது.

அறங்கள்

சிவன் பெயரால் சடங்குச் சமயத் தோடு நின்றுவிடாது, உயிர்ப்புடைய மனித நேய சமயமாகச் சைவம் மாற வேண்டும் என்பதைத் திருமுறைகள் வற்புறுத்தின. தண்ணீர்ப் பந்தல் வைத்தல், இல்லம் நாடி வந்தவர்களுக்கு உணவு படைத்தல், ஆடைகள் வழங்குதல், பொன்னும் பொருளும் அளித்தல் என்பன வாழ்ந்து காட்டிய நாயன்மார் வரலாறுகளை முன்னிறுத்திச் சைவத்தில் வழிபாட்டின் அங்கமாகச் சேக்கிழாரால் இனங்காட்டப் பட்டது.

அம்மை - அப்பர்

சிவன் அம்மை அப்பனாக வாழ்வுப் பொருளாகத் திருமுறைகளில் முன் நிறுத்தப்பட்டான். பெண்ணின் நல்லாளொடும் பெருந்தகை அடை யாளப் படுத்தப்பட்டான். ஐயாற்றுக் கயிலைக் காட்சி உயிர்க்குரிய இயக்கம் ஆண் - பெண் இணைப்பால் நிகழ்வது உறுதி செய்யப்பட்டது. சமணத் துறவு நெறி நின்றிருந்த நாவரசருக்கு அவர் அதுவரை கண்டு அறியாதன காட்டிச் சிவன் சிவசக்தி வழி பாடே சைவத்தின் உண்மை வழிபாடு என்பதை அறிவுறுத்தினான்.

சாதனங்கள்

திருநீறு. கண்டிகை, ஐந்தெழுத்து என்பன சைவ வழிபாட்டில் இன்றி யமையா இடம் பெற்றன. அவற்றின் பெருமை குறித்த வரிவான செய்தி களைத் திருமுறைகள் விளக்கி உரைத்தன. இவற்றைத் திருவேடம் என்று சைவம் சிறப்பித்தது. திருமுறைகளை இறைவன் திருமுன்பு நின்று ஓதுவதை ஒரு வழிபாட்டு நெறியாகச் சைவம் அடையாளப்படுத்தியது. பரார்த்த வழிபாட்டில் பண் ஒன்றப் பாடப் பிடாரர்கள், ஓதுவாமூர்த்திகள் துணை நின்றனர்.

இசை வழிபாடு

பக்திக் கோட்பாட்டில் சைவம் இசை ஆராதனைக்குப் பெரும் இடம் கொடுத்தது. இறைவனையே ஏழ் இசையாகவும், இசைப்பயனாகவும் சைவம் அடையாளப் படுத்தியது. மூவர் முதலிகள் பண் ஒன்ற இசைபாடி வழிபாடு நிகழ்த்தும் பெரு நெறியை வற்புறுத்தினர். ஆனாயரும், திருநீல கண்ட யாழ்ப்பாணரும், நந்தனாரும் செய்த இசை ஆராதனை - சாதியம் கடந்த அங்கீகாரத்தை அவர்களுக்குப் பெற்றுத் தந்தது. அளப்பில கீதம் சொன்னார்க்கு அடிகள் தாம் அருளுமாறே'' என்று இசை அருள் பெறும் உயர் வாயில் என்று குறிக்கப்பெற்றது.

இம்மை இன்பம்

இம்மை வாழ்வின் பேறுகள், இன்பங்கள் யாவற்றிற்கும் வழி பாட்டைப்பயன் கொள்ளச் சைவம் அனுமதித்தது. ''மண்ணில் நல்ல வண்ணம் வாழ்தல்'' வற்புறுத்தப் பட்டது. களவு, பொய், காமம், கோபம், கொலை முதலிய ஐம்பெரும் பாவங்கள் விலக்கப்பட, வழிபாடு உயர்வான வாயில் என்பது இனங்காட்டப்பட்டது. குரு வழிபாடும் - சங்கம வழிபாடும் சிவ வழிபாட்டுக்கு இணையாகச் சைவத்தில் வற்புறுத்தப்பட்டன. நாவரசரைப்

போற்றி நின்றே அப்பூதும் அடிகளும், சுந்தரரை நினைத்திருந்தே பெரு மிழலைக் குறும்பரும் உய்தி பெற்றதைச் சேக்கிழார் இனங்காட்டுகிறார்.

மனிதகுலநேயம்

இறைவழிபாடு - காலப்போக்கில் மனிதகுல நேயத்தில் சென்று நிறைய வேண்டும் என்பதே சைவ சமயத்தில் கோட்பாட்டின் மூலமாக நிற்கிறது. அடியவர் வழிபாடு என்பது அதுதான். சாதி பொருளாதார ஏற்றத்தாழ்வற்ற ஒரு சமத்துவ மனித குலத்தை நோக்கிச் சைவர்களைத் திருமுறைகள் அழைத்துச் செல்கின்றன.


நெகிழ்ச்சிப் போக்கு

உயிர்ப்புடைய, உலகளாவிய பெருஞ்சமயங்களுள் ஒன்றாகச் சைவம் உயர்ந்து நிற்பதற்கு அதன் கடுமையற்ற நெகிழ்ச்சிப் போக்கே' தலையாய காரணம்.

சில வார்த்தைகளில் சொல்வதானால், வழிபாடு உயிர் இரக்கம், மனித நேயம், மனிதப் பண்பாடு என்பவற்றை வற்புறுத்தியே சைவத்திருமுறைகளில் பக்திக் கோட்பாடு வடிவமைக்கப் பட்டுள்ளது எனலாம்.



குமரக்கட்டளையில் கொலு வீற்றிருக்கும்
குமரன் சேவடி நண்ணுவோமே!



தயா மூல தன்மம்

பேராசிரியர். முனைவர். கு.சுந்தரமூர்த்தி,
அனைத்துலக சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனம்
தருமபுரம்.

(இக்கட்டுரை அறங்கள் பலவற்றுள் ஒவ்வொருவரும் பிற உயிர்களுக்கு நேரிடும் துன்பத்தையும் பசியையும் போக்கி ஒல்லும் வகையால் உதவுவதே பேரறம் என்றும் அப்பேரறத்தைச் செய்திட எல்லாம் வல்ல நள்ளாற்று நாதன் அருள் பெறலாம் என்கிறது.)

குலம் கொடுத்துக் கோள்நீக்க வல்லான் தன்னைக்
குடவரையின் மடப்பாவை இடப்பா லானை
மலங்கெடுத்து மாதீர்த்தம் ஆட்டிக் கொண்ட
மறையவனைப் பிறைதவழ் செஞ்சடை யினானைச்
சலங்கெடுத்துத் தயாமூல தன்மம் என்னும்
தத்துவத்தின் வழிநின்று தாழ்ந்தோர்க்கு எல்லாம்
நலங் கொடுக்கும் நம்பியை நள்ளாற்றானை
நாயடியேன் நினைக்கப் பெற்று உய்ந்த வாறே.

என வரும் திருப்பாடல் நாவரசரின் திருவாக்காகும். இத்திருவாக்கில், இறைவனின் திருமேனிப் பாங்கினையும், அப்பெருமான் உயிர்களை ஆட்கொண்டு அருளும் பாங்கினையும் நாவரசர் விளக்கி அருளுகின்றார். குடவரையின் மடப்பாவை இடப்பாலானை, 'பிறைதவழ் செஞ் சடையினானை' என வரும் இரு திருவாக்குகளும் பெருமானின் திருமேனி நலத்தை விளக்குவன. எஞ்சிய மூன்று நீர்மைகளும் இறைவனின் அருளிப் பாட்டை விளக்குவன. இவற்றுள், 'சலங் கெடுத்துத் தயாமூல தன்மம் என்னும், தத்துவத்தின் வழிநின்று தாழ்ந்தோர்க்கு எல்லாம் நலம் கொடுக்கும் நம்பியை' எனவரும் தொடரில் வரும் 'தயாமூல தன்மம்' என்னும் தொடரே ஈண்டு எண்ணத்த தகுவதாகும்.

அறங்கள் பலவற்றுள் ஒவ்வொருவரும் தாம் தாமும், காணும் பிறபிற உயிர்கட்கு உற்ற துன்பத்தையும் பசியையும், நீக்க ஒல்லும் வகையான் உதவுவதே பேரறம் ஆகும். அப்பேரறத்தைச் செய்தார்க்குத் திருநள்ளாற்றில் எழுந்தருளியிருக்கும் பெருமான் இம்மை மறுமை, அம்மை ஆகிய மூன்று நிலைகளிலும் நலம் கொடுத்து வாழ்விப்பன் என்பதே இத்தொடரின் பொருளாகும்.

இவ்வகையில் நாம் எண்ணுங் கால், ''அறிவினால் ஆகுவது உண்டோ பிறிதின் நோய் தன் நோய் போல் போற்றாக்கடை'' என வரும் திருக் குறளும் நினைவிற்கு வரும். எனவே உயிர்கள் ஆகிய நாம், இப்பேரறத்தைச் செய்து, பெருமானின் திருவருளுக்கு ஆளாக வேண்டும்.

'மக்கள் தாமே அறிவுயிரே' என்னும் தொல்காப்பியம். மிக அரிதாய நிலையில், பிற உயிரினங்களுக்கும்

ஆறறிவு இருப்பினும் பெரும்பான்மை நோக்கி மக்களையே பெரிதும் இவ் வகையில் அடக்கிக் கூறினர் அறவோர் இவ்வகையில் நம் முன்னோர் பலரும் வாழ்ந்துள்ளனர் என்பதும் அறியத்தக்க தாம். குளிரால் வருந்திய மயிலுக்குத் தன் போர்வையைக் கொடுத்தான் பேகன் - படர்வதற்கு இடமின்றி வருந்திய முல்லைக் கொடிக்குத் தன் தேரையே இடமாக நிறுத்தினான் பாரி என்னும் வள்ளல்.

உடாஅ போராஅகுதல் அறிந்தும்
படாஅம் மஞ்ஞைக்கு ஈத்த எங்கோ
கடாஅ யானைக் கலிமான் பேகன்

பூத்தலையறாப் புனைகொடி முல்லை
நாத்தழும்பு ஏறப் பாடாதாயினும்
கறங்கு மணி நெடுந்தேர் கொள்க எனக்
கொடுத்தவன் பாரி

என வரும் புறநானூற்றுப் பாடல்கள் இவ்வுண்மையை விளக்கும். துறவு மேற்கொண்ட மணிமேகலை வறுமைத் துயர் உற்ற பலருக்கும் உணவு கொடுத்தமையும் அறிகின்றோம். இவ்வறத்தைப் பண்டு தொட்டே பலரும் போற்றி வந்துள்ளனர்.

தாம் உண்ணுதற்கு உணவு இருந்த பொழுதன்றோ, பிறருக்கு உதவ இயலும்? என வினவின், அதற்கும் விடையாக,

யாவர்க்கும் ஆம் உண்ணும் போது ஒரு கைப்பிடி என அருளினார். திருமூலர். நாளும் உண்டு வரும் பாங்கு அமைந்தார், நாளும் பிறருக்கு உதவலாம். அவ்வாறு அன்றிச் சில நாட்களுக்கு ஒரு முறையே உண்ணும் ஊழ் அமையின், தாம் எப்பொழுது உண்ண நேருகிறதோ அப்பொழுது ஒரு கைப்பிடியேனும் உணவை தந்து உதவலாம் என இவ்வீகையை வற்புறுத்தினார் திருமூலர். தாம் உண்ணும் பொழுது, ஒரு கைப்பிடியேனும் தருதல் இயலும். தாமே உண்ணாதிருக்கும் சூழ்நிலையில், பிறர்க்கு எவ்வாறு உதவ இயலும்? எனக் கேட்கலாம். அதற்கும் விடையாகத் திருவள்ளுவர்,

ஒல்லும் வகையில் அறவினை ஓவாதே
செல்லும் வாய் எல்லாம் செயல்

என்று கூறி ஆற்றுப்படுத்துகின்றார். 'செல்லும் வாய் எல்லாம் செயல்' என்பதற்கு, இயன்றால் செயற்படுக, இன்றேல் மொழியால் தன்பால் இன்மைக் கூறிப் பிறர்பால் ஆற்றுப் படுத்துக, வாயால் கூறுதற்கும் இயலாத சூழ்நிலை இருப்பின், தம்மிடம் இரக்கப் பட்டார்க்குத் தக்கார் எவரேனும் கொடுத்துதவ வேண்டும் என மனத்தாலாவது நினையலாம் என்பர். எனவே, இயன்றால் பொருள், இன்றேல் வாயால் சொலல், அதுவும் இயன்றியதேல் மனத்தால் நினைக எனப் பொருள் கண்ட சிறப்பு பரிமேலழகருக்கு உரியதாகும்.

ஆதலால் தான் நம் அருளாளர்கள் பலரும், இறைவழி பாட்டின் இன்றியமையாமையை அருளும் பொழுது எல்லாம், இவ் வாறாக ஈகையையும் வற்புறுத்தி வந்துள்ளனர்.

ஒழுக்கம் அன்பு அருள் ஆசாரம்
உபசாரம் உறவு சீலம்
வழுக்கிலாத் தவம் தானங்கள்
வந்தித்தல் வணங்கல் வாய்மை
அழுக்கிலாத் துறவு அடக்கம்
அறிவொடு அர்ச்சித்தல் ஆதி
இழுக்கிலா அறங்கள் ஆனால்

இரங்குவான் பணி அறங்கள்
மனமது நினைய வாக்கு வழுத்த
மந்திரங்கள் சொல்ல
இனமலர் கையில் கொண்டு அங்கு இச்சித்த
தெய்வம் போற்றிச்
சினம்முதல் அகற்றி வாழும் செயல்
அறம் ஆனால் யார்க்கும்
முனம் ஒரு தெய்வம் எங்கும்
செயற்கு முன்னிலை யாமன்றே

எனவரும் திருவாக்குகளை காண்க.

தன்னுடன் தன் இனத்தையும் அழைத்து உண்ணும் அறிவு காகத்திற்கு உளவாதலையும் அருளாளர்கள் எடுத்துக் கூறியுள்ளனர்.

காக்கை கரவாக் கரந்து உண்ணும்
வாழ்க்கையும்
அன்ன நீரார்க்கே உள

காகம் உணவு கரைந்து உண்ணக் கண்டீர்

எனவரும் திருவாக்காலும் ஈண்டு எண்ணற்கு உரியனவாம்.



சண்டீச பதம் பெற்று சங்கரன் அடிமையாய்
மன்னுபுகழ் கொண்ட சண்டீசர்.



உமையுடனாகிய பிறைமதி சூடிய பெம்மான் நமையாளும்
நம்பனாம் நல்லருள் புரிவாரே!

பொதுக் கட்டுரைகள்



இந்துவாழ் சடையான் ஆடும் ஆனந்தக் கூத்தைக் கண்டு
மாறிலா மகிழ்ச்சியில் மகிழ்ந்து உய்வோமே.

இருபத்து மூன்றாவது குரு மகாசன்னிதானம் சீர்-வளர்-சீர் சிவப்பிரகாச தேசிக பரமாச்சார்ய சுவாமிகள் அவர்கள் அருளாட்சியின் மாட்சி

சீர்மன்னு மீனாட்சி சுந்தரத் தம்பிரான் சுவாமிகள்
திருவாவடுதுறை ஆதீனம்.

சீர்-வளர்-சீர் குரு மகாசன்னிதானம் அவர்கள் 7.4.1983-ல் ஞான பீடத்தில் எழுந்தருளினார்கள். இவர்களுடைய அருளாட்சியில் சைவமும், தமிழும், சிறந்தோங்கி வளர்ச்சி பெறுகின்றது.

மகன் தந்தைக் காற்றும் உதவிஇவன் தந்தை
எந்நோற்றான் கொல் எனும் சொல்

என்னும் குறளுக்கு ஏற்ப இவர்களுடைய அருளாட்சி முந்தைய குரு மகா சன்னிதானமாக எழுந்தருளியிருந்த ஞானாசிரியர்கள் ஆற்றிய அருட்பணிகளை மேன்மேலும் சிறக்கச் செய்து வருவதை சைவப் பேருலகம் நன்கு அறியும். இவர்களுடைய அருளாட்சியில் சமயப்பணி, தமிழ்ப் பணி, சமுதாயப்பணி, கல்விப்பணி, நூற்பணி, எண்ணற்ற பணிகள் அருளாட்சியின் மாட்சியினை அகிலத் திற்கே எடுத்துக்காட்டுகின்றன.

சைவசித்தாந்தம் பரப்புதல்

இவர்களுடைய அருளாட்சியில் முதன்முலாக 1991ஆம் ஆண்டு சைவ சித்தாந்த நேர்முகப்பயிற்சி மையம் தோற்றுவிக்கப்பட்டது. இச்சித்தாந்த நேர்முகப் பயிற்சி மையம் திருவிடை மருதூரில் தலைமையிடமாகக் கொண்டு செயல்படுகிறது. இந்நேர்முகப்பயிற்சி மையத்தில் பல்லாயிரம் மாணவர்கள் பயின்று பட்டம் பெற்றுள்ளனர். தற்பொழுது 2000-க்கு மேற்பட்ட மாணவர்கள் பயின்று வருகின்றனர்.

முதல் தொகுப்பில் ஆந்திரா, கர்நாடகா, மாநிலங்களிலும் கிளை மையங்கள் செயல்பட்டன. மூன்றாவது தொகுப்பில் கேரளாவில் கிளைமையம் அமைத்து, சைவசித்தாந்த நேர்முகப் பயிற்சி நடத்தப்பெற்றது. மேலும் மூன்றாவது தொகுப்பில் மலேசியா விலும் கிளைமையம் அமைத்து சித்தாந்த பயிற்சி வகுப்பு நடத்தப் பெற்றது.

இச்சித்தாந்த நேர்முகப் பயிற்சி வகுப்பில் பல்வேறு மதத்தைச் சார்ந்த அன்பர்களும் பயிலுகின்றனர். இச்சித்தாந்தப் பயிற்சியில் ஆண்களும் பெண்களும் சேர்ந்து படித்து பயன் பெறுகின்றனர்.

சீர்-வளர்-சீர் குரு மகா சன்னிதானம் அவர்கள் சைவ சித்தாந் தத்தை வளர்க்க சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு ரூ.50,000/- (ரூபாய் ஐம்பதாயிரம்) வழங்கியுள்ளார் கள் ஆண்டுதோறும் தூத்துக்குடி சைவ சித்தாந்த சபைக்கும், விக்கிரமசிங்கபுரம், சைவ நெறி கழகம் நடத்தும் கோடைக்கால வகுப்பிற்கும் பொருளுதவி அளித்து வருகிறார்கள். சென்னை தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்

வெளியிட்டுள்ள சிவஞான பாடியத்திற்கு ரூ.5,000/- நன்கொடை அருளியுள்ளார்கள்.

மலேசியா பயணம்

மலேசியாவில் நடைபெற்ற திருமந்திர மாநாட்டிற்கு ஆசியுரை வழங்க, அந்நாட்டு மக்கள் வேண்டிக் கொண்டதற்கு இணங்க சீர்-வளர்-சீர் குரு மகாசன்னிதானம் அவர்கள் அந்நாட்டிற்கு எழுந்தருளினார்கள். அந்நாட்டு மக்கள் குரு மகாசன்னிதானம் அவர்களை சிறப்பாக வரவேற்றார்கள். அம் மாநாட்டில் திருமந்திரத்தின் சிறப்பும் மனித சமுதாயம் மேற்கொள்ள வேண்டிய நெறிகளைப் பற்றியும் ஆசியுரையாக அருளினார்கள்.

இலங்கைப்பயணம்

சீர்-வளர்-சீர் குரு மகா சன்னிதானம் அவர்கள் இலங்கைக்கு எழுந்தருளினார்கள். அங்கு 22.8.2003 முதல் 29.8.2003 வரை இலங்கையில் உள்ள தலங்களில் வழிபாடாற்றினார்கள். அங்கு வாழும் தமிழ் மக்கள் குரு மகாசன்னிதானம் அவர்கள் எழுந்தருளுமிடமெல்லாம் பூரண கும்ப மரியாதையுடன் வரவேற்று பாதபூசை செய்து வணங்கினர்.

இலங்கை விமான நிலையத்திற்கு குரு மகாசன்னிதானம் அவர்கள் எழுந்தருளிய பொழுது இந்துசமய கலாச்சார அமைச்சர் திரு. தியாகராசா மகேஸ்வரன் பொன்னாடை போர்த்தி மாலை அணிவித்து வரவேற்று மகிழ்ந்தார். இவர்களுடன யாழ்மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவாஜி லிங்கம், அமைச்சர் ஆலோசகர் ஆர்.பேரின்ப நாயகம், கே.கே.சுப்பிரமணியம் திருக்கேதீசுவர ஆலய திருப்பணி சபைத் தலைவர் திரு.ஆர்.நமசிவாயம் மற்றும் புலவர் திருநாவுக்கரசு, பொன்னம்பல வாணேசுவரர் திருக்கோயில் தர்மகர்த்தா, ஆன்மீக அன்பர்கள் யாவரும் ஒன்று சேர்ந்து வரவேற்றார்கள்.

இலங்கையில் கொச்சிக்கடை அருள்மிகு பொன்னம்பலவாணேசு வரர் திருக்கோயில், திருக்கேதீசுவரர் திருக்கோயில், மன்னார் அருள்மிகு சித்தி விநாயகர் திருக்கோயில், வவுணிக்குளம் அருள்மிகு அகிலாண்டேசுவரர் திருக்கோயில், முரிகண்டி அருள்மிகு வழிப்பிள்ளையார், வெள்ளிபுரம் அருள்மிகு விநாயகர் திருக்கோயில், வண்ணை அருள்மிகு வைத்தீஸ்வரன் திருக்கோயில், நல்லூர் அருள்மிகு கந்தசுவாமி திருக்கோயில், மாவட்டபுரம் அருள்மிகு கந்தசுவாமி திருக்கோயில், தெள்ளிப்புழை துர்க்காதேவி தேவஸ்தானம், கீரிமலை அருள்மிகு நகுலேஸ்வரர் திருக்கோயில், மற்றும் பருத்தித் துறை, வல்வெட்டித்துறை முதலிய திருத்தலத்தில் உள்ள திருக்கோயில்களில் வழிபாடாற்றினார்கள்.

ஈழத்துச் சிதம்பரம் எனப் போற்றப் பெறும் (காரைநகர்) திருத்தலத்திற்குச் சென்று வழிபாடாற்றினார்கள்.

திருக்கோணமலை அருள்மிகு திருக்கோணேசுவரர் பெருமானை வழிபட்டார்கள். குரு மகாசன்னிதானம் அவர்களுடன் அன்பர்கள் அளவளாவி மகிழ்ந்தார்கள்.

மன்னர் அருள்மிகு சித்திவிநாயகர் இந்துக் கல்லூரியில் ஏற்பாடு செய்யப் பெற்றிருந்த எழுச்சிமிகு வரவேற்பில் எழுந்தருளி அருளுரை வழங்கி முக்கிய பிரமுகர்களுக்கும், கல்லூரி மாணவர்

களுக்கும் ஆசியருளினார்கள்.

கிளிநொச்சியில் அருள்மிகு கந்தசாமி திருக்கோயிலை வழிபட்டு அங்குள்ள மகாதேவ ஆசிரம குழந்தைகளுக்கு அருட்கொடையும் ஆசியும் வழங்கினார்கள்.

வவுணிக்குளம் அருள்மிகு அகிலாண்டேசுரர் - திருக்கோயில் வழிபட்டு, கோயிலுடன் இணைந்த ஆதரவற்ற குழந்தைகள் காப்பகத்தின் சிறார்களுக்கு திருநீற்றுப் பிரசாதமும், அருளாசியும் நல்கினார்கள்.

குரு மகாசன்னிதானம் அவர்கள் தல யாத்திரையை செவ்வனே மேற்கொண்டு தாயகம் திரும்ப அரிய பல ஏற்பாடுகளை சென்னை சிவத்திரு இரத்தினசபாபதி அவர்கள் செய்திருந்தார்கள்.

2வது முறை இலங்கைப் பயணம்

13.12.2003 இலங்கை இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சின் ஏற்பாட்டின் பேரில் சீர்-வளர்-சீர் குரு மகாசன்னிதானம் அவர்கள் இரண்டாம் முறையாக இலங்கை நாட்டிற்கு எழுந்தருளினார்கள்.

கொழும்பு விமான நிலையத்தில் ஈழத்து நகர் சிவாச்சாரியார்கள், இந்துசமயக் கலாச்சார அமைச்சின் உயர் அதிகாரிகள் முக்கிய பிரமுகர்கள் பலரும் குரு மகா சன்னிதானம் அவர்களை வரவேற்றார்கள். கொழும்பிலிருந்து வான்வெளிச் சிற்றூர்தியில் யாழ்ப்பாண நகர் வந்து அங்குள்ள இந்துசமய பேரவையில் தங்கி மாலை சந்தியாவந்தனம் பூசையை முடித்துக் கொண்டு நயினார் தீவு அருள்தரு நாகபூசினியம்மன் திருக்கோயிலுக்கு எழுந்தருளி வழிபட்டார்கள். திருக்கோயில் தர்மகர்த்தா பூரண கும்ப மரியாதையுடன் வரவேற்று, பாதபூசை செய்து வரவேற்றார். குரு மகா சன்னிதானம் பக்தர்களுக்கு அருளாசியும் திருவருட் பிரசாதமும் வழங்கியருளினார்கள். 14.12.2003 காரைநகர் எழுந்தருளினார்கள். காரைநகருக்கு குரு மகாசன்னிதானம் அவர்கள் எழுந்தருளும் போது அன்பர்கள் பலர் தமது இல்ல வாயிலில் பாதபூசை செய்து அருளாசி பெற்றார்கள். காரைநகரில் அருள்திரு சிவகாமியம்மை உடனுறை அருள்மிகு சுந்தரேசுவரர் திருக்கோயில் எழுந்தருளி தெரிசனம் செய்து, அங்கு இரண்டாவது உலக இந்து மகாநாட்டு ஞாபகார்த்தமாக நிருமாணிக்கப் பெற்ற ஈழத்துச் சிதம்பர சைவசமய அறப்பணி நிலையத்தின் முகப்பில் இடபக் கொடியேற்றி, அறப்பணி நிலையத்தைத் திறந்து வைத்து அருள் வாழ்த்துரையும், அருளாசியும் வழங்கியருளினார்கள். அங்கு நல்லை ஆதீனக் குரு மகா சன்னிதானம் அவர்கள் பொன்னாடை அணிவித்து, இந்துசமய விவகாரத்துறை அலுவல்கள் அமைச்சர் மாண்புமிகு தியாகராசா மகேஸ்வரன் அவர்களுக்கு "அறப்பணிச் செல்வர்" என்னும் விருது வழங்கி ஆசியருளினார்கள்.

ஆண்டுதோறும் அரசு ஏற்று நடத்துகிற ஆறுமுக நாவலர் குருபூசை விழா யாழ்ப்பாண நல்லூர் நல்லை ஆதீனக் கலா மண்டபத்தில் மாலையில் நடைபெற்றபோது குரு மகா சன்னிதானம் அவர்கள் எழுந்தருளினார்கள். அப்போது அரசு உதவிப் பணியாளர் திரு சிவமகாலிங்கம் அவர்கள் பாதபூசை செய்து வரவேற்று மகிழ்ந்தார்கள். குரு மகாசன்னிதானம் அவர்கள் நல்லை ஆதீனக் குரு மகா சன்னிதானம்

அவர்களுக்கு பொன்னாடை அணிவித்து, விழாவில் அருள் வாழ்த்துரையும், அருளாசியும் அருட்பிரசாதமும் வழங்கியருளினார்கள்.

15.12.2003யாழ்ப்பாணத்திலிருந்து விண்வெளிச் சிற்றூர்தியில் கொழும்பு வந்து இறங்கி அருள்மிகு பொன்பம்பல வாணேசுவரர் திருக்கோயில் கடைசி சோமவாரத் தெரிசனம் செய்தார்கள். அங்குள்ள விடுதியில் திருக்கோயில் தர்மகர்த்தா, பிரபல வணிகர் திரு.தெய்வநாயகம்பிள்ளை, கௌரவ அமைச்சர் திரு.ஆறுமுகம் தொண்டைமான், திரு.பொன்னம்பல வாணன் ஆகியோர்க்கும் பொன்னாடை அணிவித்து அருட்பிரசாதம் வழங்கி ஆசியருளினார்கள்.

பின் தயாகம் திரும்பியபோது விமான நிலையத்தில் திரு.கே.கே. சுப்பிரமணியம், திரு.தனபாலன், திரு.பேரின்பநாயகம் மற்றும் முக்கிய பிரமுகர்களும் குரு மகாசன்னிதானம் அவர்களை வணங்கி வழியனுப்பி வைத்தார்கள்.

சமயச் சொற்பொழிவு

ஆண்டுதோறும் குருபூசை விழாவில் பத்து நாட்களில் ஆதீனக் கொலு மண்டபத்தில் சமயச் சொற்பொழிவு நிகழ்த்தப்படுகிறது. ஆதீனத்தின் சார்பாக சைவ சமயப் பிரச்சாரம் செய்ய பல தமிழறிஞர்கள் நியமிக்கப் பட்டுள்ளார்கள். ஆதீன மடாலயக் கொலு மண்டபத்தில் நாள்தோறும் சமயச்சொற்பொழிவு நிகழ்த்தப் பெறுகிறது. திருநல்லூர் திருக்கோயில் குடமுழுக்கு விழாவில் ஆகமக் கருத்தரங்கு நடைபெற்றது.

இதழ்ப்பணி

ஆதீனத்திங்கள் இதழான மெய் கண்டாரில் சைவ சித்தாந்தக் கருத்துக்கள், செப்பேட்டுச் செய்திகள், வரலாற்றுச் செய்திகள் முதலியன வெளிவர அருளியுள்ளார்கள்.

கல்விப்பணி

ஆதீனத்திற்குச் சொந்தமான கல்வி நிலையங்கள் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. மாணவர்கள் கல்வியில் ஊக்கம் பெற பத்தாம் வகுப்பு, பன்னிரண்டாம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் முதல் மதிப்பெண் பெறும் திருவிடைமருதூரில் உள்ள மேனிலைப் பள்ளி மாணவர் ஒருவருக்கு தங்க மோதிரம் ஒவ்வொரு ஆண்டும் வழங்கி ஆசியருளு கின்றார்கள். மயிலாடுதுறை பெண்கள் மேனிலைப் பள்ளியில் பத்தாம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் தமிழில் முதல் மதிப்பெண் பெறும் மாணவிக்குத் தங்கமோதிரம் வழங்கி ஆசியருளு கின்றார்கள். திருவிடை மருதூர் வட்டத்தமிழாசிரியர் கழகத்தின் மூலம் வட்ட அளவில் தமிழ்ப் பாடத்தில் எட்டு, பத்து, பன்னிரண்டாம் வகுப்புகளில் முதல் மூன்று தகுதி பெறும் மாணவர்களுக்கு அருட்கொடை வழங்கி ஆசியருளுகின்றார்கள்.

ஏழை மாணவர்கள் தங்கி கல்வி பயில ஆதீனத்தின் திரு ஆனைக்கா பாப்பம்மாள் சத்திரம் உதவுகிறது. திருவிடைமருதூரில் திருவாவடுதுறை ஆதீன மேனிலைப்பள்ளியில் பவள விழா நினைவுக் கட்டடம் கட்டப்பெற்று திறப்பித்தருளினார்கள். இப்பள்ளியில் கணிணிக் கல்வி தொடங்கப் பெற்றுள்ளது. திருவிடை மருதூரில் உள்ள திருவாவடுதுறை ஆதீன

அம்பலவாண தேசிக நடுநிலைப்பள்ளி நூற்றாண்டு விழா மிகச் சிறப்பாக கொண்டாடப்பெற்றது. நூற்றாண்டு விழா நினைவுக் கட்டடம் கட்டப் பெற்று திறந்தருளப் பெற்றது. மேலும் திருவாவடுதுறை திருவிடைமருதூர், திருப்பெருந்துறை, மேக்கரை முதலிய இடங்களில் மழலையர் பள்ளிகளும் மயிலாடுதுறையில் மெட்ரிகுலேஷன் பள்ளியும் ஏற்படுத்தப்பட்டு மிகச் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன.

பண்ணிசைவாணர்களுக்குப் பாராட்டு

இருபத்து இரண்டாவது குரு மகா சன்னிதானமாக எழுந்தருளியிருந்த அருள்திரு அம்பலவாண தேசிக மூர்த்திகளின் குருபூசைத் திருநாளாகிய பங்குனித் திருவோண திருநட்சத்திரத் திருநாளில் தமிழிசையாகிய திருமுறைகளை ஓதும் ஓதுவார் ஒருவருக்குப் பொன்னாடை அணிவித்து பொற்கிழி ரூ.3,000/- மோதிரம் பாராட்டிதழ் வழங்கி ஆசியருளுகின்றார்கள். இப்பாராட்டு 1985-ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

22-வது குரு மகா சன்னிதானம் அவர்கள் குருபூசை விழாவில் பாராட்டும் பரிசும் பெற்ற பண்ணிசைவாணர்கள்.

1985 லால்குடி சுவாமிநாதன்
1986 திருவாவடுதுறை டி.எம்.விசுவலிங்க ஓதுவார்
1987 சிதம்பரம் கனகசபைபிள்ளை
1988 தருமபுரம் வேலாயுத ஓதுவார்
சங்கரன் கோயில்
1988 திருஞானசம்பந்த ஓதுவார்
1989 கீழப்பெரும்பள்ளம் ந.சம்பந்தம்பிள்ளை
1990 குன்றக்குடி எம்.சம்பந்தஓதுவார்
1992 அரியநாயகிபுரம் இசக்கிஓதுவார்
1993 திருவாவடுதுறை டி.எம்.சபாபதி ஓதுவார்
1994 நெல்லை திருஞானசம்பந்த மூர்த்தி ஓதுவார்
1995 திருவையாறு முருகையா தேசிகர்
1996 நெல்லை எம்.கணபதி ஓதுவார்
திருப்புன்கூர்
1997 க.சுப்பிரமணிய ஓதுவார்
1998 திருவாரூர் கல்யாணசுந்தரதேசிகர்
திருவாவடுதுறை
1999 அ.இராமசாமி ஓதுவார்.
காஞ்சிபுரம்
2000 ஆ.விநாயகமுதலியார்
திருப்புகலூர்
2001 அ.அருணாசலதேசிகர்
திருவிடைமருதூர்
2002 சு.சம்பந்ததேசிகர்
2003 தருமபுரம் ப.சுவாமிநாதன்
இலங்கை
2004 கே.எஸ்.ஆர்.திருஞானசம்பந்தன்
2005 திருவெண்காடு தி.தண்டபாணி தேசிகர்.

''தேவாரம் ஒவ்வொரு கோயிலும் ஓதப்படவேண்டும். இதற்காக அரசு ஓதுவார்களை நியமித்து அவர்களுக்கும் மாத ஊதியம் ரூ.1,000/ ஆவது தரவேண்டும்'' என்று குரு மகா சன்னிதானம் அருளிய செய்தியைப் பாராட்டி 2.2.1996 தினமணி நாளிதழ் தலையங்கப் பகுதியில் கோரிக்கை வைத்தது. அரசு தமிழ்ப்புலவர்களைக் கோயில்களில் ஆன்மீகப் பணி செய்ய நியமித்தது.

திருவீழிமிழலையில் பொற்காசு வழங்கல்

திருவீழிமிழலையில் திருஞான

சம்பந்தரும், திருநாவுக்கரசரும் படிக்காசு பெற்ற நிகழ்வை நினைவு கூறும் வகையில் ஆண்டுதோறும் திருவீழிமிழலைத் திருக்கோயிலில் நடைபெறும் திருக்கலியாணத் திருவிழாவில் வயதில் குறைந்த இளைய ஓதுவார் ஒருவருக்கும், முதுமையடைந்த ஓதுவார் ஒருவருக்கும் பொன்னாடை அணிவித்து, பொற்பதக்கமும், பாராட்டிதழும் வழங்கி ஆசியருளுகின்றார்கள். இப் பாராட்டு ஆண்டுதோறும் தொடர்ந்து நடைபெறுகிறது. இப்பாராட்டு ௨௦௦௦-வது ஆண்டு தொடங்கப் பெற்றது.

௨௦௦௦ - மயிலாடுதுறை திருநாவுக்கரசு தேசிகர் (அப்பர்) திருவீழிமிழலை பழனிவேல் ஓதுவார் (சம்பந்தர்)

2001 - இராமேச்வரம் மு.சொக்கலிங்க ஓதுவார் (அப்பர்) திருச்செந்தூர் சு.திருஞானசம்பந்த ஓதுவார்(சம்பந்தர்)

2002 - பொதிகையடி பாண்டியன்பிள்ளை ஓதுவார்(அப்பர்) பழனி பி.சண்முக சுந்தரதேசிகர் (சம்பந்தர்)

2003 - திருப்பெருந்துறை ந.சோமசுந்தர ஓதுவார் (அப்பர்) திண்டுக்கல் அ.மாயவன்(எ) மாயக்கிருட்டிணன்

2004 - திரு.ஏ.எம்.சம்பந்த மூர்த்தி ஓதுவார்(அப்பர்), திரு.சு.சம்பந்த தேசிகர்(சம்பந்தர்)

2005 - திருவாவடுதுறை மு.சபாபதி தேசிகர் (அப்பர்) சு.சங்கர்(எ) சங்கரநாராயணன் ஓதுவார்(சம்பந்தர்)

அமைப்புகளுக்கு விருது

நூறு ஆண்டிற்கு மேலாக சைவ சித்தாந்தத்தைப் பரப்பிவரும் சமய அமைப்புகளின் பணிகளைப் பாராட்டி 'சித்தாந்த சுடர்நிலையம்' என்னும் விருது வழங்கி, அவ்வமைப்புத் தலைவருக்கு பொன்னாடை அணிவித்து ஆசியருளுகின்றார்கள். இவ்விருது பெற்ற சைவ சபைகள் வருமாறு.

2001 - தூத்துக்குடி சைவசித்தாந்த சபை

2002 - திருச்சிராப்பள்ளி திரிசிரபுர சைவசித்தாந்த சபை

2003- பாளையங்கோட்டை சைவ சபை

2004 - சென்னை சிவனடியார் திருக்கூட்டம்

2005 - சென்னை சைவ சித்தாந்த பெருமன்றம் திருவனந்தபுரம், சைவப் பிரகாசபை.

நினைவுக்கட்டடம்

திருவாவடுதுறையில் மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை வாழ்ந்த வீட்டை 1993-ல் புதுப்பித்து நவீனக் கட்டடமாய்க் கட்டப்பெற்று திறந்தருளப் பெற்றது. ஆதீன வித்துவான் சிதம்பரம் இராமலிங்கம் பிள்ளை வாழ்ந்த வீட்டைப் புதுப்பித்து நவீன கட்டடமாய்க் கட்டப்பெற்றுத் திறந்தருளப்பெற்றது.

புலவர்களுக்குப் பரிசு

ஆதீன மகாவித்துவான் திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள் நினைவாக ஆண்டுதோறும் மகரத் தலைநாள் குருபூசை ஐந்தாம் நாள்

விழாவில் தமிழறிஞர் ஒருவருக்கு நினைவுப் பரிசு வழங்கப் பெறுகிறது. நின்னவுப் பரிசாக ரூ.3,000/- பொற்கிழியும், மோதிரமும், பாராட்டிதழும் வழங்கி அருள்திரு நமசிவாய மூர்த்திகள் ஆசிக்கவசமாகிய பொன்னாடை அணிவித்து ஆசியருளுகின்றார்கள்.

பரிசுபெற்ற தமிழறிஞர்கள்

1993- திருச்சி ஆதீனப்புலவர்
ஆதி.முருகவேள்
1994 - திருச்சி பா.ஆறுமுகம்
1995-மதுரை முனைவர்.கா.மீனாட்சி
சுந்தரம்
1997-சென்னை அ.ச.ஞானசம்பந்தன்
1998-சென்னை முனைவர்.
வா.மு.சேதுராமன்
1999-திருச்சி கோ.சத்தியசீலன்
2000-சென்னை தியாகராஜன்
2001-முனைவர்.ச.வே.சுப்பிரமணியம்
2002-பொறையாறு
தா.ம.வெள்ளைவாரணம்
2003-திருவிடைமருதூர்
பா.மகாலிங்கதேசிகர்
2004-கவிஞர் வ.த.இராமசுப்பிரமணியம்
2005- பெரும்புலவர்.
தி.வே.கோலய்யர்.

சித்தாந்த வித்தகர்களுக்குப் பரிசு:—

ஆதீனக் குலதீபமாய் ஒளிர்ந்த சிவஞான முனிவரின் திருநட்சத்திரத் திருநாளாகிய சித்திரை ஆயில்யத் திருநாளன்று சைவசித்தாந்தத்தில் புலமை மிக்கத் தமிழறிஞர் ஒருவருக்கு ஆண்டு தோறும் ரூ.3,000/– பொற்கிழி, மோதிரம், பாராட்டிதழ் வழங்கி அருள்திரு நமசிவாய மூர்த்திகள் ஆசிக்கவசமாகிய பொன்னாடை அணிவித்து குரு மகா சன்னிதானம் அவர்கள் ஆசி அருளுகின்றார்கள்.

இப்பரிசினைப் பெற்ற சித்தாந்த வித்தகர்கள்:—

1995 –காஞ்சிபுரம்
சி.அருணைவடிவேல் முதலியார்
1996 –தேவகோட்டை தத்புருஷ
தேசிகர்
1997 – மதுரைசித்தலிங்கய்யா
1998 – சென்னை சபாரத்தினம்
1999 – கோவை ர.வையாபுரியார்
2000 – தூத்துக்குடி
டி.சி.எஸ்.இராமசங்குபாண்டியன்
2001 – மலேசியா
டான்ஸ்ரீ மு.சோமசந்தரம்
2002 – இலங்கை
இ.நமசிவாயம்
2003 – ஆதீனப்புலவர் ஆதி.முருகவேள், இவர்களுக்கு 'சித்தாந்தச் சைவச் செம்மணி' என்ற பட்டமும் வழங்கியருளினார்கள். இப்பட்டம் இவ்ஆண்டு முதல் ஆண்டு தோறும் சித்தாந்த அறிஞர்களுக்கு வழங்கப்பெறுகிறது. 2004 ஆம் ஆண்டு பரிசும் பட்டமும் பெற்றவர் திரு.டி.என். இராமச்சந்திரன், 2005 ஆம் ஆண்டு பரிசும் பாராட்டும் பெற்றவர் முனைவர் சு.திருநாவுக்கரசு.

சிவாச்சாரியார்களைப் பாராட்டுதல்:—

சிவாச்சாரியார்களுக்கு ஆடைகள் ரொக்கமும் யாவும் கொடுத்து உதவுகின்றார்கள். திருவாவடுதுறை சிவானந்த சிவாச்சாரியார் திருவிடைமருதூர் பசுபதி சிவாச்சாரியார் இருவருக்கும் 'சிவாகமப் புலவர்' என்னும் பட்டம் வழங்கியருளியுள்ளார்கள். சிவாகமச் செல்வர் விருதினை திருவையாறு ஏ.சுந்தரேச

சிவாச்சாரியார், திருக்கோலக்கா இராமநாத சிவாச்சாரியார், பிள்ளையார் பட்டி கே.பிச்சை சிவாச்சாரியார் ஆகியோர்க்கு 2005ம் ஆண்டு ஆதீனக் குருமுதல்வர் குருபூசை விழாவில் சீர்-வளர்-சீர் குரு மகா சன்னிதானம் அவர்கள் வழங்கியருளினார்கள்

இசைக்கலைஞர்களுக்குப் பாராட்டு:–

மதுரை நீ.சு.சுவாமிநாதன் (நாதஸ்வரம்)

குன்னக்குடி வைத்தியநாதன் (வயலின்)

சென்னை ஏ.கண்ணன் (மிருதங்கம்)

சீர்காழி சிவசிதம்பரம் (பாட்டு)

டி.என்.சேஷகோபாலன் (பாட்டு)

இவர்களுக்கு 'ஆதீன வித்துவான்' எனும் விருது வழங்கி பொன்னாடை அணிவித்து ஆசியருளியுள்ளார்கள். கோவை திருமதி. சுவர்ணா சோமசுந்தரம் அவர்களுக்கு 'திருவாசக தேனிசைவாணி' என்னும் பட்டம் வழங்கி ஆசியருளி யுள்ளார்கள்.

சீர்காழி திருஞானசம்பந்த ஓதுவாரைக் கொண்டு, பஞ்சாக்கர மாலை, பொற்கிழி பதிகம் இவற்றைப் பாடச் செய்து ஒலி நாடா வெளியிட்டருளியுள்ளார்கள். சீர்காழி திருஞானசம்பந்த ஓதுவாருக்கு பொன்னாடை அணிவித்து ஆசியருளி யுள்ளார்கள்.

2005 குருமுதல்வர் குருபூசை விழாவில் திரு.ஏ.கெச்.சீதாராம பாகவதர் அவர்களைப் பாராட்டி சல்லரி இன்னிசை நன்மணி பட்டம் வழங்கப்பட்டது.

பட்டம் வழங்கிச் சிறப்பித்தல்

20.01.2002 அன்று திருவீழிமிழலைத் திருக்கோயில் குடமுழுக்கு விழாவில் கோவை திரு. வசந்தகுமார் அவர்களுக்குத் 'திருப்பணிச் சக்கரவர்த்தி' என்ற பட்டம் வழங்கி பொன்னாடை அணிவித்து ஆசியருளி னார்கள். மேலும் உருத்திராக்கமாலை, வெள்ளி விபூதி சம்புடம் முதலியனவும் வழங்கினார்கள்.

மகரத்தலைநாள் குருபூசை விழாவில் காஞ்சி திரு. சிவ.சதாசிவம் அவர்களுக்கு 'பன்மொழிப்புலவர்' என்ற பட்டமும், சங்கரன்கோவில் திரு. ச.இரத்நவேலன் அவர்களுக்கு 'சித்தாந்த சைவ நன்மணி' என்ற பட்டமும், சிதம்பரம் திரு. ச.கிருஷ்ணமூர்த்திக்கு 'சரித்திரச்செம்மல்' என்ற விருதும், சுந்தர பெருமாள்கோவில் திரு. சிவகுருநாத பிள்ளை அவர்களுக்கு 'சைவம் பெருக்கும் தாளாளர்' என்ற பட்டமும், சைவ சித்தாந்த நேர்முகப் பயிற்சிமைய இயக்குநர் திரு. கு.வைத்தியநாதன் அவர்களுக்கு 'சித்தாந்த வித்தியா சாகரம்' என்ற பட்டமும், 1997–ல் பேராசிரியர் திரு. அ.ச.ஞானசம்பந்தம் அவர்களுக்கு 'நற்றமிழ் நாவலர்' என்ற பட்டமும், வழங்கியுள்ளார்கள். சிவமஞ்சரி நூல் ஆசிரியரின் நூற்பணியைப் பாராட்டி 'சிவமஞ்சரி செம்மல்' என்ற விருது வழங்கப்பெற்றது.

2004–ஆம் ஆண்டு குருபூசை விழாவில் முனைவர் திரு. டி.பி.சித்தலிங்கய்யா அவர்களுக்கு 'சித்தாந்தச் சைவச் செம்மணி' என்ற பட்டமும் முனைவர் திரு. வை.இரத்தினசபாபதி அவர்களுக்கு 'சிவத்தமிழ்ச் செல்வர்' என்ற பட்டமும், சங்கரன்கோயில் திரு. பட்டமுத்து அவர்களுக்கும்

கும்பகோணம் கோப்பு கோ.நடராசச் செட்டியார் அவர்களுக்கும் 'சிவத்தொண்டர்' என்ற பட்டமும் வழங்கி பொன்னாடை அணிவித்து ஆசியருளினார்கள்.

இவ்வாண்டு சைவசித்தாந்த நேர்முகப்பயிற்சி ஆசிரியர்களுக்கு 'சித்தாந்த வித்யாநிதி' என்ற பட்டமும், மாணவர்களுக்கு 'சித்தாந்த இரத்தினம்' என்ற பட்டமும், அமைப்பாளர்களுக்கு 'சித்தாந்த சேவா இரத்தினம் 'என்ற பட்டமும் வழங்கி ஆசியருளினார்கள்.

இவ்வாண்டு சமய பரப்புநர் சிவத்திரு .சு.குஞ்சிதபாதம் அவர்களுக்கு ' ஆதீனப்புலவர்' எனும் சிறப்பு விருது வழங்கி பொன்னாடை அணிவித்து ஆசியருளியுள்ளார்கள். இவர்களுக்கு முன் திருச்சி திரு. ஆதி.முருகவேள் அவர்களும், பொறையாறு திரு. தா.ம.வெள்ளைவாரணம் அவர்களும் 'ஆதீனப் புலவர்' விருதினைப் பெற்றுள்ளனர்.

கலைஞர்களுக்குப் பாராட்டு *(4.4.2005)*

பஞ்சலோக சிற்பி

திருவலஞ்சுழி திரு.மு.கசேணஸ்தபதி
மதுரை த.முனியாண்டி ஸ்தபதியார்
திருநெல்வேலி திரு.அ.முத்துராமன் ஸ்தபதியார்
ஏரல் திரு.எம்.நடராஜஸ்தபதியார்
திருநெல்வேலி
திரு.இரா.இராஜேந்திரன் ஸ்தபதியார்

ஆகியோருக்கு **பஞ்சலோகச் சிற்பக் கலைமணி** விருதினை 4.4.2005 அன்று 22-வது குரு மகாசன்னிதானம் குருபூசை விழாவில் வழங்கப்பெற்றது.

17.1.2005 ஆம் ஆண்டு குருபூசை விழாவில் பட்டம் பெற்ற தமிழறிஞர்கள் பெயரும் பட்டமும்

முனைவர்.கு.சுந்தரமூர்த்தி - சித்தாந்தச் சைவச் செம்மணி
முனைவர்.ந.இரா.சென்னியப்பன் - சிவத்தமிழ்ச்செல்வர்
திரு.தி.சு.கோவிந்தசாமி - சிவத் தொண்டர்
திரு.ந.ரா.ஆடலரசு - சிவத்தொண்டர்
திருமதி.குழந்தையம்மாள் - சிவத் தொண்டர்
சிவத்தமிழ்ச்செல்வி.தங்கம்மா அப்பாக்குட்டி - சிவத்தொண்டர்.

4.4.2005 -ல் நடைபெற்ற 22வது குரு மகாசன்னிதானம் குருபூசை விழாவில்

திரு.சு.நாராயணசுவாமி, எம்.ஏ., எம்.ஏ., எம்.எட்., அவர்களுக்கு **ஆகம சிற்பக் களஞ்சியக் கலைமணி** பட்டம் வழங்கப்பெற்றது.

தமிழ்ப்பற்று:–

ஆண்டுதோறும் திருவாவடுதுறை ஆதீனத்தில் நாவலர் பட்டம் பெற்ற யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர் குருபூசை சிதம்பரத்தில் நாவலர் மேனிலைப் பள்ளியில் நடத்தப் படுகிறது. அக்குருபூசை விழாவிற்கு ரூ.1,000/– நன்கொடை நல்கி தமிழ்ப்புலவர் ஒருவரையும் ஆசியுடன் அனுப்பி வருகிறார்கள்.

தமிழ் மொழிக்கு சாதியில்லை மதமில்லை என்றருளி குரு மகா சன்னிதானம் அவர்கள் பல்வேறு மதத்து தமிழறிஞர்களையும் ஆதீனத்தில்

சிறப்பித்து வருகிறார்கள்.

நூல் வெளியீடு

ஆதீனத்தின் வெளியீடுகளாக 536 நூல்கள் வெளிவந்துள்ளன. இவர்கள் அருளாட்சியில் மட்டும் சமார் 185 நூல்கள் வெளிவந்துள்ளன. சித்தாந்த நூல்கள், தலவரலாறுகள், குடமுழுக்கு விழா மலர், திருமந்திரம் உரை, பண்டாரசாத்திரம், நுண்கலை நூல்கள் என பல திறப்பட்ட நூல்கள் ஆண்டுதோறும் வெளியிடப்பெறு கின்றன.

நுண்கலைச் செல்வர் திரு. சு.நாராயணசாமி, எம்.ஏ.,எம்.ஏ., எம்.எட்., அவர்களுக்கு அவரது நூற்பணியைப்பாராட்டி மோதிரம் பொன்னாடை முதலியனவும் மற்றும் சோமாஸ்கந்தர் விக்கிரகமும் வழங்கி ஆசியருளியுள்ளார்கள். சரித்திரச் செம்மல் சு.கிருஷ்ணமூர்த்தி எழுதிய 'திருவாவடுதுறை ஆதீன வரலாறு' நூலுக்கு தமிழ் வளர்ச்சித்துறையின் முதல் பரிசு பத்தாயிரம் ரூபாய் பரிசு கிடைத்துள்ளது.

தஞ்சையில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டின் நினைவாக 'தஞ்சாவூர்' என்னும் நூல் ஆதீனச் சார்பில் வெளியிடப்பெற்றது. பண்டாரசாத்திரம் நூல்கள் அருள்திரு ஞான மாநடராசப் பெருமான் ஆறுகால அபிடேகத்தின்போது ஒவ்வொன்றாக வெளியிடப் பெறுகிறது.

திருக்குறளைப் போற்றுதல்

திருவாரூர், திருவானைக்கா பாப்பம்மாள் சத்திரம், மதுரை, திருவாவடுதுறை ஆகிய இடங்களில் வாரந்தோறும் திருக்குறள் சிந்தனை செய்திட அருளாணை வழங்கியுள்ளார்கள். ஒவ்வொரு ஆண்டும் மாசித்திங்கள் உத்திர நட்சத்திரத்தன்று திருவள்ளுவர் குருபூசை நிகழ்த்தப்படுகிறது. ஆதீனக் கல்வி நிலையங்களில் உள்ள தமிழாசிரியர்கள் திருக்குறள் முற்றோதல் நிகழ்த்து கிறார்கள்.

1.1.2000 கன்னியாகுமரியில் திருவள்ளுவரின் 133 அடி வானுயரச் சிலை நிறுவியதைப் பாராட்டி, திறப்பு விழா நாளன்று அன்றைய முதல்வர் அவர்களுக்கு ஆசிப் பெட்டகம் வழங்கி, ஆதீனம் சார்பில் பொன்னாடை அணி விக்கப்பெற்றது. அவ்விழா நினைவாக 'சோமேசர் முதுமொழி வெண்பா' என்ற நூல் வெளியிடப் பெற்றது.

திருக்குறள் நெறியினைப் பரப்பி வரும் வள்ளுவம் இதழுக்கு ரூ.2,000/- குரு மகா சன்னிதானம் வழங்கியுள்ளார்கள்.

இவ்வாண்டு 7.3.2004 அன்று நடைபெற்ற திருவள்ளுவர் திரு நட்சத்திரத் திருவிழாவில் திருக்குறள் முற்றோதுதலும், சொற்பொழிவும் ஆதீன வேணுவனலிங்க விலாசத்தில் நடை பெற்றது. இரவு அருள்திரு நமசிவாய மூர்த்திகள் பூசை நிறைவில் அல்லூர் திரு.இளங்குமரன் அவர்களுக்கு 'திருக்குறள் செம்மல்' என்னும் பட்டம் வழங்கி பொன்னாடை அணிவித்து ஆசியருளினார்கள்.

பெங்களூரில் திருவள்ளுவர் சிலை நிறுவ ரூ.1,000/ – அருட் கொடை அளித்துள்ளார்கள். தென்காசி வள்ளுவர் கழகத்திற்கு ஆண்டு தோறும் உதவி வழங்கப்படுகிறது.

நூலகப் பராமரிப்பு

திருவாவடுதுறை ஆதீனத்தில் உள்ள சர்சுவதிமகால் நூல்நிலையம் நன்கு பராம்ரிக்கப்படுகிறது. இந்நூல் நிலையத்தின் நூற்றாண்டு விழா சிறப்பாக கொண்டாடப்பெற்றது. ஆதீனக் குருமுதல்வரின் அவதாரத் தலமாகிய மூவலூரில் நூலகம் ஏற்படுத்தப் பட்டுள்ளது. மேலும் திருவெண்ணெய் நல்லூர், சுசீந்திரம் விக்கிரமசிங்கபுரம் செங்கோட்டை ஆகிய இடங்களில் ஆதீன நூலகம் செவ்வனே நடைபெறு கிறது. கல்லூரிகள் பல்கலைக் கழகங்கள் இவற்றில் உள்ள நூலகத்திற்கு ஆதீன வெளியீட்டு நூல்கள் இலவசமாக வழங்கி யுள்ளார்கள்.

அருட்கொடை

கீழக்கொட்டையூர் வள்ளலார் இல்லம், மேலக்காவேரி அன்னை கருணை இல்லம் இவைகளுக்கு மாதந்தோறும் உதவி வழங்கப்படுகிறது. சென்னை உதவும் கரங்கள், சிவசைலம் காந்தி கிராமம் காது கேளாதோர் பள்ளி முதலியவைகளுக்கு ஆண்டு ஒருமுறை உதவி வருகிறார்கள்.

கன்னியாகுமரி, மயிலாடுதுறை முதலிய இடங்களில் நடைபெறும் வேத ஆகம பாடசாலைகளுக்கும், கன்னியா குமரி மாவட்டத்தின் சிலச்சில் ஆசிரமங்களுக்கும் அருட்கொடை மாதம் தோறும் வழங்கி வருகின்றார்கள். மேலும் பள்ளி, கல்லூரிகளில் பயிலும் ஏழை மாணவர்கள் கல்வி பயில ஊக்கம் அளித்து அருட்கொடை வழங்கியருளு கின்றார்கள். உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு ரூ.5,000/– வழங்கி யுள்ளார்கள்.

திருவெண்காடு அருள்மிகு சுவேதாரண்யேசுரர் சுவாமி திருக் கோயிலில் தமிழக அரசு அன்னதானத் திட்டத்திற்கு ரூ.1,05,000/– 22.10.2002 அன்று வழங்கியுள்ளார்கள்.

திருப்பணிகள்

சீர்–வளர்–சீர் குரு மகா சன்னிதானம் அவர்கள் ஆதீன வரலாற்றிலேயே அதிகமான திருப்பணி கள் நிறைவேற்றி குடமுழுக்கு மிகச் சிறப்பாக நிகழ்த்திய பெருமைக்கு உரியவர்களாக விளங்குகின்றார்கள். திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்த மான திருப்பெருந்துறை, மயிலாடு துறை, திருமங்கலக்குடி, திருவீழி மிழலை, சூரியனார்கோயில், திருமாந்துறை, நல்லூர், திருநெல்வேலி, குறுக்குத்துறை சுப்பிர மணியசுவாமி திருக்கோயில், திருநெல் வேலி சந்தி விநாயகர் திருக்கோயில் யாவும் திருப்பணிகள் செவ்வனே நிறைவேற்றி குடமுழுக்கு நிகழ்த்தப் பெற்றன. மேலும் பல கிராமக் கோயில்கள், சிறு கோயில்கள் யாவும் திருப்பணிகள் நிறைவேற்றி குட முழுக்கு நிகழ்த்தப்பெற்றன.

திருவிடைமருதூரில் திருக்கோயிலில் உள்ள ஸ்ரீ மகா மேரு சிதலம் அடைந்ததால் புதிய மேரு

பிரதிஷ்டை செய்து பிரதிஷ்டா பிஷேகம் நடைபெற்றது.

தற்பொழுது திருவிடைமருதூர், திருப்பெருந்துறை, திருநீலக்குடி, பழமண்ணிப்படிக்கரை (இலுப்பைப் பட்டு) முதலிய திருத்தலங்களில் திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன. இவர்களுடைய அருளாட்சியில் இரண்டாம் முறையாக மயிலாடுதுறை அருள்மிகு மாயூரநாதர் திருக்கோயில் குடமுழுக்கு விழா காணுகிறது.

வெள்ளிக்கவசம்

திருவிடைமருதூர் மூகாம்பிகை துர்க்கை, திருவாவடுதுறை தலைமை மடத்தில் உள்ள சிவப்பிரகாச விநாயகர், திருமாளிகைத் தேவர், போகர் திருவடி இவற்றிற்கு வெள்ளிக்கவசம் செய்து அணிவிக்கப்பெற்றது.

ஆதீன மடாலயத்தில் அமைந்துள்ள சிவப்பிரகாச விநாயகர், திருமாளிகைத் தேவர் திருக்கோயில்கள் திருப்பணிகள் செய்விக்கப்பெற்று குடமுழுக்கு நடந்தேறின.

திருத்தேர் திருப்பணி

பாடல் பெற்ற திருத்தலங்களில் ஒன்றாக விளங்குவது மயிலாடுதுறை திருத்தலமாகும். இத்திருத்தலத்தில் பல்லாண்டுகளாக திருத்தேர் ஓடாமல் பழுதுற்றிருந்தது. இவர்கள் அருளாட்சியில் புதிதாக திருத்தேர் வடிவமைக்கப் பெற்று, அத்தேர் 15.11.2003 அன்று திருவீதி உலா சிறப்பாக நடைபெற்றது.

பாடல் பெற்ற திருத்தலங்களில் ஒன்றாக விளங்கும் திருவிடைமருதூர் திருக்கோயில் திருத்தேர் திருப்பணி இவர்கள் அருளாட்சியில் தொடங்கப் பெற்று நடந்து வருகிறது.

கிளை மடங்கள் திருப்பணி

இவர்கள் அருளாட்சியில் பதினைந்திற்கு மேற்பட்ட கிளைமடங்கள் திருப்பணி செய்யப்பட்டு புதுப்பொலிவுடன் திகழ்கின்றன. காசியில் ஆதீனத்திற்குச் சொந்தமான 'சோனார்புரா' என்னும் இடத்தில் கண்ணப்பசாமி மடம் என்ற பெயரில் கிளைமடம் உள்ளது. இம் மடத்தில் பூசையும், அன்னதானமும் நாள்தோறும் நடைபெறுகிறது. யாத்ரீகர்கள் தங்குவதற்கு ஏற்ற வசதிகள் செய்து தரப்படுகின்றன.

திருவெண்ணெய்நல்லூர் மெய்கண்டார் ஞானச் சமாதித் திருக்கோயில், துறையூர் அருணந்தி சிவாச்சாரியார் ஞானச் சமாதித் திருக்கோயில், சிதம்பரம் மறைஞானசம்பந்தர், குருமூர்த்தம், கொற்றவன்குடி அருள் நமச்சிவாயர் குருமூர்த்தம், திருவாவடுதுறை அருள்திரு மறைஞான தேசிகர் குருமூர்த்தம் முதலியன திருப்பணி செய்யப்பட்டு குடமுழுக்குச் செய்விக்கப்பெற்றன. மேலும் இவர்களுடைய அருளாட்சியில் திருவாவடுதுறையில் உள்ள குருமூர்த்தங்கள் யாவும் திருப் பணி செய்யப்பட்டுள்ளன.

தீட்சை

பக்குவம் அடைந்த சிவ பக்தர்களுக்கு ஆண்டுதோறும் சிவராத்திரி, கார்த்திகை சோமவாரம் ஆதிய நாட்களில்

சிவதீட்சைகளும் விசேட தீட்சைகளும் குரு மகா சன்னிதானம் செய்வித் தருளுகின்றார்கள்.

முற்றோதல்

திங்கள் தோறும் மக நட்சத்திர நாளன்று ஆதீனக் கொலு மண்டபத்தில் திருவாசகம் முற்றோதல் செய்யப்படு கிறது. ஆண்டுதோறும் அசுபதி நட்சத்திர நாளன்று திருமந்திரம் முற்றோதல் திருக்கோயிலில் நடைபெறுகிறது. மாசி உத்திர நட்சத்திர நாளன்று திருக்குறள் முற்றோதல் திருமடத்தில் நடை பெறுகிறது.

மின்தம்புரா வழங்குதல்

திருக்கழுக்குன்றத்தில் நடைபெறும் நால்வர் விழாவில் ஆண்டுதோறும் மின்தம்புரா ஆதீனச் சார்பாக பரிசு பெறும் இசைவாணர்க்கு வழங்கப்பெறுகின்றது.

மண்டகப்படிகள்

பல திருக்கோயில்களில் நடைபெறும் திருவிழாக்களில் மண்டகப்படிகளும், பலதிருக்கோயில் கட்டளைகளும் ஆதீனத்தால் ஏற்படுத்தப் பட்டுள்ளன. அக்கட்டளைகளையும் மண்டகப்படிகளையும் சிறப்பாக நடைபெற அருளாணை வழங்கி யுள்ளார்கள் இவர்கள் அருளாட்சியில் புதியதாக மண்டகப்படிகள் ஏற்படுத்தப் பெற்று செய்யப்பட்டு வருகின்றன.

இலங்கை அமைச்சர் வருகை:–

28.01.2004 குருபூசைத் திருநாளன்று சிறப்பு விருந்தினராக இலங்கை இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சர் மாண்புமிகு தியாகராசா மகேஸ்வரன் அவர்களும் அவரது குடும்பத்தினரும், அவரது செயல் நெறியாளர் திரு.பேரின்பநாயகம் அவர்களும் திருமடத்திற்கு வருகை புரிந்தனர்.

சீர்–வளர்–சீர் குரு மகா சன்னிதானம் அவர்கள் அருளாசியினைப் பெற்றார்கள். குரு மகா சன்னிதானம் அவர்கள் 'அறப்பணிச் செல்வர்' என்ற விருதினை வழங்கி பொன்னாடை அணிவித்து ஆசியருளினார்கள்.

17.1.2005 -ல் நடைபெற்ற ஆதீனக் குருமுதல்வர் மகரத்தலைநாள் குருபூசை விழா

இவ்விழாவில் ஓச்சரா (கேரளா) திரு.வி.சிவதாசன் நாதசுவர இசைச் செல்வி திருமிகு. பிரசன்னா சிவதாசன் குழுவினரின் இசைக் கலையைப் பாராட்டி ஆதீன நாகசுவர இசைக் கலைஞர் என்னும் விருதும், அருள்திரு நமசிவாயமூர்த்திகள் ஆசிக்கவசமும் வழங்கி வாழ்த்தியருளினார்கள்.

குடந்தை டி.என்.சங்கரநாதன், டி.எஸ்.முருகன் பொம்மலாட்ட கலைப் பணியைப் பாராட்டி **கைப்பாவைக் கலைமணி** என்னும் விருதும், திருக்கோவில் திருப்பணி சுதைச்சிற்பக் கலைஞர்கள் கும்ப கோணம் திரு.வி.கே.எஸ்.சிவம் திருவாலங்காடு திரு.என்.கந்தசுவாமி, சிதம்பரம் என்.தியாகராஜன், திருக் கடலூர் ம.உத்திராபதி, ஆகியோருக்கு சுதைச் சிற்பக் கலைமணி என்னும் விருதும் வழங்கி அருள்திரு நமசிவாயமூர்த்திகள் ஆசிக்கவசமும் வழங்கி வாழ்த்தி யருளினார்கள்.

திருவுள்ளம்

சீர்–வளர்–சீர் குரு மகா சன்னிதானம் அவர்கள் "சமயம் நன்கு வளர வேண்டுமானால் சமுதாயம் சிறந்தோங்க வேண்டும்" என்று அருளுபவர்கள். இவர்கள் 1999 முதல் குருபூசை விழாவின் போது பக்தர்கள் போற்றி வணங்கி, பல்லக்கில் தம்மை சுமந்து வரும் பவனியை வேண்டாம் என்று கூறி எளிவந்த பிரானாக காட்சி அருளுபவர்கள்.

"காட்சிக் கெளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்
மீக்கூறும் மன்னன் நிலம்"

என்ற வள்ளுவர் வாக்கிற்கேற்ப துறவரசாய் விளங்கும் குரு மகா சன்னிதானம் அவர்கள் எளிமையும் இன் சொல்லும் கொண்டு தம்மை நாடி வரும் அன்பர்களுக்கு அருளாசி வழங்கி அருளுகின்றார்கள். குரு மகா சன்னிதானம் அவர்களை வெளிநாட்ட வரும் பிற மாநிலத்தவர்களும் முக்கிய பிரமுகர் களும் நாளும் தெரிசித்து வருகின்றனர்.

இவர்களுடைய அருளாட்சியில் தமிழ் மொழியின் மாட்சியும் திருத்தொண்டின் சிறப்பும், திருக் கோயில் திருப்பணிகளும் சிறந்திருப்ப தோடு சிறந்த நூல்கள் யாவும் வெளியிட்டு ஆன்மீக உலகிற்கு அளித்து வருகின்றார்கள்.

மாற்றுச் சமயத்தினரையும் மதிக்கும் மாண்பும், நல்லறம் போற்றும் பண்பும் கண்டு மக்கள் நாளும் சீர்–வளர்–சீர் குரு மகா சன்னிதானம் அவர்கள் திருவடி மலர்களைப் போற்றி வணங்கி வருகின்றார்கள்.

ஆசியுரை:–

சீர்–வளர்–சீர் குரு மகா சன்னிதானம் அவர்கள், " மக்களுக்குத் தொண்டுள்ளமும் பக்தி நெறியும் என்றும் வேண்டும்" என்று ஆசியருளுகின்றார்கள்.



புராணங்கள் போற்றும் புராணன்

தி.வே.கோபாலையர்
பாண்டிச்சேரி.

(இக்கட்டுரையில் புராணத்தின் தொன்மை - புராணன் என்ற சொல் சிறப்பு - இலக்கியங்களில் புராணன் என்னும் சொல்லாட்சி - வடமொழி நூல்களில் புராணச் செய்திகள் - சங்க இலக்கியங் களில் சிவபெருமான் பற்றிய செய்திகள் - வியாசர் அருளிய பதினெண் புராணங்கள் - தலபுராணங்களின் நோக்கம் யாவும் தக்க மேற்கோள் களுடன் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.)

இப்பாரத தேசத்தில் மக்கள் பேச்சு வழக்கில் இருக்கும் தாய்மொழிகள் பலவற்றில் மிகத் தொன்மை வாய்ந்த மொழி தமிழ் என்பது நன்மக்கள் அனைவரும் ஒப்ப ஏற்றுக் கொள்ளும் செய்தியாகும். தமிழ் மொழி தனக்கெனச் சிறப்பாக அமைந்த பல இலக்கணக் கூறுகளை உடையது. இது வடமொழி யிலிருந்து பிறந்த மொழி அன்று. வடமொழி பாரதத்தில் உள்ள எந்த நாட்டு மக்களுக்கும் தாய்மொழி அன்று. அது பாரத தேசத்திலுள்ள எல்லா நாடு களுக்கும் பொது மொழியாகப் பழங்காலம் தொட்டு இயங்கி வந்துள்ளது. எனவே, பாரத தேசத்து எல்லா நாட்டுச் சான்றோர்களும் தம் தாய் மொழிப்புலமையொடு வடமொழிப் புலமையும் பெற்றிருந்தனர். வடமொழி யிலும் வல்ல அச்சான்றோர்களால் நம் தமிழ்மொழியின் பேச்சு வழக்கிலும் ஏட்டு வழக்கிலும் பல வட சொற்கள் பயன் படுத்தப்பட்டன. இன்று நம்மிடையே வழங்கி வரும் பழைய இலக்கண நூலாகிய தொல்காப்பியம்,

> இயற்சொல் திரிசொல் திசைச்செல்
> வடசொல் என்று
> அனைத்தே செய்யுள் ஈட்டச் சொல்லே
> தொ.சொ.

என்று செய்யுள் வழக்கிலும் சில வடசொற்கள் பெரும்பாலும் பெயர்ச் சொற்களாகக் கலந்து வருதலை ஏற்றுக் கொண்டுள்ளது. அவ்வாறு பழங்காலம் தொட்டுத் தமிழில் வழங்கிவரும் வட சொற்களுள் புராணன், புராணம் என்பனவும் அடங்கும்.

அகத்தியத்தை அடுத்துத் தொல் காப்பியத்துக்கு முன்னர்த் தமிழில் வழங்கிவந்த இலக்கண நூல்களுள் மாபுராணம் பூதபுராணம் என்பன நச்சினார்க்கினியரால் குறிப்பிடப் பட்டுள்ளன. இக்காலத்தில் அவற்றி னுடைய நூற்பாக்கள் சிலவே கிட்டுகின்றன. அகத்தியரால் இயற்றப் பட்டநூல் அகத்தியம் எனவும் தொல் காப்பியரால் இயற்றப்பட்ட நூல் தொல் காப்பியம் எனவும் வழங்கப்படுதல் போல, மாபுராணனால் இயற்றப்பட்ட நூல் மாபுராணம் எனவும் பூத புராணனால் இயற்றப்பட்ட நூல் பூத புராணம் எனவும்

15

வழங்கப்பட்டன என்றே கொள்ள வேண்டியவராய் உள்ளோம். தொல்காப்பியத்துக்கு முற்பட்ட இந்நூல்கள் 2500 ஆண்டுகளுக்கு முற்பட்டனவாதல் ஒருதலை. அக்காலத்தில் அவைதிக சமயங்களாகிய சமணமும் பௌத்தமும் தமிழகத்தை எட்டிப்பார்க்கவும் வாய்ப்பு இல்லை. எனவே மாபுராணன், பூத புராணன் என்ற பெயர்கள் தமிழகக் கடவுளின் பெயர்களாகவே கொள்ளத் தக்கனவாம். சிவபெருமான் திருவடி நீழற் கீழ் மூவகை உலகமும் தோன்றின என ஐங்குறுநூற்றுக் கடவுள் வாழ்த்தும், ஐம்பெரும்பூதங்களையும் மழுவாள் நெடியோனாகிய சிவபெருமானே படைத்தான் என்று மதுரைக் காஞ்சியும் கூறுவனவற்றை மனம் கொண்டால் மாபுராணன், பூத புராணன் என்ற பெயர்கள் மிகவும் பழையவன், ஐம்பூதங்களையும் படைத்த பழையவன் என்ற பொருளில் சிவபெருமானுடைய பெயர்களாக வழங்க, அவை மக்களுக்குப் பெற்றோர் இட்ட இயற் பெயர்களாயின என்று முடிவு செய்யலாம்.

சங்க காலத்தில் வைதிக தெய்வங்களின் பெயர்களும், முனிவர்களின் கோத்திரங்களைச் சார்ந்த பெயர்களும் மக்களின் இயற் பெயராக வழங்கப்பட்ட செய்தி புலப்படுகிறது. உருத்திரன், கண்ணன், கந்தன், கபிலன், குமரன், கேசவன், சாத்தன், சேந்தன், தாமோதரன், பதுமன், பேராலாலயன் வெள்ளெருக்கிலையன் போல்வன தெய்வப் பெயர்களாம். காசிபன், கோதமன் கௌசிகன், சாண்டில்யன் என்பன முனிவர் கோத்திரப் பெயர்களாம். மார்க்கண்டேயன், வான்மீகன் என்பன முனிவர் பெயர்களாம். இவற்றுள் உருத்திரன், கபிலன், பேராலவாயான் வெள்ளெருக்கிலையன் என்பன சிவபெருமானுடைய பெயர்களாம். கந்தன், குமரன், சேந்தன் என்பன முருகனுடைய பெயர்களாம். கண்ணன், கேசவன், தாமோதரன் என்பன திருமாலுடைய பெயர்களாம். சாத்தன் என்பது ஐயனாருடைய பெயர். பதுமன் என்பது பிரமனுடைய பெயர்.

இப்பெயர்களுள் பல பெயர்கள் வடமொழிப் பெயர்களாக உள்ளன. இவற்றைப் போலவே மாபுராணன், பூதபுராணன் என்ற பெயர்களும் வடமொழியில் அமைந்த பெயர்களாய்ச் சிவபெருமானைக் குறிப்பிடப் பயன் பட்டு மக்கள் இயற்பெயர்களாயின என்றே கருதுகிறோம்.

இப்புராணன் என்னும் சொல் சங்க இலக்கியத்துள் இறைவனைக் குறிக்கப் பயன்படுத்தப்பட வில்லை எனினும் சங்கத்தை அடுத்த காலங்களில் இச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ள செய்தியைக் காண்கிறோம்:

பொருளன் புனிதன் புராணன் புலவன்
சிலப்.10.179

என்று சிலப்பதிகார ஆசிரியர் அருக தேவனையும்,

புலவன் தீர்த்தன் புண்ணியன் புராணன்
மணி - 5.98

என்று மணிமேகலை ஆசிரியர் புத்த தேவனையும் மிகப் பழமையானவன் என்ற பொருளிலேயே குறிப்பிடுகின்றனர்.

திருஞான சம்பந்தப் பெருமான் இறைவன் முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம்பொருள் என்பதனை

-'பாசுபதம் புரிந்து அளித்த புராணர்' -
தே -1.131.2

'நீரின் மாமுனிவன் நெடுங்கைகொடு
நீர்தனைப்
பூரிந்து ஆட்டி அர்ச்சிக்க இருந்த புராணனே-
தே 2.10.1

என்ற இடங்களிலும்,

திருநாவுக்கரசர் பெருமான் ஆறாம் திருமுறையில்

பூராணன் காண், புண்ணியன்காண், புராணன் தான் காண்' தே 4.8.3

என்ற இடத்திலும்,

திருமூலர் தம் திருமந்திரத்தில்

இமையவர் தம்மையும் எம்மையும் முன்னம்
அமைய வகுத்தவன் ஆதி புராணன் -1557

என்ற இடத்திலும்,

மணிவாசகப் பெருமான் தம் திருவாசகத்தில்

'புரம்பல எரித்த புராண! போற்றி'4.221
போற்றி போற்றி புராண காரண!-4.224

'புராண! நீ தந்தருளாதே என்னைக்
குழைந்தாயே - 33.10

என்ற இடங்களிலும் சிவபெருமானைப் புராணன் என்றே குறிப்பிடுகிறார். மேலும் அவர் சிவபெருமான் எல்லாப் பொருள்களுக்கும் காரணன் என்ற கருத்தில் 'புராண காரண' என்று அவரை விளிக்கிறார். எது எல்லாப் பொருள்களுக்கும் காரணப் பொருளோ அதுவே வணங்கத்தக்கது என்ற கருத்தில் வேதமும் 'காரணம் துத்யேய:' என்று குறிப்பிடுகிறது. மேலும் அவர்,

சிந்தை மகிழச் சிவபுராணந்தனை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்
யான் - 1.19.20

என்று சிவபெருமானுடைய அநாதி முறைமையாகிய பழைமையைக் குறிப்பிடுகின்றார்.

எனவே, புராணன் என்பது அறப்பழையவன் என்ற பொருளிலும் புராணம் என்பது வரலாற்றுக்கு முற்பட்ட பழைய செய்தி என்ற பொருளிலும் வந்துள்ளமை உணரலாம்.

வரலாற்றுக்கு முற்பட்டனவாக மக்களால் பேசப்பட்டு வந்த இந்தப் பழஞ் செய்திகள் வேதங்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளன. அதர்வண வேதத்தில் புராணச் செய்திகள் ''தாச; சாமானி சந்தாம்நி புராணம்'' எனவும் சாந்தோக்ய உபநிடதத்தில் 'சதுர்த்த மிதிஹாஸ புராணம் பஞ்சமம் வேதாநாம் வேதமிதி' எனவும் புராணச் செய்திகள் இடம் பெற்றுள்ளன.

அட்டவீரட்டம் குறிப்பிடும் சிவபெருமானுடைய எட்டு வீரச் செயல்களில் ஐந்து தக்கன் வேள்வியை அழித்தமை, முப்புரங்களை அழித்தமை, யானைத்தோலைப் போர்த்தியமை, பிரமனை அழித்தமை, காலனை வென்றமை என்பனவாகும். இவை தைத்திரிய சம்ஹிதையிலும் ஐந்ரேயப் ராஹ்மணத்திலும் ம்ருத்யுஞ்ஜயன்' என்ற வேதங்களில் காணப்படும் பெயரிலும் காணப்படுகின்றன. திருநாவுக்கரசர் அருளிய நின்ற திருத்தாண்டகம் வேதத்திலுள்ள ஸ்ரீருத்ரத்தைத் தழுவியது.

சங்க இலக்கியத்தில் வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்ட சிவபெருமானுடைய செய்திகளாக பார்வதியைத் தன் உடலின் ஒரு பாகமாகக் கொண்டமை, பிறையை நெற்றியில்

அணிந்தமை, கங்கையை சடையில் கரந்தமை, விடக்கறையைக் கழுத்தில் கொண்டமை, இருளில் சுடுகாட்டில் ஆடியமை, உடுக்கையை ஒலித்தமை, மூவகை உலகையும் படைத்தமை, கொடுகொட்டி பாண்டரங்கம், கபாலம் என்ற கூத்தாடியமை, புலித்தோலை அணிந்தமை, பூத்ப்படை உடைமை, திரிபுரங்களை அழித்தமை, காலனை அழித்தமை, இராவணனை கயிலையின் அடியில் வருத்தியமை என்பன காணப் படுகின்றன. தேவாரத் திருமுறைகளின் காலத்தில் இன்னும் பல புராணச் செய்திகள் இடம் பெற்றுள்ளன.

நாவுக்கரசர் பெருமான் நான்காம் திருமுறையில் அருளிய தசபுராணம் எனப்படும் பதினான்காம் பதிகத்தில் சிவபெருமானுடைய பழைய மேதக்க செயல்களில் பத்துச் செயல்கள் குறிப் பிடப்பட்டுள்ளன. அவை ஆலகால விடத்தை உண்டமை, திருமாலும் பிரமனும் முறையே அடியும் முடியும் காண வொண்ணாதபடி தீப்பிழம்பாய் வளர்ந்தமை, திருமால் உலகு ஏழும் உண்ண அவருக்கு ஆற்றல் வழங்கியமை, தாருகனைக் கொன்ற காளியின் கோபத்தை நடனமாடி அடக்கி உலகைக் காத்தமை, கொடிய திரிபுரங் களை அழித்தமை, காலனை வென்று மார்க்கண்டேயனைக் காத்தமை, தக்கனின் அளதிகமான வேள்வியைத் தகர்த்தமை, பார்வதி சிவபெருமானு டைய இரண்டு கண்களையும் விளையாட்டாக மூட அதனால் உலகம் இருள, சிவபெருமான் தன் நெற்றிக் கண்ணைத் தோற்றுவித்து உலகத்து இருளை அகற்றியமை, மன்மதனை நீறாக்கியமை, தன் கண் இடந்து மலராகத் தன் திருவடிகளில் சமர்ப்பித்த திருமாலுக்குச் சக்கரம் வழங்கியமை என்பனவாம். இவற்றோடு இராவணன் செருக்கை அடக்கி அவன் வழிபட அவனுக்கு அருள் வழங்கிய வழக்கமான செய்தி இறுதிப் பாடலில் இடம் பெற்றுள்ளது.

இலிங்கபுராணத் திருக்குறுந் தொகையில் திருமாலும் பிரமனும் சிவபெருமானுடைய அடி முடி காணமுயல்வுற்ற செய்தியே பதிகம் முழுதும் இடம் பெற்றுள்ளது.

தமிழில் புராணம் என்பது பழைய செய்தி என்ற பொருளில் பண்டு வழங்கவும் வடமொழியில் புராணங்கள் காப்பிய வடிவில் தொடர்நிலைச் செய்யுள்களாக இயற்றப்பட்டன. வியாசர் பதினெண் புராணங்களை இயற்றினார். பின் அவற்றை அடுத்துப் பதினெண் உபபுராணங்கள் தோன்றின. சற்றுப் பிற்பட்ட காலத்தில் பதினெண் அதி புராணங்கள் தோன்றின. வியாசர் அருளிய பதினெண் புராணங்கள் பின்வருமாறு.

சைவபுராணம் - 24000 கிரந்தங்கள்
பவிடியபுராணம்-31000 கிரந்தங்கள்
மார்க்கண்டேயபுராணம்32000கிரந்தங்கள்
இலிங்கபுராணம்-11000 கிரந்தங்கள்
ஸ்கந்தபுராணம்-100000கிரந்தங்கள்
வராகபுராணம் -24000 கிரந்தங்கள்
வாமனபுராணம்-14000 கிரந்தங்கள்
மச்சபுராணம் -14000 கிரந்தங்கள்
கூர்மபுராணம் - 6000 கிரந்தங்கள்
பிரமாண்டபுராணம்- 12000கிரந்தங்கள்
இவை பத்தும் சிவபுராணங்கள் இவற்றின் கூடுதல் 268000 கிரந்தங்கள்.

கருட புராணம் -6000 கிரந்தங்கள்
நாரதீய புராணம்- 25000 கிரந்தங்கள்
வைணவ புராணம்- 6000 கிரந்தங்கள்

பாகவத புராணம்- 18000 கிரந்தங்கள் ஆக விஷ்ணுபுராணங்கள் நான்கும் சேர்ந்து 55000 கிரந்தங்கள்.

பிரமபுராணம் -10000 கிரந்தங்கள் பதுமபுராணம் - 5500 : கிரந்தங்கள் ஆக, பிரம புராணம் இரண்டும் 65000 கிரந்தங்கள்.

அக்கினியைப் பற்றிய ஆக்கினேய புராணம் 8000 கிரந்தம்

சூரியனைப் பற்றிய பரமகைவர்த்த புராணம் 12000 கிரந்தம்

சிவபுராணம் பத்தும் சாத்துவிக புராணங்கள் சத்துவகுணம் சுகத்திற்கும் ஞானத்திற்கும் இருப்பிடமாகும்.

ஞானசம்பந்தப் பெருமான் காலத்தி லேயே இப்பதினெண் புராணங்களும் நன்மக்களால் பயிலப் பட்டுப் போற்றப் படுவன ஆயின. இவற்றை வியாச முனிவர் இயற்றித் தம் சீடர் சூதருக்குப் பயிற்ற, அவர் முனிவர்கள் பலரும் குழுமிய அவையில் அவற்றைப் பரப்பினார் என்ற சான்றோர் கருத்தும் ஞானசம்பந்தர் பெருமானுக்கு உடன்பாடே.

எங்கு மாகி நின்றானும் இயல்பறி யப்படா
மங்கை பாகம் கொண்டானும் மதிசூடு மைந்தலும்
பங்கமில் பதி னெட்டொடு நான்குக்கு உணர்வுமாய்
அங்கம் ஆறும் சொன்னானும் ஐயாறுடை ஐயனே - 2.6.6

என்ற திருப்பாடல் பதினெண் புராணமும் வேதமும் வேத அங்கங்கள் ஆறும் சிவபெருமான் திருவருளால் உலகில் பரவியுள்ளன என்பதனைக் குறிப்பிடுகின்றது.

இப்புராணங்களைச் சூத முனிவர் பரப்பிய செய்தி ஞானசம்பந்தப் பெருமான் அருளிய திருப்பாசுரத்தில் காணப்படும் 'சூதன் ஒலி மாலை என்றே கவக்கோவை சொல்லே' 3.54.8 என்ற பாசுர அடியால் போதரும் . நாவுக்கரசர் திருவிடைமருதூர்ப் பாசுரமும் (6.16.6) நோக்குக. வேதங்கள் அரிய கருத்துக் களை ஒரு தலைவன் தன் ஏவலனுக்கு ஆணையிடுவது போலக் கூறும். ஆனால் புராணங்கள் அக்கருத்துக்களையே நண்பன் நண்பனுக்கு இன்சுவைபட கூறுவது போலக் கதைகள் வாயிலாகக் குறிப்பிடுதலின் மிகுதியாகக் கல்லாத வரும் எளிதின் சுவைத்துணரும் வகையில் புராணங்கள் அமைதலின் புராணங்களைக் கேட்டுப் பயனடைவார் தொகை மிகுதியாக இருக்கும். புராணங்கள் காப்பியவகையில் வெண்பாப்பட்டியல், தொன்நூல் விளக்கம், பிரபந்த மரபியல் என்ற நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. தமிழில் நூற்றுக் கணக்காகப் புராணங்கள் தோன்றியுள்ளன. அவற்றைப் பொதுவாக 1. மகாபுராணங்கள், 2. இதிகாச அமைப்பில் ஆனவை, 3. சிவபுண்ணியம் சிவதருமம் கூறுபவை. 4. ஆண்டவன் அடியார் வரலாறு பற்றியவை, 5. சாதிப் பெருமை விளக்குவன. 6. தலபுராணங் கள் என்ற தலைப்புக்களில் அடக்கலாம்.

கூர்மபுராணம், இலிங்கபுராணம், மற்சபுராணம் போன்றவை வடமொழி யிலிருந்து தமிழில் மொழி பெயர்த்து அமைக்கப்பட்ட மகா புராணங்களாம். குறிப்பிட்ட ஒரு கடவுளின் வரலாறு கூறும் கந்தபுராணம், விநாயக புராணம் போல்பவை இதிகாச அமைப்பில் ஆனவை. உபதேச காண்டம் வாயு சங்கிதை, காசி காண்டம் போல்வன.

சிவதருமம் கூறுபவை. ஆண்டவனுடைய அடியார் வரலாறு கூறும் பெரியபுராணம், சேக்கிழார் புராணம்... திருவாத ... திருவாதவூரர் புராணம், பட்டினத்துப் பிள்ளையார் புராணம், அருணகிரி நாதர் புராணம், சேய்த் தொண்டர் புராணம், இராமலிங்க சுவாமிகள் புராணம் போல்வன, தமிழில் புதியனவாகப் படைக்கப்பட்ட மூல நூல்களாகிய புராணங்களாகும். செங்குந்தர் புராணம் குலாலர் புராணம் போன்றவை சாதிப் பெருமை கூறுவன.

தேவாரம் தோன்றிய பின்னர் நூற்றுக் கணக்கான தேவாரத்தலங்கள் பெருமை பெறுவன ஆயின. மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்றன் சிறப்பும் பற்றிய தலபுராணங்கள் இந்தத் திருத்தலங்கள் பலவற்றிற்கு வரையப் பட்டன. திருத்தலத்தின் பெயரே புனிதமாகக் கருதப்படச் சான்றோர் பலருக்கும் மதுரை, பழநி, சிதம்பரம், அண்ணாமலை, விருத்தாசலம், தணிகாசலம் எனத் தலப்பெயர்களே இயற்பெயர்களாக வழங்கப்பட்டன. திருத்தலத்தின் பெயர்களை ஒலித்தலே புண்ணியச் செயலாகக் கருதப்பட்டது.

ஐயாறே ஐயாறே என்பீராகில்
அல்லல் தீர்ந்து அமருலகம் ஆளலாமே

என்றார் போன்ற பல திருத்தலப் பெயர்களும் துயர் துடைத்து நலன் தருமாறு தேவாரத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது. திருமுறைகளில் புராணக் கருத்துக்கள் பலவாக உள்ளன. அப்புராண நிகழ்ச்சிகள் கோயில்களில் சிற்பங்களாக வடிக்கப்பட்டுள்ளன. இலக்கியம், சிற்பம் என்ற இரண்டிலுமிருந்து புராணத் தொடர்பு உடையன வற்றை நீக்கி விட்டால் அவை உருக்குலைந்து வடிவழிந்துவிடும். திருக்கோவில்கள் மிகுதியாக உள்ள தமிழ் நாட்டிலேயே தலபுராணங்கள் நூற்றுக் கணக்காகத் தோன்றித் தமிழ் மொழிக்கு அணி செய்துள்ளன. தமிழில் கஉ ஆம் நூற்றாண்டிலிருந்து சென்ற நூற்றாண்டு வரை தலபுராணங்கள் பெரிதும் மதித்து இயற்றப்பட்டன. ஆன்மாக்கள் பிறவித் துயர் நீங்கி வீடு பெறுதலுக்குச் சிறப்பாக மூன்று வழிகள் கூறப்பட்டுள்ளன. அவை இறை வழிபாட்டைத் தவறாது செய்தல், புண்ணியத்தலங்களில் வசித்தல், புராணங்கள் கேட்டல் என்பனவாம்.

சுருங்கக் கூறின் இம்மை வாழ்வு இனிதே அமைய எளிய வழிகாட்டியாக அமைந்து மறுமையிலும் நற்பயன் நல்குவதே தலபுராணங்களின் நோக்கமாகும்.

எனவே, புராணங்கள் போற்றும் புராணனாகிய இறைவனைத் தலையால் தணிவு தோன்றவும் மொழியால் பணிவு தோன்றவும் மனத்தால் துணிவு தோன்றவும் வழிபட்டு அவ்வழிபாட்டின் பயனால் இறைவன் உடல் மிகை உயிரெனக் கரந்தெங்கும் பரந்துளன் என்பதனில் உறுதியான நம்பிக்கை கொண்டு அவன் உகப்பு அனைத்துயிரிடத்தும் அன்பு செய்யும் ஆன்ம நேயமே என்பதனைப் பின் பற்றி "நல்லன செய்தல் ஆற்றேமாயினும் அல்லன செய்தலை" விடுத்து அறவாழ்வு வாழ்ந்து இம்மையில் அமைதியும் மறுமையில் உயர்வும் பெறுதலே மனித வாழ்வின் குறிக்கோளாக அமைதல் வேண்டும் என்பது புலப்படும்.



சிவஞான சுவாமிகளின் செந்தமிழ்த்திறம்

சு.குஞ்சிதபாதம்,
திருவாவடுதுறை ஆதீனப் புலவர்,

(இக்கட்டுரையாசிரியர் சிவஞான சுவாமிகள் செழுந்தமிழ்த் திறத்தை இலக்கிய நயம் இலக்கண நுட்பம் சித்தாந்தத் தெளிவு என்னும் மூன்று நோக்கில் ஆராய்ந்துள்ளார்.)

'மக்கள் தாமே ஆறறிவுயிரே' என்பது தொல்காப்பியம். 'மக்கள் எனப்படுவோர் ஐம்பொறி உணர்வே அன்றி மனம் என்பதோர் அறிவும் உடையர்' என்று பேராசிரியர் விளக்குகின்றார். மன உணர்வு என்னும் பெரும்பேறானது மொழியின் வாயிலாய் வெளிப்படும் போதே சிறக்கின்றது. மன உணர்வு செம்மையாக வெளிப்படுவ தற்கு இடங்கொடுத்து நிற்கும் மொழி களுள் தமிழ் தலையாயது என்பது ஆன்றோர் பலரும் கொண்ட முடிவு. தலைசிறந்த தமிழ் மொழியின் வரம்பினைப் பேணி, மரபினைப் புலப்படுத்தும் இலக்கிய இலக்கண நூல்களை ஆய்ந்து விளக்கித்தமிழ் கூறும் நல்லுலகத்திற்கு உபகாரம் செய்துள்ள அறிஞர் பெருமக்கள் பலர். அவர்களுள் தமக்கெனத் தனிச்சிறப்பான நிலை யினைப் பெற்றுத் திகழ்பவர் திருவாவடுதுறை ஆதீன அருளாளராகிய மாதவச் சிவஞான யோகிகள்.

இலக்கியம், இலக்கணம், தர்க்கம், தத்துவம் எனப் பலதுறை களிலும் உயர் சீரிய செந்தமிழ் நூல்களை அருளிச் செய்துள்ள மாதவச் சிவஞான யோகிகள், சிறந்த நூலாசிரியராகவும், உரையாசிரியராகவும், மொழிபெயர்ப் பாசிரியராகவும், அருள் பழுத்த சிவமாம் தன்மையினராகவும் விளங்கியவர். இவர்தம் நூல்களை ஐயந்திரிபறக் கற்றோர் இவ்வுண்மையினை உணர்வர்.

சிவஞான சுவாமிகளின் செந்தமிழ்ப் புலமைச் சிறப்பு நமக்குப் பலவழிகளில் பயன் தருகிறது. அவற்றைப் பின்வருமாறு பிரித்துக் கொள்ளலாம்.

1) இலக்கிய நயம் காட்டுதல்
2) இலக்கண நுட்பம் காட்டுதல்
3) சித்தாந்தத் தெளிவு காட்டுதல்

இவை ஒவ்வொன்றையும் சில எடுத்துக்காட்டுகள் தந்து விளக்கிச் செல்வது இக்கட்டுரையாகும்.

இலக்கிய நயம் காட்டுதல்

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு

என்னும் முதற்குறளின் மூலம் இரண்டு செய்திகளை அறிந்து கொள்கின்றோம் என்று தமது 'சோமேசர் முதுமொழி வெண்பா' என்னும் நூலில் குறிப்பிடு கின்றார் - மாதவச் சிவஞான சுவாமிகள். குளத்தூர் என்னும் தலத்தில் விளங்கும் சோமேசரை விளித்து இந்தச் செய்தி

களைக் கூறுகின்றார். 'எழுத்தெல்லாம் அகர முதல' என்னும் உவமையின் மூலம் உலகத்திற்குத் தலைவனாய் இறைவன் ஒருவன் உள்ளான் என்ற உண்மையினையும், அந்த இறைவனாகிய பகவனை 'ஆதிபகவன்' என்று குறிப்பிடும்போது, 'ஆதி' என்ற அடையின் மூலம் அப்பகவன் சோமேசனாகிய நீயே என்ற உண்மையினையும் அறிந்து கொள்கின்றோம் என்றும் பாடுகின்றார்.

சீர்கொளிறை ஒன்றுண்டத் தெய்வநீ
என்றொப்பால்
சோர்விடை யால்தெளிந்தோம் சோமேசா -
ஒரில்
அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.

என்பது சோமேசர் முதுமொழி வெண்பா. இதனை, "சீர்கொள் இறை ஒன்று உண்டு என்று ஒப்பால் (உவமையால்) தெளிந்தோம்; அத் தெய்வம் நீ என்று சோர்வு இல் அடையால் தெளிந்தோம் சோமேசா" என்று நிரல்நிரையாகக் கூட்டிக் கொள்ளவேண்டும். "பகவன்' என்ற பொதுப்பெயரால் பலரும் போற்றப் படுதல் "பகவனே ஈசன், மாயோன், பங்கயன், சினனே புத்தன்" என்ற நிகண்டு வாக்கியம் கொண்டு அறியப்படும். அப்பலருள்ளும் முதன்மையாக வைத்துப் போற்றப் பெறுபவன் ஈசனாகிய சிவபிரானே. எனவே பகவன் என்று போற்றப்படுவோர் பலருள்ளும் முதல்வனாகிய பகவன் என்பார் ஆதியாகிய பகவன் என்னும் பொருள்பட ஆதிபகவன் என்றார். ஆகையால் "ஆதி" என்னும் அடை, பகவன் என்பதால் குறிக்கப்படும் பிறரை எல்லாம் நீக்கிச் சிவபிரான் ஒருவனுக்கே 'பகவன்' என்னும் சிறப்பைத் தருகிறது. எனவே, 'அத்தெய்வம் நீ என்று சோர்வில் அடையால் தெளிந்தோம் சோமேசா' என்று குறிப்பிடுகின்றார்.

அன்பிற்கும் உண்டோ அடைக்கும்தாழ்
ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும்.

என்னும் குறள் அனைவரின் சிந்தையிலும் நிறைந்திருப்பது. இந்தக் குறளுக்கு அழகிய இலக்கியச் சான்று ஒன்றினை நமது சுவாமிகள் காட்டியருள்கின்றனர். நளன் வேறொரு உருவத்தில் விளங்குகின்றான். நளனைப் பிரிந்து வாழும் தமயந்தி உருவம் வேறுபட்டு விளங்கும் நளனை ஒரு சந்தர்ப்பத்தில் கண்டபோது, இவன் நளன்தான் என்பதை உறுதி செய்து கொள்ளும் பொருட்டுத் தனது குழந்தைகளை அவன்பால் விளையாட விடுகின்றாள். அப்போது நளன் தன் குழந்தைகளைக் கண்டு உள்ளம் நெகிழ்ந்து, தன்னை யாரென்று காட்டிக் கொள்ள எண்ணாத அந்தத் தருணத்திலும், தாழிட்டு வைக்க முடியாத அன்பு கண்ணீர் வடிவில் வெளிப்படத் தான் நளனென்று தமயந்தி அறியும் வண்ணம் நின்றான். இவ்வுண்மையினை,

தோன்றா வகைகரந்தும் தோன்றலைக்
கண்டு உள்நெகிழ்ந்தும்
தோன்றி நின்றான் முன்புநளன்
சோமேசா-தோன்றுகின்ற
அன்புக்கும் உண்டோ அடைக்குந்தாழ்
ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும்

என்று அழகுறப் பாடுகிறார். தோன்றல் - புதல்வர்.

அறம் என்பது நான்கு தீமைகளிலிருந்து விலகி இருக்கவேண்டும். என்று வள்ளுவப் பெருந்தகை வலியுறுத்துகின்றார். அவை அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் என்பன. தக்கன் பெரிய அளவில் வேள்வி செய்தான். வேள்வி சிறந்த அறம் தான். எனினும் மேற்கண்ட நான்கு தீமைகளையும் உடன் கொண்டு அவ்வேள்வியைச் செய்தமையால் அவ் வேள்வி பெரியதோர் தீவினை ஆயிற்று. இதனை,

தக்கனார் வேள்வித் தவத்தை
மேற் கொண்டிருந்தும்
தொக்க அறம் ஆயிற்றோ
சோமேசா - மிக்க

அழுக்காறு அவாவெகுளி இன்னாச்
சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்.

என்று அருமையாகப் பாடியருள்கிறார்.

தக்கனுக்குச் சிவபெருமானது முழுமுதன்மையினைக் கண்டு அழுக்காறு தோன்றி, அதனால் அம்முழு முதன்மை தனக்கு வேண்டும் என்னும் அவா விளைந்து, இந்த எண்ணம் தவறானது என்று ததீசி முனிவர் சுட்டிக் காட்டியபோது அவர்பால் வெகுளி ஏற்பட்டு, அதன் விளைவாய்ச் சிவநிந்தையாகிய இன்னாச் சொற்களைக் கூறியமை இதன்மூலம் உணரப்பெற்று, அதனால் 'அழுக்காறு, அவா, வெகுளி இன்னாசொல் நான்கும் - இழுக்கா இயன்றது அறம்' என்னும் குறட்கருத்து இனிதே உணரப்படும்.

இனி, சிவஞானபோதத்து எட்டாஞ் சூத்திரத்தில் 'அரன்கழல் செலுமே' என வருமிடத்து, 'அரன் என்பது சுட்டுப்பெயர் மாத்திரையாய் நின்றது' என்று விளக்கம் தருவர் மாதவச் சிவஞான யோகிகள். 'தம்முதல்' என்று சிவபரம்பொருளை ஏற்கனவே அச் சூத்திரத்தில் குறிப்பிட்டு விட்டதால் 'அரன்' என்பது 'அம்முதல்வன்' அதாவது 'அந்தத் தம்முதல்' என்னும் சுட்டுப் பெயராகவே நிற்கின்றது. இத்தகைய அரிய விளக்கத்தை அருளிய யோகிகள் இவ்வாறு சுட்டெழுத்து பெறாமல் வரும் பெயர்ச்சொற்கள் சுட்டுப் பெயராய் நிற்குமா என்னும் ஐயத்தைப் போக்கச் சீவக சிந்தாமணியிலிருந்து மேற்கோள் காட்டுகின்றார். சீவக சிந்தாமணி பதிகத்தில் ககூ-ஆவது பாடலில், ''கற்பாடு அழித்த கனமா மணித் தூண்செய் தோளான்' என்ற நீண்ட அடையடுத்த பெயர்ச்சொல் சுட்டுப் பெயராகவே நிற்பதாகும். இதனை எடுத்துக் காட்டித் தமது கருத்தினை நிறுவுகின்றார் யோகிகள். இவ்வாறு சித்தாந்த சாத்திர உரையில், இலக்கிய வழக்கினைச் சாத்திரம் பேணி நிற்கும் பாங்கினை எடுத்துக் காட்டும் திறம் போற்றத் தகுந்ததாகும். இனி, இரண்டாஞ் சூத்திர முதலதிகரணத்தில் வருகின்ற ஏதுவில், இறுதியில் 'உணர்த்துமாயிட்டு' எனவரும். 'உணர்த்துமாயிட்டு' என்பது உணர்த்துமாகலான் என்று பொருள்படுவதாக விளக்கம் தந்து 'ஆய்' என்பது 'ஆகலான்' என்பதன் திரிபாகும் எனக் கூறுவர். ஆவ்வாறாயின் 'இட்டு' என்று ஈற்றில் (உணர்த்துமாயிட்டு என்பதன் ஈற்றில்) உள்ளதே! அதன்பொருள் என்ன? என்று வினா எழும் அல்லவா. அதற்கு 'இட்டு' என்பது பகுதிப்பொருள் விகுதி என்று விளக்கம் தந்து 'நெஞ்சம் பிளந்திட்டு' என்புழிப் போல' எனக் கலித்தொகை

யினை (முல்லை -க) மேற்கோள் காட்டி அணி செய்வார். இன்னும் ஆறாஞ் சூத்திரத்தில் இரண்டாம் அதிகரணத்தில் 'பாவக மேல் தான் அசத்தாம்' எனத் தொடங்கும் வெண்பாவில் 'பாவகத் தைப் பாவித்தல்' என வரும். இதனில் பாவித்தல் என்பது செய்தல் என்னும் பொருட்டாய் நிற்பது என விளக்கம் தருவார். அவ்விளக்கம் வருமாறு, '' 'பாவகத்தைப் பாவித்தல்' என்புழிப் பாவித்தல் என்பது செய்தல் என்னும் பொருட்டாய் நின்றது'' இவ் விளக்கத்தைத் தெளிவுறுத்தச் சங்க இலக்கிய மேற்கோள்களை எடுத்துக் காட்டித் தமது சித்தாந்தப் பாடியத்தில் செந்தமிழ் மணம் கமழச் செய்கின்றார். ''உண்ணலும் உண்ணேன் வாழலும் வாழேன் (கலித்தொகை பாலை - 22) கறைமிடறு அணியலும் அணிந்தன்று (புறநானூறு-1) என்புழிப்போலக் கொள்க.'' உண்ணலும் உண்ணேன் என்பது உண்ணலும் செய்யேன் எனப் பொருள்படும். பிறவும் அவ்வாறு கொள்க. சிவஞான போதத்து இறுதி வெண்பாவில், ஈற்றில் 'மும்மை மலர்க்கு' எனவரும். இதனில் 'மும்மை' என்றது ஈண்டு எண்ணின்கண் நின்றது; 'தெரிமாண் தமிழ் மும்மைத் தென்னம் பொருப்பன்' என்புழிப்போல'' எனப் பரிபாடல் மேற்கோள் தந்து தமது மாபாடியத்தை நிறைவு செய்து அருள்கின்றார் யோகிகள்.

இலக்கண நுட்பம் காட்டுதல்

தொல்காப்பியச் சிறப்புப் பாயிரத்திற்கும், முதல் சூத்திரத்திற்கும் யோகிகள் அருளிச் செய்துள்ள உரை இலக்கண ஆய்வாளர்களுக்கும், சிறந்த அறிஞர்களுக்கும் பெரும் அருட் கொடையாக விளங்குவது. காய்தல் உவத்தல் அகற்றி அறிஞர்கள் ஆய்ந்து வந்தால் அவர்களுக்கு நன்மை கிட்டும். தொல்காப்பிய முதல் சூத்திரத்திற்குப் பொருள் கூறுமிடத்துப் பழைய உரையாசிரியர்கள், எழுத்துக்களின் பெயரும், முறையும், தொகையும் கூறுவதாகக் குறிப்பிடுவர். ஆனால் யோகிகள் அகர முதல் னகர இறுவாய் உள்ள ஒலிவடிவங்கள் எழுத்து எனப் பெயர் பெறுவதாகப் பொருள் கூறி அதன்மூலம் பல நுட்பங்களையும் எடுத்துக் காட்டுவர். அதுபோல உகரம், இகரம் ஆகியன தமக்குரிய மாத்திரையில் குறைந்து ஒலித்துக் குற்றியலுகரம், குற்றியலிகரம் எனப் பெயர் பெறுவதாகப் பழைய உரையாசிரியர்கள் குறிப்பிடுவர். ஆனால் யோகிகள், முதலெழுத்துக்களின் வரும் உகர இகரங்கள் வேறு, சார்பெழுத்துக்களில் வரும் குற்றியலுகரம், குற்றியலிகரம் வேறு எனக் குறிப்பிட்டு, இவை இயல்பாகவே குறைந்து ஒலிக்கக் கூடியன; எனவே தான் குற்றுகரம், குற்றிகரம் என வழங்கப்படாது குற்றிய லுகரம், குற்றியலிகரம் என வழங்கப் படுவதாக விளக்கம் தருவது மிக அற்புதமானதாகும். இவை போலவே நன்னூல் கூறும் சார்பெழுத்துக்கள் குறித்த விளக்கமும், பாலைத்திணை, இடைச்சொல், சிறுபொழுது முதலியன குறித்த விளக்கங்களும் இலக்கண ஆய்வாளர்களுக்கு இனிய விருந்தாக உள்ளன.

சிவஞானபோதத்து அவை யடக்கச் செய்யுளுள் 'எம்மை உடைமை' என்று வருமிடத்தில் நமக்கு ஓர் ஐயம் தோன்றும். 'எம்மை' என்பதன் ஈற்றில் உள்ள ஐ-உருபு (இரண்டாம் வேற்றுமை) 'உடைமை' என்னும் பெயர்ச்

சொல்லைக் கொள்ளுமா? இரண்டாம் உருபு வினைச்சொல்லைக் கொண்டு நிற்பது தானே முறை எனக் கருதுவோம். 'உடைமை' என்பது 'உடையராந் தன்மை' என்று பொருள் கூறி அதனைக் குறிப்புப் பெயர் என்று குறிப்பிடு கின்றார். இரண்டாம் வேற்றுமை உருபு வினைச்சொல்லைக் கொள்வதே அன்றிக் குறிப்புப் பெயரையும் கொள்ளும் என்பதற்குத் தொல்காப்பிய சூத்திரம் 'இரண்டாகுவதே' (வேற்றுமை யியல்) என்பதன் உரையில் சேனா வரையர் தரும் குறிப்பினைச் சுட்டிக் காட்டி நிறுவுதல் மிகச் சிறப்பாக உள்ளது. அது வருமாறு, ''எம்மை உடைமை என இரண்டாவது, குறிப்புப் பெயர் கோடல் அமையுமென்பது, ''இரண்டாகுவதே'' என்னுஞ் சூத்திரத்துச் சேனாவரையர் ''புகழை உடைமை'' என உதாரணங் காட்டி யாப்புறுத்தமையானும் அறிக''

சித்தாந்தத் தெளிவு காட்டுதல்

சிவஞான சித்தியார் இரண்டாஞ் சூத்திர இரண்டாம் அதிகரணத்தில் இறுதிப் பாடல் முதற்காரணம் குறித்த விளக்கம் தருவது. அவ்விளக்கத்தை அப்பாடல் படிமுறையில் தருகிறது. அதாவது தூல உடம்பிற்கு முதற்காரணம் சூக்கும உடம்பு; சூக்கும உடம்பிற்கு முதல் காரணம் பிரகிருதி (மான்); பிரகிருதிக்கு முதல் காரணம் அசுத்தமாயை (மோகினி); என இவ்வாறு கூறிச் செல்லுகையில் அசுத்த மாயைக்கு முதற்காரணம் சுத்தமாயை (விந்து) என்று கூறுவதுபோல் நமக்குத் தோன்றும். ஆனால் அவ்வாறு பொருள் கொள்ளலாகாது. அவ்வாறு பொருள் கொண்டால் சித்தாந்தத்தோடு முரண் படுதலே அன்றித் தமிழ் இலக்கணத் தோடும் முரண்படும் என்று காட்டு கிறார் நம் மாதவப் பெருந்தகையாம் சிவஞான வள்ளல். அப்பாடல், 'தூலமாம் உருவினுக்குச் சூக்குமம் முதல், அதற்கு - மூலம் மான், அதற்கு மூலம் மோகினி, அதன் முதற்றான் - மேலதாம் விந்து ... என வரும். பாடலில் மோகினி (அசுத்தமாயை) என்று கூறியபின் அதன் முதல் தான் மேலதாம் விந்து என்று கூறியுள்ளதால் அசுத்தமாயையாம் மோகினிக்கு முதல் காரணமாக உள்ளது சுத்தமாயையாம் விந்து எனக் கொள்ளலாமா எனில் கொள்ளலாகாது. ஏனென்றால் பாடலில் வரும் 'முதற்றான்' என்பதனைப் பிரித்தால் முதல் + தான் எனப் பிரியும். முதல் + தான் என்பது இரண்டு வகையாகப் புணரும். அவை க) முதல் +தான் = முதறான், உ) முதல் + தான் = முதற்றான் . முதல் வகைப்படிப் புணர்ந்தாலே முதல்+ தான் என்பதில் உள்ள முதல் என்ற சொல் எழுவாயாகவும், தான் அசையாகவும் விளங்கி, மோகினிக்கு விந்து முதற்காரணம் என்று சித்தாந்தத் தோடு முரண்பட்ட பொருளைத் தரும். ஆனால் பாடலில் 'முதற்றான்' என றகரம் இரட்டித்துப் புணர்ந்துள்ளதால் 'முதலாகிய தான்' என இரு பெயரொட்டுப் பண்புத் தொகையாய் நின்று பொருள் தருதலே பொருத்த முடைத்து. இவ்விளக்கத்தை மாதவச் சிவஞான யோகிகள் அருளிய குறிப்புரையில் இருந்து பெறுகிறோம். எனவே பாடலில் வருகின்ற 'அதன் முதற்றான் மேலதாம் - என்பதற்கு அந்தப் பிரகிருதியின் (மான்) முதலாகிய தானே (அசுத்த மாயையே) மேலதாம் (அதாவது பரம முதற்காரணமாம்) என்று பொருள்

கிட்டுகிறது. எனவே புணர்ச்சி விதியினை மறவாமல், சொற்கள் புணர்ந்துள்ள முறைமையினைக் கண்டு, அதற்கேற்ப பொருள் கொண்டால் அப்பொருளே சித்தாந்தத்திற்கும் முரணாத வண்ணம் இருக்கும் என்று காட்டும் திறன் தமிழ்ச் சைவமக்கள் என்றென்றும் உளம் கொண்டு போற்றும் சிறப்புடைய தாகும். தமிழும் சித்தாந்தமும் பின்னிப் பிணைந்துள்ள பாங்கினை உணர்த்தும் மாதவச் சிவஞான யோகிகளின் திருவடிகளை உளங்கொண்டு போற்றுவோமாக!



சோதி விளக்கொளியில் சுடர்விட்டுத்திகழும் ஆதி மாயூரநாதரின் அழகுக் கோலக் காட்சி.

கச்சியப்ப முனிவரும் கந்தக் கடவுளும்

சிவத்தமிழ்ச்செல்வர்,
முனைவர். ந.இரா.சென்னியப்பன்

(இக்கட்டுரை கச்சியப்ப முனிவர் அருளிய நூல்களிலிருந்து கந்தப் பெருமானின் சிறப்பை எடுத்துக் காட்டு கிறது. மேலும் கந்தக் கடவுளின் அவதாரங்கள், பெருமைகள், தத்துவங் கள் ஆகியவற்றை விரிவாகப் பாடிய கச்சியப்ப முனிவர், சிவபெருமானுக்கும் கந்தக் கடவுளுக்கும் வேறுபாடு இல்லை என்று அருளிய சிறப்பையும் கந்தக் கடவுளின் திருவுருவச் சிறப்பையும், விளக்கமாக எடுத்துரைக்கின்றது.)

தமிழ்க்கடவுள் முருகப் பெருமான் வழிபாடு மிகத் தொன்மை யானது. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் முருகப் பெருமான் வழிபடப் பெற்றமைக்குரிய சான்றுகள் அகழ் வாய்வுகளில் கிடைக்கின்றன. தொல் காப்பியம் - சேயோன், வேலன் வெறியாட்டு முதலியவற்றைக் குறிப்பிடு கின்றது. சங்க இலக்கியங்களில் திரு முருகாற்றுப்படை, பரிபாடல்கள் - முருக வழிபாடு பற்றிய செய்திகளை விரிவாகக் குறிப்பிடுகின்றன. காப்பியங் கள் பக்தி இலக்கியங்களில் ஆங்காங்கே முருகனைப் பற்றியக் குறிப்புகள் காணப் பெறுகின்றன. கச்சியப்ப சிவாச்சாரியார் பாடிய கந்தபுராணம் முருகனைப் பற்றிய முழுக்காப்பியமாகும். கஎஆம் நூற்றாண் டில் தோன்றிய கச்சியப்ப முனிவர் ஆறு புராணங்கள், எட்டுச் சிற்றிலக்கியங் களைப் பாடிய முனிபுங்கவர் ஆவர். பதினெட்டாயிரத்துக்கு மேற்பட்ட பாடல்களைப் பாடிய பைந்தமிழ்ப் பாவலர் ஆவர். கவிராட்சசர் என்ற கவிப்புலமை பெற்ற மெய்ப்புலவர்.

கச்சியப்ப முனிவர் நூல்களில் முருகப் பெருமானைப் பற்றிய செய்திகள் மிக்குள்ளன. திருத்தணிகைப் புராணம், திருத்தணிகையாற்றுப்படை, திருத் தணிகைப்பதிற்றுப்பத்தந்தாதி ஆகியவை கந்தக்கடவுளின் பெருமைகளைக் கட்டுரைப்பன. பேரூர்ப்புராணம் - அபயப்படலம், மருதவரைப்படலம் ஆகிய படலங்கள் கந்தக் கடவுளின் சொந்தச் செய்திகளைப் பேசுவன. உமாதேவியார் சரவணப் பொய்கையில் விளையாடிய ஆறுகுழந்தைகளையும் கைகளால் எடுத்தணைத்து ஒன்றாக்கினார். அப்போது இறைவன், "ஆறு உருவங்களையும் ஒரே உருவமாக ஆக்கியதால் கந்தன் என்று பெயர் பெற்றான் நமக்குரிய ஆறுமுகங்களே ஆறுமுகமாக அமைந்தன'' என்று கூறுவதாகத் திருத்தணிகைப்புராணம் சீபரிபூரண நாமப் படலத்தில் (பாட்டு எண் 29) கச்சியப்ப முனிவர் பாடியுள்ளார்.

கந்தக் கடவுளின் அவதாரங் களையும், பெருமைகளையும், தத்துவங் களையும் விரிவாகப் பாடியுள்ள

கச்சியப்ப முனிவர் சிவபெருமானுக்கும், கந்தக் கடவுளுக்கும் வேறுபாடு இல்லை என்பதைப் பல விடங்களில் பாடியுள்ளார். 'சூரபன்மாவை யழிக்க அரனே கந்தன் ஆனான்' என்று திருத்தணிகைப் புராணம் கடவுள் வாழ்த்திலேயே குறிப்பிட்டுள்ளார்.

செம்மைய ஞானசத்தித்
திருவுருவம் கொண்ட செம்மல்
எம்மில் வேறல்லன், யாமும் அவனில்
வேறல்லேம் கண்டீர்

என்று இறைவனே கூறுவதாகக் காட்டியுள்ளார்.

'ஐந்துமுகன், ஆறுமுகன் என்ற இரண்டு திருவுருவங்களிலும் சிவம் என்ற நாமே உள்ளேம், ஐந்து முகத்தோடு நாம் தரும் வரங்கள் ஆறுமுகத்தவன் தருவதாகும்' என்று இறைவன் கூற்றாக நிலை நாட்டியுள்ளார்.

ஆங்கவன் நமது சத்தியாதலின்
நம்மைப்போல
ஒங்குவன்...' என்றும் பாடியுள்ளார்.

சிங்கமுகன் - சூரபன்மாவாகிய அண்ணனுக்கு அறிவுரை கூறுகின்றான். கந்தக் கடவுளுடன் போர் வேண்டா, நமக்கு வரம் தந்த சிவபெருமானுக்கும் கந்தக் கடவுளுக்கும் வேறுபாடில்லை. 'இறைவன் நமக்கு அருள் செய்யும் போது முகம், கை, கண் என்ற மூன்றும் முப்பதாகக் கொண்டு அருள் செய்தான். கந்தக் கடவுளாகப் போரிட வந்தபோது முகம், கை, கண் முப்பதாகவே உள்ளன. இவ்வாறு உருவத்தால் கந்தக் கடவுளைச் செம்மேனிச் சிவனாகவே தெளியலாம்' என்று பகைவரும் செவியுறுத்துவதாகப் பாடுவதில் வேறுபாடின்மையைக் காணலாம். இறைவனுக்கு ஐந்து முகங்கள். பதினைந்து கண்கள், பத்துக் கைகள் ஆக முப்பதாகும். கந்தக் கடவுளுக்கு ஆறு முகங்கள், பன்னிரண்டு கண்கள், பன்னிரண்டு கைகள் ஆக முப்பதாகும்.

திருத்தணிகைப் புராணம் சீபரிபூரண நாமப்படலம் 614 பாடல்களில் கந்தபுராணச் செய்திகள் முழுவதையும் பாடியுள்ளார். சூரபன்மா பற்றிய முன்கதை நிகழ்ச்சிகளையும், சூரன், பன்மா என்ற இருவர் தவம் செய்து ஒருவரானார் என்ற செய்திகளையும், சூரன் மயிலானான், பன்மா கோழிக் கொடியானான் என்ற செய்திகளையும், குறிப்பிட்டுள்ளார். கந்த புராணத்தில் இல்லாத செய்திகள் இவை.

'இருபேர் உருவின் ஒருபேர் யாக்கை' என்று திருமுருகாற்றுப்படையில் இப்புராணச் செய்தியுள்ளது. அதனால் கச்சியப்ப முனிவர் அதனைப் பாடியிருக்க வேண்டும்.

திருத்தணிகைப் புராணத்தில் அகத்தியனருள் பெறு படலம் மிகச் சிறந்த படலமாகும். அகத்தியர் செந்தமிழையும், சிவஞானத்தையும் திருத்தணிகை முருகனிடம் பெற்றார். முருகப் பெருமானின் பதினாறு திருவுருவங்கள் மிகச் சிறப்பாகக் காட்டப் பெற்றுள்ளன. திருத்தணிகை முருகப் பெருமானுக்கு ஞானசத்தி தரன் என்பது பெயர். ஞானசத்தி என்ற வேலைத் தரித்திருப்பதால் ஞானசத்திதரன் என்று பெயராயிற்று. ஞான சத்திதரன் முதல் உருவமாகத் தொடர்ந்து பதினைந்து திருவுருவங்களின் அமைப்பைப் பாடியுள்ளார்.

1) ஞானசத்திதரன் - ஒருமுகம் இருகைகள் வலக்கையில் ஞான சத்திவேல்,

இடக்கை தொடையில் வைத்தநிலை, இச்சை, ஞானம், கிரியை மூன்றும் மூன்றிலையாகக் கொண்டுள்ளது ஞானசத்திவேல்.

2) **கந்தன்** - ஒருமுகம், இருகைகள் வலக்கையில் தண்டைப் பிடித்து இடக்கை இடுப்பில் வைத்த நிலை. கோவணம் அணிந்த கோலம். ஐம்புலன் களை வென்றோர் இறைஞ்ச அருள் வழங்குவார்.

3) **தேவசேனாபதி** - ஆறுமுகம், பன்னிருகை தேவியை வலத்தொடை மேல் அமர்த்தி அணைத்த கை அபயம், கேடயம், வாள், சூலம், வச்சிரம், வேல், வில், கதை ,கோழிக்கொடி, தாமரை, அம்பு என்ற முறையில் அமைந்த கைகள்.

4) **சுப்பிரமணியர்** - ஒருமுகம், இரு கைகள். அழகிய கடகம் அணிந்த இடக்கை இடையில் வைத்த நிலை. அஞ்சல் என அபயங் கொடுக்கும் வலக்கை. வந்து வணங்குவோர்க்கு அருள் பொழியும் கருணைக் கண்கள்.

5) **களிற்றூர்திப் பெருமான்** - ஒருமுகம், இருகைகள், கருணை பொழிவிழி யிரண்டு. இடக்கை - வரதம், கோழி, வலக்கை, வேல் வாள்.

6) **சரவணபவன்** - ஆறுமுகம், பன்னிரு கைகள், வலக்கை - அபயம், இடக்கை - வரதம், ஏனைய கைகளில் வேல், கேடயம், மணி, தாமரை, சேவல், கதை, உளி, அம்பு, வாள், வில்.

7) **கார்த்திகேயன்** - ஆறுமுகம், ஆறு கைகள். இடக்கை - வரதம், வச்சிரம், கேடயம், வலக்கை - அபயம், வேல், வாள்.

8) **குமாரன்** - ஒருமுகம், நான்கு கைகள் இடக்கை - கோழி, கேடயம், வலக்கை; வேல், வாள்.

9) **ஆறுமுகன்** - ஆறுமுகம், பன்னிரு கைகள், வலக்கை - அபயம், வேல், அம்பு, வாள், சக்கரம், பாசம், இடக்கை - வரதம், வச்சிரம், வில், கேடயம், கோழி, தோட்டி, மயில் மீது அமர்ந்த அமைப்பில் உருவம். இடப்பால் தெய்வயானை, வலப்பால் வள்ளி நாச்சியார்.

10) **தாரகாந்தகன்** - ஆறுமுகம், பன்னிரு கைகள், வலக்கை - அபயம், வாள், சூலம், சக்கரம், உலக்கை, வேல் இடக்கை - வரதம், கோழி, கேடயம், தோட்டி, பாசம், வச்சிரம். பன்னிரு விழிகளும் கருணை மழை பொழியும் நிலையில் அருட்பார்வை.

11) **சேனாபதி** - ஆறுமுகம், பன்னிரு கைகள். வலக்கை - அபயம், உலக்கை, வாள், சூலம், வேல், தோட்டி. இடக்கை - வரதம் வச்சிரம் வில் தாமரை தண்டு கதை.

12) **பிரமசாத்தன்** - ஒருமுகம் , நான்கு கைகள். இடக்கை - வரதம், குண்டிகை. வலக்கை - அபயம், அக்குமாலை, எல்லா உலகும் படைக்கும் ஆற்றல் உடைய நிலை.

13) **வள்ளி கல்யாணசுந்தரர்** - ஒருமுகம், நான்கு கைகள். வலக்கை - அபயம், உருத்திராக்க மாலை, இடக்கை - ஒரு கை இடுப்பில் வைத்த நிலை. மற்றொரு கையில் கமண்டலம் வள்ளி நாச்சியாரு டன் மணக்கோலம்.

14) **பாலசுப்பிரமணியன்** - ஒருமுகம், இருகைகள். வலக்கையில் தாமரை, இடக்கை இடுப்பில் வைத்த அமைப்பு குழந்தை முகம், கால்களில் கிண்கிணி அணிந்த அமைப்பு.

15) **கிரவுஞ்சதாரி** - ஆறுமுகம் எட்டுக் கைகள். வலக்கை - அபயம் வேல், வாள் அம்பு. இடக்கை - வச்சிரம், கேடயம், வரதம், வில்.

16) **மயிலூர்திக் கோமான்** - ஒருமுகம் நான்கு கைகள். வலக்கை - அபயம், வேல். இடக்கை வரதம், வச்சிரம்.

இன்னும் இவை போன்ற உருவங்களை அமைப்போர், வழிபடு வோர் கந்தன் உலகத்தையடைந்து பேரின்பம் பெறுவர்.

கந்தக்கடவுள் தமிழ்க் கடவுள் ஆதலின் அகப்பொருள் துறைகள் புறப்பொருள் துறைகள் முழுவதையும் நடாத்திக் காட்டியவர். களவு முறைப்படி வள்ளி நாச்சியாரையும், கற்பு முறைப்படி தெய்வ நாச்சியாரையும் மணந்தவர் புறப்பொருள் முறைகளைப் போர் முறையில் காட்டியவர். தணிகைப் புராணத்தில் களவுப்படலம், வள்ளி யம்மை திருமணப் படலம் அகப் பொருள் மரபுகள் முழுவதையும் காட்டுவன. பேரூர்ப்புராணம் தெய்வயானை திருமணப் படலம் கற்பு மணத்தைக் காட்டும். சீபரிபூரண நாமப் படலம் முழுதும் புறப் பொருள் மரபைக் காட்டும். பேரூர்ப் புராணம் மருதுவரைப் படலம் கந்தக் கடவுளுக்குச் செய்யும் அபிடேக முறைகளை பிரித்துக் கூறும். இத்தகைய அபிடேகம் வேறு எங்கும் கூறப்படவில்லை.



யாகசாலை தத்துவமும் - மஹாகும்பாபிஷேகமும்

சிவாகம ரத்னாகரம் - சிவாகம சித்தாந்த சரபம்
சிவ.ஸ்ரீ.ஏ.வி.சுவாமிநாத சிவாச்சாரியார்
முதல்வர் - சிவபுரம் வேதசிவாகம பாடசாலை
மயிலாடுதுறை - 1.

(இக்கட்டுரை யாகசாலையின் தத்துவமும் மகா கும்பாபிஷேகம் செய்யப் படுவதின் நோக்கமும், பயனும் எடுத்துரைக்கிறது.)

யஸ்யாஹுராகமவித:பரிபூர்ண சக்தே:
அம்சேக்ரியத்யபி நிவிஷ்டமும் ப்ரபஞ்சம்
தஸ்மை தமால ருசி பாஸுர கந்தராய
நாராயணீஸஹசராய நமஸ்ஸிவாய

யாகசாலை தத்துவம்

'சம்பு' என்ற சொல்லுக்கு ஸுகங்களின் பிறப்பிடம் என்று பொருள். எல்லாவுயிர்க்கும் ஈசனாகிய சிவபெருமான் ஆன்மாக்களின் மீது கொண்டருளிய பெருங்கருணையினால் அவை ஈடேறும் பொருட்டு அவ்வான் மாக்களுக்கு தனு கரண புவன போகங் களை அருளி வீடு பேற்றின்பமும் அருளுவார்.

ஆன்மாக்கள் தம்மை வழிபட்டா லன்றி வீடு பேறு எய்தல் இயலாது என்ற காரணம் பற்றியே அவற்றிற்கு உடலும், உறுப்புக்களும் தந்து தம்மை வழிபடு தற்குரிய இடமாக இப்பூவுலகையும் படைத்தார்.

ப்ருகிருதி மாயை எனப்படும் இயற்கையாகிய இவ்வுலகு ப்ருதிவி தத்துவம் முதல் ப்ருகிருதி தத்துவமீறாக தத்துவங்கள் இருபத்து நான்கிலும் அமைந்து நிற்கும்.

இனி, ஆன்மாக்கள் புருஷ தத்துவ மாகும். இவை சிவபெருமானுடைய பெருங்கருணையினால் தனுவும் கரணமும் பெற்று (உடலும் கருவிகளும்) இவ்வுலகை (புவனம்) அடைந்து நின்று போகங்கள் துய்ப்பதையே மேற்படி தத்துவங்கள் உணர்த்தும். வினைநீக்கம் பெறுதற்பொருட்டு வரும் உயிர்கள் உலகியலில் மயக்கமுற்று மேலும் வினைகள் சேர்ப்பதில் முனைவதை நியதி முதல் மாயை ஈறாகவுள்ள தத்துவங் கள் ஏழும் உணர்த்துகின்றன.

ஐந்தெழுத்து ஓதுதல், ஆன்மார்த்த பூசை புரிதல்களாகிய கர்மாக்களினால் மாயையை விடுத்து உண்மை அறிவு பெறுதல் முதல் ஸாலோக ஸாரூப ஸாமீப ஸாயுஜ்யம் எனப்படும் வீடு பேற்றினைப் பெறுதலை சுத்த வித்தை முதல் சிவ தத்துவம் ஈறாக உள்ள தத்துவங் கள் ஐந்தும் உணர்த்தும். எனவே இவையனைத்தையும் வகைப்படுத்தி முப்பத்தாறு தத்துவங்களாக நமது சைவ சித்தாந்தம் கூறுகிறது. மஹா கும்பாபி

ஷேகம் போன்ற நிகழ்ச்சிகளில் அமைக்கப்படும் யாகசாலையும், அதில் செய்யப்படும் பூசைகளும் மேற்படி தத்துவக் கருத்துக்களைத் தெள்ளத் தெளிவாக நமக்கு உணர்த்துகின்றன.

யாகசாலை

நான்கு வாயில்களுடனும், பதினாறு தூண்களுடனும் அமையும் யாகசாலை ஐந்து கலைகள், முப்பத்தாறு தத்துவங்கள் ஆகியவற்றைத் தன்னகத்தே கொண்டு சிவபெருமான் எழுந்தருளும் மந்திர மய மண்டபமாகக் காட்சி யளிக்கிறது. மேற்கு வாயில் நிவ்ருத்தி கலையாகவும், ப்ரதிஷ்டாகலை வடக்கு வாயிலிலும், வித்யா கலை தெற்கு வாயிலிலும், சாந்தி கலை கிழக்கு வாயிலிலும், மண்டபத்தின் மேல்புற வாயில் (கண்ணுக்குப் புலப்படாத ஊர்த்வ முகவாயில்) சாந்தியதீத கலை யாகவும் பூசிக்கப் பெறுகின்றன.

ஆன்மார்த்த பூசை முறையும், யாகசாலை பூசை முறையும் சற்றேறக் குறைய ஒரே மாதிரியான அமைப்பிலேயே சிவாகமங்கள் கூறியுள்ளன. இரண்டிலும் முதலில் ஸுர்ய பூஜை, த்வார பூஜை, கர்ப்பா வரண பூஜை, பீட பூஜை, சிவபூஜை, ஆகியன தத்துவங்கள் அடிப்படை யிலேயே செய்யப்படுகின்றன.

யாகசாலை பூசைக்குச் செல்லும் பூஜகர் ப்ருதிவி முதல் மாயை முடிய முப்பத்தியொரு தத்துவங்களை மனதி னால் விடுத்து சுத்தவித்தைமயமான மண்டப வாயிலை அடையுமாறு ஆகமங் கள் கூறுகின்றன.

''ப்ருதிவ்யாதி மாயாந்தம் ஏகத்ரிம்சத் தத்துவானி மனஸா ஸந்த்யஜ்ன், சுத்தவித்யாதத்வ மயம் பூஜாஸ்தானம் ப்ரவிஸ்ய'' என்று அகோர சிவாசாரியார் பத்ததி தெளிவாகக் கூறுகிறது.

இனி, ப்ருதிவீ முதல் ஒவ்வொரு தத்துவமாகக் கடந்து ஈறாயுள்ள சிவத்தொடு கலந்து நிற்கும் வீடு பேற்றினைக் கூறுமுகமாகவே யாகசாலை பூஜை அமைவதைக் காண முடிகிறது. முதலில் முப்பத்தியொரு தத்துவங் களைக் கடந்து சுத்தவித்தை மயமான மண்டபம் அமைந்துள்ள இடத்தை யடைந்து கிழக்கு வாயிலைக் கடந்ததும் சுத்த வித்யா தத்துவத்தைக் கடந்ததாக எண்ணி முதலில் ஸுர்ய பூஜை செய்ய வேண்டும்.

ஸுர்யோஹம் பாவனையுடன் சிவஸுர்யனை பூசித்து நிறைவில் அப்பாவனை நீங்குதற் பொருட்டு விபூதி தரிக்கவேண்டும். இது ஈஸ்வர தத்துவத்தைக் கடந்ததாகும். எப்படி யெனில் ஈஸ்வர தத்துவம் உருவத்துடன் கூடிய ஸகள வடிவத் திருமேனியைக் குறிக்கும். ஸுரியன் சிவபெருமானு டைய ஸ்கள வடிவம்.

''திவாகரஸ்து ஸகள; நிஷ்களஸ்து ஸதாசிவ:'' என மூலாகமப் ரமான வசனமிருப்பதால் இதனையறிய முடிகிறது. எனவே தான் ''சிவஸுர்யன்'' என்றும் போற்றப்படுகிறார். ஸகள வடிவான ஸுர்யனைப் பூசித்து பாவனை நீங்க விபூதி தரிக்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருப்பதால் ஈஸ்வர தத்துவத்தைக் கடந்ததாக எண்ணி நிவ்ருத்தி கலையமைந்துள்ள மேற்கு வாயில் வழி உட்புகுந்து நான்கு வாயில்கள், ஸப்த விம்சதி கலச பூஜை எனப்படும் இருபத்தியேழு கலசங்கள்,

மேற்கு வாயிலில் நித்ய த்வார பூசை ஆகியவற்றை அவற்றிற்குரிய மந்திரங் களினால் பூசித்த பிறகு மந்த்ரேச பதம் எனப்படும் சதாசிவ தத்துவ மயமாக யாகசாலை மண்டபத்தை எண்ணுதல் வேண்டும். பிறகு பூத சுத்தி எனப்படும் அகப்புற உடற் தூய்மை, ந்யாஸம் எனப்படும் உடலில் மந்திரப்பதிவு செய்து கொள்ளல், அந்தர்யாகம் எனப்படும் அகப்பூசை, ஸ்தானசுத்தி எனப்படும் இடத்தூய்மை, திரவிய சுத்தி எனப்படும் பூசை உபகரணங்கள் தூய்மை, நமது பற்கள் நாக்கு வாய் ஆகிய எச்சில் இடங்களின் வழி வருவதால் மந்திரங்களுக்கு சுத்தி செய்வதாகிய மந்திர சுத்தி, ஆகிய நால்வகைத் தூய்மைக் கிரியைகளைச் செய்து ஐந்தாவது சுத்தியாகிய லிங்க சுத்தி எனப்படும் சிவபெருமானைப் பூசித்தலுக்காக 'சிவோஹம் பாவனை' எனப்படும் அவனே தானேயாகும் நிலை பெறுதல் ஆகியவற்றினால் சதாசிவ தத்துவமும் விடுபட்டதாக எண்ணுதல் வேண்டும். ஆக இதுவரை கடக்கப்பட்ட தத்துவங்கள் முப்பத்து நான்கு.

இனி, பெருமான் எழுந்தருளும் பீடத்திற்கு 'வேதிகா' என்று பெயர். பெண் பாற் சொல்லிலேயே அமைந் துள்ள இம்மேடை சக்திதத்துவ மயமானது. ஏனெனில் வேதிகைக்கு கீழ்புறம் ஆதார சக்தி எனப்படும் ஆமையின் மேல்அமரும் பூமி சக்தியைப் பூசித்து அதன் மேல் அனந்தாஸனம், சிம்மாஸனம், யோகாஸனம், பத்மா ஸனம், விமாலாஸனம் எனப்படும் பஞ்சாஸனங்களைப் பூசித்து அதன் மேல் 'குடிலை' எனப்படும் சக்தியை பூசிக்க வேண்டும். இக்குடிலையே 'உன்மனா' எனப்படும் பதினாறாவது கலையாகும். இதுவே பிந்து. இதன் நாதமே சிவ பெருமான்.

''ஸமனாந்தம் பாசஜாலம் உன்மன்யந்தே பரஸ்ஸிவ:'' என மூலாகமம் - ஷோடச கலா ப்ராஸாத விளக்கம் கூறுமிடத்தில் வசனமிருப்ப தால் அறிய முடிகிறது. எனவே சக்தி தத்துவ மயமான வேதிகையைப் பூசித்து அதனை சிவாஸனம் என்று எண்ணி அதன் மேல் சிவபெருமானைப் பூசிக்க முற்படும் பொழுது முப்பத்தைந்தாவ தாகிய சக்தி தத்துவமும் விடுபட்டதாக எண்ணுதல் வேண்டும்.

இப்படி முப்பத்து ஐந்து தத்துவங் களைக் கடந்து நிற்கும் பெருமானோடு, கலந்து நின்று ஆகம விதிப்படி பூசித்தலே பேரின்பம். இப்படி முறையாகப் பூசிப்பதால் பூஜகர் மட்டுமே பேரின்பமடைகிறார் என்று பொருளல்ல. எல்லோராலும் செய்ய இயலாத இக்கிரியைகளை முறையான பயிற்சிகளினாலும், குருமுக உபதேசங் களினாலும் பெற்று சமய, விசேஷ, நிருவாண தீட்சைகளுடன் ஆசாரிய அபிஷேகம் பெற்று இவற்றினால் பக்குவமும் தகுதியும் முழுமையாகப் பெற்ற சிவாச்சாரியார், அனைத்து பக்தர் களின் சார்பாக ஒரு ப்ரதிநிதியாகவே இப்பூசைகளை முறையாகச் செய்வார். இதன் பொருட்டே பூசைகள் துவங்கு முன் ''இவ்வழிபாட்டில் கலந்து கொள்ளும் அனைவருக்கும் ஸர்வ மங்களங்களும், எல்லா நன்மைகளும் உண்டாகும் பொருட்டு இப்பூசையைச் செய்கிறேன்'' என்று ஆசாரியர் சங்கல்பம் செய்து கொள்வார். மேலும் சங்கல்பத்தில் கலந்து கொள்ளும் பக்தர் களும் தேங்காய், பழம், வெற்றிலைப்

பாக்கு, நிரம்பிய தாம்பாளத்தைக் கையெலெடுத்து ஆசாரியரை நோக்கி ''உலக நன்மையின் பொருட்டு எங்கள் ப்ரதிநிதியாக நீரே இப்பூசைக்கிரியை களை பெருமானுக்கு முறையாகச் செய்து, பலன் பெற்றுத் தாரும்'' என்று வேண்டிக் கொள்ளும் ''ஆசாரிய வரணம்'' எனப்படும் நிகழ்ச்சியும் செய்யப்படுகிறது.

கும்பாபிஷேகம்

ஆவர்த்தம், புனராவர்த்தம், அநாவர்த்தம், அந்தரிதம் என கும்பா பிஷேகம் நால் வகைப்படும். புதிதாக ஆலயம் அமைத்து அதில் புதிய விக்ரஹங்களை ப்ரதிஷ்டை செய்து செய்யப்படுவது ஆவர்த்தன கும்பா பிஷேகம். பழைய ஆலயத்தைப் புதுப்பித்தும் அவ்வாலயத்தில் உள்ள விக்ரஹங்களுக்கு அஷ்டபந்தன மருந்து சாத்தியும் செய்யப்படுவது புனராவர்த் தன கும்பாபிஷேகம். கோயில் இல்லாமல் இருக்கும் பழைய விக்ரஹங் களுக்கு கோயில் அமைத்தும், விக்ரஹம் இல்லாமல் இருக்கும் கோயிலில் விக்ரஹம் அமைத்தும் செய்யப்படுவது அனாவர்த்தன கும்பாபிஷேகம். முறை யாக அமைத்து கும்பாபிஷேகம் நடைபெற்ற திருக்கோயிலில் இயற்கை சீற்றத்தினாலும், கள்வர்களினாலும் ஏற் படும் பாதிப்புகளைச் சீர்செய்து செய் யப்படுவது அந்தரித கும்பாபிஷேகம்.

பெருமான் உறையும் தலமாத லால் கோ+இல் = கோயில் என்றும், ஆன்மாக்கள் ஒடுங்கும் இடமாதலால் ஆ+லயம் = ஆலயம் என்றும் புகழப் படும் திருக்கோயில்கள் நமது பண்டைய கலாச்சாரத்தையும், கலைத்திறனையும் எடுத்தியம்பும் பொக்கிஷமாக உள்ளன. கண்ணுக்குப் புலப்படாத மின்சாரத்தை ஒயர்களின் மூலம் கட்டுப்படுத்தி விளக்குகளின் மூலம் ஒளியையும் இன்னும் பிற சாதனங்களின் மூலம் அதன் பயனை நாம் முழுமையாகப் பெறுவது போல், எங்கும் பரவியிருக்கும் இறையருளை மந்திரங்களினால் திருக் கோயிலில் ஒருமுகப்படுத்தி ஒளியாகப் பெருமானுடைய திருமேனிப்ரகாசத்தை யும், அதனை தரிசிப்பதால் உண்மை யறிவு, அமைதி, நிறைவு, ஆற்றல் மற்றும் சகல நன்மைகளும், பேரின்ப மும் கிடைக்கச் செய்வதே கும்பாபிஷே கக் கிரியைகளாகும்.

மஹாகும்பாபிஷேக நிகழ்ச்சியில் அறுபத்து நான்கு கிரியைகள் செய்யப் பட வேண்டும். விரிவஞ்சி இத்துடன் நின்றாலும் ஒவ்வொன்றும் பல கோடி நன்மைகளைத் தரத்தக்கதாகும் என்றால் மிகையாகாது.

இன்னதன்மையன் என்று அறிய வொண்ணாப் பெருமான் நம்மீது கொண்ட பெருங்கருணையினால் எளிவந்த நாம் அமைக்கும் பிரானாகி திருக் கோயிலில் வந்தமர்ந்து அருள் பாலிக்கும் நிகழ்வே ப்ரதிஷ்டையாகும்.

கருவறையைப் பழுது பார்த்தல், பீடத்தில் அஷ்டபந்தனம் சாத்துதல் போன்ற கிரியைகளினால் பெருமானு டைய பூசைக்கு இடையூறு ஏற்படா வண்ணமும், திருமேனியில் இறையருட் பிரகாசம் மேலும் அதிகரித்து விளக்கம் பெறுமாறு இருக்கவுமே. சிறப்பான முறையில் யாகசாலை அமைக்கப் பட்டும், ஒன்று, ஐந்து, ஒன்பது என்ற எண்ணிக்கைகளில் குண்டங்கள் அமைத்தும் ஒன்று, இரண்டு, நான்கு, ஆறு, எட்டு என்ற காலங்களின்

அடிப்படையில் சக்திக்குத் தகுந்தவாறு பூசைவேள்விகள் நிகழ்த்தப்படுகின்றன.

மூலக் கருவறையில் இலிங்கம் அல்லது பிம்ப வடிவில் எழுந்தருளி யிருக்கும் பெருமானை ஞானத் திரு மேனி வடிவினதாகிய குடத்தில் எழுந்தருளச் செய்து அதனை யாகசாலை யில் வேதிகையில் இருத்தி முன்கூறிய விசேஷ பூஜைகளைச் செய்தும், இக் காலங்களில் கருவறையைப் பழுது பார்த்தும், பீடத்தில் அஷ்டபந்தனமருந்து சாத்துதலும் செய்வர்.

யாகசாலையில் சிவாகம விதிப்படி செய்யப்படும் பூஜை, வேள்விகளினால் திருக்குடத்தில் அமர்ந்த பெருமானுடைய இறையருட் ப்ரகாசம் மேலும் மேலும் அதிகரித்துக் கொண்டேயிருக்கும். நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம், சூரியன், சந்திரன், உயிர் ஆகிய எட்டும் பெருமானுடைய சரீரங்களாகும். இதனையே அஷ்ட மூர்த்தி என்பர். பஞ்ச பூதங்கள் சூரிய சந்திரர்கள் ஆகிய ஏழும், இவ்வேழையும் அனுபவிக்கும் உயிர் களும் இவ்வுலகும் அதன் இயக்கமும். இவை எட்டிலும் ஒவ்வொன்றிலும் பெருமான் நீக்கமற நிறைந்திருப்பது அஷ்டமூர்த்தி தத்துவம். இவையே யாகசாலையில் அமைக்கப் படும் குண்டங்களில் பூசிக்கப்பெற்றும், ஆகுதி வளர்க்கப்பட்டும் ஒவ்வொரு கால முடிவில் திருக்குடத்தில் அமர்ந்த பெருமானுடன் சேர்க்கப் பெறுகின்றன.

நிறைவில் அத்திருக்குடப்புனித நீரில் நிறைந்த பெருமானைக் கருவறை யில் லிங்கத்திருமேனியில் சேர்ப்ப தாகிய மஹா கும்பாபிஷேகம் செய் வதனால் திருக்கோயில் மேலும் வளம் பெறுவதுடன் தரிசிக்கும் பக்தர்கள் எண்ணிலடங்கா நன்மைகள் பெறுவர்.

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயது; எல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே

அட்ட பந்தனம்

திரு. ச.கணேசன்,
கம்பன் கழகம், காரைக்குடி

(அட்டபந்தனம் பற்றி விளக்கம் - அட்டபந்தன மருந்தில் கலக்கும் பொருள்கள் - கலக்கும் முறைகள் - அட்டபந்தனத்தின் அவசியம் யாவும் இக்கட்டுரை விளக்குகிறது.)

திருக்கோயில்களில் கடவுண் மங்கலம் (பிரதிஷ்டை) செய்யப்பெறும். கல்லால் ஆன தெய்வப் படிமங்கள் ஆடாமல் நிலைபெற, இருப்பிடம் (பீடம்), படிமத்தின் அடிப்பகுதி இரண்டையும் பொருத்திப் படியச் செய்யும் ஒரு கூட்டுக்கட்டுப் பொருளை அட்ட பந்தனம் என்பர். இப்பொருள் ஓர் அருமையான படைப்பு; அற்புதமான கண்டுபிடிப்பு. எட்டுப் பண்டங்களின் கலவையானதாலும், இருப்பிடத்தையும் தெய்வப் படிமத்தையும் இணைத்துப் பிணைப்பதாலும் இது 'அட்ட பந்தனம்' எனப் பெயர் பெறுவதாயிற்று.

அட்டபந்தன மருந்தில் கலக்கும் பொருள்கள்:

1. கொம்பரக்கு, 2.சுக்கான் தூள், 3.குங்கிலியம், 4. கற்காவி, 5.செம்பஞ்சு, 6.சாதிலிங்கம், 7.தேன் மெழுகு, 8.எருமை வெண்ணெய் ஆகிய எட்டுமே.

இவற்றை எல்லாம் கலந்து செய்யும் முறை இருவகையாகும். ஒன்று இடிமுறை; மற்றது காய்ச்சுமுறை. காய்ச்சுமுறை மிக விரைவாக ஆகிவிடும். ஆனால் காய்ச்சு மருந்து சார்த்தியதை அகற்ற வேண்டிய நிலை ஏற்பட்டால் அகற்றுதல் கிட்டத்தட்ட இயலாது. வலிந்து செயற்படும் பொழுது சிலையுருவிற்குச் சேதம் விளையவும் கூடும். ஆனதால் மிகப் பெரும்பாலும் இடிமுறையை மேற் கொள்ளலே நன்று.

மேலே சொன்ன பண்டங்களை நன்கு சோதித்து வாங்கவேண்டும். பின்னர், தூசு, துப்பட்டை முதலிய கள்ளைந்து தூய்மை செய்யவேண்டும். அதன் பின்னர் அளவுப்படி கலக்க வேண்டும். கலந்தபின் இடிக்க வேண்டும்.

1.கொம்பரக்கு; இது அவலரக்கு அல்ல. மரப்பட்டையுடன் ஒட்டிக் கொண் டிருக்கும். இது தான் தூய்மையானது; இயற்கையானது; கலப்பற்றது. இதை வாங்கிப் பொடித்து மரப்பட்டை முதலியவற்றை நீக்கிச் சுத்தமாக்கி வைத்துக் கொள்ளவேண்டும்.

2. சுக்கான் தூள்: சுக்கானில் பல நிறமும் இருவகையும் உண்டு. வெள்ளை நிறம் நன்று; கபில நிறம் கொள்ளலாம் கருமை நிறம் கூடாது. இதைக் கொண்டு வந்ததும் முதலில் சிறிது சுக்கானைத் தூளாக்கி, அடுப்பில் காயும் இரும்புச் சட்டியி லிட்டு வறுத்துப் பார்க்க வேண்டும். **படபட** என்று (உப்பைப் போல) வெடித்தால், அவ்வகைச் சுக்கான் **கூடவே** கூடாது. ரவை, மணல்போல வெடிக்காமல் இருந்தால் அவ்வகைச் சுக்கான்தான் உகந்தது.

3. **குங்கிலியம்:** துண்டுத்துகள், தூசி இல்லாமல் பொறுக்கி எடுத்துப் பொடித்து வைத்துக்கொள்ள வேண்டும்.

4. **கற்காவி:** இஃது அழுக்குச் சிவப்பு நிறமாகக் கட்டியாய் இருக்கும். பூங்காவி என்பதல்ல இது. கடைகளில் காவித்தூள் என்று பலவகைக் கலப்படங்கள் உண்டு. அவற்றை வாங்கக்கூடாது. கட்டிகட்டி யாய் இருக்கும் கற்காவியையே வாங்கி, மேலே படிந்துள்ள தூசிகளைப் புடைத்துப் போக்கிவிட்டு, இடித்துப் பொடியாக்கி வைத்துக்கொள்ள வேண்டும்.

5. **செம்பஞ்சு:** இஃது இயற்கையாகவே வாதாம்கொட்டை நிறமுடையது. பீகார் பக்கத்திலிருந்து வருவது. 'கோத்தி' என்று பெயர். இதுதான் உகந்தது. சிவப்புச் சாயம் ஏற்றி அடை அடையாய்த் தட்டி வைத்துக்கொண்டு அதுதான் செம்பஞ்சு என்று ஏமாற்றுவோரும் ஏமாறுவோரும் மிக அதிகம். 'கோத்தி' பஞ்சு கதர்க்கடைகளில் சொல்லி வரவழைக்கச் செய்யலாம். இதையும் சருகு, சொத்தை, காம்பு முதலியன இல்லாமல் புழுது நீக்கி வைத்துக் கொள்ளவேண்டும்.

6. **சாதிலிங்கம்:** இதில் பலவகை உண்டு. உலாந்தாவிலிருந்து வருவதுதான் தரத்தால் உயர்ந்தது. கலவைப் பண்டம் எட்டிலும் விலை மிக்கது சாதிலிங்கமே. அட்டபந்தனத்தின் முக்கியமான பொருள் இது. விலை மிகுதியை எண்ணி அளவைக் குறைப்பதும், தரமற்ற மலிவுச் சரக்கை வாங்குவதும் இன்று மலிந்து காணப்படுகின்றன. அப்படிச் செய்வது முறைகேடாகும். இஃது இரும்பைப் போலக் கனமிக்க பண்டமாகும். இதைப் பொடி செய்தல் எளிது. இதையும் நன்கு பொடித்து வைத்துக்கொள்ள வேண்டும்.

7. **தேன்மெழுகு:** இதில் இருவகை உண்டு. ஒன்று மஞ்சள் நிறமுள்ளது. அதை மஞ்சண மெழுகு என்பர். மற்றொன்று வெண்மை நிறமாக இருக்கும் மஞ்சண மெழுகில் தேன் கலந்திருக்கும். வெண் மெழுகில் தேன் இல்லை. இதுதான் உகந்தது. வெண் மெழுகு என்று சில இடங்களில் மெழுகுவர்த்திக் குழம்பை ஆறவைத்து ஏமாற்றுவார்கள். வாயில் சிறிது கிள்ளிப் போட்டுச் சுவைத்துப் பார்த்தால் உண்மை புலப்பட்டுவிடும்.

8. **எருமை வெண்ணெய்:** பசுவின் வெண்ணெயில் கொழுப்புச் சத்துக் குறைவு. ஆகவே, அது கூடாது. எருமை வெண்ணெய்தான் உகந்தது. இதிலும் சிறிதும் நீர்ச்சத்தின்றி முழுதும் அகற்றப் படவேண்டும். நெருப்பு, வெயில், வேறுவகை வெம்மை பயன்படுத்தப்பட முடியாதவை அவற்றால் வெண்ணெய் உருகி விடும். ஆனதால் புதிய மண்பானையை எடுத்துப் பானைக்கு ஒரு வீசை வெண்ணெயைப் புறத்தில் கால் அங்குலக் கனமாக அப்பி வெம்மை தாக்காத குளிர்ந்த, இருண்ட அறையில் இரண்டல்லது மூன்று நாட்கள் வாய் கீழாகப் பானையைக் கவிழ்த்து வைத்திருக்க வேண்டும். பானை வெண்ணெயில் உள்ள நீர்ச்சத்து முழுவதையும் உறிஞ்சிக் கொள்ள, வெண்ணெய் பக்குவமாய் ஆகிவிடும். தேவைக்கேற்பப் பானைகளின் எண்ணிக்கையைக் கூட்டிக் கொள்ள வேண்டும்.

எல்லாப் பண்டங்களும் ஆயத்த மான பிறகு மர உரலில் இடிக்க வேண்டும். கல்லுரல் கூடாது. ஒவ்வோர்

உருண்டைக்கும் குறிப்பிட்ட அளவாக ஏழு பண்டங்களையும் உரலில் இட்டுத் தேவைக்கு ஏற்ப வெண்ணெயைச் சிறிது சிறிதாகச் சேர்த்து ஒவ்வோர் உருண்டையையும் சுமார் அரை மணி நேரம் இடித்துப் பின்னர் உரலிலிருந்து எடுத்து உருட்டித் தலையில் ஆணிக் கொண்டையால் ஒரு குத்துக் குத்தி வைத்துக் கொள்ள வேண்டும். முதல் இடி முடிந்ததும் ஒரு குத்து. இரண்டாம் முறை இடித்தபின் இரண்டு குத்து. இப்படி எட்டு முறை இடிக்க வேண்டும். ஓர் இடிக்கும் அடுத்த இடிக்கும் இடையில் குறைந்தது இரண்டு நாள் இடைவெளி இருக்கவேண்டும்.

இனி அளவைப் பார்ப்போம். ஒவ்வோர் உருண்டைக்கும்:

சுக்கான் தூள்	..25 1/2	கிலோ
குங்கிலியம்	.. 9	,,
கற்காவி	.. 7 1/2	,,
இலிங்கம்	.. 7 1/2	,,
அரக்கு	.. 3 3/4	,,
மெழுகு	.. 3 3/4	,,
செம்பஞ்சு	.. 1	,,
எருமைவெண்ணெய்	.. 7 1/2	,,

(இஃது எட்டு இடிக்கும் சேர்த்துள்ள உத்தேச அளவு. சிறிது கூடவும் ஆகலாம்)

இவற்றை எல்லாம் மர உரலில் ஒவ்வொரு சரக்காக இட்டு ஒன்றோடு ஒன்று கலந்து ஒன்று சேரும்படி இடிக்க வேண்டும். முதல் ஆறு பொருள்களும் சிமிண்ட், சுண்ணாம்பு, மணல் போன்றவை. ஏழாவதாக உள்ள பஞ்சு கம்பி வலை போன்றது. வெண்ணெய் தான் இந்தக் காங்க்ரீட்டிற்கு நீர் போன்றது.

இந்த மருந்து கலந்து இடிப்பதில் பண்டத் தூய்மை, பண்டங்களின் சேர்மான அளவு, இடிக்கும் கால அளவு மூன்றும் மிக முக்கியம். அத்துடன் இடிக்கின்றவர்களின் உடல் தூய்மை, மனத்தூய்மை முதலியன மிக மிக முக்கியம். இடிக்கும்பொழுது இடிக்கும் ஆட்கள் ஆலயத்திற்கு ஏற்ப, ''சிவ-சிவ'' ஓம் நமசிவாய, ஓம் சிவாய நம, ஓம் சக்தி அல்லது ''வேல் வேல் முருகா'' என்பன போன்ற இறைவன் திருப்பெயர்களை உச்சரித்துக் கொண்டே இடிக்க வேண்டும். இப்படிச் செய்த அட்டபந்தன மருந்து சார்த்திக் குடநீராட்டுச் செய்த திருக்கோயில்களில் அம்மருந்து எவ்விதக் குறைபாடும் நேராது, மிக நீண்ட நாட்களாய் இலங்கி வருதலைக் கண்கூடாகக் காண முடிகிறது.

எனவே, இடிக்கப் புகுமுன் இடிப்பவர்களைக் குளிக்கச் செய்து, திருநீறு முதலானவற்றை அணிந்து கொண்டு விநாயகர் வணக்கம் செய்து கொண்டபின் ஒவ்வொரு குத்துக்கும் ''சிவ சிவ'' போன்ற நாமங்களைச் சொல்லிக் கொண்டே இடிக்கச் செய்ய வேண்டும் என்பது எளியேன் ஏற்பாடு. இவற்றில் பெரும்பாலோர் போதிய அக்கறை காட்டுவதில்லை. வான வேடிக்கை, பந்தல் அலங்காரம், யாகசாலைச் சோடனை போன்றவற்றில் ஆயிரம் ஆயிரமாகப் பொருள் விரயம் செய்பவர்கள் இன்றியமையாத அட்டபந்தன மருந்தைப் பற்றிக் கவலைப்படுவதே இல்லை. யார்யாரோ செய்யும் செங்கல் தூள் உருண்டைகளை ரூ.3 அல்லது 4 கொடுத்து வாங்கி வந்து எப்படியோ வெண்ணெய்ப் பலத்தால் குழைத்து அப்பி விட்டுக் 'கும்பாபிஷேகம்' என்ற பெயரில் பல்லாயிரம்

ரூபாய்களை விரயம் செய்வதை எண்ணி வருந்தாதிருக்க முடியவில்லை. இதற்குக் காரணம் குடநீராட்டு விழாவின் உண்மைத் தத்துவத்தையும், அதன் இன்றியமையாத துறைகளையும் அறியாமையே எனலாம்.

என்னைக் கேட்டால் அட்டபந்தன மருந்து தான் அனைத்திலும் தலையானதென்பேன். இதில் சிக்கனம் அல்லது அலட்சியம் காட்டுபவர்களை ஆத்திகர் என எங்ஙனம் கூறமுடியும்?

மேலே கூறிய முறை இருப்பிடத்தையும் படிமத்தையும் இணைத்துப் பிணைப்பதற்குச் செய்வதாகும். இருப்பிடத்தையும், துணையிருப்பிடத்தையும் (பீடத்தையும், உபபீடத்தையும்) இணைப்பதற்குத் திரிபந்தனம் என்னும் முக்கூட்டுப் பொருளே உகந்தது. இதற்கு வேண்டியவை: சுக்கான் தூள், சுத்தம் செய்த சர்க்கரை, முற்றக் கனிந்த பேயன்பழம் ஆகிய மூன்றுமே. சுக்கானைச் சோதித்து வெடி சுக்கான் அல்லாத நற்சுக்கான் கற்களை நன்கு பொடித்துப் பெருஞ்சல்லடையாகச் சலித்து அதில் வேண்டிய அளவை எடுத்து வாயகன்ற மண் அல்லது களிப் பேறாத ஒரு பாத்திரத்தில் இட்டுச் சிறிது சிறிதாகச் சர்க்கரையையும், தோல் கறுத்துக் கிட்டதட்ட அழுகியது போலத் தோன்றும் பேயன் வாழைக்கனியையும் சேர்த்துப் பிசைந்து கொண்டே வரும் பொழுது கைதாங்காத அளவு சூடு வந்ததும் கையை எடுத்துவிட்டு மத்து முதலிய மரக்கருவியால் நன்கு குழப்பி மத்திக்க வேண்டும். கூழ்போல ஆனதும் எடுத்து இரு கற்களுக்கும் இடையில் அரைக்கால் அங்குல அளவு வைத்துக் கற்களை முறைப்படி ஒன்றின்மேல் ஒன்றாய்ப் படிய வைத்துவிடவேண்டும். கூட்டுமுறை செம்மையாக அமைந்து விட்டால் பிடிமானம் உறுதியாக இருக்கும்.

மெய்யான ஈடுபாடும் தெய்வ பக்தியும் உள்ளவர்களை எல்லாம் தொழுது வேண்டுகிறேன், நல்ல முறையில் மேலே கண்டவண்ணம் ஆக்கித் தெய்வத் திருப்படிமத்திற்கு மருந்து சார்த்த வேண்டுமென்று. அன்றேல் கண்டவற்றை 'அட்டபந்தனம்' என்ற பெயரால் சார்த்துவதை விட 'டால்மியாபந்தனம்' செய்துவிடுவது மேலாகும். 'டால்மியா பந்தனம் என்றால் என்ன?' என்றா கேட்கிறீர்கள். சிமெண்ட் கலவையைத் தான் இப்படிப் பெயரிட்டுக் கூறுகிறேன். சரிதானே?

"கொம்பரக்குச் சுக்கான்தூள், குங்கிலியம், கற்காவி
செம்பஞ்சு, சாதிலிங்கம், தேன்மெழுகு - தம்பழுது
நீக்கி எருமைவெண் ணெய்கூட்டி, நன்கிடித்து,
ஆக்கல்அட்ட பந்தனம் ஆம்".

"சுக்கான்தூள், சர்க்கரை, தொல்பேயன் நற்கனியும்
ஒக்கக் கலந்தமைத்தல் உற்றதிரி பந்தனம் ஆம்."

(ஆதாரம் - 1970 ஸ்ரீ மகாலிங்கசுவாமி திருக்கோயில் கும்பாபிஷேக மலர்.



தென்முகக் கடவுள்

முனைவர்.சு.இராஜேஸ்வரன், M.A., M.Phil., Ph.D.,
தமிழ்த்துறைத்தலைவர்
ஆர்.வி.எஸ். கலை மற்றும் அறிவியல் கல்லூரி
திருவேட்டக்குடி, காரைக்கால்.

(தென்முகக் கடவுளாய் விளங்கும் ஸ்ரீதெட்சிணாமூர்த்தியின் திருவுருவத்தத்துவமும், சனகாதி முனிவர்கள் நால்வர்க்கு அருளிய சிறப்பும் - சிவபெருமானின் வடிவச் சிறப்பும் இக்கட்டுரை விளக்குகிறது.

இறைவன் உறையும் திருக்கோயிலை வலம் வரும்போது கர்ப்பக் கிரகத்தின் தென்புறத்தில் தென்முகக் கடவுளின் திருவுருவத்தைக் காண்கிறோம். அம்மூர்த்தியின் தத்துவம் என்ன என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டியது இன்றியமையாததாகும். மகேசுவர வடிவங்கள் இருபத்தைந்தில் ஒன்று தக்ஷிணாமூர்த்தம். அந்த தென்முகக்கடவுள் கல்லால மரத்தின்கீழ் யோகாசனத்து அமர்ந்து சனகாதிமுனிவர் நால்வருக்கும் அருளுரை வழங்குகிறார். முயலகனை மிதித்த திருவடியொன்றும், வீராசனமாக மற்றொரு திருவடியும், நான்கு திருக்கரங்களில் வலப்பக்க முள்ள இரண்டில் சின்முத்திரையும் உருத்திராக்க மணிவடமும், இடது பக்கமுள்ள இரண்டு திருக்கைகளில் அமுத கும்பமும் வேதமும் இருக்கின்றன.

இரு பக்கங்களிலும் இரண்டிரண்டு பேர்களாக சனகாதி முனிவர்கள் நால்வர் குரு உபதேசம் பெறும் முறையில் அமர்ந்திருக்கின்றனர். சின்முத்திரையை (ஞான அடையாளத்தை) தக்ஷிணாமூர்த்தி யோக வடிவமாய் இருந்து அம்முனிவர்களுக்கு காட்டி ஐய நீக்கம் செய்தார் அதனால் தான்

கல்லாலின் புடைய மர்ந்து நான் மறையா
றங்கமுதல் கற்ற கேள்வி
வல்லார்கள் நால்வருக்கும் வாக்கிறந்த
பூரணமாய் மறைக்கப் பாலாய்
எல்லாமாய் அல்லதுமாய் இருந்ததனை
இருந்தபடி இருந்து காட்டிச்
சொல்லாமற் சொன்னவரை நினையாமல்
நினைந்து பவத் தொடக்கை
வெல்வாம்.

என்னும் திருவிளையாடற் புராணம் பாட்டு சான்று பகர்கிறது. சிவபெருமானுக்கு இந்த யோக வடிவம் தவிர போகவடிவம், வேகவடிவம் ஆகிய வேறிரு வடிவங்களுமுண்டு என்று சிவஞான சித்தியாரில் போகியாய் இருந்து'' என்னும் செய்யுளால் அறிகிறோம். அவரது மூன்று வடிவங்களுள் இந்த யோக வடிவமே சிறந்த வடிவம். யோக முறையைக் காட்டினவர் யோக தக்ஷிணாமூர்த்தி தும்புருவர், நாரதர், சுகர் முதலியோருக்கு வீணையின் இலக்கணத்தை உணர்த்தி அதை வாசித்துக் காட்டினவர் வீணா தக்ஷிணாமூர்த்தி என்பர்.

சின்முத்திரை

சித் + முத்திரை = ஞானத்தைக் காட்டும் அடையாளம் இதைக் கை காட்டு என்றும் கூறுவர் கச்சியப்ப முனிவர்.

மும்மலம் வேறுபட் டொழிய மொய்த்துயிர்
அம் மலர்த் தாள்நிழல் அடங்கு
முண்மையைக்
கைம்மலர்க் காட்சியிற் கதுவ நல்கிய
செம்மலை யலதுளம் சித்தியாத்ரோ

என்ற பாடலால் சின்முத்திரையை விளக்கியிருக்கிறார். சின்முத்திரை என்பது வலது கையில் அதன் பெரு விரலையும் அதன் சுட்டு விரலையும் ஒன்றாய் சேர்த்தும் மற்ற மூன்று விரல்களை நீட்டியும் காட்டும் அடையாளம். அப்போது, சாதாரண மாய்த் தனித்து நிற்கும் பெருவிரலானது தனக்குப் பக்கத்திலுள்ள சுட்டுவிரலை மற்ற விரல்களினின்றும் நீக்கி, தன்னுடன் சேர்த்துக்கொள்ளும்.

அதனால் பெருவிரலாகிய இறைவன், சுட்டுவிரலான ஆன்மாவை மற்ற மூன்று விரல்களாகிய ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களி னின்றும் நீக்குவன் என்று அறிகிறோம். நடுவிரல், சுட்டுவிரலை விட நீண்டிருத்தல் ஆணவத்தின் தன்மையை உணர்த்தும், அணிவிரல் கன்மத்தையும், கடைவிரல் மாயையும் குறிக்கும். ஆணவாதி மலங்கள் பாசம் என்றும், உயிரானது பசு என்றும் இறைவன் பதி எனவும் சித்தாந்தத்தில் வழங்கப்படும்.

எனவே சின்முத்திரையானது பதி, பசு, பாசங்களின் இலக்கணத்தையும் பசு செய்யவேண்டிய சாதனங்களையும் அது அடையும் பயனையும் விளக்கும் குறியாகும். கைவிரல்களால் காட்டும் அடையாளத்தைக் கொண்டே சைவ சித்தாந்தத்தை விளக்கியிருப்பது சைவ சமயம் இயற்கைக்குப் பொருத்தமாகவே அமைந்திருப்பது உணரத்தக்கது.

அமுதகும்பம்

இடது திருக்கரத்தில் இருக்கிறது. மல நீக்கம், சிவப்பேறு என்னும் பயன் இரண்டும் வாய்ப்பதற்குச் சாதனம் சிவஞானம் என்பதை உணர்த்தும்.

உருத்திராக்க மணிவடம்

மற்றொரு திருக்கையில் இருப்பது சிவ ஞானத்தில் நிலைத்தற் பொருட்டு திருவைந்தெழுத்தைக் கணிக்கவேண்டும் என்பதை உணர்த்துவது.

முயலகனை மிதித்த திருவடி

சிவஞானிகள் சீவன் முத்தராய் வாழுங்காலத்து ஆணவமலம் தலை யெடுக்காவண்ணம் அதனை அமிழ்த்து வதற்குரிய சாதனஞ் செய்து வரவேண்டும் என்பதை உணர்த்துவது.

வீராசனம்

ஜீவன்முத்தர் மல நீக்கத்திற்குரிய சாதனம் செய்து வருதலோடு மலம் நீங்கிய சிவனடியாருடன் கூட சிவபக்த ரல்லாதாரோடு இணங்காது வீரமாய் இருக்கவேண்டும் என்பதை உணர்த்து வது. அப்பர் ''ஈசன்பால் கணத் தெண்ணப்பட்டு - இருமாந்திருப்பன் கொலோ'' என்று அருளியுள்ளார்.

வேதம்

இது மற்றொரு திருக்கரத்தில் இருப்பது. இது சிவஞான போதமே என்பர் ஆன்றோர். மூன்று திருக்கரங் களினாலும் இரண்டு திருவடிகளாலும்

உணர்த்திய உண்மைப் பொருளை இனிது விளக்குவது.

கல்லால் நீழல்

விருப்பு, வெறுப்பு முதலிய வெப்பந் தருகின்ற இராசத தாமச குணங்களைச் சாராது சாந்தத்தைத் தரும் சத்துவ குணத்தைச் சார்ந்திருக்க வேண்டும் என்பதை உணர்த்துவது.

தென்முகம்

கடவுள் தென்முகமாக வீற்றிருப்பதை அகோரமுகம் என்பர். அகோரம் என்பது கோர மின்மையைக் குறித்து அனுக்கிரகத்தை உணர்த்துவது.

உயிர் இறைவனைச் சேர்ந்திருக்கும் போது சதா ஆனந்தத்திலிருக்கும். இனம் இனத்தோடாதலின் உயிர் எக்காலத்தும் மலமாகிய சடத்தோடு கூடாது. அறிவுப் பொருளாகிய இறைவனோடு கூடும். இப்படிச் சேராத முத்தி பதமுத்தி என்பர். அதாவது, உயிர் அப்போது சிவ உலகத்தில் தான் செய்த சரியை, கிரியை, யோகத்தின் பலனைத் துய்க்கும்.

ஞான நிலையில்தான் அத்துவித முத்தி கிட்டும். அந்த ஞானமாவது எப்பொருளையும் ஆக்குபவன் ஈசனேயென்றும் யாவற்றையும் இயக்குபவன் இறைவனேயென்றும் அறிந்து தன் செயலற்றிருத்தல் அது பஞ்சாக்கரத்தை கேட்டு சிந்தித்து தெளிந்து, நிட்டையில் அமர்வதால் ஏற்படும்.

இவ்வாறு தக்ஷிணாமூர்த்தியால் சந்தேக நிவர்த்தி செய்து கொண்ட சனகர், சனந்தனர், சனாதனர், சனத் குமார் என்ற நால்வர்களும் நிட்டையிலிருந்து ஆனந்தம் அனுபவித்தனர் என்று அறிகிறோம்.

சிவாலயத்தை வலம் வருவோர் தென்முகக் கடவுளின் அருகே சற்று அமர்ந்து, தியானம் செய்து ஐந்தெழுத்தோதி வணங்கிச் செல்லவேண்டியது முறை. இந்த மூர்த்தத்தின் பெருமையை மொஹஞ்சதாரோ முதலிய இடங்களில் சிவவழிபாட்டைக் குறிக்கும் பல் முத்திரைகள் எடுக்கப்பட்டிருக் கின்றன. இவையெல்லாம் தென்முகக்கடவுள் வழிபாட்டின் தொன்மையைக் குறிப்பனவேயாம்.

பன்முத்திரைச் சமயம்
பாழ்படக் கல்லாலடிவாழ்
சின்முத்திரை அரசைச்
சேர்வேனோ பைங்கிளியே
-தாயுமானவர்

சான்று ஆதாரங்களின் விளக்கம்:

திருக்கோயில் திங்கள் இதழ், சென்னை-6



திருக்குறளில் சைவசித்தாந்தம்

நல்லாசிரியர், புலவர்.
சா.முத்துக்கிருஷ்ணன்,M.A., M.Ed.,
தலைமையாசிரியர் ஓய்வு,
மயிலாடுதுறை - 609 001.

(இக்கட்டுரையாசிரியர் திருக்குறவில் சைவசித்தாந்தக் கருத்துக்கள் பொருந்தியிருப்பதை எடுத்துக்காட்டி, கடவுள் வாழ்த்து, நீத்தார் பெருமை, துறவு, மெய்யுணர்தல், ஊழ் முதலிய அதிகாரத்தில் அமைந்த குறட்பாக்களை சித்தாந்த சாத்திர நோக்கில் ஆய்ந்துள்ளார்.)

வள்ளுவர்சீர் அன்பர் மொழி
வாசகம் தொல்காப்பியமே
தெள்ளுபரிமேலழகன் செய்தஉரை -
ஒள்ளிய சீர்த்
தொண்டர் புராணம் தொகு
சித்தி ஒராறும்
தண்டமிழின் மேலாந் தரம்

தமிழுக்குத் தொன்மையும் சிறப்பும் தரும் நூல்களில் தலையாய இடம் பெற்ற நூல் திருக்குறள். உலக மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு வாழ்வதற்கு இன்றியமையாத ஒழுக்க நெறிகளை அறிவுறுத்தும் முறையில் வாழ்வியல் நூலாக விளங்குவது திருக்குறள்.

சிறப்பொடு மரபிற் பொருளும் இன்பமும்
அறத்து வழிப்படூஉம் தோற்றம் போல

என்று புறநானூறு கூறுகிறது. அறம்பொருள் இன்பம் என்னும் உறுதிப் பொருள்களை அறிவுறுத்தும் முப்பாலிலே நான்காவதாகப் பகுத்துரைக்கப்படும். வீடுபேற்று இன்பமும் அடங்கவே திருக்குறளை இயற்றியுள்ளார் என்பது ஆன்றோர்கள் துணிபு. வீடுபேறு அடைவார் உணர்ந்து கொள்ளுதற்குரிய மெய்யுணர்வுகளை ஆங்காங்கே திருவள்ளுவர் தமது நூலில் குறித்துள்ளார்.

பதி, பசு, பாசம் என்னும் மூன்று பொருள்களும் தோற்றமில் காலமாக உள்ள பொருள்கள் என்பது சைவ சித்தாந்தத்தின் அடிப்படைக் கொள்கை. இதற்கு நிலைக்களமாக திருக்குறள் அமைந்துள்ளது. கடவுள் வாழ்த்து எனும் முதல் அதிகாரத்தில் பதி உண்மை, வான் சிறப்பு அதிகாரத்தில் பாசத்தின் உண்மை, நீத்தார் பெருமை என்னும் மூன்றாம் அதிகாரத்தில் உயிர்களாகிய பசுவின் உண்மையும் முறையே உணர்த்தப் பெற்றன.

தமிழ் மறையாகிய திருக்குறளோடு, சைவத் திருமுறைகள் பன்னிரண்டும் சைவ சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கும் தொடர்புடையனவாக அமைந்துள்ளன. சித்தாந்த நூல்களுக்கு

ஆதாரமாகத் திகழ்வது திருக்குறளே என்பது உண்மையாகிறது.

வீடுபேற்று நிலையினைத் திருக்குறளில் கடவுள் வாழ்த்து, வான் சிறப்பு, நீத்தார் பெருமை, அறன் வலியுறுத்தல், அருளுடைமை, நிலையாமை, துறவு, மெய்யுணர்தல், அவா அறுத்தல் என்ற அதிகாரங்களில் தெளிவாக விளக்கியுள்ளார்.

கடவுள் வாழ்த்து எனத் தொடங்கும் முதல் அதிகாரத்தில் உயிர்க்குயிராய் உலகினை இயக்கி நிற்கும் முழுமுதற் பொருளாகிய கடவுள் உண்மையினை,

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு

என்ற குறளில் உவமை வாயிலாக எடுத்து ரைத்துள்ளார். இதனையே

அகர உயிர்போல் அறிவாகி எங்கும்
நிகரில் இறை நிற்கும் நிறைந்து'

என்று சைவசித்தாந்த நூல் 'திருவருட் பயன்' கூறுகிறது.

ஆதிபகவன் முதற்றே உலகு என்னும் குறள் தொடருக்கு விளக்கம் போன்று

அம்மையப்பரே உலகுக் கம்மையப்பர்
என்றறிக
அம்மையப்பர் அப்பரிசே வந்தளிப்பர் -
அம்மையப்பர்
எல்லா உலகுக்கும் அப்புறத்தார் இப்புறத்தும்
அல்லார் போல் நிற்பர் அவர்

என்று திருக்களிற்றுப்படியார் கூறுகிறது.

அனைத்து நூல்களும் கற்றவர்க்குக் கல்வி அறிவினாலாய பயன் ஞானமே உருவான இறைவன் திருவடிகளைத் தொழுது போற்றுதல், இறைவனை வழிபடவில்லை யெனில் கல்வி அறிவு பெற்றும் அதனால் பயனில்லை என்பதனை

கற்றதனால் ஆய பயனென் கொல்
வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்

என்று அறிவுறுத்துகிறார். எல்லாவற்றை யும் உணரவல்ல முற்றுணர்வு ஞானமே திருமேனியான இறைவன் ஒருவருக்கே உரிய பண்பு ஆதலின் ''வாலறிவன்'' என்றார்.

மக்கள் தாம் பெற்ற கல்வி அறிவால் பயன் பேரறிவுப் பொருளான இறைவன் திருவடிகளை வணங்கி அறிவினால் நிறைவு பெறுதலேயாகும் என்பதனைப் புலப்படுத்துகிறது.

உயிர்க்குயிராய்ப் பிரிவின்றிக் கலந்து நிற்றலை அத்துவிதம் என்ற சொல்லால் வழங்குவது சைவ சித்தாந்தம். இவ்வியல்பு உடையவன் என்பதனை ''மலர்மிசை ஏகினான்'' என்ற தொடர் உணர்த்துகிறது.

நினைப்பவர் நெஞ்சத்தினைக் கோயிலாகக் கொண்ட இறைவனது திருவடிகளை இடைவிடாது நினைந்து போற்றுபவர்கள் எல்லா உலகிற்கும் மேலான வீட்டு உலகின்கண் அழிவின்றி வாழ்வார்கள் என்ற கருத்தினை,

மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடு வாழ்வார்

என்ற குறள் உணர்த்துகிறது.

இறைவனடி சேர்தலே வீடுபேறு என்னும் அடிசேர் முத்தியே சைவ சித்தாந்தக் கொள்கையினரது முடிந்த முடிபாகும்.

இறைவன் வேண்டுதல் வேண்டாமை இல்லாதவன் என்றும்,

தன்னை அன்பினால் வழிபடும் அன்பர்களுக்கு அவர்கள் தம் ஐம்புலன்களையும் அடக்கி வெல்லும் நல்வழியினை அறிவுறுத்தினான் என்பதை, ''பொறிவாயில் ஐந்தவித்தான்'' என்றும், ''தனக்கு உவமை இல்லாதான்'' என்றும் இறைவனின் குணங்களை உணர்த்துகின்றார். இக்கருத்தினை, சுந்தரர்,

பொறிவாயில் இவ்வைந்தினையும் அவியப்
பொருது உன்னடியே புகும் சூழல் சொல்லே
7.3.3

என்று பாடுகிறார். இறைவன் குணங்களை

பெருமைக்கும் நுண்மைக்கும் பேரருட்கும் பேற்றின்
அருமைக்கும் ஒப்பின்மை யாம்

என்று திருவருட்பயன் கூறுகிறது.

இறைவனது பொருள் சேர்ந்த புகழ்த்திறங்களை என்றும் விரும்பிப் போற்றுபவர்க்கு அக இருளாகிய ஆணவத்தைப் பற்றி வரும் நல்வினை தீவினை ஆகிய இருவினைகளும் சேரமாட்டா என்பதனை,

இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு

என்ற குறளில் அறிவுறுத்துகிறார்.

சைவசித்தாந்தத்தில் இருள் என்பதனை ஆணவமலம் என்றே குறிக்கப் பட்டுள்ளது. ஆன்மாக்களின் அறிவாற்றலைத் தடை செய்து நிற்கும் அவ்விருளை ஆணவம் என்வும் மலம் என்வும் வழங்குதல் சைவ சித்தாந்த மரபாகும்.

இருள்நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி
மாசறு காட்சி யவர்க்கு

என்ற குறளில் மயக்கத்தினை மருள் என்ற சொல்லால் குறித்த வள்ளுவர் மருளின் வேறாக இருள் என்ற உண்மையைக் கூறுவது ஆணவமலம் எனத் தெளியப் புலப்படுகிறது.

ஒரு பொருளும் காட்டாது இருள் உருவம் காட்டும்
இரு பொருளும் காட்டாது இது
திருவருட் - 23

ஊனத்திருள் நீங்கிட வேண்டில்
ஞானப்பொருள் கொண்டடி பேணும்
தேனொத்து இனியான் அமருஞ்சேர்
வானம் மயிலாடுதுறையே 1.38.3

என்று சம்பந்தர் மயிலாடுதுறைப் பதிகத்தில் பாடுகின்றார்.

இருள்தரு துன்பப் படல
மறைப்ப மெய் ஞானமென்னும்
பொருள்தரு கண்ணிழந்து
உண்பொருள் நாடிப் புகலிழந்த
குருடருந் தம்மைப் பரவக்
கொடு நரகக்குழி நின்று
அருள்தரு கைகொடுத்தேற்றும்
ஐயாறன் அடித்தலமே 4.92.4

என்று அப்பர் தேவாரம் கூறுகிறது.

இறைவன் அறக் கடலாக விளங்குபவன். அருள் வள்ளலாய்த் திகழ்பவன். அவனது திருவடியாகிய புணையைப் பற்றினார்க்கல்லது பிறவியாகிய பெருங்கடலை நீந்திக் கடக்க இயலாது.

அறவாழியந்தணன் தாள் சேர்ந்தார்க்கல்லால்
பிறவாழி நீத்தல் அரிது

இறைவனை அறவாழி அந்தணன் என ஒருவனாகவும், இறைவன் அருள் பெற்ற அறவோர்களை, அந்தணர் என்பர் அறவோர் எனப் பலராகவும் குறித்துள்ளார். இறைவன் ஒருவன்,

உயிர்கள் பல என்னும் தத்துவக் கொள்கையினைப் புலப்படுத்துகிறது.

இறைவன் எண் குணங்களை உடையவன். ஆதிபகவன் வாலறிவன், மலர்மிசை ஏகினான், வேண்டுதல் வேண்டாமை இலான், பொறிவாயில் ஐந்தவித்தான், தனக்குவமை யில்லா தான், அறவாழி அந்தணன் எனக் கூறப்படும் எட்டு குணங்களை ஒன்பதாவது குறளில் எண்குணத்தான் எனக் கூறியுள்ளார்.

இதனைச் சைவாகமத்தில் தன் வயத்தனாதல், தூய உடம்பினனாதல், இயற்கை உணர்வினனாதல், முற்றுணர் தல், இயல்பாகவே பாசங்களின் நீங்குதல், பேரருளுடைமை, முடி விலாற்றுலுடைமை, வரம்பில் இன்ப முடைமை என்ற எட்டு குணங்களாகக் கூறப்பட்டுள்ளது.

''எட்டுக் கொலாமவர் ஈறில் பெருங் குணம்'' என்று தேவாரம் கூறுகிறது.

இறைவன் திருவடியாகிய புணையைப் பற்றினோர் பிறவியாகிய பெருங்கடலை எளிதில் நீந்திக் கடப்பர். துணை பெறாதார் அப்பெருங்கடலை நீந்தமாட்டாது அதனுள் வீழ்ந்து அழுந்துவர் என்பதினை,

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேராதார்

என்று கூறுகிறார் திருவள்ளுவர்.

இவ்வாறு இறைவனது பொதுவியல்பு, உண்மை இயல்பு ஆகிய இலக்கணங்களை முதல் அதிகாரமாகிய கடவுள் வாழ்த்தில் தெளிவாகக் கூறியுள்ளார்.

இவ்வாறு விரித்துக்கூறிய கடவுள் இலக்கணமே சைவ சித்தாந்த நூல்கள் கூறும் பதி இலக்கணமாக அமைந்துள்ளது.

திருவருட்பயன் நூலில் ''பதி முதுநிலை'' என்னும் அதிகாரத்தை ஒப்பு நோக்கும்போது நன்கு புலனாகும்.

கடவுள் மழை வடிவாயிருந்து உலகிற்குக் கைம்மாறு கருதாமல் உதவி வருகின்றார். என்பதனை உணர்த்தவே வான் சிறப்பு அதிகாரத்தை வைத்து மழையின் சிறப்புகளைக் கூறியுள்ளார்.

மூன்றாம் அதிகாரம் நீத்தார் பெருமையில்,

துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து
இறந்தாரை எண்ணிக் கொண்டற்று

என்ற குறள் யான் எனது என்னும் பற்றுக் களை விட்டொழிந்து வீடுபேற்று இன்பத்தினை நுகர்தற்குரிய சான்றோர் கள் பெருமையினை அளவிட்டுக் கூறுவது என்பது இவ் வுலகில் இதுவரை பிறந்து இறந்தவரை எண்ணிக் கணக் கிடுவது போன்றது என்கிறார். ஆன்மாக்கள் முன்பு பிறந்த நாளுக்கும் இனி பிறக்கப் போகிற நாளுக்கும் தொகை சொல்ல முடியாதவாறு போல இதுவரை தேகத்தைத் துறந்து வீடுபெற்ற உயிர்களுக்கும் இனித்துறந்து வீடு அடையப் போகிற உயிர்களுக்கும் தொகை அளவிட்டுச் சொல்ல முடியாது என்ற கருத்தினை உணர்த்துகிறது. உயிர்கள் எண்ணற்றன என்ற சைவ சித்தாந்தக் கொள்கை திருக்குறளில் இடம் பெற்றுள்ளது. இதனை

பிறந்த நாள் மேலும் பிறக்கும் நாள் போலும்
துறந்தோர் துறப்போர் தொகை

என்று திருவருட்பயன் கூறுகிறது.

துறவு என்ற அதிகாரத்தில் அகம்புறம் என்ற இருவகைப் பற்றுக் களை அறவே விட்டொழித்தவர்களே வீடுபேற்றினைத் தலைப்பட்டவர்கள். அவ்வாறு துறவாதவர்கள் மயங்கிப் பிறப்பாகிய வலையில்பட்டு வருந்துவர் என்பதனை,

தலைப்பட்டார் தீரத்துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவர்

என்றார் திருவள்ளுவர். இதனை நெஞ்சு விடுதூது என்னும் சைவ சித்தாந்த நூலில் உமாபதி சிவாசாரியார் அப்படியே எடுத்துக் கூறுகிறார்.

மெய்யுணர்தல் என்ற அதிகாரத்தில்

எப்பொருள் எத்தன்மையதாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு

மெய்ப்பொருள் என்றும் "சிறப் பென்னும் செம்பொருள்" என்றும் திருவள்ளுவர் கூறுவது முழு முதற்பொருளை உள்ளத்தில் சிந்தித்துப் போற்றுதல், தியானித்தல் என்ற சைவ சித்தாந்தக் கருத்தினை உணர்த்துகிறது.

மூவகை வினைகளும் மெய்ஞ்ஞானி களைச் சாரமாட்டா என்பதினை

சார்புணர்ந்துசார்பு கெட ஒழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரு நோய்

காமம் வெகுளி மயக்கம் இவை மூன்றும்
நாமம் கெடக் கெடும் நோய்

என்ற குறட்பாக்கள் உணர்த்துகின்றன.

எல்லாப் பொருட்களுக்கும் சார்பான செம்பொருளை உணர்ந்து தம்மைச் சாரும் இருவகைப்பற்றுக் களும் நீங்குமாறு நடந்தால் அவனைச் சார்வதற்குரிய துன்பங்கள் அவர்தம் உணர்வொழுக்கங்களை அழித்துச் சாரமாட்டா என்பது பொருளாகும்.

இதனைத் திருக்களிற்றுப் படியார் "சார்புணர்ந்து சார்புகெட" என்ற பாடலில் உணர்த்துகின்றார்.

ஏன்றவினை உடலோடு ஏகும் இடையேறும் வினை
தோன்றின் அருளே சுடும்.

என்ற பாடல் இப்பிறப்பில் எடுத்தவுடம்பில் நுகர்வதற்குரிய பிராரர்த்தமும் அது காரணமாக வந்தேறும் ஆகாமியமும் ஆசிரியன் செய்யும் தீக்கையினாலே அற்றொழியப் பிறவாநிலை வந்தெய்தும். இனிவரும் பிறவிக்குரியனவாகிய சஞ்சிதம் கெட்டொழியும் என்ற கருத்தினை,

"சார்தரும் நோய் சார்தரா" என்று வள்ளுவர் கூறியுள்ளார் ஊழ் என்னும் அதிகாரத்தில் திருவள்ளுவர் கூறியன வற்றைத் தொகுத்து நோக்குவோமே யானால் சைவ சித்தாந்தக் கொள்கையின் வேர்கள் கால் கொண்டுள்ளமையை உணரலாம்.

ஆகூழ், போகூழ் என்று பிரித்து உயிர்கள் செய்த இருவினைப் பயன்கள் அவ்வினை செய்த உயிர்களையே சென்றடையும் எனவும் நூல்கள் பல கற்றவராயினும் பேதமைப்படுத்தும் ஊழ்வந்துற்றகாலை முன்கற்ற கல்வியறிவு வெளிப்படாது பின்னும் தம் ஊழினாலாகிய பேதைமை அறிய வெளிப்பட்டுத் தோன்றும் என்றும், ஊழினால் தம்மோடு தொடர்பில்லாத பொருள்களை ஒருவர் எவ்வளவு வருந்திக் காத்தாலும் இல்லாது ஒழிந்து போகும் என்றும் இறைவன் ஒவ்வொரு

உயிர்க்கும் வகுத்தருளிய ஊழ் முறைமை யாளன்றி கோடிக்கணக்கான பொருள் களை முயன்று சேர்த்தவர்களுக்கும் அவற்றை நுகர்தல் இயலாது என்றும் கூறுகிறார்.

வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது

என்ற திருக்குறளில் ''வகுத்தான் வகுத்த வகை'' என வரும் தொடர் இருவினை களைச் செய்யும் உயிர்கள், உயிர்களால் செய்யப்படும் வினைகள், வினைப் பயன்களாக உயிர்கள் நுகரும் இன்ப துன்ப நுகர்ச்சிகள், நுகர்விக்கும் முதல் வனாகிய இறைவன் என் நான்கு பொருள்களைக் கூறுகிறார்.

சிவநெறியாளர்கள் தம் சமயத்துக்குரிய சிறப்புடைய பொருள் களாக இந்நான்கைக் கொண்டுள்ளனர். இதனைச் சாக்கியநாயனார் வரலாற்றில்

செய்வினையும் செய்வானும்
அதன் பயனும் சேர்ப்பானும்
மெய் வகையால் நான்காகும்
விதித்த பொருள் எனக் கொண்டே
இவ்வியல்பு சைவ
நெறியல்லவற்றுக் கில்லையென
உய்வகையால் பொருள் சிவமென்று
அருளாலே உணர்ந்திருந்தார்

எனச் சேக்கிழார் கூறுகிறார்.

உமாபதி சிவாச்சாரியார்

செய்வானும் செய்வினையும்
சேர்பயனும் சேர்ப்பானும்
உய்வான் உளன் என்றுணர்

என்று கூறுகின்றார்.

நன்றாங்கால் நல்லவாக் காண்பவர்
அன்றாங்கால்
அல்லற் படுவ தெவன்

இக்குறளில் சைவ சித்தாந்தம் கூறும் இருவினையொப்பின் இயல்பு இடம் பெற்றுள்ளது.

திருவள்ளுவர் ஆன்மாவை உள்ளம் எனவும் பரம்பொருளை உள்ளது எனவும் குறித்துள்ளார்.

ஓர்ந்து உள்ளம் உள்ளது உணரின்
ஒருதலையாப்
பேர்த்து உள்ள வேண்டா பிறப்பு

ஒருவனுடைய உள்ளம் தெளிவாக ஆராய்ந்து உண்மைப் பொருளை உணருமானால் அவனுக்கு மீண்டும் பிறப்பு உள்ளதாக நினைக்க வேண்டியதில்லை. இம்மரபு சைவ சித்தாந்த நூல்களில் தொடர்ந்து இடம் பெற்றுள்ளது.

இவ்வாறு தெய்வப் புலவர் அருளிய திருக்குறளில் சைவ சித்தாந்தக் கொள்கைகள் நிலைக்களமாகத் திகழ் கின்றன. மேலை நாட்டுக் கிறிஸ்துவப் பாதிரியார் ஆகிய ஜி.யூ.போப்பையர் அவர்கள் திருவள்ளுவர் தாம் கூறும் அறநெறியை சைவ சித்தாந்தம் கூறும் பதி பசு பாசம் என்னும் முப்பொருள் உண்மையை அடியாகக் கொண்டு வகுத்துள்ளார் எனத் தம் துணிவினைப் புலப்படுத்தியுள்ளார்.

குண்டவிதி

பஞ்சாக்ஷரபுரம் வாலையானந்த
சுவாமிகள் இயற்றியது.

யாகசாலா என்ற வடமொழிச் சொல்லில் உள்ள யகரம் யஞ்ஞத்தையும் சகரம் செல்லுதலையும் சகரம் சுகத்தையும் லகரம் லயத்தையும் குறிப்பதால் யாகசாலை என்ற சொல்லுக்கு ஞான யாகத்தால் லயத்தானத்தில் சுகத்தின் பொருட்டுச் செல்வது என்று பொருளாகும். ஆதலால் ஞான யாகம் செய்வதற்குரிய ஸ்தானம் யாகசாலையாகும்.

யாகசாலைக்காகக் குறிப்பிட்ட பூமியானது விதிப்படி சல்யோத்தாராதி செய்து தயாரிக்கப்படவேண்டும். சல்யோத்தாரமாவது, பூமியை முழங்காலளவு பள்ளமெடுத்து ஓடு கல் முதலான சல்லியமில்லாமல் சோதித்துச் சமமாகச் செய்வது. அவ்வாறு செய்யப் பட்ட பூமியை மெழுகி அவ்விடத்தில் வாஸ்துபூசை செய்து யாகமண்டபம் செய்யவேண்டும்.

அத்தகைய யாகமண்டபத்தில் சிவாக்கினியைப் பாலயௌவன விருத்த சொரூபமாகவும், அஷ்டமூர்த்தி வடிவமாகவும் பூசிப்பதற்கு உதவியாக உள்ளவை குண்டங்கள்.

அக்கினியாவது வைதிககாக்கினி சிவாக்கினி என இருவகைப்படும். வைதிகாக்கினி தேவாத்மக பாவமில்லாது ஜாடராக்கினி ரூபமுடையதாகும். இது வைசுவாந ராக்கினியென்வும் பெயர் பெறும். இது கர்மயாகத்துக்கே உரியது. இதற்குப் பஞ்சாவரணங்களில்லை. சிவாக்கினியானது தேவாத்மக பாவ முடையதாய்ச் சிவரூப்மாகும். இது ஞானயாகத்துக்கே உரியது. இதற்குப் பஞ்சாவரணங்களுண்டு

இனி பாலாக்கினியானது கர்ப்பாதானம் பும்ஸவனம் சீமந்தோந் நயனம், நாமகரணம் வரை சம்ஸ்காரமுடையது. விருத்தாக்கினி யானது சோடச சம்ஸ்காரங்களனைத்து முடையது. இவற்றுள் பாலாக்கினி சமய திக்கை பிராயச்சித்தம் நித்தியாக்கினி அபரக்கிரியைகளுக்கும், யௌவனாக் கினி உத்ஸவம் நிர்வாண தீட்சை களுக்கும், விருத்தாக்கினி பிரதிட்டைக் கும் ஆகும்.

யாகசாலையில் கிழக்கில் நாற்கோண குண்டமும், அக்கினி திக்கில் அரசிலைக்குண்டமும் (யோனி குண்டமும்), தெற்கில் அர்த்த சந்திர குண்டமும், நிருதியில் முக்கோண குண்டமும், வாயு திக்கில் அறுகோண குண்டமும், மேற்கில் விருத்த குண்டமும், வடக்கில் பத்மகுண்டமும், ஈசானதிக்கில் எண்கோண குண்டமும், ஈசானத்துக்கும் கிழக்குக்கும் மத்தியில் பிரதான குண்டமும் (விருத்தகுண்டம்) போடவேண்டும்.

நாற்கோண குண்டம் பிருதிவிதத் துவமாகும், அரசிலைக்குண்டம் நியதிமாயாதத்துவமாகும். அது சீவனைக் குறிக்கும். அர்த்த சந்திர குண்டம்

அப்புதத்வமாகும். முக்கோண குண்டம் தேயு தத்துவமாகும். அறு கோண குண்டம் வாயுதத்துவமாகும். விருத்த குண்டம் ஆகாய தத்துவமாகும். பத்மகுண்டம் கலாதத்துவமாகும். இது சூரியனைக் குறிக்கும். எண்கோண குண்டம் நாளதத்துவமாகும். இது சந்திரனைக் குறிக்கும். விருத்தகுண்டமாகிய பிரதான குண்டம் சிவதத்துவமாகும். இது சிவபிரானைக் குறிக்கும். இவ்வாறு யாகசாலை, 36 தத்துவ சொரூபமாவதையும் சிவபிரானது அஷ்ட மூர்த்த வடிவாதலையுமறிக.

இங்ஙனங்கூறிய நாற்கோண மாதிய குண்டங்களில் முறையே தத்வேசர்களாகிய மகாதேவர், பவர், சர்வர் ஈசானர் பசுபதி உருத்திரர் உக்கிரர் பீமர் மகாதேவர் எனுமிவர்களும் முறையே மூர்த்தீசர்களான பரசிவம் தற்புருஷர் இருதய மூர்த்தி அகோரர் சிகாமூர்த்தி கவசமூர்த்தி சத்தியோஜாதர் வாமதேவர் சிரசுமூர்த்தி பரசிவம் எனுமிவர்களும் பூசிக்கப் பெறுவார்கள்.

நாற்கோண குண்டத்தில் ஆகவனீயாக்கினியும் அர்த்த சந்திர தக்ஷிணாக்கினியும் விருத்த குண்டத்தில் காருக பத்தியாக்கினியும் அறுகோண குண்டத்தில் பாலாக்கினி யும் திரிகோண குண்டத்தில் யௌவனாக்கினியும் யோனி குண்டத் தில் விருத்தாக்கினியும் பத்ம குண்டத் தில் கேவலாக்கினியும், எண்கோண குண்டத்தில் சாமான்யாக்கினியும் பிரதான குண்டத்தில் சிவாக்கினியும் என ஒன்பது அக்கினிகள் ஒன்பது குண்டங்களிலும் ஸ்தாபித்துப் பூசிக்கப் பெறும்.

குண்டங்களின் பொதுவிதி

குண்டங்கள் யாவும் ஒரே சுற்றளவுள்ளனவாய்ச் சிரசு, இருதயம் நாபி கண்டம் யோனி மேல்மேகலை நடுமேகலை கீழ்மேகலை பரிஸ் தரணம் எனும் ஒன்பது உறுப்புக்களையுடையன வாகவிருத்தல் வேண்டும்.

குண்டங்களின் அகலம் ஒரு முழமாகும். அதாவது இருபத்து நான்கங்குலம். அவ்வளவே மேல்மேகலையுட்பட உள்ளாழமாகும். அதாவது மேல்மேகலையுட்பட மேகலை உயரம் அங்குலம் ஒன்பதும் அதன் கீழ் உள்ளாழம் அங்குலம் பதினைந்தும் ஆக அங்குலம் இருபத்து நான்கு இருக்கவேண்டும்.

ஒரு குண்டத்தின் சுற்றளவே குண்டங்களனைத்தினுக்கும் தனித் தனியிருக்கவேண்டும்.

சிரசு

குண்டத்தில் சிரசு அக்கினி யாகும்.

இருதயம்

குண்டநடுவில் உள்ள கர்ணிகை யோடு கூடிய பதுமம் இருதயமாகும்.

அந்தப்பதுமம் குண்டத்திற் பாதியளவாகின்ற பன்னிரண்டங்குலம் குறுக்களவும் மூன்றங்குல உயரமுள்ள தாய்த் தம்முட் சமமான அளவுள்ள எட்டிதழும் கர்ணிகையுமுள்ளதா யிருக்கவேண்டும். அவற்றுள் இதழ்களின் அளவு இரண்டு பங்கும் கர்ணிகையின் அளவு ஒரு பங்குமாகும். அதாவது பதுமத்தின் குறுக்களவு பன்னிரண்டங் குலத்தின் மத்தியிலிருந்து கர்ணிகை யானதால் கர்ணிகையின் குறுக்களவு நான்கு அங்குலமும், கர்ணிகையின் இரண்டு பக்கங்களிலும் உள்ள இதழ் களிரண்டிற்கும் தனித்தனி இதழ் நீளம்

நான்கு அங்குலமுமாக எட்டங்குலமும் ஆகப் பன்னிரண்டங்குலமாகும். கர்ணிகை மத்தியில் ஓர் அங்குல உயரமும் கனமும் உள்ள பீஜங்கள் (வித்துகள்) ஒன்பதிருக்கவேண்டும்.

நாபி

குண்ட நடுவில் உள்ள பதுமத்திற்கு வெளியில் வட்ட வடிவமாய் மூன்றங்குல உயரத்தில் செய்யப் பெறுவது நாபியாகும்.

கண்டம்

குண்டத்தின் உயரத்தில் நடுப் பாதியில் உட்புறமாகக் குண்டத்தைச் சுற்றி ஓர் அங்குல கனத்தில் திரணையாகச் செய்யப்படுவது கண்டமாகும்.

யோனி

குண்டயோனியாவது மேல் மேகலையில் அரசிலை வடிவாய் கண்டபரியந்தம் கீழ்நோக்கி யிருப்பது. அது மேல்மேகலை மத்தியில் எட்டங்குல அகலமுடையதாய் அதன் நுனி முனையானது கண்டத்தை தொடு வதாய் 12 அங்குல நீளம் இருத்தல் வேண்டும். கண்டத்தின் கீழ் இரண்டங்குலம் நீண்டிருக்கும்படி செய்யலாம்.

குண்டயோனியானது கிழக்கு, அக்கினிமூலை தெற்குக் திக்குகளிலுள்ள குண்டங்களுக்கு வடக்கு முகமாகவும் மற்றவைக்குக் கிழக்கு முகமாகவும் இருக்கவேண்டும்.

மேகலை

மேகலையாவது கண்டத்தின் வெளியில் குண்டவடிவாய்ச் சூழ்ந்திருப் பது. ஒவ்வொரு குண்டத்துக்கும் மேகலைகள் மூன்றிருக்கவேண்டும். அவற்றுள் மேல்மேகலையானது நான் கங்குல அகலமும் நான்கங்குல உயரமுமாக விருக்கவேண்டும். நடு மேகலையானது மூன்றங்குல அகலமும் மூன்றங்குல உயரமுமாக இருக்க வேண்டும். கீழ் மேகலையானது இரண்டங்குல அகலமும் இரண்டங்குல உயரமுமாக இருக்கவேண்டும்.

பரிஸ்தரணம்

பரிஸ்தரணமாவது குண்டத்தைச் சுற்றிப் போடப்பெறும் தருப்பை களாகும். இவை பசுமையான முப்பது தருப்பைகளினாலே சடைபோற் பின்னப்பட்டதாய் அல்லது முறுக்கப் பட்டதாய் ஓரங்குல அளவில் வலமாகப் போடப்பெற்ற முடிச்சை உடையதாக இருக்கவேண்டும். பரிஸ்தரணம் விஷ்டரம் என்றும் கூறப்பெறும்.

குறிப்பு - யோனி குண்டத்துக்கு யோனியும், பதுமகுண்டத்துக்கு இதய பதுமமும் வேண்டுவதிலை.


குண்டங்களில் சாங்க உபாங்க பிரத்தியங்கங்களாவன - அக்கினிசாங் கமும், மேகலைகள் உபாங்கமும், பரிஸ்தரணம் பிரத்தியங்கமுமாகும்.

இனி குண்டங்களில் பஞ்சா வரணங்களாவன: - முதலாம் வரணம் அக்கினி, இரண்டாமாவரணம் மேன் மேகலை, மூன்றாமாவரணம் நடு மேகலை, நான்காமாவரணம் கீழ்மேகலை, ஐந்தாமாவரணம் பரிஸ் தரணமாகும்.

குண்டங்கள் அமைக்கும் முறை

குண்டங்களுக்கெல்லாம் நாற் கோணமே உற்பத்தியிடமாதலால் நாற்கோணம் அமைக்கும் முறையை

இந்தப்படம் காட்டுகிறது. இதிற்கண்ட அடையாள எழுத்துக்களில்லாமலே வேறு அடையாளங்களையிடலாம். இவ்வாறே மற்றவைக்குமாகும்.



படம் 1

நாற்கோணம் செய்யும் விதமாவது

பூமியை மட்டமாகச் செய்து கொண்டு மேற்கிலிருந்து கிழக்கு முகமாக இருபத்து நான்கு அங்குல அளவில் ஒரு நூல் மாவினாலே நனைத்து அடித்து அதன் இருமுனை களிலும் ஏ,பி என்று குறியிடவும். இந்த நூலுக்குப் பிராசீசூத்திரம் எனப் பெயர்.

இந்த சூத்திரதை நான்காகப் பங்கிடப் பங்கு ஒன்றுக்கு ஆறங்குல மாகும். இந்த ஆறங்குல அளவில் ஏ யிலிருந்து முறையே டி.ஜி.சி என்று குறியிடவும். ஏ.பி யின் முக்கால் அளவாகிய 18 அங்குலத்தைக் குறிக்கும். ஏ.சி அளவில் ஏ யை மத்தியமாக வைத்து சுற்றுக்கருவியால் ஜி யின் வடக்கிலும் தெற்கிலும் சுற்றி அடையாளக் கோடிடவும். பி யை மத்தியமாக வைத்து பி.டி. அளவில் முன்போல் ஜி யின் வடக்கிலும் தெற்கிலும் சுற்றி அடையாளமிடவும்.

அடையாளக் கோடுகள் புள்ளிக் கோடுகளாகப் படங்களிற் காட்டப்பட்டிருக் கின்றன.

முன் அமைந்த அடையாளக் கோடுகள் இரண்டுஞ் சேருமிடங்களில் இ என்றும், தெற்கில் எப் என்றும் குறியிட்டு இ யிலிருந்து எப் வரைக்கும் ஒரு நூல் அடிக்கவும். இந்த நூல் சோமசூத்திரம். எனப் பெயர் பெறும்.

சோமசூத்திரத்தில் ஜி யிலிருந்து வடக்கில் 12 அங்குலத்தில் எச் என்றும், தெற்கில் 12 அங்குலத்தில் 1 என்றும் குறியிடவும்.

பிறகு A,G. அளவில் A,H,B,F என்ற இடங்களை மத்தியாக வைத்து இரு பக்கங்களிலும் சுற்றுக் கருவியாற்சுற்றி, அடையாளங்களிட்டு நாலு சந்திப்பு இடங்களிலும் J,K,L,M என்று குறியிட்டு இவைகளை முலைகளாக கொண்டு. சமசதுரமாகிய நாற்கோணம் அமைக்கவும். அதாவது M -க்கும் J -க்கும் J -க்கும் K

-க்கும் L -க்கும் L - க்கும் M -க்குமாக நூலடிக்கச் சம சதுரமாகும். இதன் பக்க அளவுகள் 2 அங்குலமேயாகும். இவ்வாறாக எந்த அளவிலும் சமசதுரம் செய்யலாம்.


இவ்வாறன்றி மற்றொரு விதமாகவும் நாற்கோணம் அமைப்ப துண்டு. அஃதாமாறு:

கிழக்கு மேற்காக 24 அங்குல அளவுள்ள பிராசிசூத்திரமாகிய A,B யை அமைத்து அதன் மத்தியில் E அடையாளமிட்டு இந்த E மத்தியில் வரும்படி தெற்கு வடக்காகக் கவனிப்புடன் நூலடித்து அதன் இரு முனைகளிலும் C,D அடையாளமிட்டுச் சோமசூத்திரம் அமைக்கவும.

E -யிலிருந்துவடக்கில் சோம சூத்திரத்தில் A,E அளவு அதாவது 12 அங்குலம் வைத்து F அடையாளமும் தெற்கில் 12 அங்குலம் வைத்து G அடையளமும் வைக்கவும்.

இனி கிழக்குக் குறியாகிய B -யிலிருந்து 12 அங்குலம் தெற்கு முகமாகவும் அவ்வாறே தெற்குக் குறியாகிய G யிலிருந்து கிழக்கு முகமாகவும் இரண்டு நூலடித்து இரண்டுங் கூடினவிடத்தில் K என்று குறியிட அக்கினி மூலையாகும். இவ்வாறே G -க்கும் A -க்கும், A - F -க்கும், F -க்கும் B -க்குமாக நூலடித்து ஏனைய் மூன்று மூலைகளையும் அமைக்கவும். இவ்வாறமைந்த நாலு மூலைகளிலும் வடகிழக்கு முதலாக முறையே J,K,I,H என்று குறியிட்டு நாற்கோணம் செய்யவும்.


இம்முறையை 2வது படங்காட்டு கிறது.



படம் II

இரண்டாவது வழியிலும் முதல் வழியே சிறந்ததாகும்.

இவ்வாறு அமைத்த சமசதுர மாகிய நாற்கோண க்ஷேத்ரமானது இருபத்து நான்கு பாகமுள்ளதாகும். அது தெரியும் பொருட்டுக் கிழக்கு மேற்காக இருபத்தைந்து நூலும் தெற்கு வடக்காக இருபத்தைந்து நூலும் அடித்தால் 24க்கு 24 = 576 பதமாகும். இவ்விதம் பகுத்ததை மூன்றாவது படங்காட்டுகிறது.




படம் III

1. நாற்கோண குண்டம்


நாற்கோண குண்டமாவது முன்போல் 24 அங்குல அளவில் சம சதுரமும் மேல் மேகலை உட்பட 24 அங்குல ஆழமும் உடையதாய் நாபி இதயம், கர்ணிகை, மேல்மேகலை, நடுமேகலை, கீழ் மேகலை, யோனி, கண்டங்களோடு கூடியதாய் இருக்க வேண்டும்.

நாற்கோண குண்டத்தின் கீழ் அமைப்புத் தோற்றத்தை (ground plan) 4வது படம் காட்டுகிறது. அதன் எதிர்நேர் தோற்றத்தை (front elevation) 5வது படமும், அதன் எதிர் இயல்பு தோற்றத்தை (perspective view) 6வது படமும், அதன் எதிர்ப்பகுதி தோற் றத்தை (Sectional elecation) 7வது படமும் காட்டுகின்றன.



படம் IV


நாற்கோண குண்டத்தின் கீழ் அமைப்புத் தோற்றம்
(ground plan)




படம் V

நாற்கோண குண்டத்தின் எதிர்நேர் தோற்றம்
(front elevation)

1,2 குண்ட அளவு , அகலமும் நீளமும் தனித்தனி 24 அங்குலம்.
3. இதயகமலம், இதழ் நான்கங்குலம்.
4. கர்ணிகை, நான்கங்குலம்.
5. பீஜம் ஒன்பது.
6. மேல்மேகலை.
7. நடுமேகலை.
8. கீழ்மேகலை.
9. குண்டயோனி.




படம் 6
நாற்கோண குண்டத்தின் எதிர் இயல்பு தோற்றம்



படம் எ
நாற்கோண குண்டத்தின் எதிர் ப்பகுதி தோற்றம்

2. யோனி குண்டம்

யோனி குண்டத்துக்கு அரசிலைக்குண்டம் என்றும் பெயர்.



படம் VIII

இந்தப் படத்தில் பிராசீசூத்திரம் E,G என்றும், சோமசூத்திரம் F,H என்றும் க்ஷேத்திரமுலைகள் A,B,C,D என்றும், க்ஷேத்திரமத்தி L என்றும் குறிக்கப்பட்டிருக்கின்றன.

இதில் யோனிகுண்டம் அமைக்கும் விதமாவது நாற்கோண க்ஷேத்திரத்தை அமைத்துக் கொண்டு அதில் சோமசூத்திரத்தை அஃதாவது 24 அங்குலத்தை ஐந்து பங்காக்கி அதில் ஒரு பங்கு மேலே தள்ளி அதாவது F -க்கு மேல் ஒரு பங்கு தள்ளி I என்று குறியிட்டு E -க்கும் I -க்கும் G -க்கும் I -க்கும் கோடுகள் வரைக.


பிறகு E -க்கும் H -க்கும் L -க்கும் D -க்கும் கோடுகளிழுத்துச் சந்திப்பு மத்தியில் G அடையாளமும் G -க்கும L -க்கும கோடுகள் இழுத்து சந்தப்பு மத்தியில் K அடையாளமும் அமைக்கவும். இனி J யை மத்தியமாக வைத்து J,D அளவில் சுற்றுக் கருவியால் H,D,E என்ற அரை வட்டமும் K -யை மத்தியாக வைத்து K,C அளவில் G,C,H என்ற அரை வட்டமும் அமைக்கவும். இவ்வாறமைக்கவே யோனி குண்டம் அமையும். இதற்குக் குண்டயோனி வேண்டுவதில்லை.

இந்த யோனி குண்டத்தின் அடிப்புறத்தை மற்றொரு வகையாகவும் செய்யலாம். அதாவது, க்ஷேத்திர அளவாகிய 24 அங்குலத்தை 4 பங்காக்கி, வந்த 6 அங்குலமாகிய ஒரு பங்கை D -யிலிருந்தும் C -யிலிருந்தும் மேலே தள்ளி அடையாளமிட்டு இந்த இரண்டு அடையாளங்களுக்கு நேராகக் கிழக்கு மேற்காக ஒரு நூலடித்து அதில் ஷெ நாலிலொரு பங்கைக் கிழக்கு முனையிலிருந்து மேற்காகவும், மேற்கு முனையிலிருந்து கிழக்காகவும் தள்ளினால் அரை வட்டங்களின் நடுமையமாகிய J,K என்ற குறியிடம் ஏற்படும். இந்த J,K என்பவைகளை மத்தியாக வைத்துச் சுற்றுக் கருவியால் முன்போற் சுற்றி யோனி குண்டத்தின் அடிப்புறம் அமைக்கவும்.

இந்தப் படத்தில் 4,3,2 என்று அடையாளமிடப் பெற்றவை மேகலைகளாகும்.

3. அர்த்தச் சந்திர குண்டம்

அர்த்தச் சந்திரகுண்டமென்பது பிறைபோன்ற குண்டம், அதாவது பாதிச் சந்திரன் போன்றது.




படம் IX

இதை அமைக்கும் விதமாவது நாற்கோண க்ஷேத்திரத்தை அமைத்துக் கொண்டு அதில் சோமசூத்திரத்தை A,B என்று அடையாளமிடவும். சோம சூத்திரத்தை ஒன்பது பங்கு செய்து A-யிலிருந்து ஒரு பங்கு மேலே தள்ளி, C என்றும் B யிலிருந்து ஒருபங்கு கீழே தள்ளி D என்றும் அடையாளமிடவும். பிறகு C யை மத்தியமாக வைத்து C,D அளவில் சுற்றிப் பாதி வட்டம் செய்து ஷெ வட்டத்தின் இருமுனை களிலும் என்று அடையாளமிடவும். E,D,F என்ற பாதி வட்டத்தின் என்ற இரண்டு முனைகளுக்கும் அதாவது E,C,F என்ற குறிகளுக்கு நேராக நூலடிக்க அர்த்த சந்திரன் ஆகும். அதே வடிவில் மூன்று மேகலைகளமைக்கவும்.

4. திரிகோண குண்டம்

திரிகோண குண்டமென்பது முக்கோண குண்டமாகும்.



படம் X


திரிகோணகுண்டம் அமைக்கும் விதமாவது

நாற்கோண க்ஷேத்திரத்தின் நாலு முலைகளிலும் A,B,C,D என்ற குறிகளிட்டு க்ஷேத்திர சூத்திரத்தை ஆறு பங்கு செய்து ஒரு பங்கு Aயின் மேற்கில் தள்ளி F என்றும், D யின் கிழக்கில் தள்ளி G என்றும், B,C யின் மத்தியாகிய E யின் வடக்கில் தள்ளி H என்றும் அடையாளமிடவும்.

பிறகு Fக்கும் G க்கும், F க்கும் Gக்கும், Hக்கும் Gக்கும் நூலடிக்க முக்கோணமாகும். இதே வடிவில் மூன்று மேகலைகள் அமைக்கவும்.

5. ஷட்கோண குண்டம்

ஷட்கோண குண்டமாவது அறுகோண குண்டமாகும்.



படம் XI

அறுகோண குண்டம் அமைக்கும் விதமாவது.

நாற்கோண க்ஷேத்திரத்தின் நான்கு கோடிகளிலும் வாயு முலையிலிருந்து முறையே வலமாக A,B,C,D என்றும் A,B க்கு மத்தியில் H என்றும் குறியிடவும். சோமசூத்திரத் தைத் தென் கோடியில் சிறிது நீட்டிக் சொள்ளவும்.


பிராசீ சூத்திர அளவாகிய 24 அங்குலமான A,B அளவை H விருந்து A,D நூலில் பொருந்தும்படி வைத்து பொருந்துமிடத்தில் I என்றும், H விருந்து B,C நூலில் பொருந்தும்படி வைத்து, பொருந்துமிடத்தில் J என்றும் குறியிட்டு H விருந்து I-க்கும், Hவிருந்து J க்கும், I யிலிருந்து J க்கும் நூலடித்து முக்கோணம் அமைக்கவும். இவ்வாறமைந்த முக்கோணத்தின் மூன்று நூல்களையும் தனித்தனி மூன்று பங்கு செய்து அவைகள் விளங்க L,M,N,O,P,K என்று குறிகளிட்டு K,L இரண்டுக்கும் நேராக

A,D,B,C நூல்கள் வரை நூலடித்து அதன் இருமுனைகளிலும் F,E என்று குறியிடவும். F,E அளவை Fலிருந்து P,O வழியாக சோமசூத்திரத்தில் தொடும்படி நூலடித்து அந்த சூத்திர சந்திப்பில் G என்று குறியிடவும். E லிருந்து M,N வழியாக G வரை நூலடிக்க F,E,G என்ற முக்கோணம் அமையும்.

இவ்வாறு எதிர் எதிராக அமைந்த இரண்டு முக்கோணங்களும் சந்திக்குமிடங்களாகிய L,M,N,O,P,K என்ற இடங்களிலிருந்து L க்கும் M க்கும், M க்கும் N க்கும், N க்கும் Oக்கும், Oக்கும் P க்கும், P க்கும் Kக்கும் இடையிட்ட நூல்களை அழித்துவிட சரியான அறுகோணமாகும். அதே வடிவில் மூன்று மேகலைகளை அமைக்கவும்.

6. அஷ்டகோணகுண்டம்

அஷ்டகோண குண்டமென்பது எண்கோண குண்டமாகும்.




படம். XII.

நாற்கோண க்ஷேத்திரமாகிய A,B,C,D யில் க்ஷேத்திர நூலில் (A,B ல்) பதினாறில் ஒரு பங்கு உள்ளே தள்ளி E,F,G,H என்ற நாற்கோணம் அமைக்கவும்.

A,B நூலின் நடுவில் (சோமசூத்திர வடக்கு முனையில்) I என்று குறியிட்டு அதிலிருந்து வடக்கில் A,B அளவில் எட்டில் ஒன்றை வெளியில் தள்ளி J என்று குறியிடவும். இவ்வாறே B,C மத்தியிலும், C,Dமத்தியிலும் D.A மத்தியிலும் முறையே O,P,K,L,M,N என்ற குறிகளை உண்டாக்கி J க்கும் P க்கும், P க்கும் Lக்கும், Lக்கும் Nக்கும், Lக்கும் Nக்கும்,N க்கும் J க்கும் நூலடித்து மற்றொரு நாற்கோணம் செய்து, இந்த நாற்கோணமும் உள் நாற்கோணமும் சந்திக்கிற இடங்களில் R,S,T,U,V,W,X,Q என்று அடையாளமிட்டு RS, ST, TU, UV, VW, WX, XQ எனும் இவைகளுக்கிடையில் உள்ள இரேகைகளை அழித்துவிட சரியான எண்கோணமாகும். குண்ட வடிவில் மேகலைகளை அமைக்கவும்.

7. விருத்த குண்டம்.

விருத்த குண்டமாவது வட்டவடிவான குண்டம்.



படம் XIII

விருத்தகுண்டம் அமைக்கும் விதமாவது -


நாற்கோண க்ஷேத்திரத்தில் சோமசூத்திரத்தில் இரண்டு முனைகளிலும் A,B என்று குறியிட்டு அதன் மத்தியில் C என்று குறித்து க்ஷேத்திரகோணம் ஒன்றில் D என்று குறித்து க்ஷேத்திர மத்தியாகிய C க்கும் Dக்கும் ஒரு நூலடிக்கவும்.

கண்ட சூத்திரமாகிய (சோமசூத்திரம்) A,B யின் பகுதியாகிய A,C யை எட்டுப் பங்காக்கி ஒருபங்கை D,C நூலில் D யிலிருந்து E தள்ளி என்று குறியிடவும்.

C யை மத்தியாகவைத்து C,E அளவில் சுற்றுக் கருவியால் சுற்ற சரியான விருத்த குண்டமாகும். குண்டவடிவில் மேகலைகளைச் செய்யவும்.

8. பத்மகுண்டம்.

பத்ம குண்டமாவது தாமரை மலர் போன்ற குண்டமாகும்.




படம் XIV

பத்மகுண்டம் அமைக்கும் விதமாவது

நாற்கோண க்ஷேத்திரத்தில் C,E முன்போல் அளவில் C யை மத்தியாக வைத்து வட்டம் செய்து வட்டத்தின் வெளியில் மூன்று மேகலைகளின் அகல அளவாகிய ஒன்பதங்குலத்தின் பாதியான நாலரை அங்குலத்தில் கர்ணிகை வட்டமும் அதன் வெளியிலுள்ள நாலரை அங்குலத்தில் எட்டுத் தாமரையிதழ்களும் செய்யவும்.

பத்மகுண்டத்துக்கு மத்தியில் இருதய பதுமம் வேண்டுவதிலை.


இவ்வாறு குண்டங்களினிலக்கணம் ஒருவாறு கூறப்பட்டது.




படம் XV


அறுபத்து நான்கு பதமண்டுக வாஸ்து

வேதிகையின் நேர் எதிர் தோற்றம்
படம் XVII






படம் XVI
வேதிகையின் கீழ் அமைப்புத் தோற்றம்



படம் XVIII



படம் XIX

கும்பத்தின் எதிர்ப்பகுதித் தோற்றம்

1.கலசம்

2.தண்ணீர் (கும்போதகம்)

3.நவரத்தினம்.


4.சொர்ணபுஷ்பம்.

5.அந்தகூர்ச்சம்.

6.தேங்காய்.

7.மாவிலை.

8.லம்பகூர்ச்சம்.



படம் XX

கும்பத்தின் நேர் எதிர் தோற்றம்

1.சப்த தானியம்.

2.கலசம் அல்லது கும்பம்.


3.கும்பசூத்திரம் (கும்பத்தின்மேல்) சுற்றிய நூல்.

4.ஈசானுதி முக சூத்திரம். இது கிழக்கு முதல் நான்கு திக்கிற்கும் 4ம் வடக்குக்கும் கிழக்குக்கும் மத்தியில் 1ம் ஆக ஐந்து.

5.மாவிலை. 6.தேங்காய்.

7. லம்பகூர்ச்சம்.

8,9.பரிவட்டம்.



படம் XXI.

இரவிசூத்திர தீக்ஷாயாகசாலே

குண்டவிதி முற்றும்.

உ

சிவமயம்

நாத ஜ்யோதி ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதர் அவர்கள் அருளிய அபயாம்பா நவாவர்ணம்

ராகம் : தோடி ஆதி தாளம்

பல்லவி

மஹா கணபதிம் வந்தே மாத
வாத்ய மர ப்ருந்தம் (மஹா கணபதிம்)

அனுபல்லவி

ஆஹந்தாதி ரஹிதம் சக்தி விஹிதம்
ஆனந்ததம் தமேக தந்தம் (மஹா கணபதிம்)

சரணம்

த்ரிபுர வதார்த்தம் ரிவேன த்ரயம்ப
கேனார்ச்சிதம் உபநிஷத் ப்ரதி பாதிதம்
உமா மஹேச்வர ஸுதம்
கபிலவஸிஷ்டாதி நதம் கஞ்ஜஜாதி பிரீடிதம்
கபிலம் க்ருஷ்ண பூஜிதம் கரிவதனேன சோபிதம்

மத்யமகாலம்

ஸுபர்ண வாஹஸேவிதம் ஸுரகுருகுஹ பாவிதம்
கபித்தாம்ர பநஸ ஜம்பூ கதலீபல பக்ஷிதம்
(மஹா கணபதிம்)

(ஸ்ரீ சுப்ரமண்யர் துதி)

ராகம் : சுத்த தன்யாஸி ஆதி தாளம்

பல்லவி

ஸுப்ரஹ்மண்யேன ரக்ஷிதோஹம்
அஷ்டாதச லோசனா கண்டேன (ஸுப்ரஹ்மண்யேன்)

அனுபல்லவி

ப்ரப்ரவா மாதி பூஜித பதேந
புரந்தர மனோல்லாஸ கரணேன (ஸுப்ரஹ்மண்யேன)

சரணம்

கங்சைல விஹாரேண வரேண
வல்லீதே வ ஸேனா ரமணேன
அகார ப்ருத்தேன ஆனந்தேன
போக மோக்ஷ தானேன நித்யேன

மத்யகாலம்

வெங்கடேச்வர நாம ரூபணே
விசித்ர விசாக மஹோத்ஸவேன
சுக ரஹஸ்ய ப்ரகாச குருகுஹேன
க்ருத்திகா ஸுத சுத்த தன்யேன (சுப்ரஹ்மண்யேன)

நவாவர்ணம் த்யான கீர்த்தனை

ராகம் : சாமரம் தாளம் : ரூபகம்

பல்லவி

ஸதாச்ரயே அபயாம்பிகே ஸன்னிதேஹி
ஸதாச்ரயே த்வாம் அம்பிகே
பத்ரம் - தேஹி (ஸதாச்ரயே)

அனுபல்லவி

சிதாச்ரயே சிதம்பர சந்த்ரிகே யேஹி
சிதாச்ரயே சிவ மஞ்சகே நத வாராஹி
முதாச்ரயே புக்தி முக்தி ப்ரத மார்கம் ப்ரூஹி
முதாச்ரயே மாயா தீனம் தீனம்
மாம் பாஹி (ஸதாச்ரயே)

சரணம்

கௌரீ மாயூரநாத மோஹனகர சக்தே
சௌரீச விதீந்த்ராதி ஸன்னுத பராசக்தே
நாரீமண்யாதயர்சித நாத பிந்துயுக்தே
சாரீரகாதி வித்யா ஸித்தாந்த யுக்தே
பேரீ மத்தள வீணாவாதனானு ரக்தே
ஸூரி ஜனோபாஸித சரணநளின யுக்தே
வாணீ மாகர த்ருத சாமர ஸேவா ஸக்தே
தூரீக்ருத துரித வேத சாஸ்த்ராதி ப்ரஸக்தே

மத்யமகாலம்

வாரீசாதி லோக பாலனுத குருகுஹ பக்தே
தாரித்ரயது:க பஞ்ஜன் சங்கரா விபக்தே
சுகஸனகாதி தேவதா ஸேவிதே பரதேவதே
வாரிஜமுகி வரதா பயஹஸ்தே நமோ நமஸ்தே
(ஸதாச்ரயே)

நவாவர்ணம் 2

ராகம் : கல்யாணி

ஆதி தாளம்

பல்லவி

அபயாம்பா ஜகதம்பா ரக்ஷது
ஆத்மரூப ப்ரதிபிம்ப மதம்பா (அபயாம்பா)

அனுபல்லவி

இபவதன ஸ்ரீ குருகுஹ ஜனனீ-
ஈச மாயூர நாத ரஞ்ஜனீ
அபயவரதபாணீ அளிவேணீ ஆச்ரித
மாவாணீ கல்யாணி (அபயாம்பா)

சரணம்

பக்த நாக லிங்க பரிபாலினீ-
பாஸமான நவரத்ன மாலினீ
வ்யஸ்த ஸமஸ்த ஜகத் விசாலினீ-
வ்யதி கரண ஹரண நிபுண ஸூலினீ
ரக்த சுக்ல மிச்ர ப்ரகாசினீ ரவி-
கோடி கோடி ஸங்காசினீ
பக்தி யுக்த மானஸ நிவாஸினீ பாவராக
தாள விச்வாஸினீ.

மத்யமகாலம்

புக்தி பல ப்ரத தக்ஷ ம்ருடானீ
பக்தி ப்ரத நிபுணதர பவானீ
சக்தி ஸம்ப்ரதாயக சர்வாணீ
புக்தி முக்தி விதரண ருத்ராணீ (அபயாம்பா)

நவாவர்ணம் 3

ராகம் : பைரவி த்ரிபுடை தாளம்

பல்லவி

ஆர்யாம் அபயாம்பாம் பஜரே ரே சித்த ஸந்தம்
அவித்யா கார்ய கலனாம் த்யஜரே
ஆதி மத்யாந்த ரஹிதாம் சிவ ஸஹிதாம் (ஆர்யாம்)

அனுபல்லவி

ஸூர்யாக்னி சந்த்ர மண்டல மத்ய வாஸினீம்
ஸூக தர ப்ரவர்த்தினீம் ஸ்வேதர நிவார்ஸினீம்
ஆசார்ய சிஷ்யானுகர ஹ கரண
சக்தி ப்ரதா பாரகருணாம்
சர்யாதி சதுஷ்டய விதரண ஸமர்த்த
தர சரணாம் அருணாம் (ஆர்யாம்)

சரணம்

நந்தன வநோத் பாதனாம் புஷ்ப மாலிகாம்
வந்தனாலயாதி ப்ரஸ்தாபன திவ்ய
சந்தனா கர்ஷண ஸ்தல சுத்தி கரண
வந்தன ஸ்தோத்ராதி படன பக்தஸேவனாம்
மந்ததீ ஹரண சர்யாயுத மானவானாம்
தர்மமய ஸ்வச்சந்தசிவ ஸாலோக
தாயக சதுரதரஹர நட பைரவீம்

மத்யமகாலம்

மந்தஸ்மித விலஸித முகார
விந்தாம் குருகுஹாம்பிகாம்
முகுந்த ஸோதரீம் மஹாத்ரிபுர
ஸூந்தரீம் ஆனந்தலஹரீம் (ஆர்யாம்)

நவாவர்ணம் 4

ராகம் : சங்கராபரணம் ஆதி தாளம்

பல்லவி

கிரிஜயா ஜயா அபயாம்பிகயா
கிரீச ஜாயயா ரக்ஷிதோஹம் (கிரிஜயா)

அனுபல்லவி

ஹரிஹயாதி தேவதாரா திதயா
ஆத்ம ஸ்வ... ப்ரபோ திதயா (கிரிஜயா)

மத்யமகாலம்

ஹரிஹர குருகுஹ ஸம்மோதியா
ஆதி க்ஷாந்த வர்ண வேதிதயா (கிரிஜயா)

சரணம்

ஸமய விசேஷ நிர்யாண முகபீஜ
நிர்பீஜ தீக்ஷா விஷயகரண
ஸமயா சரணோ பயோக ப்ரஜா
ஸாமக்ரீ ஸங்க்ரஹாந்த : கரண
ஸமயமத : ப்ரதி பாத்யானு ஸரண
ஸாமான்ய விசேஷ ; ப்ரஜா சரண

மத்யமகாலம்

மமத்வ நிராகரண க்ரியாயுத
ஸத்பக்தானாம் தர்மார்த்த ரூப
ஸமத்வ வ்ருத்தி விதரண நிபுண-
தர ஸாம்ராஜ்ய ப்ரதாருண சரணயா (கிரிஜயா)

நவாவர்ணம் 5

ராகம் : யதுகுலகாம்போதி தாளம் ரூபகம்

பல்லவி

அபயாம்பிகாயை அச்வாரூடாயை
அபய வர ப்ரதாயை நமஸ்தே நமஸ்தே (அபயாம்பிகையை)

அனுபல்லவி

ஸ்ப கா காராயை ஸ்ருசிரநட்ன பேதாயை
சோபித ரதனாயை சுத்த மானஸாயை

மத்யமகாலம்

ஹிரண்ய மணிகுண்டலாயை
ஹிமாசல ஸதனாயை (அபயாம்பிகையை)

சரணம்

ஸகல மந்த்ர யந்த்ர ரூபாயை ஸகலாயை
சந்த்ர சேகர ப்ரியாயை பஞ்சம காராயை
கூட குல் பாயை குருகுஹ ஸ்வரூபாயை

மத்யமகாலம்

கர்வ பண்ட கண்டாயை
கமப தாதினுத பதாயை
காவேரி தீராயை கமலேச ஸேவிதாயை (அபயாம்பிகாயை)

நவாவர்ணம் 6

ராகம் : கேதாரகௌளை தாளம் மிச்ர ஜம்பை

பல்லவி

அபயாம்பிகாய: அன்யம் ந ஜானே
அக்ஞானத்மானே அபரோக்ஷக் ஞானே (அபயாம்பிகாயா:)

அனுபல்லவி

இப்ராஜகத்யா: ஈச்வர்யா ஜகத்யா:
நபோமணி கத்யா: நாதலய கத்யா: (அபயாம்பிகாயா:)

சரணம்

பாலாதி நாம தேய: ப்ரகா சின்யா:
காலாதி தத்வாந்த: ப்ரகா சின்யா:
மூலாதி த்வாத சாந்த: ப்ரகா சின்யா:
ஸ்தூலாதி மௌனாந்த: ப்ரகா சின்யா:

மத்யமகாலம்

த்ரைலோக்ய மூல ப்ரக்ருத்யா: ஸ்வசக்த்யா:
ஸாலோக்ய ஸாமீப்ய ஸாரூப முக்த்யா:
மாலினீ மந்த்ர மாலாதி தந்த்ரோக்த்யா:
சூலினீ குருகுஹ ஸ்வானு பவ கத்யா: (அபயாம்பிகாயா:)

நவாவர்ணம் 7

ராகம் : கேதாரம் ஆதி தாளம்

பல்லவி

அம்பிகாயா: அபயாம்பிகாயா:
தவ தா ஸோஹம் ஆதிஜகதாம்பிகாயா:

அனுபல்லவி

சம்ப ராரி ஹரி சசிகுபேர -
ப்ருமுகோ பாஸித நவயோகின்யா:
ஸாங்க்ய தாரக மனஸ்கராஜ.
யோகின்யா சிவ போகின்யா:
பிம்ப ப்ரதி பிம்ப ரூபிண்யா:
பிந்து மண்டல நிவாஸின்யா: ஸ்வரூபிண்யா:

(அம்பிகாயா:)

சரணம்

யமநிய மாத்யஷ்டாங்க யோக விஷயாதி
நிக்ரஹ கரண மூலாதார மணி பூரகாத்யப்ஜ பேதன:
ஸ்புரத் குண்டலினீ ஸஹஸ்ரதன ப்ரும்ஹரந்த்ரஸ்த
கமலாந் தர்கத சிவ ஸம்மேளன -
களித பரமாம்ருத பிந்து ஸேசன
ஸமுஜ்ரும்பித நாடீ முக

மத்யமகாலம்

விகாஸ கரண நிஜானுபூதி யோகின்யா:
அமோக பரசிவ ஸாரூப்யா நந்தானு பவ ப்ரதாயின்யா:
அப்ரமேய குருகுஹாதி ஜனன்யா:
ப்ருஹ்மாதி பஞ்ச ககாரிண்யா: (அம்பிகாயா:)

நவாவர்ணம் 8

ராகம் : ஸஹானா திரிபுடை தாளம்

பல்லவி

அபயாம் பாயாம் பக்திம் கரோமி
ஸச்சிதா னந்த ரூபாயாம் ஸ்வஸ்வ ரூபாயாம் ஸ்ரீ

(அபயாம்பாயாம்)

அனுபல்லவி

விபவாதி விதரண நிபுண மந்த்ரிண்யாம்
விஜய காரண நிபுணதர தண்டின்யாம்
வியதாதி பூத கிரண மாலின்யாம்
விகல்ப ஹரண நிபுண சூலின்யாம்

மத்யமகாலம்

அபேத ப்ரதி பாதி தாயாம்
ஆதி குருகுஹ வேதிதாயாம்
ஸபேச மோதித நடனாயாம்
ஸாயுஜ்ய ப்ரத சரணாயாம்

சிட்டைஸ்வரம்

பமகாரிஸ ரீகமபா| ரிகமப நிதபம|
தாநிஸ் நிஸ்தா ||
நிதபமதா தநிஸநிரீ| கமரிஸ நிஸ்தப|
ரிகமப காரிஸ||
நீதபமா தாநிஸரீ | ஸபமப
தநிபத| மபகமரிகரிஸ ||
ஸஸ ஸ்ாஸ்ஸ் ரிரி கமரிஸ|
ரிநீத பமதா| நீஸ பாரிகம || (அபயாம்பாயாம்)

நவாவர்ணம் 9

ராகம் : தோடி ரூபக தாளம்

பல்லவி

தாக்ஷாயணி அபயாம்பிகே
வரதாபயஹஸ்தே நமஸ்தே (தாக்ஷாயணி)

அனுபல்லவி

தீக்ஷா ஸந்துஷ்ட மானஸே
தீனா வன ஹஸ்த ஸாரஸே
காங்க்ஷி தார்த்த ப்ரதாயினி
காம தந்த்ர விதாயினி
ஸாக்ஷிரூப ப்ரகாசினி ஸமஸ்த -
ஜகத் விலாஸினி. (தாக்ஷாயணி)

சரணம்

ஸகல நிஷ்கள ஸ்வரூப தேஜஸே
ஸகல லோக ஸ்ருஷ்டி காரண ராஜஸே
ஸகல பக்த ஸம்ரக்ஷண யசஸே
ஸகல யோகி மநோரூப ததவ்தபஸே

மத்யமகாலம்

ப்ரபலகுருஹ: ப்ரியே பஞ்சானன ஹ்ருதாலயே
பரத மதங் காதிநுதே பார்தீச பூஜிதே (தாக்ஷாயணி)

மங்களகீர்த்தனை

நவாவர்ணம் 10. மணிப்ரவாளம்

ராகம் : ஸ்ரீ ஆதி தாளம்

பல்லவி

ஸ்ரீ அபயாம்ப நின்னு சிந்திஞ்சின
வாரிகி சிந்தைக் கவலை எல்லாம் தீரும்மம்ம
(ஸ்ரீஅபயாம்பா)

அனுபல்லவி

ஹே அபய கரேவரே ஈச்வரி க்ருப தோனு
எந்தனை ரக்ஷிக்க இது நல்ல ஸமயம்மம்ம
(ஸ்ரீஅபயாம்பா)

சரணம்

நீ அத்யத்புத சுபகுண முலுவினி
நீவே திக்கனி நேர நம்மிதி

மத்யமகாலம்

நீராஜாக்ஷி நிஜ ரூப ஸாக்ஷி
நித்யானந்த குருகுஹ கடாக்ஷி ரக்ஷி (ஸ்ரீஅபயாம்பா)

ஸ்ரீ குருபாதம் துணை.

மயிலாடுதுறைக்குப் பெருமை சேர்க்கும் சான்றோர்கள்

மயிலாடுதுறை தமிழறிஞர்கள் கலைஞர்கள், ஆகமச் சீலர்கள் என, பல்வேறு துறையைச் சார்ந்த மக்கள் வாழ்ந்தார்கள்; இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். 'ஆயிரமானாலும் மாயூரமாகாது' என்னும் பழமொழிக்கேற்ப கலைமகள், அலைமகள், மலைமகள் மூவரும் மயிலாடுதுறையில் களி நடம்புரி கின்றனர் என்றால் மிகையாகாது.

தமிழறிஞர்கள்:

சித்தாந்தச் சைவசெம்மணி. முனைவர். திரு.கு.சுந்தரமூர்த்தி, எம்.ஏ., பிஎச்.டி.,

திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரியில் பேராசிரியராக - முதல்வராக பணியாற்றினாலும் ஓய்வு பெற்றபின் மயிலாடுதுறையில் வந்து தங்கி தமிழ்ப் பணி ஆற்றி வருகிறார். 'திருவாவடுதுறை ஆதீனத் தமிழ்ப்பணி' என்னும் தலைப்பில் ஆய்வினை மேற்கொண்டு முனைவர் பட்டம் பெற்றவர். திருவாவடுதுறை ஆதீனம் சீர்-வளர்-சீர் குரு மகாசன்னிதானம் அவர்களால் பாராட்டப் பெற்றவர். இவர் தருமையாதீனப் புலவராய் விளங்குகின்றார். இவர் சித்தாந்த நன்மணி, தொல்காப்பியச் செல்வர், சைவசித்தாந்த வித்தகர், திருமுறைக் கலா வித்தகர், செம்பொருட்செல்வர், முத்தமிழ் வித்தகர் முதலிய பட்டங் களைப் பெற்றுள்ளார். தொல்காப்பியம் - இளம்பூரணர், நச்சினார்க்கினியர், சேனாவரையர் ஆகியோர் உரைக்கு விள்க்கவுரை தந்துள்ளார். தண்டியலங்காரம் விளக்கவுரையுடன் சொந்தப் பதிப்பாக பதிப்பித்து வெளியிட்டுள்ளார். இலக்கியத் துறையில் சேக்கிழார் பிள்ளைத்தமிழ், சீகாழிக் கோவை, நீதிநெறி விளக்கம், அபிராமி அந்தாதி கந்தர் கலிவெண்பா ஆகிய நூல்களுக்கு விளக்கவுரையும், திருக்குறள் மணக்குடவர் உரை விளக்கமும், ஆராய்ச்சி முன்னுரையும் தந்துள்ளார். திருக்குறள் (உரைத்திறன்) சங்கரமூர்த்திக் கோவை, திருமுல்லைவாயிற்புராணம், திருவிளையாடல் புராணம் ஆகிய நூல்களுக்குக் குறிப்புரையும் தந்துள்ளார். திருமுறைகளில் அப்பர் திருத்தாண்டகம் முதல் பத்துப் பதிகங்களுக்கு விளக்கவுரை, பன்னிரு திருமுறைத் திரட்டு திருஞான சம்பந்தர், திருநாவுக் கரசர், சுந்தரர் திருமுறைகளை வரலாற்று முறையில் பதிப்பித்தும் பதினான்கு சாத்திரங் களுக்கும் விளக்கவுரையும் எழுதியுள்ளார் இவ்வாறு எண்ணற்ற நூல் களைத் தமிழுலகிற்குத் தந்த தமிழ் அறிஞர் ஆவார். அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சென்னைப் பல்கலைக்கழகம், திருச்சி பாரதிதாசன் பல்கலைக் கழகம் ஆகிய பல்கலைக் கழகங்களில் பேருரையாளராகவும் ஆளவை உறுப்பினராகவும் பணியாற்றியவர். செந்தமிழ்ச் செல்வி இதழின் ஆசிரியர் குழு உறுப்பினர். இவரிடம் பயின்ற மாணவர்கள் நாடெங்கும் பரவி நின்று இவருடைய புகழைப் பரப்புகின்றனர்.

தமிழாகரர், பேராசிரியர்,
வித்துவான்.வி.சா.குருசாமி தேசிகர்:

தருமை ஆதீனம் பல்கலைக் கல்லூரியில் பேராசிரியராக இருபது ஆண்டுகளும், முதல்வராகப் பதினெட்டு ஆண்டுகளும் பணிபுரிந்துள்ளார். இவர் மரபுவழியில் டாக்டர் உ.வே.சாமி நாதய்யர் மாணவர்களில் ஒருவரான மகாவித்துவான் ச.தண்டபாணி தேசிகர், பெரும்புலவர் பு.சி.புன்னை வனநாத முதலியார், வித்துவான் மு.ஆறுமுக தேசிகர் முதலியோரிடம் கல்வியறிவும் ஆராய்ச்சியறிவும் பெற்றவர்.

ஸ்ரீவாலையானந்த சுவாமிகள், க.வச்சிரவேலு முதலியார், மகா வித்துவான் சி.அருணை வடிவேலு முதலியார், முத்து.சு.மாணிக்கவாசக முதலியார் ஆகியோரிடம் சைவசித்தாந்த மெய்நூற்கல்வி பெற்றவர்.

இவர் தருமையாதீனப் புலவர் ஆவார். இவருக்கு மதுரையாதீனம் திருநெறிச்செம்மல் என்ற பட்டம் வழங்கியது. குன்றக்குடி ஆதீனம், தமிழாகரர் என்ற பட்டம் வழங்கியது. யாழ்ப்பாணம் நல்லையாதீனத்தில் 'தமிழாகரர்' என்ற பட்டமும், காஞ்சி தொண்டை மண்டல ஆதீனத்தில் 'நல்லிசைப்புலவர்' என்ற பட்டமும், காஞ்சி காமகோடி பீடத்தில் 'திருமுறை உரைமணி' என்ற பட்டமும் பெற்றுள்ளார். மேலும் 'திருவாசக உரை மணி' எனும் பட்டத்தை மயிலாடுதுறை ஞானானந்தர் சபையும், நெய்வேலி சேக்கிழார் மன்றம் திருமுறைச் சைவமாமணி என்னும் பட்டத்தையும், திருப்பரங்குன்றம் சிவாகம பாடசாலை சித்தாந்தப்புலவர் என்னும் பட்டத்தை யும் வழங்கிச் சிறப்பித்துள்ளன.

இவர் திருச்சிராப்பள்ளி கி.ஆ.பெ.விசுவநாதம் நிறுவிய தமிழகப் புலவர் குழு உறுப்பினர். இவர் இலக்கியம் மற்றும் சமயத்துறைகளில் தமிழகத்தின் பல பகுதிகளிலும் அனைத் திந்திய வானொலியிலும் உரைகள் நிகழ்த்தி வருகின்றார்.

இலங்கையில் ஒரு திங்களுக்கு மேலாகத் தங்கி பல்வேறு இடங்களில் உரை நிகழ்த்தியுள்ளார். மலேசியாவில் நிகழ்ந்த அனைத்துலக சைவ சித்தாந்த மாநாட்டில் பங்கு கொண்டு சிறப்புப் பெற்றுள்ளார்.

தருமையாதீனத்திங்கள் இதழ் 'ஞானசம்பந்தம்' துணையாசிரியராகப் பணிபுரிந்து வருகிறார். இவர் திருமுறை உரை நூல்கள், நூற்றுக்கு மேற்பட்ட தேவாரத்தலச் சிறப்பு நூல்கள், மாயூரப் புராணம் முதலிய சமய நூல்கள், ஆசாரக் கோவை, தமிழ் வளர்த்த வள்ளல்கள் முதலிய இலக்கிய நூல்கள் தென் னாட்டுத் திருக்கோயில் கல்வெட்டுக் களின் விளக்க நூல் முதலியன இவர்தம் அரிய படைப்புகளாகும். தற்பொழுது தருமையாதீனம் அனைத்துலக சைவ சித்தாந்த ஆராய்ச்சி நிறுவனத்தின் பேராசிரியராகப் பணிபுரிந்துவரு கின்றார்.

இவரது தமிழ்ப்பணியைப் பாராட்டி, திருவாவடுதுறை ஆதீனம் 23-வது சீர்-வளர்-சீர் குரு மகாசன்னிதானம் அவர்கள் மயிலாடு துறை அருள்மிகு மாயூரநாதர் திருக் கோயில் திருக்குட நன்னீராட்டுப் பெரு விழாவில் திருமுறைச் சிந்தையர் என்னும் பட்டமும், பாராட்டும் வழங்கி பொன்னாடை அணிவித்து ஆசியருளி னார்கள்.

முனைவர்.இரா.செல்வக்கணபதி:

இவர் 31 ஆண்டுகள் கல்லூரி

பேராசிரியராக - தமிழ்த்துறை தலைவராக - முதல்வராக பணியாற்றியவர். இவருக்கு குன்றக்குடி ஆதீனம் ''தமிழாகரர்'' என்னும் பட்டம் தந்து சிறப்பித்துள்ளது. இலங்கை நல்லை ஆதீனம் செந்தமிழ் வாரிதி என்னும் பட்டம் தந்து பாராட்டியுள்ளது. இவர் பல்வேறு அமைப்புகளிலிருந்து சுமார் பதினொன்று பட்டங்களைப் பெற்றுச் சிறந்துள்ளார். ஒன்பது நூல்களை எழுதியுள்ளார். சிறந்த பேச்சாளர், சிறந்த எழுத்தாளர். 63 நாயன்மார் வரலாற்றை 40.சி.டி-க்களாகவும், 40 ஆடியோ கேசட்டுகளாகவும், 4 எம்.பி3 சி.டி-க்களாகவும் வெளியிட்டுள்ளார். ஸ்ரீ ஆறுமுகநாவலர் வரலாற்றை இலங்கை அரசின் வேண்டுகோளை ஏற்று 3 ஆடியோ கேசட்டுகளாக வெளியிட்டுள்ளார். இவருடைய துணைவியார் திருமதி.சந்திரா செல்வக்கணபதி,எம்.ஏ., மயிலாடுதுறை நகர் மன்றத் தலைவியாக பணியாற்றியவர்.

முனைவர். மு.சிவச்சந்திரன்

இவர் தருமையாதீனக் கலைக் கல்லூரியில் தமிழ்த்துறை தலைவராக உள்ளார். சிறந்த பேச்சாளர். சிறந்த எழுத்தாளர். சிவபோகசாரம் என்னும் நூல் ஒலி நாடாவை தில்லை பத்மினி கபாலி அவர்கள் வெளியிட்டார்கள். அதில் பேராசிரியர் அவர்கள் உரை விளக்கம் தந்துள்ளார்கள். சித்தாந்த சாந்திர வகுப்புகள் சென்னையில் நடத்தி வருகின்றார். இவருடைய புலமைத் திறத்தைப் பாராட்டி பல அமைப்புகள் பட்டங்களும் விருதுகளும் வழங்கியுள்ளன.

முனைவர்.தி.வ.காந்திமதிநாதன்

மன்னம்பந்தல் ஏ.வி.சி கல்லூரியில் தமிழ்த்துறைத் தலைவராக பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளார். மாயூரத் தலபுராணம் நூலை ஏ.ஆர்.சி விஸ்வநாதன் அவர்கள் வெளியிட்டார்கள். அந்நூல் சிறப்பாக வெளிவர துணை நின்றார்கள் சிறந்த பேச்சாளர். சிறந்த எழுத்தாளர் சிறந்த ஆய்வாளர், செந்தமிழ்ப்பணியே செம்மைப்பணியெனக் கொண்டு ஒழுகுபவர். தமிழறிஞர்களால் பாராட்டப் பெறுபவர்.

முனைவர். அ.கலியபெருமாள்

மன்னம்பந்தல் ஏ.வி.சி. கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணிபுரிந்து புகழ் கொண்டவர். எழுத்தும் பேச்சும் இவரது கண்கள் சிந்தனையாளர்.

நல்லாசிரியர்.புல்வர்.சா.முத்துகிருஷ்ணன்

இவர் தமிழாசிரியராக இருந்து, மேனிலைத் தமிழாசிரியராக உயர்ந்து, தலைமையாசிரியராக சிறந்து நல்லாசிரியர் விருது பெற்ற நற்சீலர். சித்தாந்தக் கலாநிதி விருது பெற்றவர். தலயாத்திரை, திருமுறை ஓதல் ஆகிய சமயப் பணிகளைச் செய்வதோடு அருள்மிகு மாயூரநாதசுவாமி திருக்கோயிலில் 40 மாதங்களாக திருவிளையாடற் புராணம் முற்றோதல் நிகழ்த்தி விளக்கவுரை கூறி வருகின்றார். பொது நலப்பணியில் ஈடுபாடு கொண்டு செயலாற்றி வருகிறார்.

பேராசிரியர்.முனைவர்.ப.நீலா அம்மையார்

இவர் தருமபுரம், தருமையாதீன பல்கலைக் கல்லூரியில் பேராசிரியராகவும் முதல்வராகவும் பணியாற்றியவர். சிறந்த பேச்சாளர். எழுத்தாளர். இவருடைய கட்டுரைகள் திங்களிதழ்களிலும் விழா மலர்களிலும் வெளிவந்துள்ளன. அயல்நாடுகளுக்கும் சென்று செந்தமிழ்ப் பணியை செய்தவர். அருந்தமிழ்ப் பாடல்களை இனிய இசையில் கூட்டி எடுத்துரைக்கவல்லார்.

பேராசிரியராக - தமிழ்த்துறை தலைவராக - முதல்வராக பணியாற்றியவர். இவருக்கு குன்றக்குடி ஆதீனம் ''தமிழாகரர்'' என்னும் பட்டம் தந்து சிறப்பித்துள்ளது. இலங்கை நல்லை ஆதீனம் செந்தமிழ் வாரிதி என்னும் பட்டம் தந்து பாராட்டியுள்ளது. இவர் பல்வேறு அமைப்புகளிலிருந்து சுமார் பதினொன்று பட்டங்களைப் பெற்றுச் சிறந்துள்ளார். ஒன்பது நூல்களை எழுதியுள்ளார். சிறந்த பேச்சாளர், சிறந்த எழுத்தாளர். 63 நாயன்மார் வரலாற்றை 40.சி.டி-க்களாகவும், 40 ஆடியோ கேசட்டுகளாகவும், 4 எம்.பி3 சி.டி -க்களாகவும் வெளியிட்டுள்ளார். ஸ்ரீ ஆறுமுகநாவலர் வரலாற்றை இலங்கை அரசின் வேண்டுகோளை ஏற்று 3 ஆடியோ கேசட்டுகளாக வெளியிட்டுள்ளார். இவருடைய துணைவியார் திருமதி.சந்திரா செல்வக்கணபதி,எம்.ஏ., மயிலாடுதுறை நகர் மன்றத் தலைவியாக பணியாற்றியவர்.

முனைவர். மு.சிவச்சந்திரன்

இவர் தருமையாதீனக் கலைக் கல்லூரியில் தமிழ்த்துறை தலைவராக உள்ளார். சிறந்த பேச்சாளர். சிறந்த எழுத்தாளர். சிவபோகசாரம் என்னும் நூல் ஒலி நாடாவை தில்லை பத்மினி கபாலி அவர்கள் வெளியிட்டார்கள். அதில் பேராசிரியர் அவர்கள் உரை விளக்கம் தந்துள்ளார்கள். சித்தாந்த சாந்திர வகுப்புகள் சென்னையில் நடத்தி வருகின்றார். இவருடைய புலமைத் திறத்தைப் பாராட்டி பல அமைப்புகள் பட்டங்களும் விருதுகளும் வழங்கியுள்ளன.

முனைவர்.தி.வ.காந்திமதிநாதன்

மன்னம்பந்தல் ஏ.வி.சி கல்லூரியில் தமிழ்த்துறைத் தலைவராக பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளார். மாயூரத் தலபுராணம் நூலை ஏ.ஆர்.சி விஸ்வநாதன் அவர்கள் வெளியிட்டார்கள். அந்நூல் சிறப்பாக வெளிவர துணை நின்றார்கள் சிறந்த பேச்சாளர். சிறந்த எழுத்தாளர் சிறந்த ஆய்வாளர், செந்தமிழ்ப்பணியே செம்மைப்பணியெனக் கொண்டு ஒழுகுபவர். தமிழறிஞர்களால் பாராட்டப் பெறுபவர்.

முனைவர். அ.கலியபெருமாள்

மன்னம்பந்தல் ஏ.வி.சி. கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணிபுரிந்து புகழ் கொண்டவர். எழுத்தும் பேச்சும் இவரது கண்கள் சிந்தனையாளர்.

நல்லாசிரியர்.புல்வர்.சா.முத்துகிருஷ்ணன்

இவர் தமிழாசிரியராக இருந்து, மேனிலைத் தமிழாசிரியராக உயர்ந்து, தலைமையாசிரியராக சிறந்து நல்லாசிரியர் விருது பெற்ற நற்சீலர். சித்தாந்தக் கலாநிதி விருது பெற்றவர். தலயாத்திரை, திருமுறை ஓதல் ஆகிய சமயப் பணிகளைச் செய்வதோடு அருள்மிகு மாயூரநாதசுவாமி திருக்கோயிலில் 40 மாதங்களாக திருவிளையாடற் புராணம் முற்றோதல் நிகழ்த்தி விளக்கவுரை கூறி வருகின்றார். பொது நலப்பணியில் ஈடுபாடு கொண்டு செயலாற்றி வருகிறார்.

பேராசிரியர்.முனைவர்.ப.நீலா அம்மையார்

இவர் தருமபுரம், தருமையாதீன பல்கலைக் கல்லூரியில் பேராசிரியராகவும் முதல்வராகவும் பணியாற்றியவர். சிறந்த பேச்சாளர். எழுத்தாளர். இவருடைய கட்டுரைகள் திங்களிதழ்களிலும் விழா மலர்களிலும் வெளிவந்துள்ளன. அயல்நாடுகளுக்கும் சென்று செந்தமிழ்ப் பணியை செய்தவர். அருந்தமிழ்ப் பாடல்களை இனிய இசையில் கூட்டி எடுத்துரைக்கவல்லார்.

ஆகமச் சீலர்கள்

சிவஸ்ரீ.எஸ்.சபேச சிவாச்சாரியார்

இவர் மயிலாடுதுறை வள்ளலார் ஒத்த தெருவில் வசிக்கிறார். ஆகமங்கள் பயின்றவர். பெங்களூர் கைலாச ஆசிரமத்தில் வேத சிவாகம பாட சாலையின் முதல்வராகவும், ஸ்ரீராஜ ராஜேஸ்வரி திருக்கோயில் தலைமை அர்ச்சகராகவும் பணிபுரிந்து ஓய்வு பெற்றார். தற்போது நாகநாத அகோர சிவாசாரியார் வேத சிவாகம பாடசாலை முதல்வராக உள்ளார். சிவாகம ப்ரவீணர் பட்டம் பெற்றவர்.

சிவஸ்ரீ.ஏ.வி.சுவாமிநாதசிவாச்சாரியார்

இவர் மயிலாடுதுறை, சிவபுரம் வேதசிவாகம பாடசாலையின் நிறுவன ராகவும், முதல்வராகவும் விளங்கு கின்றார். மூலாகமங்கள், சைவ சித்தாந்தம் முதலியவற்றை நன்கு பயின்றவர். வைத்தீஸ்வரன் கோயில் ஸ்ரீதையல்நாயகி உடனுறை ஸ்ரீவைத்திய நாதப் பெருமானைத் தீண்டி பூசிக்கும் உரிமை பெற்றவர். இவர் சிங்கப்பூர், மலேசியா, இலங்கை, தாய்லாந்து, இலண்டன் முதலிய நாடுகள் சென்று மகா கும்பாபிஷேகங் களில் சர்வசாதகப் பொறுப்பேற்று நடத்தியும் சமயச் சொற்பொழிவு நிகழ்த்தியும் வருபவர். மயிலாடுதுறை ஸ்ரீஅபயாம்பிகை உடனுறை ஸ்ரீ மாயூர நாத சுவாமி திருக்கோயில் மகா கும்பாபிஷேகத்தில் சர்வசாதகராக இருந்து சிறப்பாக பணிபுரிந்தார்.

திருவாவடுதுறை ஆதீனம் 23-வது குரு மகாசன்னிதானம் அவர்களின் பேரன்பிற்குப் பாத்திரமானவர்.

சிவஸ்ரீ.த.இராமநாத சிவாச்சாரியார்

இவர் மயிலாடுதுறை சன்னிதித் தெருவில் வசித்து வருகிறார். இவர் தேவி உபாசகர். 'ஆகமப்ரவீணர்' பட்டம் பெற்றவர். அருள்மிகு மாயூரநாதர் திருக்கோயில் பரம்பரை பூஜகர், வேத சிவாகமங்களைப் பயின்றவர். சோதிடக் கலையில் வல்லவர்.

திருமுறைப் பண்ணிசைவாணர்கள்

தருமபுரம். பி.சுவாமிநாதன்

இவர் தருமையாதீன தேவார பாடசாலையில் பயின்றவர். இவருடைய குருநாதர் வேலாயுத ஓதுவார். இவர் பல பட்டங்களும் விருதுகளும் பெற்றுள்ளார். திருமுறைப் பாடல்களை ஒலிநாடாவில் பதிவு செய்து தமிழகமெங்கும் ஒலிக்கச் செய்துள்ளார். தொலைக்காட்சி வானொலி இவற்றில் பாடி வருபவர். தமிழக ஆதீனக் குரு மகாசன்னிதானங் களின் ஆசிகளைப் பெற்றவர்.

திருவாவடுதுறை ஆதீனம் 23-வது குரு மகாசன்னிதானம் அவர்களால் பாராட்டப்பெற்றவர்.

மயிலாடுதுறை.வி.சொக்கலிங்க ஓதுவார்

இவர் திருமுறைக் கலாநிதி, தேவார இசை நம்பி, தேமதுரத் தமிழ்மணி, முதலிய பட்டங்களைப் பெற்றவர். இவருடைய ஆசிரியர் சிதம்பரம் கனகசபை பிள்ளை அருள்மிகு மாயூரநாதசுவாமி திருக்கோயிலில் திருமுறைப் பணி செய்து வருகிறார்.

இவருக்கு அருள்மிகு மாயூரநாத சுவாமி திருக்கோயில் குடமுழுக்கு விழாவில் திருவாவடுதுறை ஆதீனம் 23-வது சீர்-வளர்-சீர் குரு மகாசன்னிதானம்

அவர்கள் இவருடைய தொண்டினைப் பாராட்டி விருது வழங்கி ஆசியருளினார்கள்.

தேவார இசைமணி.
திருநாவுக்கரசு தேசிகர்

திருமுறைப் பாடல்களை இனிய இசையுடன் தெளிவான உச்சரிப்புடன் பாடவல்லவர். எண்பது அகவையான நிலையிலும் திருமுறைப் பணியினைச் செம்மையாக செய்து வருபவர். இவருடைய தொண்டினைப் பாராட்டி திருவீழிமிழலையில் திருவாவடுதுறை ஆதீனம் சீர்-வளர்-சீர் குரு மகாசன்னிதானம் அவர்கள் பொற் பதக்கம் அளித்து பொன்னாடை அணிவித்துப் பாராட்டியருளினார்கள்.

சிவநெறிச் சீலர்கள்

செல்வி நாகலெட்சுமி அம்மையார்

இவர் மயிலாடுதுறை மகாதானத் தெருவில் வசித்து வருகின்றார். இவர் இந்தி, ஆங்கிலம், தமிழ், சமஸ்கிருதம் ஆகிய நான்கு மொழிகளைக் கற்றவர்; கர்நாடக இசையை முறையாக பயின்றவர். இவர் அன்பர்கள் உதவியுடன் அருள்மிகு மாயூரநாதர் திருக்கோயிலுக்கு ஹம்ச வாகனம் செய்து அளித்துள்ளார். மேலும் ஸ்ரீ முத்துசுவாமி தீட்சிதரின் அபயாம்பாள் நவாவர்ண கல்வெட்டை அம்மன் திருக்கோயிலில் அமைத் துள்ளார். அன்னை அபயாம்பிகைக்கு 61 பவுனில் 'ஸ்வர்ணமாலா ஆரமும்' பெருமானுக்கு உருத்திராட்ச கிரீடமும் செய்து அளித்துச் சிவபுண்ணியச் செயலில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டார். இவருடைய சிவநெறித் தொண்டைப் பாராட்டி திருக்குட நன்னீராட்டுப் பெருவிழாவில் சீர்-வளர்- சீர் குரு மகாசன்னிதானம் அவர்கள் சிறப்பு செய்துள்ளார்கள்.

செல்வி உஷா, பி.ஏ.,

இவர் சிவநெறித் தொண்டிற்காக திருமணம்புரிந்துகொள்ளாது, திருநெறித் தொண்டு செய்து வருகிறார்.

''பெரும் புலர்க் காலை மூழ்கி
பித்தர்க்குப் பத்தராகி
அரும்பொடு மலர்கள் கொண்டாங்கு
ஆர்வத்தை உள்ளே வைத்து
விரும்பிநல் விளக்குத் தூபம்
விதியினால் இடவல்லார்.''

இவர், இடரினும் தளரினும் சற்றும் கலங்காது மலர்கள் கொய்து திருக் கோயில் தோறும் சென்று பூமாலை புனைந்தேத்தும் பண்பினர். பல திருக்கோயில் தோறும் சென்று கூட்டு வழிபாடு நடத்தி வருகிறார். நின்றும் இருந்தும் கிடந்தும் நம்பா உன்னை மறவேன் என்னும் கோட்பாட்டுடன் வாழும் நிலையைப் பாராட்டி குடமுழுக்குவிழாவில் சீர்-வளர்-சீர் குரு மகாசன்னிதானம் அவர்கள் சிறப்பு செய்து பாராட்டுகின்றார்கள்.

சிவபூசைச் செல்வர். திரு.என்.எஸ். இராமலிங்கம்செட்டியார்.

பல்லாண்டுகளாக திருக்கோயில் வழிபாடு செய்து வருபவர். ஸ்ரீ கௌரி மாயூரநாதர் சிவனடியார் திருக்கூட்டத் தலைவர். அறுபத்து மூன்று நாயன்மார் சிறப்பு நீராட்டு, திருமுறை வீதிஉலா திருமுறைச் சொற்பொழிவுகள் முதலியன நடத்தி மக்களிடையே பக்தியுணர்வை பரப்பி வருகின்றார்.

திரு.கோ.முருகானந்தன்

இவர் ஸ்ரீ கௌரி மாயூரநாதர் சிவனடியார் திருக்கூட்டத்தின் செயலர். ''என் கடன் பணி செய்து கிடப்பதே'' என்னும் கொள்கையை உள்ளத்தில்

தேக்கி உவந்து திருக்கோயில் தோறும் சென்று திருத்தொண்டு செய்பவர்; எளிமையும் இனிமையும் கொண்டவர். குடமுழுக்குவிழாவில் சீர்-வளர்-சீர் குரு மகாசன்னிதானம் அவர்கள் இவரது தொண்டைப் பாராட்டிச் சிறப்பிக்கின்றார்கள்.

கலைஞர்கள்

மயிலாடுதுறையில் கர்நாடக இசை வல்லுநர்கள் மதுரைமணி ஐயர், மாயூரம் ராஜம் ஐயர் வாழ்ந்து சிறந்துள்ளனர். நாதஸ்வர கலைஞர், தவில் கலைஞர்கள் பலர் மயிலாடுதுறையில் பெரும்புகழுடன் வாழ்ந்து சிறந்துள்ளனர்.' அவர்களது வரலாற்றை தஞ்சை பி.எஸ்.சுந்தரம் அவர்கள் எழுதிய 'மங்கல' இசை மன்னர்கள்' எனும் நூலில் விரிவாகக் காணலாம்.

இஞ்சிக்குடி இ.பி.கணேசன்

தற்பொழுது மயிலாடுதுறையில் வாழும் நாதஸ்வர கலைஞர் கலைமாமணி இஞ்சிக்குடி இ.பி.கணேசன் ஆவார். இவர் திருவாவடுதுறை ஆதீன வித்துவான் ஆவார். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இசைத்துறையில் பணியாற்றி வருகிறார். சாகித்திய கர்த்தா கோபால கிருஷ்ண பாரதியாரின் விழாக் கமிட்டியில் செயலாளராக பணியாற்றி வருகிறார் இக்கமிட்டியின் தலைவர் டெக்கான்மூர்த்தி. இவ்விழாவில் மாணவர்களின் இசை ஆர்வத்தை மேலோங்கச் செய்ய போட்டிகள் பல பரிசுகள் வழங்கப்பெறுகிறது. இவரை குடமுழுக்கு விழாவில் சீர்-வளர்-சீர் குரு மகாசன்னிதானம் அவர்கள் பாராட்டிச் சிறப்பிக்கின்றார்கள்.

திருவாளபுத்தூர் டி.ஏ. கலியமூர்த்தி

இவர் தவில் கலைஞர். தமிழகத்தில் சிறந்த தவில் கலைஞராக போற்றப்படுகிறார். தமிழக அரசு இவருக்கு கலைமாமணி விருது வழங்கிச் சிறப்பித்துள்ளது. அயல் நாடுகளுக்குச் சென்று அங்கு அயல்நாட்டினரால் பாராட்டப் பெற்றவர். இவரது சிறப்பைப் பாராட்டி குடமுழுக்கு விழாவில் சீர்-வளர்-சீர் குரு மகா சன்னிதானம் அவர்கள் பாராட்டிச் சிறப்பிக்கின்றார்கள்.

திரு.மாமுண்டியா பிள்ளை

இவருடைய வயது 85. நாதஸ்வர வித்துவானாகத் திகழ்ந்தவர். 'பெரிய மேளம்' என்று இவருடைய குழுவினரைக் கூறுவர். தற்பொழுது திருச்சியில் வசித்து வருகிறார்.

இலுப்பூர் ஆர்.சி.நல்லகுமார்பிள்ளை

இவர் கலைமாமணி விருது பெற்றவர். தவில் வித்துவான். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இசைத்துறை பேராசிரியராக இருந்து ஓய்வு பெற்றவர். மயிலாடுதுறையில் வசித்து வருகிறார்.

எஸ்.ஆர்.ஜி. வைத்தியநாதன்

இவர் கலைமாமணி விருது பெற்றவர். மயிலாடுதுறையில் வாழ்ந்தவர். தற்பொழுது சென்னையில் வாழ்ந்து வருகிறார்.

திரு.மாணிக்க விநாயகம்

இவர் வழுவூர் இராமையா பிள்ளை குமாரர் ஆவார். திரைப்படக் கலைஞர்.

திரு.டி.ராஜேந்தர்

இவர் மயிலாடுதுறையில் பிறந்து வளர்ந்தவர். ஏ.வி.சி. கல்லூரியிலும், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும்

பயின்றவர். திரைப்பட இயக்குநராக, தயாரிப்பாளராக விளங்குகின்றார்.

திரு.பந்தல் செல்வம் (பந்தல் கலைஞர்)

கும்பாபிஷேகம், மாநாடு போன்ற நிகழ்ச்சிகளுக்கு பெரிய அளவில் அழகுற பந்தல் அமைப்பதில் வல்லவர். பலருடைய பாராட்டினைப் பெற்றவர். இவர் அருள்மிகு மாயூரநாதர் கோயில் கும்பாபிஷேக விழாவில் சீர்-வளர்-சீர் குரு மகா சன்னிதானம் அவர்களால் பாராட்டப் பெற்றவர்.

திரு.ஏ.எஸ்.மாணிக்கவாசகம் (பொம்மலாட்டக் கலைஞர்)

இவர் கலைமாமணி விருது பெற்றவர். பல்லாண்டுகளாக பொம்மலாட்டம் நடத்தி வருகிறார். பலருடைய பாராட்டுகளைப் பெற்றவர். இவருக்கு கும்பாபிஷேக விழாவில் சீர்-வளர்-சீர் குரு மகாசன்னிதானம் அவர்களால் பாராட்டப்பெற்றவர்.

திரு.இராம்குமார் ஸ்தபதி (சுதை சிற்பக் கலைஞர்)

இவர் அயல்நாடுகளிலும் நம் நாட்டிலும் பல திருக்கோயில் திருப்பணி பணிகளைச் செய்தவர். தற்பொழுது மயிலாடுதுறை அருள்மிகு மாயூரநாதர் திருக்கோயில் திருப்பணியில் பணி யாற்றி வருகிறார். சான்றிதழ்களும், விருதுகளும் பெற்றவர். இவரை கும்பாபிஷேக விழாவில் சீர்-வளர்-சீர் குரு மகாசன்னிதானம் அவர்கள் பாராட்டிச் சிறப்பித்தார்கள். இவர் கூறைநாடு தோப்புத் தெருவில் வசித்து வருகிறார். இவர் ஓவியம் தீட்டுவதிலும் வல்லவர். இதுவரை 140 கோயில்களில் சுதை மற்றும் ஓவியப் பணியைச் செய்துள்ளார். அயல் நாடுகளிலும் இவருடைய பணி சிறப்புற்றிருக்கிறது.

திருநெறித் தொண்டர்கள்

திரு.எஸ்.தெட்சிணாமூர்த்தி, பி.ஏ.,

திருக்கோயில்களில் உழவாரம் செய்தல் கும்பாபிஷேகம் நடைபெறும் திருக்கோயில்களில் சென்று தொண்டாற்றுதல். கூறைநாடு ஸ்ரீ புனுகீஸ்வரர் ஆலயத்தில் லட்சதீபம் விழா தை மாதம் கடைவெள்ளியில் நடைபெறும். அதுபோழ்து இவர் அன்பர்களுடன் கூடி அவ்விழா சிறப்புற செயலாற்றுவார்.

திருமாந்தை கண்ணாயிரம்

இவர் ஆன்மீகக் கட்டுரையாளர். பல ஏடுகளில் இவரது கட்டுரை வெளி வந்துள்ளது. ஆன்மீக புத்தகங்கள் எழுதியுள்ளார்.

கயிலைமணி க.ஞானசேகரன்

இவர் திருக்கயிலை சென்று வழிபட்டவர். திருமுறைகள் ஓதி வருபவர். பலரது இல்லங்களுக்குச் சென்று அவர்களது வேண்டுகோளின்படி திருமுறை ஓதி வருகின்றார். இவரது குடும்ப அங்கத்தினர்களும் திருமுறைப் பாடுவதிலும், திருமுறை ஈடுபாட்டிலும் சிறந்து விளங்குகின்றனர். இவரது திருநெறித் தொண்டைப் பாராட்டி சீர்-வளர்-சீர் குரு மகாசன்னிதானம் அவர்கள் கும்பாபிஷேக விழாவில் பாராட்டி அருளினார்கள். இவர் பத்து ஆண்டுகளாக திருமுறைப்பணி செய்து வருகிறார்.

தாசில் பண்ணை இராசசேகரன் பி.ஏ.,பி.எல்.,

இவர் செல்வக்குடும்பத்தில் பிறந்தாலும் எல்லோரிடத்திலும் இனிமையாக பழகக் கூடியவர். ஆதீனக் குரு மகாசன்னிதானங்களிடத்தில் பக்தி

கொண்டு ஒழுகுபவர். உழவாரம் அமைப்பின் நிறுவுநர், அறுபான் மும்மை நாயனார் குருபூசையை உழவாரம் அமைப்பு செவ்வனே செய்து வருகிறது. சிறந்த நூலாசிரியர். சிறந்த ஆன்மீகத் தொண்டர்.

சிவபுண்ணியச் செயலில் ஏ.ஆர்.சி.(அணி ஆபரணக் கலைஞர்)

ஏ.ஆர்.சி. அணி ஆபரணங்கள் செய்து தமிழகத்தில் பெரும்புகழ் ஈட்டி வருகின்றனர். திரு.ஏ.ஆர். நடேச செட்டியார் அவருக்குப்பின் ஏ.ஆர்.என். விஸ்வநாதன் செட்டியார், ஏ.ஆர். கணேஷ்குமார் ஆகியோர் ஆபரணங்கள் செய்து மக்களின் பாராட்டைப் பெறுகின்றனர்.

ஏ.ஆர்.சி. திருவிடைமருதூர் திருக்கோயிலுக்கு வெள்ளிரதம், கயிலாய வாகனம் முதலியன செய்து தந்துள்ளார்கள். ஏ.ஆர்.சி. அமைப்பினர் திருக்கோயில் வாகனம், தங்கரதம், வெள்ளிதரம் செய்வதில் வல்லவர் களாய், கலை நுணுக்கம் உடையவர் களாய் விளங்குகின்றனர். ஏ.ஆர்.என். விஸ்வநாதன் அவர்கள் மாயூரப் புராணம் வெளியிட்டு இலவசமாக அளித்து வருகின்றார்.

இறைபணி மன்றங்கள்

தனியூர் (கூறைநாடு) சிவனடியார் திருக்கூட்டம்

ஐம்பத்தொரு ஆண்டுகளாக வழிபாடு நிகழ்த்தி வருகின்றனர். தலைவர். திரு.என்.எஸ்.இராமலிங்கம் செட்டியார்.

மயிலாடுதுறை புனுகீஸ்வரர் உழவாரப் பணிமன்றம்

ஐம்பது உறுப்பினர்களை உடையது. திருக்கோயில்களில் உழவாரம் செய்தல், திருவிளக்கேற்றுதல், திருமுறைப் பாராயணம் செய்தல் ஆகிய பணிகளை பத்தாண்டுகளாக செய்து வருகிறது.

காசி விசுவநாதர் கோயில் வழிபாட்டு மன்றம்

உறுப்பினர்கள் 50. தலைவர் உஷாதேவி. நாள்தோறும் பூமாலை தொடுத்து திருக்கோயில்களுக்கு அளித்தல் செவ்வாய்க்கிழமை தோறும் ஐம்பது மங்கையர்களுடன் திருக் கோயில்களில் கூட்டு வழிபாடு.

கௌரி மாயூரநாதர் வழிபாட்டு மன்றம்

தலைவர்.கோ.முருகானந்தம், உறுப்பினர் - 40. ஞாயிறு தோறும் திருக்கோயில் வழிபாடு - விழாக் காலங்களில் கோயில் சென்று தொண்டாற்றுதல்.

மாயூரநாதர் வழிபாட்டு மன்றம்

பொறுப்பாளர்கள் அம்பிகாபதி, சுப்பிரமணியபிள்ளை. உறுப்பினர்கள்-60 அர்த்தசாம கூட்டு வழிபாடு நாள்தோறும் அருள்மிகு மாயூரநாதர் கோயிலில் நிகழ்த்துவது. அருள்மிகு சட்டநாதருக்கு விழா நடத்துவது.

வள்ளலார் வழிபாட்டு மன்றம்

தலைவர் தியாகராஜபிள்ளை, உறுப்பினர்கள் - 25, வியாழக்கிழமை தோறும் திருக்கோயில் வழிபாடு, 20 சிறார்களுக்கு தேவாரம் ஓதுவித்தல்.

ஐயாரப்பர் வழிபாட்டு மன்றம்

தலைவர். சுவாமிநாதபிள்ளை. வெள்ளிக்கிழமை தோறும் கூட்டு வழிபாடு நிகழ்த்துதல்.

சிற்றம்பலநாடிகள் வழிபாட்டு மன்றம்

தலைவர். பழனிவேல்பிள்ளை. திருக்கோயில் வழிபாடு. சித்திரை மாதத்தில் ஆண்டுவிழா ஆகியன நடத்துதல்.

குதம்பைச் சித்தர் உழவாரப்பணிமன்றம்

இம்மன்றம் 15 ஆண்டுகளாக செயல்பட்டு வருகிறது. தலைவர். எஸ்.சுவாமிநாதன். செயலர். டி.சங்கர், பொருளர். எம்.செந்தில், உறுப்பினர்கள் 25. ஆங்கில புத்தாண்டு நாளன்று 37-விதமான அபிடேகம், ஆதி மாயூரநாதருக்கு நடத்துதல். 108 கோபூசை. குருபெயர்ச்சி ஏகதின லட்சார்ச்சனை, வாக்குதேவதை பூசை முதலியன செய்து வருகின்றார்கள். திருக்குடமுழுக்கு நடைபெறும் திருக்கோயிலுக்குச் சென்று யாக சாலையை தூய்மை செய்யும் தொண்டை செய்து வருகின்றார்கள்.

திருக்கோயில் விழாக்கள்

நித்தியபடி

காலங்கள்	நேரம்
1. உஷக்காலம்	06.00 - 07.00
2. காலசந்தி	09.00 - 10.00
3. உச்சிக்காலம்	12.00 - 12.30
4. சாயரட்சை	05.00 - 06.00
5. இரண்டாம் காலம்	07.30 - 08.00
6. அர்த்தஜாமம்	08.30 - 09.00

நித்தியபடி 6 காலங்களில் முழு நிகழ்ச்சி விபரம்.

உஷக்காலம்

சுமார் 5.00 மணியளவில் நடை பெறும். நடை திறந்து 5.30 மணிக்கு பள்ளியறை பூஜை தீபாராதனை நடைபெறும். பின்பு சொக்கர் பெருமான் பள்ளியறையிலிருந்து சுவாமி சன்னதிக்கு பிரவேசம். பின்பு சுவாமி, முருகன், அம்மன் முதலிய மூல சன்னதிகளுக்கு அபிஷேகம், நிவேத்யம் மற்றும் தீபாராதனைகள் நடைபெறும் (நிவேத்யம் - வெண்பொங்கல்)

காலசந்தி

9.00 மணிக்கு முதலில் சுவாமி சன்னதிக்கு முன் புண்யாகவாசநம் (ஹோமம்) நடைபெறும். மூலவர் சுவாமிகளுக்கு அபிஷேகம், நிவேத்யம், தீபாராதனை நடைபெறும். பின்பு முறையே முருகன், அம்மன் மற்றும் சுற்று கோயில்களுக்கு (பரிவார சன்னதிகள்) நிவேத்தியம் தீபாராதனை நடைபெறும். (நிவேத்யம் - தோசை)

உச்சிக்காலம்

நண்பகல் 12.00 மணிக்கு முதலில் முருகன் சந்நிதிக்கு அபிஷேகம், நிவேத்தியம் மற்றும் தீபாராதனை நடைபெறும். பின்பு சுவாமி, அம்மன் மூலசந்நிதிகளுக்கு அபிஷேகம், நிவேத்தியம் மற்றும் தீபாராதனை நடைபெறும். 12.30 மணிக்கு நடை சாத்தப்படும். (நிவேத்தியம் - தயிர் சாதம்)

சாயரச்சை

மாலை 4.00 மணிக்கு நடை திறக்கப்படும் பின்பு 5.00 மணிக்கு நடராஜர் சந்நிதி மற்றும் சந்தன விநாயகர் நிவேத்தியம் மற்றும் தீபாராதனை நடைபெறும். பின்பு முறையே சுவாமி, முருகன், அம்மன் முதலிய மூல சன்னதிகளுக்கும் அபிஷேகம், நிவேத்தியம் மற்றும் தீபாராதனைகள் நடைபெறும். சுற்று கோயில்களுக்கு (பரிவார சன்னதிகள்) நிவேத்யம் மற்றும் தீபாராதனைகள் நடைபெறும். (நிவேத்யம் - புளிசாதம்)

இரண்டாம் காலம்

7.30 மணிக்கு சுவாமி சன்னதிக்கு அபிஷேகம், நிவேத்தியம் மற்றும் தீபாராதனை நடைபெறும். பின்பு

முருகன், அம்மன் சன்னதிக்கு முறையே நிவேத்தியம் மற்றும் தீபாராதனை நடைபெறும். (நிவேத்தியம் சம்பா சாதம், அப்பம்)

அர்த்த ஜாமம்

8.30 மணிக்கு சுவாமிக்கு சன்னதிக்கு அபிஷேகம், நிவேத்தியம் மற்றும் தீபாராதனை நடைபெறும். பின்பு முருகன் சன்னதிக்கு தீபாராதனை நடைபெறும் சுவாமி சன்னதியிலிருந்து சொக்கர், அம்மன் சன்னதியில் உள்ள பள்ளியறைக்கு பிரவேசமாகும். அம்மன் சன்னதிக்கு நிவேத்தியம் தீபாராதனை முடிந்த பின்பு பள்ளியறை தீபாராதனை நடைபெறும். பின்பு சண்டிகேஸ்வரர் மற்றும் பைரவர் நிவேத்தியம் தீபாராதனை முடிந்தவுடன் சுமார் 9.00 மணியளவில் நடை சாத்தப்படும். (நிவேத்தியம் சம்பாசாதம், பள்ளியறைக்கு வடை, பாயாசம்)

வார ஏறுபடிகள்

வியாழன் (குருவாரம்)

சாயரட்சைக்கு குருபகவான் சுவாமிக்கு (தக்ஷிணாமூர்த்தி) சிறப்பு அபிஷேகம், நிவேத்தியம் மற்றும் தீபாராதனை நடைபெறும். (நிவேத்தியம் - எலுமிச்சை சாதம், கொண்டகடலை சுண்டல்)

வெள்ளி (சுக்ரவாரம்)

இராகு காலம் 10.30 மணிக்கு ஸ்ரீதுர்க்கை சன்னதிக்கு அபிஷேகம், நிவேத்தியம் தீபாராதனை நடைபெறும். (நிவேத்தியம் - சர்க்கரைப் பொங்கல்)

மாலை இரண்டாம் காலம் முடிந்த பின்பு ஸ்ரீ ஆடிப்பூர அம்மன் பிரகார புறப்பாடு நடைபெறும்.

இரவு அர்த்தஜாமம் பள்ளியறை முடிந்த பின்பு சட்டநாதருக்கு விசேஷ பூஜை நடைபெறும்.

மாதாந்திர ஏறுபடிகள்

மாத பிறப்பு

ஒவ்வொரு தமிழ் மாத பிறப்பிற்கும், கால சந்தியின் போது உற்சவ மூர்த்திகளுக்கு புண்யாகவாசநம் மற்றும் அபிஷேகம், நிவேத்தியம் நடைபெறும்.

கார்த்திகை

மாதந்தோறும் கிருத்திகை நட்சத்திரத்தில் முருகன் மற்றும் ஆறுமுகர் சன்னதிக்கு புண்ணியாதானம், அபிஷேகம், நிவேத்தியம் நடைபெறும். உற்சவர் முருகனுக்கு சிறப்பு அபிடேகம் நிவேத்தியம் மற்றும் சண்முகார்ச்சனை நடைபெறும். (உபயம் - உற்சவருக்கு உபயதாரர் - குமரக்கட்டளை)

பிரதோஷம்

மாதம் இரண்டு முறை வரும் பிரதோஷத்திற்கு சாயரட்சை மூல நந்திகேஸ்வரருக்கு சிறப்பு அபிஷேகம் மற்றும் நிவேத்தியம், தீபாராதனை நடைபெறும். பின்பு பிரதோஷ நாயகர் புறப்பாடு நடைபெறும். (உபயம் - திருக்கோயில் மற்றும் பக்தகோடிகள்)

பௌர்ணமி

பௌர்ணமி தோறும் சாயரட்சை முடிந்த பின்பு ஸ்ரீ அருணாச்சலேஸ்வரருக்கு அபிஷேகம் மற்றும் தீபாராதனை நடைபெறும்.

வருடம் ஒவ்வொரு மாதமும் சிறப்பு நிவேத்தியம் செய்து மாயூரநாதருக்கு அர்த்தஜாமம் முடிந்த பின்பு திருக்குளத்தில் விடப்படும்.

1. சித்திரை - கொழுந்து
2. வைகாசி - சந்தனம்
3. ஆனி - முப்பழம்
4. ஆடி - திரட்டிப்பால்
5. ஆவணி - சர்க்கரை
6. புரட்டாசி - பஷ்ணம்
7. ஐப்பசி - அன்னம்
8. கார்த்திகை - தீபம்
9. மார்கழி - நெய்
10. தை - தேன்
11. மாசி - திருக்கம்பளம் (நெய், கடலை எண்ணை, அரிசி)
12. பங்குனி - தயிர்

மாலை சாயராட்சை முடிந்த பின்பு அம்மனுக்கு நவசக்தி அர்ச்சனை சிறப்பாக நடைபெறும்.

குதம்பை சித்தருக்கு அபிஷேகம் மற்றும் தீபாராதனை சிறப்பாக நடைபெறும்.

அமாவாசை

இரவு பள்ளியறைக்கு முழு புஷ்ப அலங்காரத்துடன் தீபாராதனை நடைபெறும்.

அஷ்டமி

ஒவ்வொரு வளர்பிறை மற்றும் தேய்பிறை அஷ்டமி அன்று ஸ்ரீ சட்டநாதர்க்கு விஷேச அர்ச்சனை மற்றும் தீபாராதனை நடைபெறும்.

ஸ்ரீ பைரவருக்கு விசேஷ ஹோமம், அபிஷேகம், நிவேத்தியம் மற்றும் தீபாராதனை நடைபெறும்.

வருட ஏறுபடி

தமிழ் வருட பிறப்பு

மாலை களஞ்சியம் விநாயகரிடம் புது பஞ்சாங்கம் பூஜை செய்து ஆஸ்தான ஜோசியரால், வாசிக்கப்படும். (நிவேத்தியம் - சுண்டல், பாணகம், நீர்மோர்)

ஆனித் திருமஞ்சனம்

அன்று அதிகாலை நடராஜர் அபிஷேகம் முடிந்த பின்பு திருக் குளத்தில் தீர்த்தவாரி நடைபெறும்.

ஆடிப்பூரம்

அன்று ஆடிபூர அம்மன் காவேரிக்கு புறப்பாடு செய்து லாகடத்தில் நல்லெண்ணை, சீயக்காய் தூள் வினியோகம் செய்யப்பட்டு பின்பு தீர்த்தவாரி முடிந்து பெண்களுக்கு முறம் மற்றும் மஞ்சள் குங்குமம் வழங்கப்படும்.

ஆடிப்பெருக்கு

அன்று விநாயகர் காவேரிக்குப் புறப்பட்டு தீர்த்தவாரி நடைபெறும்.

பௌத்ரோற்சவம்

ஆவணி மாதம் பௌத்ரோற்சவம் நான்கு கால யாகசாலையுடன் சுவாமி பூஜை செய்யப்பெற்று பின்பு வீதியுலா நடைபெறும்.

ஆவணி மூலம்

அன்று சுவாமி, அம்மன் காவேரிக்கு புறப்பாடு செய்து தீர்த்தவாரி செய்யப்படும் (பிட்டுக்கு மண் சுமந்த தினம்) நிவேத்தியம் - புட்டு.

விநாயகர் சதுர்த்தி

ஆலயத்தில் உள்ள 21 விநாயகருக்கு மாலை சாயரட்சை முடிந்த பின்பு கொழுக்கட்டை நிவேத்தியம் செய்து தீபாராதனை நடைபெறும். உற்சவர் விநாயகர் பிரகாரம் புறப்பாடு செய்து வைக்கப்படும்.

புரட்டாசி - சனி

புரட்டாசி மாதம் ஒவ்வொரு சனிக்கிழமையும் ஸ்ரீ மகாவிஷ்ணுவிற்குச் சிறப்பு அபிஷேகம், நிவேத்தியம், தீபாராதனை நடைபெறும்.

நவராத்திரி

கொலுமண்டபத்தில் கொலு வைத்து நவராத்தியன்று ஒவ்வொரு நாளும் அம்மனுக்கு அலங்காரம் செய்து சிறப்பு தீபாராதனை நடைபெறும்.

சரஸ்வதி பூஜை

வழியே மகாலெட்சுமி, அஷ்ட லெட்சுமி, துர்க்கை, களஞ்சியம் அலுவலகத்திற்கு விஷேச பூஜை நடைபெறும். பின்பு அம்மனுக்கு மகிஷாரவர்த்தினி அலங்காரத்தில் பிரகார புறப்பாடு நடைபெறும்.

விஜயதசமி

முருகன் குதிரை வாகனம் புறப்பாடு செய்து திருஇந்தளூர் நாலு கால் மண்டபத்தில் சென்று பின்பு பெருமாள் அம்பு எய்த விழா முடிந்த பின்பு வள்ளலார் கோவில் வீதி சுற்றி பின்பு திருக்கோயில் திரும்பும்.

நிறை பணி

நிறைபணி அன்று இரவு சுவாமி, அம்மன் வீதி புறப்பாடு செய்து வைக்கப்படும்.

கார்த்திகை தீபம்

பரணி தீபம் மற்றும் கார்த்திகை தீபத்திற்கு விஷேச பூஜைகள் மற்றும் சொக்க தீபம் ஏற்றப்படும் பின்பு வீதியுலா நடைபெறும். கார்த்திகை திங்கள் அன்று சிறப்பான முறையில் சங்காபிஷேகம் நடைபெறும்.

தனுர் மாதம்

தனுர் மாதம் (முழுவதும்) 30 நாட்களும் திருப்பள்ளியெழுச்சி சிறப்பாக நடைபெறும்.

ஆருத்ரா தரிசனம்

அன்று காலை நடராஜர் புறப்பாடு செய்து ஊடல் நிகழ்ச்சி நடைபெற்று, பின்பு தீர்த்தவாரி செய்யப்படும்.

தை மாத பிறப்பு

தைமாத பிறப்பு அன்று சுவாமி மற்றும் இதர மூல சன்னதிக்கு மண் பானையில் சர்க்கரைப் பொங்கல் நிவேத்தியம் மற்றும் தீபாராதனை நடைபெறும்.

தைப்பூசம்

தைப்பூசம் அன்று சிறப்பு காவடிகள் மூலம் முருகனுக்கு அபிஷேகம் மற்றும் தீபாராதனை நடைபெறும்.

மாசி சிவராத்திரி

சிவராத்திரியன்று நான்கு கால (இரவு) பூஜைகள் நடைபெறும். பின்பு சுவாமி, அம்மன் வீதி புறப்பாடு நடைபெறும்.

விசேஷ ஏறுபடி நிகழ்ச்சிகள்

வைகாசி வசந்த உற்சவம்

வைகாசி விசாக நட்சத்திரத்திற்கு 10 தினங்களுக்கு முன்பாக யாகசாலை காலங்கள் தொடங்கப்பெற்று இரவு பஞ்ச மூர்த்திகள் வீதியுலா நடைபெறும். முதல் நாள் புஷ்பப்பல்லக்கு, ஐந்தாம் நாள் சகோபுரம், ஏழாம் நாள் முருகன் திருக்கல்யாணம், விசாக நட்சத்திரத்தில்

நண்பகல் தீர்த்தவாரியும், சண்டிகேஸ்வரர் உற்சவத்தில் தெப்பம் வெகு விமர்சையாக நடைபெறும்.

துலா உற்சவம்

ஐப்பசி மாதம் முழுவதும் வெகு சிறப்பாக நடைபெறும்.

முதல் நாள் பஞ்சமூர்த்தி ரிஷப வாகனத்தில் காவேரியில் எழுந்தருளி தீர்த்தவாரி நடைபெறும்.

2ம் தேதி முதல் 12ம் தேதி வரை சந்திரசேகர் சுவாமி புறப்பாடு நடைபெறும்.

13ம் தேதி முதல் விநாயகர் உற்சவம் முறையே விநாயகர், முருகன் புறப்பாடு நடைபெறும்.

21ம் தேதி முதல் பெரிய கொடி ஏறி பஞ்சமூர்த்தி புறப்பாடு நடைபெறும்.

25ம் தேதி சகோபுரம்

27ம் தேதி திருக்கல்யாணம்

29ம் தேதி திருத்தேர்

30ம் தேதி கடைமுக தீர்த்தம்

வெகு விமர்சையாக நடைபெறும்.

கந்த ஷஷ்டி

கந்த ஷஷ்டி விழா முறையாக யாகசாலை காலத்துடன் தொடங்கப் பெற்று சகோபுரம், சூரசம்காரம், திருத்தேருடன் நடைபெறும்.

உபயதாரர் - குமரக்கட்டளை

ஊஞ்சல் உற்சவம்

சுவாமி சந்நதியில் சந்திரசேகர் சுவாமி ஊஞ்சலில் காலை, மாலை திருவெண்பா பாடப்பெற்று கடைசி நாள் அன்று எதிர் ஊஞ்சலும், பின்பு வீதியுலாவும் நடைபெறும்.

யாகசாலை விவரங்கள்

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்தைச் சேர்ந்த ஸ்ரீஅபயாம்பா ஸமேத ஸ்ரீ மாயூரநாதஸ்வாமியின் ஆலய மகா கும்பாபிஷேகம் 19-வது குரு மகாசன்னிதானம் ஸ்ரீ வைத்திலிங்க தேசிக மூர்த்திகள் அருளாட்சியில் விபவ வருடம் ஆவணி மாதம் 18ந் தேதி ஞாயிற்றுக்கிழமை (3.9.1928) சிம்ம லக்னத்தில் நடைபெற்றது. அதுபோழ்து நடைபெற்ற யாகசாலை கிரியா விபரம்.

விபவ வருடம் ஆவணி மாதம் 11 ஞாயிற்றுக்கிழமை

காலை:

1. அனுக்ஞை 3 .1/2 - நாழிகைக்குள்
2. பிராஹ்மண அனுக்ஞை
3. மஹாஸங்கல்பம்
4. ஸ்ரீ கணபதி பூஜை
5. கணபதி அனுக்ஞை
6. கணபதி ஹோமம்
7. நவக்கிரஹ ஹோமம்

மாலை:

8. திரவிய சங்கிரஹணம்
9. திரவிய சுத்தி
10 திரவிய விபாகம்
11. முகூர்த்த நிச்சயம்

விப்வ வருடம் ஆவணி மாதம் 12ந்தேதி திங்கட்கிழமை

காலை

12. யாகசாலா நிர்மாணம்
13. யாகசாலா சுத்தி
14. யஜமான வரணம்
15. ஆசார்ய வரணம்
16. மூர்த்தி வரணம்
17. ஸாதகாசார்ய வரணம்
18. ஸதஸ்ய வரணம்
19. கிரியா ஸ்நானம்

மாலை:

20. வாஸ்துசாந்தி
21. புண்யாஹவாசனம்

22. பேரிதாடனம்
23. அஹங்காரபலி
24. பிரவேசபலி
25. ரக்ஷோக்கினஹோமம்

விபவ வருடம் ஆவணி மாதம் 13 ந்தேதிசெவ்வாய்க்கிழமை

காலை:

26. மிருத்ஸங்கிரஹணம்
27. அங்குராற்பணம்
28. யாகசாலாசுத்தி
29. ஸங்கிரஹ பிராமண போஜனம் (யாகசாலை)

விபவ வருடம் ஆவணி மாதம் 14 ந்தேதிபுதன்கிழமை

காலை:

30. கௌதுதபந்தனம்
31. யாகசாலாவீக்ஷணம்
32. குண்டமண்டபவீக்ஷணம்
33. யக்ஞோபவீததாரணம்
34. பஞ்சாங்கபூஷணம்

மாலை:

35. சாந்திஹோமம்
36. திசாஹோமம்
37. ஸம்ஹிதாஹோமம்
38. மூர்த்திஹோமம்
39. பிராயச்சித்தஹோமம்

விபவ வருடம் ஆவணி மாதம் 15 ந்தேதிவியாழக்கிழமை(அவிட்டம்)

காலை:

40. பிரஸன்ன கும்பபூஜை

இரவு (சதயம்)

41. பிரஸன்னாபிஷேகம்
42. பிரஸன்ன பூஜை
43. கும்பாலங்காரம்
44. யாகசாலாமண்டப ஆராதன பூஜை
45. மூர்த்திகளைச் சங்கோசம் செய்தல்.

(உதயாதி 38-நாழிகைக்குமேல் 42 1/4 நாழிகைக்குள் மேஷ லக்னத்தில்)

46. யாத்திராஹோமம்
47. யாகசாலாப்பிரவேசம்
48. சலாஸனபூஜை
49. ஸ்திராஸன பூஜை
50. பிரதானகும்பபூஜை
51. அக்னிகாரியம்
52. மஹா பூர்ணாஹுதி
53. சோடசோபசார தீபாராதனைகள்
54. வேதபாராயணங்கள்
55. மஹதாசீர்வாதம்
56. திராவிடகானம்
57. நிருத்தம், மங்களவாத்யம்
58. நிராஞ்ஜனம்

விபவ வருடம் ஆவணி மாதம் 16 ந்தேதிவெள்ளிக்கிழமை (சதயம்)

காலை:

59. யாகசாலையில் நித்தியபூஜை
60. வேதபாராயணம்
61. அஸ்திரஜபம்
62. அஹோராஸ்திரஜபம்
63. காமியமந்திரஜபம்
64. பிரதான அக்னிகாரியம்
65. அஷ்டகுண்டாக்னிகாரியம்
66. விசேஷத்திரவியஹோமம்
67. மஹா பூர்ணாஹுதி
68. சோடசோபசார தீபாராதனைகள்
69. வேதபாராயணங்கள்
70. மஹதாசீர்வதம்
71. திராவிடகானம்
72. நிருத்தம், மங்களவாத்யம்
73. நிராஞ்ஜனம்
74. பிராமணபோஜனம்
75. ரத்னநியாஸம் *(உதயாதி 2 1/2 நாழிகைக்குள்)*

76.. யந்திரஸ்தாபனம்

77. ஔஷதபந்தனம்

மாலை: (பூரட்டாதி நக்ஷத்திரம்)

78. யாகசாலையில் பூஜை முதலானவை.

விபவ வருடம் ஆவணி மாதம் 17 சனிக்கிழமை
(பூரட்டாதி நக்ஷத்திரம்)

காலை:

79. யாகசாலையில் பூஜை முதலானவை

80. சிற்பசாந்தி

81. நவநீதலேபனம்

82. அஷ்டகந்தலேபனம்

மாலை: (உத்திரட்டாதி நக்ஷத்திரம்)

83. யாகசாலையில் பூஜை முதலானவை

84. பிம்பசுத்தி

85. ரக்ஷாபந்தனம்

86. ஸ்பர்சாஹுதி

87. பஞ்சகந்தலேபனம்

88. தத்துவா முதலான நியாஸங்கள்

விபவ வருடம் ஆவணி மாதம் 18 ந்தேதிஞாயிற்றுக்கிழமை
(உத்திரட்டாதி நக்ஷத்திரம்)

காலை:

89. புனர்பூஜை

90. மஹாபூர்ணாஹுதி

91. பூஜா ஸமர்ப்பணம்

92. அஷ்டாக்கினியை பிரதானாக்கினியில் ஸம்யோஜனம்

93. பிரதானா அக்கினியைக் கும்பத்தில் ஸம்யோஜனம்.

94. பரிவார தேவதைகளைக் கும்பத்தில் ஸம்யோஜனம்

95. பராமுகார்க்கியம்

96. முகூர்த்த வீக்ஷணம்

97. தசதானாதிகள்

98. கும்போத்தாபனம்

99. மூலஸ்தானத்திற்குப் பிரதக்ஷிண பூர்வமாய்ப் பிரவேசம்

100. சகல ஷடத்துவா முதலிய நியாஸங்கள்

101. ஜீவநியாஸாதிகள்

102. மஹாகும்பாபிஷேகம்
(உதயாதி 1/2 நாழிகைக்குள் சிம்மலக்னத்தில்)

103. விசேஷ பூஜை

104. ஆசார்ய ஸம்பாவனை

105. மஹாபிஷேகம்

106. பிரபூதஹவிஸ்முதலான நிவேதனம்

இரவு:

107. ஸ்ரீ அபயாம்பிகா ஸமேத ஸ்ரீ மாயூர நாதஸ்வாமி
திருவீதி கொண்டெழுந்தருளுதல்.

விபவ வருடம் ஆவணி மாதம் 19 ந்தேதி திங்கட்கிழமை


சண்டேச்வர யாகம்

மண்டலபூஜை

ஸ்ரீ அபயாம்பா ஸமேத

ஸ்ரீ மாயூரநாதஸ்வாமி சகாயம்

**ஸ்ரீ மாயூரத்தைச் சூழ்ந்துள்ள வீரட்டானத்தலமும்
வள்ளல் தலமும் - பிறவும்.**



திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமான கௌரீ மாயூரம் ஸ்ரீ மாயூரநாதசுவாமி கோயில் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் பிலவங்க ஆண்டு சித்திரை மாதம் 16ம் நாள் (28.4.1961) 21-வது குரு மகாசன்னிதானம் ஸ்ரீசுப்பிரமணிய தேசிகமூர்த்திகள் அருளாட்சியில் நடைபெற்றது. அக்கும்பாபிஷேக விழாவின் போது நடைபெற்ற யாக சாலை கிரியா விவரம்.

பூர்வாங்க கிரியைகள்

பிலவ - ஸ்ரீ சித்திரை மீ / 1961 - ஸ்ரீ ஏப்ரல் மீ

தமிழ் தேதி	ஆங் கிலம் தேதி	வாரம்	விஷயம்	பகல் மணி முதல் வரை	இரவு மணி முதல் வரை	
9	21	சுக்கிர வாரம்	ஆசாரியவரணம்,தனபூஜை அநுக்ஞை, விக்நேச்வரபூஜை.	--	5.47-7.35	துலா லக்னத்தில்
10	22	ஸ்திர வாரம்	வாஸ்துசாந்தி		மாலை	
11	23	பாநு வாரம்	கிரகமகம்	காலை		
,,	,,	,,	மிருத்சங்கிரகணம்		மாலை	
12	24	சோம வாரம்	ஸ்தூபிப்பிரதிஷ்டை	1.20-3.20		
,,	,,	,,	அங்குரார்ப்பணம், இராக்ஷா பந்தனம்.		மாலை	
13	25	மங்கள வாரம்	பிரஸன்னாபிஷேகம், கலா கர்ஷணம், யாகசாலை பிரவேசம், யாகபூஜை பூர்ணாகுதி முதலியன.		5.20-720	
14	26	புத வாரம்	அஷ்டபந்தனம்	6.00		மேஷ லக்னத்தில்
,,	,,	,,	யாகபூஜை, பூர்ணாகுதி	காலை	மாலை	
15	27	குரு வாரம்	யாகபூஜை, பூர்ணாகுதி முதலியன	,,	,,	
16	28	சுக்கிர வாரம்	யாகபூஜை, பூர்ணாகுதி மகா கும்பாபிஷேகம்	7.28 - 8.52		விருஷப லக்னத்தில்

யாகசாலைகள்

மூன்றாம் பிரகாரம் ஈசான திக்கில். (இராஜகோபுரத்தின் வடபால்)

எண்.	மூர்த்திகளின் விவரம்	குண்ட விபரம்
1	ஸ்ரீமாயூரநாதசுவாமி	நவகுண்டம்
2	ஷெ விமானம்	பஞ்சகுண்டம்
3	ஸ்ரீஅபயப்பிரதாம்பிகை	நவகுண்டம்
4	ஷெ விமானம்	பஞ்சகுண்டம்
5	ஸ்ரீ அகஸ்தியவிநாயகர்	ஏக குண்டம்
6	ஸ்ரீஷண்முக சுப்பிரமணியர்	,,
7	ஸ்ரீ உத்சவ சுப்பிரமணியர்	,,
8	ஸ்ரீ சுந்தர மாயூரநாதசுவாமி	,,
9	ஸ்ரீ சோமாஸ்கந்தர்	,,
10	ஸ்ரீ பராசத்தி அம்மன் (உத்சவர்)	,,
11	ஸ்ரீ நடராஜர்	,,
12	ஸ்ரீ மயிலம்மன்	,,
13	ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி	,,
14	ஸ்ரீ பைரவர்	,,
15	ஸ்ரீ துர்க்கை	,,
16	ஸ்ரீ அநவித்யை	,,
17	ஸ்ரீ நாதசன்மா	,,
18	ஸ்ரீ மஹாலக்ஷ்மி	,,
19	ஏனைய பரிவாரங்கள், விமானங்கள், நந்தி, பலிபீடம் வகையறாக்களுக்கு ஸ்நபநாங்க யாகம்.	,, 10
		ஆக 28

ஸ்ரீ மாயூரநாதசுவாமி நவகுண்டபக்ஷ ஹோமம்

எண்	திக்கு	குண்டம்	மந்திரம்	அஷ்ட மூர்த்தி	அஷ்ட மூர்த்தி சுவரர்	அக்கினியின் பெயர்	சமித்து	தான்யம்	பலன்	காலம் 1-க்கு ஆகுதி விவரம்: ஆஜ்யாகுதி	சமித்தாகுதி	அன்னாகுதி	திரவியாகுதி	காலம் 1-க்கு ஆகுதி மொத்தம்
1	கிழக்கு	சதுரச்ரம்	தத்புருஷம்-சிவாஸ்த்ரம்	பிருதிவி மூர்த்தி	சர்வன்	ஆகவனீயம்	வன்னி	கோதுமை	சிருஷ்டி	500	250	50	125	925
2	அக்கினி	அச்வத்த பத்ரம்	ஹ்ருதயம்-பிரத்யங்கிராஸ்த்ரம்	வன்னி மூர்த்தி	பசுபதி	விருத்தாக்கினி	ஆல்	கடுகு	பிரஜா விருத்தி	500	250	50	125	925
3	தெற்கு	தநுராகாரம்	அகோரம்-அகோராஸ்த்ரம்	யஜமானன்	உக்கிரன்	தக்ஷிணாக்கினி	கருங்காலி	எள்ளு	ஜயம்	500	250	50	125	925
4	நிருதி	முக்கோணம்	சிகை-காயத்ரீ	அருக்கன்	உருத்திரன்	யௌவனாக்கினி	இச்சில்	நெல்	சாந்தி	500	250	50	125	925
5	மேற்கு	விருத்தம்	ஸத்யோஜாதம்-வியோமாஸ்த்ரம்	ஜல மூர்த்தி	பவன்	காருகபத்யம்	அரசு	பயறு	ஸ்திதி	500	250	50	125	925
6	வாயு	அறுகோணம்	கவசம்-சாவித்திரி	வாயு மூர்த்தி	ஈசானன்	பாலாக்கினி	அத்தி	கடலை	பயிர் விருத்தி	500	250	50	125	925
7	வடக்கு	பத்மம்	வாமதேவம்-பாசுபதாஸ்த்ரம்	இந்து மூர்த்தி	மகாதேவன்	தேவலாக்கினி	வில்வம்	துவரை	தன விருத்தி	500	250	50	125	925
8	ஈசானியம்	அஷ்ட கோணம்	சிரசு-க்ஷுரிகாஸ்த்ரம்	வியோம மூர்த்தி	பீமன்	சாமான்யாக்கினி	வெள்ளெருக்கு	உளுந்து	புத்திமுத்தி	500	250	50	125	925
9	பிரதானம்	விருத்தம்	ஈசானம், நேத்ரம் அஸ்த்ரம், மூலம்.			சிவாக்கினி	சர்வ சமித்து	சர்வ தான்யம்	சர்வசித்தி	1333	500	108	480	2421
—														9821

ஸ்ரீ அப்யப்பிரதாம்பிகை நவகுண்டபக்ஷ ஹோமம்

எண்	திக்கு	குண்டம்	மந்திரம்	அஷ்ட மூர்த்தி	மூர்த்தீ சுவரி	அக்கினியின் பெயர்	சமித்து	தான்யம்	பலன்	காலம் 1-க்கு ஆகுதி விவரம்				காலம் 1-க்கு ஆகுதி மொத்தம்
										ஆஜ்ய ஆகுதி	சமித் ஆகுதி	அன்ன ஆகுதி	திரவ்ய ஆகுதி	
1	கிழக்கு	அரசிலை	தத்புருஷகாாம்பிகா-சிவாஸ்த்ரம்	பிருத்வி மூர்த்தி	தாரிகா	ஆகவனீயம்	வன்னி	கோதுமை	பிரஜா விருத்தி	500	250	50	125	925
2	தென்கிழக்கு	பத்மம்	ஹ்ருதயவாமிநீ-பிரத்தியங்கிராஸ்த்ரம்	அக்னி மூர்த்தி	தீப்திமதீ	விருத்தாக்கினி	ஆல்	கடுகு	தன விருத்தி	500	250	50	125	925
